

# உரிமைக்கும் உயர்வுக்கும்

(பாராளுமன்ற உரைகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசு சந்திரகுமார் [பா.உ.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைக்கும் உயர்வுக்கும்

பாராளுமன்ற உரைகள் 2010 - 2011

முருகேசு சந்திரகுமார் பா.உ.
பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைக்கும் உயர்வுக்கும்

பாராளுமன்ற உரைகள் 2010 - 2011

© முருகேசு சந்திரகுமார்

முதற்பதிப்பு : 2014 ஒகஸ்ற்

வெளியீடு : மகிழ், 754, திருநகர் வடக்கு, கிளிநொச்சி, இலங்கை.

நூல்வடிவம் : ரீஜி, அச்சாக்கம் : ஏஜே பிறின்ட்ஸ்

விலை : ரூ. 300/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மக்களுக்காக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகேசு சந்திரகுமார் பா.உ.
பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


01 தடுத்துவைக்கப்பட்டிருக்கின்ற ஏனைய இளைஞர் யுவதிகளை விரைவாக விடுதலை செய்யவேண்டும் 1

02 முழுமையான மீள்குடியேற்றத்திற்கு தடையாக உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கவேண்டும் 4

03 அபிவிருத்திக்கான வரவு செலவுத் திட்டமாக அமைய வேண்டும் 9

04 போர் நடைபெற்ற வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் மிகவும் பின் தங்கிய பகுதிகளாக இருக்கின்றன 24

05 போர் முடிந்த பின்னரும் வட பகுதி மக்கள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தவண்ணமே இருக்கிறார்கள் 29

06 அவசரகாலச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருந்தால் ஜனநாயகத்திலும் சுதந்திரத்திலும் குறைபாடே இருக்கும் 33

07 கட்சிகளின் நிபந்தனைகள் மற்றும் அணுகுமுறைகளுக்கு அப்பால் மக்களின் நன்மைகள் குறித்தே அதிகம் சிந்தித்தவர் வி. நவரத்தினம் 40

08 வடக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருக்கும் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் 43

09 யுத்தப் பாதிப்புக்களைச் சுமந்த பிரதேசங்களின் அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும் 48

10 வடக்கிலுள்ள நெடுஞ்சாலைகளைப் புனரமைப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் 56




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 வடக்கு மாகாண சபையை அரசியல் தலைமைத்துவமுடைய சபையாக உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை செய்வது அவசியம் 61

12 யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் அசாதாரண சம்பவங்கள் மக்களிடம் எதிர்காலம் குறித்து அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன 67

13 வதந்திகளை பரப்பி மக்களை அச்சத்திற்குள் தள்ளி அரசியல் செய்யவே சிலர் முயற்சிக்கின்றனர் 74

14 இந்த நாட்டிலே எக்காரணங்கொண்டும் எவரும் வன்முறையினால் பாதிக்கப்படக்கூடாது 81

15 அவசரகாலச் சட்டத்தை விரைவில் நீக்குவதற்கான கால வரையறையை வகுத்துச் செயற்படுவது அவசியம் 88

16 மாபெரும் உயிர்த் தியாகங்களின் மூலமே இந்த அமைதி கிடைத்திருக்கின்றது 94

17 எமது மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு வேண்டும் 101

18 அவசரகாலச் சட்ட நீடிப்பானது அடுத்த தலைமுறைக்கும் பரிமாறப்படக்கூடாது 105

19 பத்திரிகைகள் பொறுப்புடன் செய்திகளைப் பிரசுரிக்க வேண்டும் 114

20 பாதிக்கப்பட்ட மக்களுக்கான விசேட நிதி ஒதுக்கீடும் சிறப்புத்திட்டங்களும் அவசியம் 123

21 உள்ளூராட்சி சபைகளுக்குரிய வீதிகளை புனரமைப்பதற்கு அரசாங்கம் சரியான திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும் 129

22 பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைகள் நீக்கப்பட வேண்டும் 134

23 நீர்த் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையிலான நீர் விநியோகத் திட்டங்களை மேற்கொள்ளவேண்டும் 141

24 அழிவுகளை எதிர்கொண்ட விவசாயிகள் உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள் 144

25 வடக்கு, கிழக்கிலே மீன்பிடித் துறையை மேலும் வலுப்படுத்த வேண்டும் 150



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26 வடக்குக் கிழக்கிலே மூடப்பட்ட நிலையில் இருக்கும் தொழில் மையங்களை மீள ஆரம்பிக்க வேண்டும் 159



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுத்துவைக்கப்பட்டிருக்கின்ற ஏனைய இளைஞர் யுவதிகளை விரைவாக விடுதலை செய்யவேண்டும்

கௌரவ பிரதி சபாநாயகர் அவர்களே!

இந்தச் சபைக்கு யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்து வதற்காக என்னை தெரிவு செய்த யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட மக்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நன்றியை தெரிவிக்க விரும்புகிறேன். யாழ் குடாநாடு யுத்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது. இந்த கொடிய யுத்தம் முடிந்திருந்தாலும்கூட அந்தப் பாதிப்பின் பிரதிபலிப்பிலிருந்து எமது மக்கள் இன்னும் சகஜ மான நிலைமைக்குத் திரும்பவில்லை. மிக மெதுவாக இயல்பு வாழ்க் கைக்குத் திரும்பிக்கொண்டிருந்தாலும் கூட தெற்கிலுள்ள மக்கள் என்ன உரிமைகளையும் நலன்களையும் பெறுகின்றார்களோ அவை யனைத்தையும் எமது மக்கள் அனுபவிக்க முடியவில்லையென்ற கருத்தை நான் இங்கு மிக வேதனையுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இந்தக் கொடிய யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் சிறப்பு முகாம்களிலும் நலன்புரி நிலையங்களி லும் தங்கவைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் படிப்படியாக மீள்குடி யேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இன்னும் அந்த மீள்குடியேற் றம் முழுமை பெறவில்லை. கிட்டத்தட்ட இன்னும் ஒரு இலட்சம் மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்குடியேற்றம் காலதாமதப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கு கண்ணிவெடிகள் அகற்றப்படவேண்டுமென்ற காரணம் சொல் லப்படுகிறது. ஆகவே இந்த பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வு காணப்பட வேண்டும். நலன்புரி நிலையங்களில் அவர்கள் மிகவும் வேதனையான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை எல்லோரும் கட்சி சார்பின்றி ஏற்றுக்கொள்வார்கள். ஆகவே அவர்களின் அவல நிலையை போக்கும் வகையில் அவர்களை விரைவாக மீள்குடி யேற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம். கடந்த மூன்று நான்கு மாதங்களாக வன்னி மாவட்ட பிரதேசங்களில் மீள்குடியேற்றம் நடைபெற்று வருகின்றது. ஆனால் அந்த மீள்குடியேற்றம் மக்களைத் திருப்திப்படுத்துவதாக இல்லை. அவசர அவசரமாக அவர்களைக் கொண்டுபோய் அவர்களின் வாழ் விடங்களில் இறக்கிவிட்டிருக்கின்றார்கள் என்ற உணர்வே அந்த மக்களி டம் இருக்கின்றது. யுத்தத்தால் அவர்களின் வாழ்விடங்கள் எல்லாம் அழிக்கப்பட்டிருக்கின்றன. பொதுக் கட்டிடங்களெல்லாம் அழிக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே அவர்களுக்குரிய அடிப்படைத் தேவைகள், அவர்கள் குடியேற்றப்பட்டுள்ள இடங்களிலுள்ள உட்கட்டுமானப் பணிகளெல்லாம் நிறைவு செய்யப்படவேண்டும். உரிய வசதிகள் அவர் களுக்கு செய்து கொடுக்கப்படவேண்டும். இந்தக் குறைபாடுகளை எல்லாம் தீர்த்து வைக்கவேண்டிய மிகப்பெரிய பொறுப்பு அரசிடம் இருக்கின்றது. ஆகவே இந்த மீள்குடியேற்றமானது ஒரு அர்த்த முள்ளதாகவும் அந்த மக்களைத் திருப்திப்படுத்த கூடியதாகவும் அமைய வேண்டும் என்பதுதான் எங்கள் எல்லோரதும் வேண்டுகோளாகும்.

வன்னி மக்களைப் பொறுத்தவரையில் மிகவும் வேதனையான விடயம் என்னவென்றால் கடந்த யுத்தகாலத்தில் புலிகள் இயக்கத்தினாரால் வலுகட்டாயமாக போர்ப் பயிற்சிக்கும் போர் நடவடிக்கைகளுக்கு மாகத் திரட்டப்பட்ட இளைஞர் பலர் யுவதிகள் பலர் இன்று தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுதான். கிட்டத்தட்ட பதினோராயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர், சிறுமிகள் மற்றும் இளை ஞர், யுவதிகள் இப்படியாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். கடந்த காலங்களில் கிட்டத்தட்ட இரண்டாயிரம் பேரை அரசு விடுதலை செய்திருக்கின்றது. அந்த முயற்சியை நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம். அதுபோலவே தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற ஏனைய இளைஞர் யுவதிகளையும் மிக விரைவாக விசாரணை செய்து விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை நான் இச்சந்தர்ப்பத்தில் இச்சபையிலே முன்வைக்க விரும்புகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ பிரதி சபாநாயகர் அவர்களே!

இயல்பு வாழ்க்கையை விரும்பி எமது மக்கள் ஏங்கிக்கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில், பல்வேறு விரும்பத்தகாத சம்பவங்களும் எமது மாவட்டங்களில் குறிப்பாக வவுனியா, யாழ்ப்பாணம் மாவட்டங் களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு பின்னணியில் யார் இருக்கின்றார்களோ, எங்களுக்குத்தெரியாது. ஆனால் இந்தச் சம்பவங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டும். யுத்தம் முடிந்ததற்குப் பின்பு எந்தச் சம்பவங்களும் இனந்தெரியாதவர்களால் நடத்தப்பட்டதென்ற கதைக்கே இடமிருக்கக்கூடாது என்பதுதான் எமது கட்சியின் விருப்பமாகும்.

ஆகவே, யாழ்குடாநாட்டிலும் வவுனியாவிலும் இனந்தெரியாதவர்க ளால் நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கின்ற விரும்பத்தகாத எல்லாச் சம்ப வங்களும் முடிவுக்கு கொண்டு கொண்டுவரப்பட வேண்டுமென்பதை நான் இச்சபையிலே வலியுறுத்திக் கூறவிரும்புகின்றேன். அடுத்தாக வன்னி மாவட்டத்திலே தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற மீள்குடியேற்ற நடவடிக்கைகள் திருப்திகரமாக இடம்பெறவில்லை என்பதை நான் இங்கு தெரிவித்தேன். இந்த மீள்குடியேற்ற நடவடிக்கை களில் எமது நாட்டில் செயற்படுகின்ற உள்ளூர் மற்றும் சர்வதேச தனியார் தொண்டு நிறுவனங்களையும் ஈடுபடுத்த வேண்டும். ஏனென் றால், இந்த மீள்குடியேற்ற நடவடிக்கைகளை அரச அதிகாரிகளையும் திணைக்களங்களையும் மாத்திரமே பயன்படுத்தி முழுமையாக நிறைவு செய்யமுடியாது என்பதே எனது கருத்தாகும். இந்த மாவட்டமானது யுத்தத்தினால் முற்றுமுழுதாக அழிவுக்குள்ளாகியுள்ளது. ஆகவே அந்த மாவட்ட மக்கள் இந்த மீள்குடியேற்றத்தின் பலாபலன்களை முழுமையாக அனுபவிக்கவேண்டுமென்றால், அந்த நடவடிக்கைகளில் சர்வதேச தொண்டர் நிறுவனங்களையும் உள்ளூர் தொண்டர் நிறுவ னங்களையும் ஈடுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை வழங்கிய உங்களுக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகின்றேன். வணக்கம்.

- *5 மே 2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுமையான மீள்குடியேற்றத்திற்கு தடையாக உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கவேண்டும்

கௌரவ சபாநாயகர் அவர்களே!

பிரச்சினைகளைப்பற்றித் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. இது நாட்டுக்கோ எம் மக்களுக்கோ எந்தத் தீர்வையும் தரப்போவதும் இல்லை. அதே நேரம் அவலங்களைச் சொல்லிக் கொண்டிருப்பதாலும் அரசாங்கத்தையும் பிறரையும் குறை கூறிக்கொண்டிருப்பதாலும் மக்களுக்கும் நாட்டுக்கும் எந்த நன்மை யும் கிடைத்துவிடாது. இன்றைய சர்வதேச அரசியல், பொருளாதார போட்டிகளில் வெளியுலகம் இலங்கையை முற்று முழுதாக விழுங்கி விடவே முயற்சிக்கின்றது. வல்லரசு நாடுகளுக்கிடையிலான சந்தைப் பொருளாதாரப் போட்டியில் அவை இலங்கையைத் தமது நலன்களுக் காகவும் தேவைகளுக்காகவும் பயன் படுத்தவே விழைகின்றன. இதில் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்ற வேறுபாடுகள் கிடையாது. இந்தப் போட்டிகளின் விளைவுகள் தான் உள்நாட்டிலும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. நடந்த போரிலும் சரி போருக்கு பின்னரான நிலைமைகளிலும் சரி இந்தத் தாக்கங்கள்தான் இருக்கின்றன. இந்த நிலைமையில் இலங்கைக்கு வரும் நெருக்கடி என்பது சகலருக்கும் வருகின்ற நெருக்கடியாகவே இருக்கும். இதில் தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற பேதங்கள் இருக்க மாட்டாது. இதனை சகலரும் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இலங்கைக்கு வரும் ஆபத்தென்பது எல்லோருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமான ஆபத்தாகும். இலங்கைக்கு வருகின்ற நெருக்கடிகள் என்பது எல்லோருக்குமான நெருக்கடிகளாகும். எனவே, இந்த நெருக்கடிகளை எல்லோரும் இணைந்தே தீர்த்துக் கொள்ளவேண்டும். எங்களுக்கிடையிலான பிரச்சினைகளையும் விவகாரங்களையும் பேசித்தீர்த்தே அந்த நெருக்கடிகளை அகற்ற முன்வரவேண்டும். எந்த விவகாரங்களையும் பற்றி முதலில் நம்பிக்கையுடன் பேசுவது, கலந்துரையாடுவது, பிரச்சினைகளை புரியவைப்பது, பிரச்சினைகளைப் புரிந்துகொள்வது, சகிப்புணர்வுடனும் மேன்மையாகவும் விட்டுக் கொடுப்பது, சிலவற்றை நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் ஏற்றுக்கொள்வது என்று நாம் ஒரு புதிய வழியை ஏற்படுத்தினால் பல பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுவிட முடியும். இதுதான் இன்றைய தேவையாகும். இது சகல தரப்பினருக்கும் பொருத்தமாகையால் எல்லோரும் இதனை பின்பற்றியே ஆக வேண்டும்.

இன்றைய சர்வதேச சமூகத்தின் மொழியானது முரண்பாடுகளைக் களைவதைப் பற்றியதாகவே இருக்கின்றது. முரண்பாடுகளை களைவதற்கான உலகம் இன்று பாடசாலைகளில் கூட அதைக் கற்பிக்கின்றது. எங்களுடைய பாடசாலைகளிலும் முரண்பாடுகளை களைவதற்கான கல்வியை பிள்ளைகள் படிக்கின்றார்கள். ஆனால் எமது நாட்டில், ஏன் இந்த பாராளுமன்றத்தில்கூட முரண்பாட்டை வளர்க்கும் விதமாகவே பேச்சுக்களும் சிந்தனைகளும் அமைந்து கொண்டிருக்கின்றன. இது உண்மையிலேயே வருந்தத்தக்க, கவலை அளிக்கக்கூடிய விடயமாகும். முரண்பாட்டு அரசியல் துருவ நிலைப்பட்ட போக்குகள் எல்லாம் மீண்டும் அழிவுகளையும் நெருக்கடிகளையுமே தரும். நாடு இப்பொழுதுதான் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றது. மக்கள் இப்பொழுதுதான் கொலைகளைப்பற்றிய கவலைகள் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அழிவுகளுக்கும் அபாயங்களுக்கும் காரணமான நிலைமைகளைத் தூண்டி உருவாக்கிவிட்டு முரண்பாடுகளைத் தணித்துவிடாமல் ஊக்கப்படுத்திக் கொண்டு தீர்வைப்பற்றிப் பேசுவது மக்களை ஏமாற்றும் விடயமாகும். மனப்பூர்வமாகத் தீர்வை விரும்பினால் அதற்காக அக்கறையோடும் நம்பிக்கையோடும் பொறுப்புணர்வோடும் பாடுபட வேண்டும். தீர்வுக்கான வழிகளைக் காணவேண்டும்.

அரசியல் நெருக்கடிதான் அவசரகால நிலைமைக்கும் காரணம். அவசரகாலசட்ட விவாதத்தைப் புறக்கணிப்பதால் மட்டும் நெருக்கடி நிலைமையை தீர்த்துவிட முடியாது. நெருக்கடி நிலையுள்ள அவசரகாலச்சட்ட விவாதத்துக்குரிய சூழலை முதலில் நீக்கவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுதான் புத்தியான நடவடிக்கை. அதுதான் இந்த நாட்டு மக்களுக்கும் தேவையானது. யார் எப்படி நடந்து கொண்டாலும் இதை மதிநுட்பத்தால் வென்றுவிடலாம். அதை விளங்கிக்கொண்டு மதி நுட்பத்தை நாம் பயன்படுத்தவேண்டும். மக்கள் இன்னும் துன்பப் படுகிறார்கள். அவர்களுடைய அவலம் தீரவில்லை. அவர்கள் இன்னும் நெக்கடிக்குள்ளேதான் இருக்கின்றார்கள் என்றால் அதற்கு சகலரும் தான் பொறுப்பு கூறவேண்டும். இங்கே இருக்கின்ற சகலருக்கும் மக்கள் வாக்களித்திருக்கின்றார்கள். மக்களுடைய வாக்குகளைப்பெற்றே இங்கு எல்லோரும் வந்திருக்கின்றோம். ஆகையால் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இங்கே நாம் சிந்திப்போம்! பாராளு மன்றத்தில் கிடைத்த வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதில் பின்பற்றிய அணுகுமுறைகளை நாம் நிச்சயம் பயன்படுத்த வேண்டும். குறுகிய சுயலாபம்மிக்க, சொந்த மக்களுக்கே விரோதமான, அந்நிய ஆதிக்க சக்திகளுக்கு வாய்ப்பளிக்கின்ற, அரசியலை தயவுசெய்து விட்டு விடும்படி அவ்வாறான அரசியல் செய்யும் தரப்பினரிடம் நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

எமது மக்களை நாம் மந்தைகளாகவும் உலகம் புரியாதவர்களாகவும் தோற்றுப்போனவர்களாகவும் வைத்திருக்கமுடியாது. இருக்கும் வாய்ப் புக்களை நோக்கி மக்களை அழைத்துச் செல்லவேண்டும். அதற்காகத் தான் இந்த பாராளுமன்ற அமர்வுகள் நடக்கின்றன. அதனால் முடியா தென்றால் நாம் எதற்காக பாராளுமன்றம் வரவேண்டும்? இருக்கின்ற வாய்ப்புக்களையும் வளங்களையும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனுபவிக்கலாம். ஆனால் அதை மக்கள் அனுபவிக்கக் கூடாதென்று சிந்திப்பது எத்தகைய நாகரிகமாகும்? இப்பொழுது இங்கே அவசர காலச்சட்ட நீடிப்பு விவாதம் நடக்கின்றது. இந்த விவாதத்தில் கலந்து கொண்டு இந்த சட்டத்தை தொடரவேண்டிய தேவை என்ன? இந்தச் சட்டத்தை எப்படி இல்லாமல் செய்வது? என்பது பற்றிப் பேச வேண்டும். தவிர விவாதத்தில் கலந்து கொள்ளாமல் விடுவதன் மூலம் இந்த சட்டத்தை நீக்கிவிட முடியாது. எனவே காலத்தை நாங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். “தமிழ் பேசும் மக்களின் சார்பாக வும் இலங்கையின் அனைத்து மக்களின் சார்பாகவும் நான் செயற்படு கின்றேன்” என்ற உணர்வு வரும் போது பல பிரச்சினைகள் தீர்ந்து விடும். அந்த உணர்வுதான் இன்று தேவை.

இன்றைய இலங்கை என்பது, நாளைய தலைமுறைக்கான இலங்கை யாகும். அந்த இலங்கை அமைதியானதாகவும் நெருக்கடியற்றதாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழவேண்டும். "முடிந்துவிடாது" என்றிருந்த போர் முடிந்திருக்கின்றது. நாளை இதேமாதிரி ஒரு போர் ஏற்படக்கூடாதென்று நாம் பிரார்த்திக்க வேண்டும். தற்போது இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான வாயப்புக்கள் நிறையவே தென்படுகின்றன. எனவே இப்போதுள்ள பிரச்சினை, கடந்த காலங்களைப்போல நாம் கிடைத்த வாய்ப்புக்களைத் தவற விடாமல் இருப்பதைப் பற்றியதாகும். எப்போதும் எதிர்ப்பாகவும் முரணாகவும் நின்றால் வாய்ப்புக்கள் தவறியே போகும். இதை நாம் சிந்தித்து செயற் படவேண்டும். இந்தச்சந்தர்ப்பத்தில் மக்களின் பிரதிநிதிகள் - மக்களின் ஆணையைப் பெற்றவர்கள் - தங்களுடைய கடமைகளை சரிவரச் செய்ய வேண்டும். பிரச்சினைகளைப்பற்றிப் பேசிப்பேசியே காலத்தைக்கடத்தி மக்களை மீண்டும் அழிவுப்பாதையிலும் நெருக்கடிக்குள்ளும் சிக்க வைக்காமல் அந்த மக்களுக்கு உருப்படியாக ஏதாவது செய்தாக வேண்டுமென்று சிந்திக்க வேண்டும். இனியாவது அத்தகையதொரு மரபை புதிதாகக் கைக்கொள்ளுமாறு இச்சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

போருக்கு பின்னர் மக்கள் புதிதாக வாழத் தொடங்கியிருக்கின்றார்கள், அவர்களுக்கு பல பிரச்சினைகள் இருக்கின்றன. அந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பல நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகின்றது. மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் நாங்கள் நேரில் சென்று அவதானித்து வருகின்றோம். அமைச்சர்களும் மக்கள் மீள்குடியேறிய பகுதிகளுக்கு நேரடியாக விஜயம் செய்து அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றி வருகின்றனர். மக்கள் அமைதியான ஒரு வாழ்க்கையை விரும்புகின்றார்கள். தங்களுடைய குடும்ப உறுப்பினர்கள் மீண்டும் ஒன்றாகச் சேரும் நாளை எதிர்பார்த்திருக்கின்றார்கள். அதை நாம் உருவாக்கிக் கொடுக்கவேண்டும். கல்வி, மருத்துவம், போக்குவரத்து, மின்சாரம், தொழில் வாய்ப்புக்கள் போன்றவற்றுக்கான சிறப்பு வேலைத் திட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இடம்பெயர்ந்தவர்களில் எண்பது சதவீதமானவர்கள் போர் முடிந்து ஓராண்டுக்குள் மீள்குடி யேற்றப்பட்டிருக்கின்றார்கள்; அவர்களுக்கான அடிப்படை வசதிகள் மீள்கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஏறத்தாழ நான் காயிரம் விடுதலைப்புலி உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். ஏனையோரையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

தற்போது வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் மீள்குடியேற்ற நட வடிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பகுதிக்கு சென்று மிகுந்த ஊக்கத்துடன் செயற்படுவதை நான் இச்சபையிலே தெரிவிக்க வேண்டியவனாக இருக்கின்றேன். மீள்குடி யேற்ற நடவடிக்கைகளை அதிகளவில் பாதிப்படையச் செய்யும் விடய மாக அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் இருக்கின்றன. இந்த அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக யாழ். மாவட்டத்திலே வலிகாமம் வடக்கு, வடமராட்சி கிழக்கு போன்ற பகுதிகளில் மீள்குடியேற்ற நட வடிக்கைகள் தாமதமடைந்து கொண்டிருக்கின்றன. அரசாங்கம் இந்த அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாகப் பரிசீலனை செய்து, ஒரு தெளிவான தீர்மானத்தை எடுத்து, அப்பிரதேசங்களை மக்களுக்கு கையளிக்க வேண்டும். அவ்வாறே, கிளிநொச்சி மாவட்ட மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கும் அங்குள்ள அதியுயர் பாதுகாப்பு வலயமானது ஒரு பாரிய தடையாகக் காணப்படுகின்றது. எனவே இத்தடைகளை அகற்றி மக்களை விரைவாக மீள்குடியேற்றவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு இந்தச்சந்தர்ப்பத்தை வழங்கியமைக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். வணக்கம்.

- *8 ஜூன் 2010*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திக்கான வரவு செலவுத் திட்டமாக அமைய வேண்டும்

கௌரவ பிரதிச்சபாநாயகர் அவர்களே!

என்னைத் தெரிவுசெய்த பிரதேச மக்களின் சார்பாக இந்த வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு, இந்த மக்களின் தேவை களையும், வேண்டுதல்களையும் இந்த மன்றத்தில் சமர்ப்பிப்பதற்குச் சந்தர்ப்பமளித்ததையிட்டு என்னுடைய மகிழ்ச்சியையும் நன்றியையும் தெருவிக்கின்றேன். இந்த வரவு - செலவுத் திட்டமானது, யுத்தம் முடிந்த பின்னர் நாட்டை அபிவிருத்தி செய்யும் சூழலில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றது. ஆகையால், இதை அபிவிருத்திக்கான வரவு - செலவுத்திட்டமாகக் குறிப்பிடலாம். அதேவேளை, இந்த வரவு - செலவுத்திட்டமானது போர் முடிந்த பிறகு, அந்தப் போரினால் பாதிக் கப்பட்ட மக்களினது மறுவாழ்வையும் இந்தப் பிரதேசங்களினது மீளமைப்பையும் மேற்கொள்வதற்கான உள்ளடக்கங்களைக் கொண்டு அமைந்திருப்பதாக நான் கருதுகின்றேன். இடப் பெயர்வின் துயரத் தையும் அது ஏற்படுத்திய வாழ்வின் கடினங்களையும் சுமந்தபடி மீள்குடியேறிய கிளிநொச்சி மற்றும் யாழ். மாவட்ட மக்களின் குரல்களைப் பதிவுசெய்யுமாறு காலம் என்னைப் பணித்துள்ளது. அதே வேளை முழு நாட்டினுடைய நலனுக்கு அவசியமான விடயங்கள் குறித்தும் என்னுடைய கவனத்தைப் பதிவு செய்கின்றேன்.

போருக்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் மீள குடியேறத் தொடங்கி ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால் அப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்குடியேறிய மக்கள் இன்னமும் அடிப்படை வசதிகளுக்காகச் சிரமப் பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதேவேளை, இந்த மாவட்டத்தின் மேலும் சில பிரதேச மக்கள், மீள்குடியேற்றப்படாமல் தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளனர். போரினால் முற்றாகவே அழிந்துபோன இந்த மாவட்டத்தின் மீளுருவாக்கம் பற்றி அரசாங்கம் கவனமெடுத்திருக்கின்றது. ஆனால் இந்த மீளுருவாக்கம் இந்த மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்களும் நன்கு திட்டமிடப்பட்டே மேற்கொள்ளப்படவேண்டும். இந்த மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தன்மையையும் மற்றும் மாவட்டத்தில் உள்ள வளங்கள், சுற்றுச் சூழல் போன்றவற்றையும் கவனத்திற் கொண்டு அபிவிருத்தியும் மீளமைப்பையும் செய்யவேண்டு மெனக் கேட்டுக்கொள்கின்றேன். இதைப் போலவே யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் மீள்குடியேற்றப் பிரச்சினைகள் உள்ளிட்ட ஏராள மான தேவைப்பாடுகளையும் வேண்டுதல்களையும் கவனத்துக்குக் கொண்டுவருகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டம் ஒரு விவசாயப் பொருளாதார மாவட்டமாகும். இந்த மாவட்டத்தில் தென்னைப் பயிர்ச்செய்கை, நெற்செய்கை அத்து டன் ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட உப்பு உற்பத்தி, பரந்தனில் இயங்கிய இரசாயனத் தொழிற்சாலை, கடற்றொழில், கால்நடை வளர்ப்பு, காட்டுவளம், பனைவளம், மற்றும் பனை, தென்னை உற்பத்தித் தொழில்களென நிறைந்த பொருளாதாரக் கூறுகள் பல உள்ளன. ஆனால் இன்று இவையெல்லாம் சிதைந்து, அழிந்து போயிருக்கின்றன.

கௌரவ பிரதிச்சபாநாயகர் அவர்களே,

கிளிநொச்சி மாவட்டம் “வடக்கின் நெற்களஞ்சியம்” என்று வர்ணிக் கப்படும் அளவுக்கு, நெற்செய்கையில் அதிக உற்பத்தியையும், வரு வாயையும் ஈட்டிய மாவட்டமாகும். ஆனால், யுத்தத்தின் காரணமாக அது சிதைந்து போயிருக்கிறது. இந்த மாவட்டத்தில் மீண்டும் நெற்செய்கையை நிறைவாக்கும்போது, நாம் மறுபடியும் இந்த நிலையை எட்டமுடியும். அதன் மூலம் இந்த மாவட்ட மக்களின் வாழ்வாதா ரத்தை மேம்படுத்துவதுடன், மாவட்ட மக்களின் வேலைவாய்ப்புக் கும் இடமளிக்கலாம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்டிருக்கும் மக்கள், தற் போது விவசாயச் செய்கையில் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களுடைய சிறுபோக நெற்செய்கை 6,269 ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்டு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்பெறும் நிலையை அடைந்துள்ளது. தற்போது மீள்குடியேறிய 27,075 குடும்பங்களும் எதிர்வரும் பெரும்போகத்தில் 40,825 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்வதற்குத் தயாராக இருக் கின்றனர். இந்த இலக்கில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு உதவுமுகமாக, விவசாயத் திணைக்களம், விவசாய சேவைகள் திணைக் களம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன விவசாயிகளைத் தயார்படுத்தும் வேலைகளில் ஈடுபட்டுள்ளன. ஆனால், இந்த நெற் பயிர்ச் செய்கைக்கு உழவு இயந்திரங்களின் பற்றாக்குறையானது முக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

இந்த விதைப்பிற்காக, ஏறக்குறைய 500 உழவு இயந்திரங்கள் தேவை யான நிலையில், 50க்கும் குறைவான உழவு இயந்திரங்களே கிடைக்கக் கூடியதாக இருக்கின்றதென விவசாய சேவைகள் திணைக்களம் தெரி வித்துள்ளது. இதனை மாவட்ட விவசாயிகளின் சம்மேளனமும் உறுதி செய்துள்ளது. செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதங்களில் ஏறக் குறைய 30 நாட்களுக்கு விதைப்பு பூரணப்படுத்தப்படல் வேண்டும். தாமதமடைந்தால் மழை ஆரம்பமாகி விதைக்க முடியாத சூழல் ஏற் பட்டு விடும். இந்த நிலையில் 450 உழவு இயந்திரங்கள் மேலதிகமாகத் தேவைப்படுகின்றன. இதனைப் பெற்றுக்கொள்ள 50 வீத மானிய அடிப்படையில் இலகுகடன் ஏற்பாட்டின் மூலம் விவசாயிகள் உழவு இயந்திரங்களைக் கொள்வனவுசெய்ய விவசாய அமைச்சு ஆவனசெய்ய வேண்டும். இதன்மூலமே விவசாய மாவட்டமான கிளிநொச்சி மீளவும் தன்னை நிலைநிறுத்திக் கொள்முடியும்.

இதேபோன்று 11,992 மருந்து தெளிகருவிகளும், 5,370 நீர் இறைக்கும் இயந்திரங்களும் அவசரமாகத் தேவைப்படுகின்ற சூழலில், இதுவரை 150 மருந்துத் தெளிகருவிகளே மீள்குடியேறிய மக்களைச் சென்றடைந் துள்ளன. இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தொண்டர் நிறுவனங்கள் அரசுடன் இணைந்து செயற்பட வேண்டியது மிக மிக அவசியமாகிறது. அத்தோடு, சர்வதேச உதவி வழங்கும் நாடுகளும் மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் இப்பிரச்சினைகளை அணுகி, இலகு கடன்களுக்கான உதவிகளைச் செய்யவேண்டியது அவசியமா கிறது. இந்த மக்களின் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, மானிய அடிப்படையிலும், இலகுகடன் அடிப்படையிலும் விவசாயிகளுக்கு உதவுவதுடன், அவர்களிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வ தற்கான ஏற்பாடுகளையும் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். போரி னால் பாதிக்கப்பட்டிருக்கும் விவசாயிகளுக்கு உரிய நிவாரணத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கும் வகையில் அவர்களுடைய உற்பத்திப் பொருட்களை நிர்ணய விலையில் உத்தரவாதப்படுத்திக் கொள்வனவு செய்யவேண்டும். யுத்தம் முடிந்த பிறகு அங்கு விவசாயத் திணைக்களம், விவசாய சேவைகள் திணைக்களம், மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன தமது கட்டிடங்களையும் ஏனைய பௌதிக வளங்களையும் இழந்த நிலையிலே மனிதவளப் பற்றாக்குறையுடன் இப்பொழுது செயற்பட்டு வருகின்றன. இதனைச் சீர்செய்வதும் அவசியமாகிறது. குறிப்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையானது, திட்டமிடலிலும் நடை முறைப்படுத்தலிலும் பாரிய தடைகளை ஏற்படுத்துகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தின் உயர்பாதுகாப்பு வலயங்களில் - குறிப்பாக வடமராட்சி கிழக்கு, தனங்களப்புப் பகுதிகளில் - மீள்குடியேறிய மக்கள் தங்கள் விவசாய நடவடிக்கைகளுக்காக இவ்வாறான பல உதவிகளையும், தேவைகளையும் வேண்டிநிற்கின்றன. வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளைப் பகுதி மக்களின் விவசாய நடவடிக்கைகளும் அடிப்படை உதவிகளும் அவர்களது தேவைகள் ஈடுசெய்யப்படுவதும் அவசியமாகிறது. போர் முடிந்த பின்னர், இந்தப் பகுதியில் உள்ள தங்கள் வீடுகளுக்கும், கிராமங்களுக்கும் செல்வதற்காகவும் அம்மக்கள் காத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களை மீள்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் விரைவுபடுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

விவசாயத்திற்கு அடிப்படையான நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் பாரிய நீர்பாசனக் குளங்கள் அனைத்துமே புனரமைப்புச் செய்ய வேண்டியிருக்கின்றன. அத்துடன் நீர் பாயும் வாய்க்கால்களும் புனரமைக்கப்பட வேண்டியுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள குளங்களான இரணைமடுக்குளம், அக்கராயன்குளம், முறிப்புக்குளம், வன்னே ரிக்குளம், கரியாலை - நாகபடுவான்குளம், கல்மடுக்குளம் மற்றும் பிரமந்தனாற்றுக்குளம் போன்றவை விரைவாக புனரமைப்புச் செய்யப் பட வேண்டியுள்ளன. குறிப்பாக பூநகரிப் பிரதேசத்திலே விவசாயத்திற்கான நீர் வழங்கலுக்கு அப்பால் குடிநீருக்கான தேவையும் அவசியமாக இருக்கிறது. அங்கே நிலத்தடி நீரை வழங்குவதில் சிறு குளங்கள் பெரும் பங்காற்றிவருகின்றன. இப்பொழுது மக்கள் கிராம ரீதியாக இந்தச் சிறுகுளங்களைத் தங்களால் முடிந்தளவு சீரமைத்து வருகின்றனர். ஆனால், இந்தக் குளங்களை முறைப்படி ஆழமாக்கிப் புனரமைப்பது அவசியமாகும். இதன் அடிப்படையில் மட்டுவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு கிழக்கு, கறுப்பன் பள்ளக்குளம், பரமன்கிராய், கேப்பாங்குளம், பல்லவராயன்கட்டுக்குளம், சின்னவன்முறிப்புக்குளம், தேவன்குளம், குமுழமுனை ஒயாமாரிக்குளம் என்பவற்றின் புனரமைப்பு மிகவும் அவசியமாகிறது. இதேபோன்று நிலம் உவராகுவதைத் தடுக்கும் கௌதாரிமுனை உப்புநீர் அணைக்கட்டு, கிராஞ்சி உப்புநீர் அணைக் கட்டு, ஞானிமடம் உப்புநீர் அணைக்கட்டு என்பனவும் புனரமைக்கப் படுவது அவசியமாகும்.

இந்தப் பாரம்பரிய பிரதேசத்தின் அபிவிருத்திக்கும், மக்களின் அடிப் படைத் தேவைகளுக்கும் இவை மிக மிக முக்கியமாக இருக்கின்றன. எனவே இவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டும்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே இவை தவிர, கிளிநொச்சி மாவட்டப் பொருளாதாரத்தின் இன்னொரு முக்கியமான அம்சம் கால்நடை வளர்ப்பாகும். மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதாரத்தில் மிகவும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் பால் உற்பத்தி மற்றும் விலங்கு வளர்ப்பு என்பன முதன்மையானவையாக இருக்கின்றன. இங்கே மக்கள் தமது கால்நடைகளை மீளப் பெற்றுக்கொள்ளவும் அவற்றின் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் ஏற்பாடுகளை மேம்படுத் தவும் உரிய வழிமுறைகளைச் செய்யவேண்டும் என்பதை நான் கவனத்திற்கு கொண்டுவருகின்றேன். 30 ஆண்டுகளுக்கு முன்னர் கிளிநொச்சியிலிருந்து தினமும் 12 கொள்கலன்களில் பால் சேகரிக் கப்பட்டு பொலனறுவையிலுள்ள பால் பதனிடும் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஆகவே இங்கு மீண்டும் கால்நடைகள் வளர்ப்பைச் சிறப்பாக மேற்கொள்வதற்குத் தேவையான வளங்களையும், மானியங்களையும், மற்றும் கடனுதவிக ளையும் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியது அவசிய மாகிறது. வட பகுதியில் கிளிநொச்சியில் தான் கால்நடை வளர்ப்பைச் சிறப்பாக மேற்கொள்ள முடியும். இதற்குப் பொருத்தமான மேய்ச்சல் தரையை ஒதுக்கித் தரும்படி இங்கு மீண்டும் பாற்சபை இயங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து தருமாறு கிளிநொச்சி மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் கேட்டிருக்கின்றது.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே!

கிளிநொச்சியைப் பொறுத்தவரை, பூநகரிப் பிரதேசத்தில் 1,180 மீனவக் குடும்பங்களும், கண்டாவளைப் பிரதேசத்தில் 643 மீனவக் குடும்பங் களும் மீள்குடியேறியுள்ளனர். இந்த மக்கள் தொழில் செய்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

705 சிறிய கண்ணாடியிழைப் படகுகளும், 447 பெரிய படகுகளும், 1,013 வெளியிணைப்பு இயந்திரங்களும், 1,148 மீன்பிடி வலைகளும் தேவைப்படுவதாக மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது. இதில் 138 படகுகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ள நிலையில் மீதித் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய வழிகளைக் கண்டறிய வேண்டியது அவசியமாகிறது. பள்ளிக்குடா, நாச்சிக்குடா, வலைப்பாடு ஆகிய இடங்களில் மீன் பிடித்துறைகளை அமைப்பதற்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஐஸ் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கும் மற்றும் குளிர்சாதன வாகனங் கள் என்பனவற்றை வழங்குவதற்கும் கௌரவ கடற்றொழில், நீரக வளமூலகங்கள் அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் இணங்கியுள்ளார். அத்துடன் கிளாலிப் பகுதியில் மீளக்குடியேறவுள்ள மக்களின் நலன்கருதி கிளாலியிலுள்ள மீன்பிடித் துறையை மீள இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. அத்துடன் பளைப் பிரதேச செயலகப் பிரிவு மற்றும் தென்மராட்சி பகுதிக்கான பிரதான மீன்பிடித்துறை முகமும் இதுவேயாகும். எனவே, இந்தத் துறைமுகம் மீண்டும் இயங்குவதற்கான ஏற்பாடுகளைப் பாதுகாப்பு அமைச்சும், கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சும் இணைந்து மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே முன் வைக்க விரும்புகின்றேன்.

இதேபோன்று யாழ் மாவட்ட மீனவர்களுக்கு ஆழ்கடலில் பல நாட்கள் தங்கி மீன்பிடித் தொழில் புரியக்கூடிய வகையில் சமாசம் ஒன்றுக்கு 5 படகுகள் வீதம் 50 படகுகள் தேவைப்படுகின்றன. இதற்கான வேண்டுகோளையும் கௌரவ கடற்றொழில், நீரக வளமூலகங்கள் அபிவிருத்தி அமைச்சரிடம் யாழ் மாவட்ட மீனவர்கள் விடுத்துள்ளனர். இதேபோன்று குருநகர், பருத்தித்துறை, இன்பருட்டி, மயிலிட்டி போன்ற இடங்களில் மீன்பிடித்துறைமுகங்களை அமைப்பதற்கும் கடற்றொழில், நீரக வளமூலகங்கள் அபிவிருத்தி அமைச்சு இணங் கியுள்ளது. அவற்றை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நான் கோரிக்கை விடுக்க விரும்புகின்றேன். அத்துடன் யாழ் மாவட்டத்தில் கடற்றொழில் சார்ந்த முக்கிய பிரச்சினையாக இருப்பது, வடமராட்சி கிழக்கு மீனவர்களின் மீள்குடியேற்றமும் அவர்கள் மீண்டும் தொழிலில் ஈடுபடுவதற்கான வசதிகளை விரைவாகச் செய்து கொடுப்பதுமாகும். இந்த மக்கள் தொடர்ந்தும் முகாம்களிலும் வேறு பிரதேசங்களிலும் சிரமங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களை மீள்குடியேற்றம் செய்வதன் மூலம் பருத்தித்துறை முதல் சுண்டிக்குளம் சாலை வரையான பெருமளவு பரப்பளவைக் கொண்ட கடலில் மீன்பிடித்தொழில் மேற்கொள்ள முடியும். நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரப் பங்களிப்புக்கு இது ஒரு நல்ல வாய்ப்பைத் தரும் என்பதையும் நான் இங்கு சுட்டிக் காட்டுகின்றேன்.

அத்துடன் கிளிநொச்சியைப் பொறுத்தவரையில் இங்கு நன்னீர் மீன் பிடியாளர் கூட்டுறவுச் சங்கம் சிறப்பாகச் செயற்பட்டு வந்துள்ளது. இரணைமடு, வன்னேரி, அக்கராயன், கல்மடு, முறிப்பு ஆகிய குளங்களில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த பல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மீண்டும் தங்களுடைய தொழிலைச் செய்வதற்கு அனுமதியைக் கோரி நிற்கின்றார்கள். இரணைமடு நன்னீர் மீன்பிடியாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் 72 பேர் இன்னமும் தமது கிராமமான சாந்தபுரத்தில் மீளக்குடியேற முடியாமல், கிளிநொச்சி மத்திய கல்லூரி இடைத்தங்கல் முகாம்களிலேயே தங்கியுள்ளனர். இவர்களை மீள்குடியேற்றம் செய்து, மீன் பிடிப்பதற்கான அனுமதியை வழங்குவதோடு, நன்னீர் மீன்பிடியில் அவர்கள் மீண்டும் ஈடுபடுவதற்கு வேண்டிய உதவிகளையும், ஏற்பாடுகளையும் செய்து தரவேண்டும் என்று கௌரவ கடற்றொழில் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். இங்கு நன்னீர் மீன்பிடியை மேலும் அபிவிருத்தி செய்யக்கூடிய வளம் உண்டு என்பதையும் இவ்வேளையில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தின் கூட்டுறவுச் சங்கங்கள் முழுமையாகப் பாதிப்படைந்த நிலையிலேயே இருக்கின்றன. இச்சங்கங்களின் கட்டிடங்கள் சேதமாக்கப்பட்டிருக்கின்றன. இச்சங்கங்களுக்குரிய வாகனங்கள் போர்க்காலத்தில் முள்ளிவாய்க்கால், மாத்தளன் போன்ற பகுதிகளில் கைவிடப்பட்டன. போரின் இறுதிக்கட்டம் வரையில் இந்தச் சங்கங்கள் மக்களுக்கான சேவைகளை வழங்கி வந்திருக்கின்றன என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இவ்வாறு மக்களுக்குச் சேவை செய்த சங்கங்களின் வாகனங்கள் எதனையும் மீண்டும் பெறமுடியாத நிலையுள்ளது. அதேவேளை போருக்குப் பின்னர், அரசாங்கத்தினால் மக்களின் மீள்குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்ட போது, அடிப்படை வசதிகள் இல்லாத நிலையிலும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது சேவையை வழங்கி வந்திருக்கின்றன என்பதையும் இச்சபையின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன். இவ்வாறு இடர்காலம், நெருக்கடிக்காலம், அவசியமான காலம் என எப்பொழுதும் மக்களுக்கான அவசியப் பணிகளை ஆற்றிவந்த கூட்டுறவுச் சங்கங்கள், தமது வாகனங்களை மீளப் பெறுவதற்காகக் காத்திருக்கின்றன. அதேவேளை, போரின்போது அழிந்த வாகனங்களுக்குப் பதிலாக புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடனுதவியை அவற்றுக்குப் பெற்றுத்தர கூட்டுறவு அமைச்சு உதவ வேண்டும். பொதுவாகவே, போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங் களின் கூட்டுறவுச் சங்கங்களுக்கான உதவிகளைச் சிறப்பாகச் செய்ய வேண்டிய தேவை உணர்த்தப்பட்டுள்ளது. இதனைக் கூட்டுறவு அமைச்சு கவனத்திற் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். அதே வேளை, கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்கள் நிரந்தர வைப்பி லிட்ட நிதியை மீளப் பெறமுடியாத நிலை காணப்படுகிறது. இந்த விவகாரத்துக்கு விரைவிலே ஒரு தீர்வு காணவேண்டியுள்ளது. மேலும் இந்தச் சங்கங்களை வலிமைப்படுத்துவதன் மூலமே நூற்றுக்கணக்கான கூட்டுறவுப் பணியாளர்களுக்கான நலன்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதார உதவிகளு டன் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பிரச்சினைகளை முக்கிய கவனத்திற் கொண்டு அவற்றைத் தீர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதை இங்கு சுட்டிக்காட்டுகின்றேன். அத்துடன் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி பிரதேசங்களின் அபிவிருத்திக்கும், நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காகப் பாடுபடும் பனை, தென்னை வள உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இந்தப் போரினால் முழுதா கவே பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சங்கங்களின் அங்கத்தவர்கள் அனைவரும் முழுப்பங்காளிகள் மட்டுமல்ல, இவர்கள் தங்களுடைய உழைப்பின் மூலம் இந்தச் சங்கங்களை உருவாக்கி வளர்த்தவர்கள். இந்தச் சங்கங்களும் கூட்டுறவுச் சங்கங்கள் சந்தித்துள்ள அதே பிரச்சி னைகளையே எதிர்நோக்குகின்றன. எனவே, இந்தச் சங்கங்களின் வேண்டுகோளையும் கூட்டுறவு அமைச்சு கவனத்திற் கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

மீள்குடியேற்றம் நடைபெற்று வரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 18,278 மாணவர்கள் பாடசாலைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 9,100 மாணவர்களுக்கான மேசைகளும், கதிரைகளும் மட்டுமே இப்பகுதியிலுள்ள பாடசாலைகளில் உள்ளன என்று கல்வித் திணைக்களப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. செம்மன்குன்று, வேரவில், ஞானிமடம், சோரன்பற்று, மாயவனூர், மணித்தலை ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகள் இதுவரை நிரந்தரக் கட்டிடம் இல்லாமல் தற்காலிக கொட்டகைகளில் இயங்கியவையாகும். இந்தப் பாடசாலைகள் மழை வந்தால் இயங்க முடியாத நிலையில் இருக்கின் றன. பூநகரி பிரதேசத்தில் இருக்கும் கரியாலை - நாகபடுவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை, கூரையே இல்லாத நிலையில் காணப்படுகின்றது. தருமபுரம், அக்கராயன்குளம், பளை, ஜெயபுரம், ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகள் இயங்குகின்ற பொழுதிலும் பொதுவாக அங்கே அடிப்படை வளங்களே இல்லையெனலாம்.

அதிபர்களும், ஆசிரியர்களும் பல சிரமங்களின் மத்தியிலேயே இந்தப் பாடசாலைகளை இயக்கி வருகின்றனர். பெரும்பாலான பாடசாலைகளில் மரங்களுக்கு கீழேயே வகுப்புகள் நடத்த வேண்டியதாக இருக்கின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான பாடசாலையாகிய கிளிநொச்சி மத்திய கல்லூரி தொடர்ந்தும் இடைத்தங்கல் முகாமாகவே இயங்குகின்றது. இதனால் இந்தக் கல்லூரியின் மாணவர்கள் அருகிலிருக்கும் பிற கட்டிடங்களிலும் தற்காலிக கொட்டகைகளிலும் அகதிகள் போன்றே தமது கல்வியைக் கற்கின்றனர். இந்தப் பாடசாலைகளில் பல்வேறு வகையான பௌதீகவளப் பற்றாக்குறைகள் காணப்படுகின்றன. விஞ்ஞான கற்கைக்கான ஆய்வுகூடம் எந்தவொரு பாடசாலையிலும் காணப்படவில்லை. இது கணித, விஞ்ஞான பாடங்களைப் படிக்கும் கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்களைப் பெரிதும் பாதிக்கின்றது. எனவே இந்த விடயத்தை கல்வி அமைச்சு உடனடியாக கவனத்திலெடுக்க வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள எந்தவொரு பாடசாலையும் தேசியப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்படவில்லை. எனவே இப்பகுதியிலுள்ள நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்தும் தலா ஒரு பாடசாலை வீதம் தெரிவுசெய்யப்பட்டு, அந்தப் பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தியில் நாம் புதிய இலக்குகளை எட்டக்கூடிய வகையில் அவற்றைத் தரம் உயர்த்த கல்வி அமைச்சு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை விடுக்க விரும்புகின்றேன். கௌரவ பிரதிப் சபாநாயகர் அவர்களே, கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்படப் போரினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நீண்டகாலமாகத் தொண்டர் ஆசிரியர்களாக 870 பேர் கடமையாற்றி வருகின்றார்கள். இவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு மற்றும் மடு கல்வி வலய பாடசாலைகளில் மிகவும் நெருக்கடியான காலங்களில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றியுள்ளமை ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் தொண்டர் ஆசிரியர்கள் போர்க்காலத்தில் போர்ப் பிரதேசங்களிலும் பின்னர் நலன்புரி நிலையங்களிலும் இப்பொழுது மீள்குடியேற்றப் பகுதிகளிலும் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. எனவே, இவர்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்குவதற்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பாடுகளைக் கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் செய்து தர வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினை இன்று யாழ்ப்பாணத்தில் மிக முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகிவிட்டது. நீண்டகாலமாக, குறிப்பாக 7 ஆண்டுகளுக்கும் மேலாக பட்டதாரிகள் பலர் தொழிலொன்றை எதிர்பார்த்துக்காத்திருக்கின்றனர். நம்பிக்கையீனமும் விரக்தியும் நிரம்பிய இவர்களின் மனங்களில் நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டியது அவசியமாகின்றது. யாழ்ப்பாணத்தில் மட்டும் 2,180 பேர் தம்மை வேலையற்ற பட்ட தாரிகளாகப் பதிவு செய்துள்ளனர். கிளிநொச்சியில் 100 பேரும் முல்லைத்தீவில் 86 பேரும் வவுனியாவில் 150 பேரும் மன்னாரில் 230 பேரும் வேலையற்ற பட்டதாரிகள் என்னும் வகைப்படுத்தலின்கீழ் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கான தொழில் ஒன்றைப் பெற்றுக்கொள்ள உதவுதலானது, இந்தத் தேசத்தை நேசிக்கின்ற அனைவரினதும் பொறுப்பும் கடமையுமாகும். வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்குவது தொடர்பாக எட்டப் பட்ட கல்வி அமைச்சின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கின்றது. இதனைக் கல்வி அமைச்சு விரைவு படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். நேற்றைய விவாதத்திலே பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் கௌரவ பஸில் ராஜபக்ஷ அவர்கள் மக்கள் சபைச் செயலாளர்கள் நியமனம் தொடர்பாக உறுதியளித்துள்ளார். இந்த நியமனங்கள் பட்டதாரிகளின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் கிராமமட்டத்திலான அபிவிருத்தியை விரைவுபடுத்து வதற்கும் உதவுமென எதிர்பார்க்கின்றேன். இவருடைய இந்த முயற்சிக்கு எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மக்களின் வாழ்வாதாரக் கட்டுமானங்களில் தனியார் முதலீடுகள் மிக அவசியமானதாக அமைகின்றன. புலம்பெயர்ந்த இலங்கையர்கள் எந்த விதமான தயக்கமுமின்றிப் பங்குகொள்ளக்கூடிய புறச்சூழலொன்று உருவாக்கப்படவேண்டியது இன்றைய தேவையாகிறது. எனவே, இவற்றைக்கருத்தில் கொண்டு அரசாங்கம் முதலீட்டுக்கான இலகு நடைமுறையொன்றினை வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கிளிநொச்சி மற்றும் யாழ். மாவட்டங்களுக்கான மருத்துவ பணியாளர்கள் மற்றும் மருத்துவர்களின் தேவைகள் கடந்த காலங்களில் இந்த மன்றில் பலதடவைகள் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. தற்பொழுது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மாவட்டங்களுக்கு மருத்துவர்கள் உட்பட 250 மருத்துவப் பணி யாளர்கள் அனுப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், வைத்தியசாலைகளிலும், சுகாதார வைத்திய அதிகாரிகள் பணி மனைகளிலும் மற்றும் நோய்வராது காக்கும் சுகாதாரப்பணிகளிலும் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றுவோருக்கு நிரந்தர நியமனம் வழங்கி, பற்றாக்குறை நிலவும் சுகாதாரத்துறை வெற்றிடங்களை நிரப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். இந்தத்தொண்டுப் பணி யாளர்கள் இடர் காலங்களில் அர்ப்பணிப்புடன் பணியாற்றியிருக்கின்ற னர் என்பதை நாம் விசேடமாகக் கவனத்தில் எடுக்கவேண்டும்.

மீள்குடியேறிய மக்கள் தமது சுய உழைப்பில் தங்கி நிற்கும் நிலை ஏற்படும் வரையில், அவர்களுக்கான உலர் உணவு நிவாரணத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கவேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கு முன்வைக்கின்றேன். இந்தயுத்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு தொழில் வாய்ப்புக்கள் உதவித்திட்டங்கள் என்பன வழங்கப்பட வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட நிலையில் பலர் தனியாகவும் குடும்பமாகவும் உள்ளனர். இவர்களுடைய பாதிப்பானது சமூகத்தின் பாதிப்பாகும். குறிப்பாக இளம்வயதில் கணவனை இழந்தோர் எனப் பலவகையிலும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை இனங்கண்டு வழங்கவேண்டிய பொறுப்பும், கடமையும் அரசுக்குண்டு. அத்துடன் இலகுகடன், மானியங்கள், சிறப்பு உதவிகள் போன்றவற்றைச் செய்யவேண்டிய அவசியம் உள்ளது. இதன்மூலம் சமூகத்தில் பாதிக்கப்பட்டோர் என்ற வகை யில் பிற்படுத்தப்படாமல், அவர்களும் சமூகத்தின் ஓரங்கமாக பொதுவோட்டத்தில் ஈடுபட வழியேற்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்கள் பற்றியும் பொதுப் பணிகளில் ஈடுபடுவதற்கான அவர்களின் ஆர்வநிலை பற்றியும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டியுள்ளது என்பதை இங்கு வற்புறுத்திக்கூற விரும்புகின்றேன். எனக்கு வழங்கப்பட்ட நேரம் போதாமையினால் முக்கியமான சிலவிடயங்களை உள்ளடக்கிய எனது உரையின் எஞ்சிய பகுதியை ஹன்சாட் பதிவுக்காகச் சபாபீடத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

### சபாபீடத்தில் வைக்கப்பட்ட உரையின் எஞ்சிய பகுதி:

போர் நடைபெற்ற பிரதேசங்களின் அபிவிருத்திப்பணிகளைச் செய்யும் போது சுற்றுச்சூழலைப்பற்றிய அக்கறைகள் அவசியமானவை. இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் கூடிய அக்கறை காட்டு கின்றது. நாமும் எமது நாட்டையும், சூழலையும் பாதுகாப்பாக வைத் திருப்பதுடன், சுற்றச்சூழலை மேம்பாடடையச் செய்யவும் வேண்டி யிருக்கின்றது. துரதிஷ்டவசமாக, யுத்தத்தின் காரணமாக எமது சூழலின் அடையாளமே மாறியிருக்கின்றது. இப்போது மேற்கொள்ளப் பட்டுவரும் அபிவிருத்திப் பணிகளில் பிரதேசங்களின் இயற்கை அம்சங்கள், பண்பாட்டு அம்சங்கள் போன்றவற்றைப் பேணும் வகை யில் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பல பிரதேசங்களில் போர்க் காரணங்களுக்காக அமைக்கப்பட்ட மண் அணைகள் சீராக்கப்பட வேண்டியிருக்கின்றன. இந்த அணைகள் மழைக்காலங்களில் பாயும் ஆறுகளின் போக்கையே மாற்றிவிடுகின்றன. இதனால் குடியிருப்புகள், விவசாய நிலங்களின் வழியாக ஆற்றுவெள்ளம் பாயக்கூடிய நிலை காணப்படுகிறது. ஆறுகளின் போக்கை அடிப்படையாக வைத்தே மக்கள் தங்களுடைய குடியிருப்புகளையும், பயிர்ச்செய்கை நிலங் களையும் அமைப்பது வழமை. ஆனால் இப்போது இந்த மண் அணைகள் இந்த அடிப்படையைச் சிதைத்திருக்கின்றன. இதேவேளை சில இடங்களில் விவசாய நிலங்களை ஊடறுத்து மண் அணைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றையும் சீர்படுத்தவேண்டியுள்ளது. இதற்கான பொறுப்பையும் இந்த மன்று தனது கட்டுப்பாட்டிற் கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மீள்குடியேற்றத்தில் இன்னொருமுக்கிய அம்சமாக இருப்பது வீட்டு வசதியாகும். போரினால் சகலமக்களும் வீடுகளை இழந்திருக்கின்றனர். எனவே அவர்களுக்கான வீட்டுவசதிகளைப் பாரபட்சமின்றிச் செய்து கொடுக்கவேண்டும். வீட்டு வசதி முழுமையடையும்போது மீள்குடியேற் றத்தின் பெரும்பாலான குறைகள் நீங்கிவிடும். பின்னர் மீள்குடியேற்றம் தொடர்பான குற்றச்சாட்டுகளை எவரும் முன்வைக்க முடியாத சூழல் ஏற்படும். இப்பொழுது கிளிநொச்சியில் மீளக்குடியேறியுள்ள 27,075 குடும்பங்களில் ஒரு சிறு தொகுதியினருக்கான வீட்டுவசதிகளே செய்யப் படுகின்றன. ஏனைய குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகளுக்கான ஏற்பாடுகளே செய்யப்படுகின்றன. எதிர்வரும் நாட்களில் இந்தியா உறுதியளித்ததன்படி 50,000 வீடுகள் அமைக்கப்படுவது சாத்தியமாகும் போது இந்தக்குறைபாடு நீங்கிவிடுமென எதிர்பார்க்கலாம். பாதிக்கப் பட்ட மக்களுக்கு உதவ முன்வந்தமைக்காக இந்திய அரசுக்கும், இந்திய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கும் இந்தமன்றில் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் சில இடங்களில் குடிநீர்ப்பிரச் சினை பெரும் பிரச்சனையாக இருக்கின்றது. கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் தட்டுவன்கொட்டி, தருமபுரம், கோரக்கன்கட்டு, உமையாள்புரம், ஆனையிறவு, புன்னைநீராவி போன்ற இடங்களில் இந்தப் பிரச்சினை அதிகமாக உண்டு. பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் கிராஞ்சி, ஜெயபுரம், பூநகரி ஆகிய இடங்களில் இந்தப்பிரச்சினை உள்ளது. மேலும் பல்லவராயன்கட்டு, முழங்காவில், ஜெயபுரம், தட்டுவன்கொட்டி, பூநகரி போன்ற பிரதேசங்களில் இருக்கின்ற சிறு குளங்களை ஆழப்படுத்தி புனரமைப்பதன் மூலமாக நிலத்தடி நீர்ப் பெருக்கத்தைச் செய்வதன் மூலம் குடிநீர்ப்பிரச்சினை தீர்க்கப்படுவ துடன், இந்தப்பகுதியின் நிலைப்பாட்டையும் அதிகரிக்கலாம்.

## போர்க்கைதிகள், முகாம் மக்களின் விடுதலை மற்றும் காணாமற் போனோர் தொடர்பான பிரச்சினைகள்

யுத்தத்தின்போது பலர் காணாமற் போயுள்ளனர். இவர்களைப் பற்றிய தகவல்களை அறியமுடியமல் உறவினர்கள் பரிதவித்துக்கொண்டிருக் கின்றனர். இதேவேளை புலிகளால் கட்டாயமாகப் பிடித்துச் செல்லப் பட்டுப் போரில் ஈடுபடுத்தப்பட்டவர்கள் உட்பட முன்னர் உறுப்பினர் களாக இருந்தவர்களின் விடுதலை தொடர்பாகவும் கூடுதல் கவனம் எடுக்கவேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக்கேட்கின்றேன். தினமும் கண்ணீருடன் இவர்களுடைய உறவினரும், பிள்ளைகளும் கிராமங்களில் அலைந்துக் கொண்டு இருக்கின்றனர். இவர்களுடைய துயரத்திற்குத் தீர்வுகாண வேண்டும். நாடு அமைதிக்கும் இயல்பு நிலைக்கும் திரும்பியுள்ளது என்பதை நாட்டிலுள்ள அனைத்து மக்களும் உணர வேண்டும். அதுதான் அரசாங்கத்தின் வெற்றியாகும். இந்த வரவு - செலவுத்திட்டமானது மேன்மைதங்கிய ஜனாதிபதியினதும் அரசாங் கத்தினதும் கொள்கையினை விளக்கி நிற்கின்றது. இந்தக் கொள்கை யின் அடிப்படையில், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீளமைப்புக்கும் கவனம் செலுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், அந்தக் கவனத்தை மனிதாபிமான அடிப்படையில் மேலும் சற்று ஆழமாக்கும் படி இந்த மன்றை கேட்டுக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத்தீவில், முற்றிலும் வேறுபட்ட வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு மக்கள் கூட்டத்தின் மீது நமது கவனமும், கரிசனையும் பதிய தருணம் இதுவாகும். எனவே அந்த மக்களின் சார்பாக இந்த விடயத்தை இந்தமன்றில் கவனத்துக்குட்படுத்த விளைகின்றேன். அரசாங்கத்தின் இலக்கான "ஆசியாவின் எழுச்சிபெறும் அதிசயமாக" இலங்கையை மாற்றுவதற்கு மேற்குறிப்பிட்ட அத்தியாவசியப்பணிகளை செய்ய வேண்டி இருக்கின்றது. இப்போது நாடு முழுவதும் சீராக நெறிப்படுத்தக் கூடிய நிலைக்குட்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆகையால், அதற்கமைவாக அபிவிருத்திகளும், மேம்பாடுகளும் சீரான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏற்றத்தாழ்வுகள், பாரபட் சங்கள் இல்லாத ஒரு சீராக்கல் நடைமுறையைப் பயன்படுத்துவதன் மூலமாக எல்லோரும் விரும்புகின்ற ஒரு நல்லிணக்கச் சூழலை நாம் இழப்புக்களையும், அழிவுகளையும் நிறுத்துவதற்காக இந்த நாட்டில் எவ்வளவோ தியாகங்களை செய்ய வேண்டியிருந்தது. இதற்காகப் பலர் தங்கள் உயிரை அர்ப்பணித்திருக்கின்றார்கள். ஆனாலும், நாட்டின் நெருக்கடிகள் இன்னும் தீரவில்லை. இனப்பிரச்சினை அப்படியே இருக்கின்றது. அரசாங்கம் தங்களுக்கு எத்தகையத் தீர்வைத் தரப்போகின்றது என்ற எதிர்பார்ப்போடு தமிழ், முஸ்லிம் மக்கள் இருக்கின்றார்கள். அரசாங்கத்தின் தீர்வு முயற்சிகளுக்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நமக்கு கிடைக்கின்ற எந்த நல்ல வாய்ப்பையும் எவரும் தவற விடக்கூடாது. அவ்வாறு வாய்ப்புக்களை தவற விட்டதன் விளைவாக இந்தநாட்டில் இன, மத, மொழி பேதமின்றி அனைத்து தரப்பினரும் அனுபவித்தனர். அரசியற் தலைவர்கள் முதல் பஸ்களில் பயணிக்கும் பொது மக்கள் வரையில் மரண அச்சத்தை அனுபவிக்க வேண்டி ஏற்பட்டது. எனவே, அத்தகைய கொடுமையான அனுபவத்தை பெற்றுள்ள நாம் காலம் தாழ்த்தாமல் இனப்பிரச்சினை விடயத்திலும் ஒரு நிரந்தரத் தீர்வை எட்ட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகின்றேன்.

முழுமையான அபிவிருத்தியை எட்டவேண்டுமானால் நாட்டில் அமைதி நிலவவேண்டும். அமைதி நிலவவேண்டுமானால் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் காணப்பட வேண்டும். இன்றைய சர்வதேச நெருக்கடிகள் கூட நாம் தீர்க்காமல் விட்ட பிரச்சினைகளின் விளைவாக உருவாகிய நெருக்கடிகளே! எங்களின் பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்வோமாக இருந்தால் வெளியுலகம் தலையிடுவதற்கான சந்தர்ப்பங்களே இருக்கமாட்டாது. எனவே, இலங்கைக்கு வருகின்ற எந்த அபாயமும் தனியே ஒரு சமூகத்துக்கென வரும் அபாயம் அல்ல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும் அது எல்லோருக்குமான அபயமாகும் என்பதையும் சுட்டிக் காட்டுவதுடன், போர் முடிந்த பிறகு சமர்ப்பிக்கப்படும் இந்த வரவு - செலவுத்திட்டம் அபிவிருத்திக்கும் மீளமைப்புக்கும் ஒரு திட்டமாகக் கொள்ளப்படுவதற்கான அடிப்படைகளை ஏற்படுத்தும் வகையில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி விடயங்களை அங்கிகரிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றேன். நன்றி.

- *1 ஜூலை 2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர் நடைபெற்ற வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் மிகவும் பின் தங்கிய பகுதிகளாக இருக்கின்றன

கௌரவ தவிசாளர் அவர்களே!

நிதி, திட்டமிடல் அமைச்சின் வரவு - செலவுத்திட்டக் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்ததற்காக முதலில் உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். கடந்த கால் நூற்றாண்டுகால வரவு - செலவுத்திட்டங்களை விடவும் இந்த வரவு - செலவுத்திட்ட விவாதம் முற்றிலும் வேறுபட்ட சூழலில் நடைபெறுகின்றதென்பதை நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். கடந்த கால வரவு - செலவுத் திட்டங்களில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகப் பாதுகாப்பு அமைச்சின் நிதியொதுக்கீட்டில் அதிக கவனம் செலுத்த வேண்டியிருந்தது. இப்போது போர் முடிந்திருக்கும் சூழலில் நாட்டின் அபிவிருத்திக்காகவே முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டிய ஒரு நிலை உருவாகியிருக்கின்றது. அரசாங்கத்தின் விருப்பமும் அதுவாகவே இருப்பது அதில் இன்னும் ஆழ்ந்த கவனம் செலுத்தச் செய்வதற்கு வாய்ப்பாக அமையுமென எண்ணுகின்றேன். குறிப்பாக போர் நடைபெற்ற வடக்கு, கிழக்குப்பகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படவேண்டியது அவசியமென்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். போர் நடைபெற்ற வடக்கு, கிழக்குப்பிரதேசங்கள் அந்த நாட்டில் மிகவும் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்றனவென்பதை அந்தப்பகுதிகளுக்கு அடிக்கடி சென்றுவந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்ற கௌரவ அமைச்சர்களும், கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்களும் நன்றாகவே அறிவர். கௌரவ அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அவர்கள் அந்த மாவட்டங்களுக்கு அடிக்கடி விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்து வருகின்றமை இங்கே குறிப்பிடத்தக்கது. ஆகையால், அந்தப்பிரதேசங்களைத் துரித மாக மீள்நிலைக்குக் கொண்டுவந்து நாட்டின் ஏனைய பகுதி மக்களு டன் அந்த மக்களையும் இணைக்க வேண்டிய பொறுப்பு எங்கள் எல்லோருக்கும் உண்டு. அதிலும் குறிப்பாக, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பிரதேசங்களை மீள்நிலைக்கு கொண்டு வருவதில் கூடுதலான கவனத்தைச் செலுத்தவேண்டியிருந்தது. இதற்காகச் சிறப்பு நிதியொதுக்கீடொன்றினைச் செய்வதன் மூலம் அந்த அபிவிருத்திகளை முழுமைப்படுத்தலாமெனவும் இது அவசியமான பணியென்றும் நான் கருதுகின்றேன்.

தன்னிறைவான பொருளாதார அபிவிருத்திக்கு நிதியும், திட்டமிடலும் அவசியமானது என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள தொழில் வளங்கலுக்கு திட்டமிட்டு நிதிப் பங்களிப்பைச் செய்து, அவற்றினைப் பொருளாதார அபிவிருத்திக் காகவும் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காகவும் பயன்படுத்த வேண்டும். இந்த மாவட்டங்களில் விவசாயம், கடற்றொழில், பனை, தென்னை வள அபிவிருத்தி, கால்நடை வளர்ப்பு, உப்பு உற்பத்தி என்பன முக்கியமான பொருளாதார விருத்திக்காரணிகளாக இருக் கின்றன. இவற்றை மேம்மடுத்துவதற்கு, விவசாயிகளுக்கான உதவித் திட்டங்கள் அவசியமாகவுள்ளன. உழவு இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மருந்து தெளிகருவிகள், நீர்ப்பாசன ஏற்பாடுகள், குளங்களின் புனரமைப்பு, விவசாய திணைக்களங்களுக்கான வளத் தேவைகளை நிறைவு செய்தல், பயிர்ச்செய்கைக்கான ஏற்பாடுகளும், ஊக்குவிப்புகளும் என்றவாறு இந்த உதவித்திட்டங்கள் அமைகின்றன. முக்கியமாக, நீர்ப்பாசனம் மற்றும் விவசாயச் செய்கைகளுக்கான இயந்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் போன்றவற்றில் இந்த மக்கள் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். இந்த நெருக்கடிகளுக்கான தீர்வைக் காண்பதற்கு நிதி, திட்டமிடல் அமைச்சின் பங்களிப்பு மிகவும் அவசியமானதாகும். குறிப்பாக, மானியத்துடன் கூடிய இலகுகடன் திட்டங்கள் மூலமாக இந்த நெருக்கடிகளைத் தீர்த்துக்கொள்ள முடியும். அவ்வாறே கிளிநொச்சி மாவட்டத்திலிருக்கும் நீர்ப்பாசனக் குளங்களின் புனரமைப்பும், நீர்ப்பாசன விநியோகத்திற்கான வாய்க் கால் புனரமைப்பும் அவசியமானதொன்றாகும். இவை கடந்த 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளுக்கு மேலாக எந்தவிதமான புனரமைப்பும் செய்யப்படாத நிலையிலேயே இருக்கின்றன. இவற்றை விரைவாகச் சீர்செய்ய வேண்டியுள்ளது. அத்துடன், நெல்லைக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாட்டுக்கும் நிதியொதுக்கீடு அவசியமாக உள்ளதென்பதையும் நிதி, திட்டமிடல் அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இன்னொரு இயல்பான பொருளாதார வளம் கால்நடை வளர்ப்பாகும். கால்நடை வளர்ப்போருக்கான இலகு கடன் வசதிகளைச் செய்வதற்கும் நிதி, திட்டமிடல் அமைச்சு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். அத்துடன், பாலுற்பத்தியை மேம்படுத்துவதற்கு அங்கே பாற்சாலைகளையும், பால் பதனிடும் ஆலைகளையும் உருவாக்க வேண்டும். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அங்கே குறிப்பிடத்தக்க அளவில் பால் உற்பத்தி செய்யப்பட்டு, பொலனறுவையிலுள்ள பால் பதனிடும் நிலையத்திற்குத் தினமும் பால் விநியோகம் செய்யப்பட்டது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அத்துடன் இன்று செயற்படமுடியாத நிலையில் இருக்கிற பூநகரி, கிளிநொச்சி, கண்டாவளை ஆகிய இடங்களில் செயற்பட்டு வந்த கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களையும் புனரமைப்புச் செய்து, அவற்றை மீண்டும் செயற்படுத்துவதற்குத் தேவையான நிதிப் பங்களிப்பைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த அடுத்த முக்கியமான தொழில்வளம் மீன்பிடி ஆகும். கடற்றொழிலை விரிவாக்கம் செய்து அதனை மேம்படுத்துவதற்குச் சில அடிப்படை உதவிகள் தேவையாக இருக்கின்றன. அத்துடன் நன்னீர் மீன்பிடியும் இங்கு முக்கியமான ஒரு பொருளாதார வாழ்வாதார விடயமாகும். இந்த நன்னீர் மீன்பிடித் தொழிலுக்கு அவசியமான ஏற்பாடுகளையும் உதவிகளையும் நிதி திட்டமிடல் அமைச்சு செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். தொடர்ந்து நடைபெற்று வந்த போரின் காரனமாக இந்த மாவட்டங்களில் கடற்றொழில் நவீனமயப்படுத்தப்படவில்லை. அங்கு மீன்பிடித் துறைமுகங்களின் அபிவிருத்தி கடலில் நீண்ட நாட்கள் தங்கிநின்று மீன்பிடிப்பதற்கான நவீன படகுகள் என்பவை அவசிய தேவைகளாகவுள்ளன. யாழ் மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்கு ஆழ்கடலில் பல நாட்கள் தங்கி தொழில்புரியக் கூடிய ஐம்பது படகுகள் - சமாசம் ஒன்றுக்கு ஐந்து படகுகள் வீதம் - ஏற்பாடு செய்து கொடுக்கப்படவேண்டும். மீள் குடியேறிய மீனவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தமது தொழிலை மேம்படுத்துவதற்கு அடிப்படையான வெளியிணைப்பு இயந்திரங்கள், படகுகள், வலைகள் என்பனவற்றில் மானிய அடிப்படையில் அல்லது இலகுகடன் அடிப்படையில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். அத்துடன் கிளாலி, பளை, இயக்கச்சி, தட்டுவன் கொட்டி, வடமராட்சி கிழக்கு உள்ளிட்ட பிரதேசங்கள் உள்ளடங்கலாக, மேலும் ஒரு தொகுதி மீனவக் குடும்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற வேண்டியுள்ளது. அவர்களுக்கான தொழில் விருத்தி ஏற்பாடுகளும் இப்பொழுதிலிருந்தே செய்து கொடுக்கப்படவேண்டும். பள்ளிக்குடா, நாச்சிக்குடா, வலைப்பாடு ஆகிய இடங்களில் மீன்பிடித் துறைகளை ஏற்படுத்துவதற்கும், ஐஸ் உற்பத்தி நிலையம், குளிர் சாதன வசதிகளைக்கொண்ட வாகனங்கள் என்பனவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கும் மீன்பிடி நீரியல்வளஅமைச்சிடம் கோரிக்கை விடுத் துள்ளோம். இவற்றுக்கான நிதியையும் நிதி, திட்டமிடல் அமைச்சு வழங்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்த இரண்டு மாவட்டங்களிலும் பனை, தென்னை வளங்கள் மிக முக்கியமான பொருளாதாரக் காரணிகளாகும். இந்தவளங்களைப் பயன்படுத்துவதற்காக நிதி மிக மிக அவசியமாகின்றது. பனம்பொருள் உற்பத்திகளைப் பயன்படுத்தி நவீனமுறையில் மென்பானங்கள் தயாரிக் கும் திட்டத்துக்கும் ஏனைய பனை உற்பத்திகளுக்கும் இது மிகமிக அவசியம். அத்துடன் பனை மீள்நடுகைத் திட்டமும் ஏற்படுத்தப்பட வேண்டியிருக்கின்றது. அவ்வாறே பளைப்பிரதேசம் தென்னைவள உற்பத்தியில் சிறந்து விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. பளையில் அமைந்திருக்கும் தென்னை ஆராய்ச்சி நிலையத்தை மீள் வினைத் திறனோடு இயங்கவைக்க வேண்டியது அவசியமாகும். அத்துடன் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களை மீண்டும் திறம்படச் செயலாற்ற வைப்பதன் மூலம் இந்த வளங்களைப் பொருளா தார அபிவிருத்திக்கு ஏற்றவாறு பயன்படுத்திக் கொள்ளலாம்.

கிளிநொச்சியில் இருக்கின்ற இன்னொரு முக்கியமான பொருளாதாரச் சிறப்பம்சம் ஆனையிறவுப் பிரதேசத்திலுள்ள உப்பு வளம். அங்கிருந்த உப்பளத்தை மீண்டும் இயங்கச் செய்வதன் மூலம் பொருளாதார வளத்தைப் பெருக்குவதுடன், நாலாயிரத்துக்கும் அதிகமானவர்களுக் கான வேலை வாய்ப்புக்களையும் வழங்க முடியும். ஆகவே மேற்படி பொருளாதார விடயங்களுக்கு நிதி, திட்டமிடல் அமைச்சு ஒதுக்கீடு களை மேற்கொண்டு உதவுவதன் மூலம் இந்தப் பிரதேசங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி, மக்களின் வாழ்வை மீள்நிலைப் படுத்தி அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும்.

மேலும், இந்த மாவட்டங்களின் மீள் உருவாக்கத்துக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் அங்குள்ள மக்களுக்கான அடிக்கட்டுமானங்கள் விருத்தி செய்யப்படுவது அவசியமாக இருக்கின்றது. குறிப்பாக கிளி நொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள பாடசாலைகளுக்குத் தேவையான வளங்கள், அங்கு அமைந்துள்ள மருத்துவமனைகள் இயங்குவதற் குத் தேவையான வசதிகள், மக்களுக்கான வீட்டு வசதிகள் என்பவை மிகமிக அவசியமாக வழங்கப்பட வேண்டிய நிலை இருக்கின்றது. அங்குள்ள பாடசாலைகளில் 99 சதவீதமானவை பற்றாக்குறைகளின் மத்தியிலேயே இயங்கி வருகின்றன. மருத்துவமனைகளிலும் பல்வேறு குறைபாடுகள், பற்றாக்குறைகள் காணப்படுகின்றன. இங்கே அவற்றைப் பட்டியலிடுவதற்கு நேரம் போதாமையினால் நிலைமைகளைப் பொது மைப்படுத்தி இங்கு தெரிவிக்கின்றேன். ஆகவே, மக்களுக்குத் தேவை யான அடிப்படை வசதிகளும் தேவையான கட்டுமானங்களும் வழங்கப் படவேண்டியது அவசியமென்பதை நிதி, திட்டமிடல் அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவருகின்றேன்.

போருக்குப் பின் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும் போரி னால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சிறப்புநிதி ஒதுக்கீடு, சிறப்புத் திட்ட மிடல்கள் அவசியமென்பது உலகம் முழுவதுக்குமான பொதுவான விதியாகும். ஆகவே இந்தப் பொதுவிதியின் அடிப்படையில் நிதித் திட்ட மிடல் அமைச்சு இந்தப்பிரதேசத்திலுள்ள மக்களுக்கு சிறப்பு நிதி ஒதுக்கீட்டையும் சிறப்புத்திட்டமிடலையும் மேற்கொள்ள வேண்டு மென இச்சபையில் கேட்டு, எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன்.

- *9 ஜூலை 2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் முடிந்த பின்னரும் வட பகுதி மக்கள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தவண்ணமே இருக்கிறார்கள்

கௌரவ பிரதி சபாநாயகர் அவர்களே!

நீதித்துறை திருத்தச் சட்டம் தொடர்பான இன்றைய விவாதத்திலே கலந்து கொண்டு நீதித்துறை தொடர்பாக நான் கவனத்திற் கொண்டுள்ள சில விடயங்களைப் பற்றி கூற விரும்புகின்றேன். நீதி என்பது தனியே சட்டங்களால் மட்டும் வடிவமைக்கப்பட்டதல்ல. அது எங்களுடைய இதயத்திலும் எங்களுடைய வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் நிலை பெற்றிருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாட்டில் அமைதியும், மகிழ்ச்சியும் ஏற்பட்டு நாடு தன்நிறைவு பெறும். இந்த நாட்டிலே உள்ள மக்கள் மீது இனம், மதம், மொழி மற்றும் பிரதேச ரீதியாக பாரபட்சமாகச் செயற்படுகின்ற நீதித்துறை நடவடிக்கைகள் பற்றி நாம் எப்படிச் சொல்வது? இதற்கு என்ன அர்த்தம்? குறிப்பாக பாரபட்சமான, நீதிக் குறைபாடான நடவடிக்கைகள் காரணமாக எங்களது மக்களின் மனதிலே இருந்த குறைபாட்டின் காரணமாகவே இந்த நாடு பேரழிவுகளைக் கண்டது. இந்த நீதிக்குறைபாட்டின் காரணமான நிகழ்வுகளினாலே பல இலட்சம் உயிர்கள் பலியாகியிருக்கின்றன. இந்த நாட்டிலே இதுவரை தீர்க்கப்படாமல் இருக்கின்ற பல பிரச்சினைகளுக்கு எங்களுடைய மனங்களிலும், எங்களுடைய சமூக வழக்கங்களிலும் இருக்கின்ற நீதிக் குறைபாடு தான் காரணமாகும். கடந்த அறுபது ஆண்டு காலமாக இந்த நாட்டிலே இத்தகைய குறைபாடுகளுடனேயே ஆட்சி நடத்தப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருக்கின்றது. ஆனால் இனிமேலும் இவ்வாறான நீதிக்குறைபாடு கள் ஏற்படுவதற்கு இடமளிக்க வேண்டாம். நாங்கள் எல்லோரும் இணைந்து இந்த குறைபாட்டை போக்குவதற்காக இக் காலகட்டத்தை பயன்படுத்திக் கொள்வோம்! இந்த சந்தர்ப்பத்திலே முன்மாதிரியான காரியங்களை மேற்கொண்டு, எமது நாட்டில் வரலாறு படைப்போம்!

கௌரவ பிரதி சபாநாயகர் அவர்களே, போர் முடிந்த பின்னரும் வட பகுதியில் உள்ள மக்கள் இன்னமும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த வண்ணமே இருக்கின்றார்கள். நேற்றைய தினம் இச்சபை யிலே அவசர காலச்சட்டத்தை நீடிப்பதற்கான விவாதம் இடம் பெற்றது. ஆனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அடுத்த மாதம் உருவாக்கக்கூடிய அனர்த்தங்கள் தொடர்பான அவசரகால நிலைமையை பற்றி நான் இன்று இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அந்த மாவட்டங்களில் மீள்குடியேறிய மக்கள் இன்னும் சில நாட்களில் அப்பிரதேசங்களில் பெய்யவிருக்கும் பருவ மழையினால் பெரிதும் பாதிக்கப்படப் போகின்றார்கள். அந்த மக்களுக்கான வீட்டு வசதிகள் இன்னமும் பூர்த்தி செய்யப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன. தற்காலிகமான வீடமைப்பு முயற்சி இன்னமும் முழுமைபெறவில்லை. இதனால் மக்கள் பெரும் அனர்த்தத்திற்குள் சிக்கப்போகின்றனர். அங்கே பல இடங்களில் மக்கள் தங்குவதற்குப் பாடசாலைக் கட்டடங்கள் தானும் சீராக்கப்படவில்லை. மழைக் காலங்களில் பல பாடசாலைகள் இயங்க முடியாத நிலையிலேதான் இருக்கின்றன. ஆகவே எதிர்வரும் பருவ மழைக்காலம் அம்மக்களுக்கு மிகுந்த நெருக்கடியை ஏற்படுத்தும் அபாய நிலைமையே காணப்படுகின்றது. இது அரசாங்கத்துக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் முக்கியமான விடயமாகும்.

எந்த நாட்டிலும் தொடர்ந்து கொண்டிருக்கும் உள்நாட்டு நெருக்கடிகள் ஒருகாலகட்டத்தின் மேல் சர்வதேசத்தின் கவனத்தைப் பெறும் என்பதை யும் பின்னர் அடுத்த கட்டமாக அது சர்வதேச அழுத்தமாக மாறும் என்பதையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அந்த வகையில் அகதிகளின் பிரச்சினையும் மீள்குடியேற்ற விவகாரமும் சர்வதேசத்தின் கவனத்திற்குரியவை என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின் றேன். ஆகவே, உருவாகவிருக்கும் எந்த அனர்தத்திற்கும் இடமளிக்காத வகையில் நாம் நடந்து கொள்ளவேண்டும் என்பதையே நான் இங்கு கூறிவைக்க விரும்புகின்றேன். போரினால் பாதிக்கப்பட்ட மக்களை கூடிய விரைவில் உயர்வு நிலைக்கு கொண்டு வருவதற்கான பொறுப்பை இந்தச்சபை - இந்த நாடு - நாட்டிலுள்ள அனைத்துக்கட்சிகளும் கட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதமின்றியும் பிரதேச வேறுபாடின்றியும் மேற்கொள்ள வேண்டு மென நான் இந்தச்சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஆண்டுக்குள் அவர்களுக்கான வீட்டு வசதிகளையளித்தல், வீட்டு வசதிகளை முழுமைப்படுத்தல், தடுப்பு முகாம்களில் உள்ளவர்கள் அனைவரும் விடுதலைசெய்யப்படுதல், அவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல், அவர்கள் தங்கள் பிரதேசங் களில் வாழ்வதற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற முக்கியமான நடவடிக்கைகளை நாம் எல்வோரும் கூடி மேற்கொண்டு அவற்றுக்குத் தீர்வுகாண வெண்டியவர்களாக இருக் கின்றோம். இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கி பயணிக்கும் முதற் கட்ட நடவடிக்கையாகவும் ஒரு நல்ல முன்னுதாரணமான நடவடிக்கை யாகவும் இவை அமையட்டும்! இது அமைதிக்கான பயணம் என்ற நம்பிக்கையையும் திருப்தியையும் எல்லோருக்கும் அளிக்கட்டும்.

கௌரவ பிரதி சபாநாயகர் அவர்களே, ஒரே விடயத்தை திரும்பத் திரும்பக் கூறவும் விவாதிக்கவும் வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இந்தப் பாராளுமன்றம் இருக்கக்கூடாது என்று நான் இந்த மன்றை கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அபிவிருத்திப் பிரச்சினையாக இருக்கட்டும், ஜனநாயகம் தொடர்பான பிரச்சினையாக இருக்கட்டும், இனப்பிரச்சினை தொடர்பான விடயமாக இருக்கட்டும் அல்லது உறுப்பினர்களின் நடவடிக்கைகள் அல்லது அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் தொடர்பான விடயங்களாக இருக்கட்டும். எதுவானா லும் அவற்றைப்பற்றி திரும்பத்திரும்ப இந்த மன்றிலே விவாதிக்கின்ற நிலை இருக்குமானால் இந்த மன்று அதன் அர்த்தத்தையும் அதனுடைய பெறுமானத்தையும் இழந்ததாகவே இருக்கும் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். ஆகவே நாங்கள் ஒரு புதிய மரபையும் ஒரு நல்ல நீதியான வாழ்வையும் கட்டியெழுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

இன்னொரு விடயத்தையும் நான் இங்கே கூற விரும்புகின்றேன். அதாவது இந்த மாண்புக்குரிய சபையிலே எதையும் பேசலாம், எப்படியும் பேசலாம் என்ற ஒருபோக்கு வளர்ந்து கொண்டு செல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கருத்துக்களை முன்வைப்பதற்கு இருக்கும் உரிமை என்பது ஜனநாயகத்தின் உயர்ந்த பெறுபேறாகும். ஆனால் அந்த ஜனநாயகத்தைத் துஷ்பிரயோகம் செய்யும் வகையில் சில வேளைகளில் இந்த மன்றில் சிலர் கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். மக்களின் பிரச்சினைகளைப்பற்றிப் பேசுவதும் அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பதும் இந்த மன்றின் முக்கிய கடமையாகும். அதேநேரத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் நாம் என்ற வகையிலும் நாட்டின் சட்டத்தையும் நீதியையும் உருவாக்கும் நாட்டின் உயர்ந்த மன்றம் என்ற வகையிலும் நாம் அனைவரும் இங்கு முன் மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். நாட்டின் முக்கிய பிரச்சினைகளில் அரசியல் பேதங் களுக்கப்பால், கட்சி வேறுபாடுகளுக்கப்பால் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதில் இந்த மன்று முன்னுதாரணமாக இருந்தால் நாட்டு மக்கள் அதனைப் பின்பற்றுவார்கள். ஆகவே இந்த மன்றில் அதற்குத் தகைமையான முறையில் நடந்து கொள்வதுதான் சிறப்பு. அத்தகைய ஒரு புதிய பண்பாட்டு உருவாக்கத்துக்காக இந்த மன்றை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாடாளுமன்றின் தீர்மானங்கள் இங்கு அறிவிக்கின்ற விடயங்கள் எல்லாம் மக்களின் கவனத்துக்குரியவை. அவை நேரடியா கவே மக்களின் வாழ்வோடும் வரலாற்றோடும் சம்மந்தப்பட்டவை.

இந்த அவையில் நான் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டிய பிரச்சினைகளைப்பற்றி மீண்டும் இங்கே பேசுவதை விரும்பாத நிலை யிலும் அவற்றை மீண்டும் இங்கே சுட்டிக் காட்டவேண்டிய தேவை இருக்கின்றது. காரணம் இங்கு சுட்டிக் காட்டப்பட்ட மக்களின் பிரச் சினைகள் பலவும் தீர்க்கப்படாமல் அப்படியேதான் இருக்கின்றன. இது ஏன்? அரசாங்கத்திற்கு இவற்றில் முக்கிய பொறுப்புண்டு என்ற போதிலும், இதற்குத் தனியே அரசாங்கம் மட்டும் காரணமல்ல. எனவே, சகல தரப்பினரும் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து, எல்லோரும் இந்த நாட்டினர் என்ற எண்ணத்தோடு முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் எல்லோரும் ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலம் அவற்றைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும் என்று நான் இந்த மன்றை கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். நாம் நீதியானவர்கள் என்பதை நமது செயற்பாடுகள் நிரூபிக்கட்டும்! அப்போதுதான் நீதித்துறைக்கும் மதிப்புண்டாகும். இந்த மன்றுக்கும் பெறுமானம் இருக்கும். ஆகவே நாம் இதைப்பற்றித் தீவிரமாக சிந்திப்போம். இதை நோக்கிச் செயற்படுவோம். என்று கூறி விடை பெறுகின்றேன். நன்றி வணக்கம்.

- *04 ஒகஸ்ட் 2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகாலச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருந்தால் ஜனநாயகத்திலும் சுதந்திரத்திலும் குறைபாடே இருக்கும்

கௌரவ சபாநாயகர் அவர்களே!

அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்து நீடிப்பதென்பது எமது நாட்டின் பெருமைக்கு இழுக்காகும். நாட்டினுடைய நலனுக்கும் இயல்பு நிலைக்கும் அது பொருத்தமற்றது. அவசரகாலச் சட்டம் தொடர்ந்து அமுலில் இருக்கும் எந்த நாடும், ஜனநாயகத்திலும், சுதந்திரத்திலும் குறைபாடுள்ளதாகவே இருக்கும். அதுமட்டுமல்ல, அந்த நாடு அவரசகால நிலைமையிலிருந்து விடுபட முடியாததாகவும் இருக்கும். அத்துடன், இன்று நாட்டுக்கு அதிக முக்கியத்துவமாக இருக்கின்ற அபிவிருத்திக்கும் அது மிகப்பெரிய இடையூறாக உள்ளதென்பதை நான் இங்கு வருத்ததுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எனவேதான், அவசரகாலச் சட்டத்தை எதிர்க்கட்சியினரும், ஊடகங் களும், புத்திஜீவிகளும் எதிர்க்கின்றார்கள். என்னதான் பாதுகாப்புக் காரணிகளைச் சொன்னாலும் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதானது நாட்டின் வரலாற்றில் ஒரு கறைபடிந்த அத்தியாயமாகவே இருக்கும். ஆகவே, நாட்டில் நீடித்திருந்த போரை முடிவுக்கு கொண்டுவந்ததைப் போல் அவசரகாலச் சட்டத்தையும் முடிவுக்குக் கொண்டுவரவேண்டிய தார்மீகப் பொறுப்பு இந்த அரசாங்கத்துக்கு இருக்கின்றது. அதேவேளை, அது இந்தத் தேசத்தையும் மக்களையும் நேசிக்கின்ற அனைவரினதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்மீகப் பொறுப்பாகவும் இருக்கின்றது. ஆனால், மக்களையும், தேசத்தையும் பற்றி எந்த விதமான உணர்வு பூர்வமான அக்கறையில்லா தவர்களின் குறுகிய சுய இலாப அரசியல் நோக்கங்களுக்காக இந்தப் பிரச்சினை தீர்கப்படாமல் நீடிக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தத் தேசத்தில் இரத்தக் களரியை நிறுத்துவதற்கு விரும்பாத உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்தியின ரும் இந்த அவசரகாலச் சட்டத்தை நீக்க முடியாத நிலைமைக்குக் காரணமானவர்களாவர்.

நாம் உணர்வு பூர்வமாகவும், அறிவு பூர்வமாகவும் இந்தச் சட்டத்தை எதிர்க்கிறோம். ஆனால், நடைமுறையில் இது தவிர்க்கமுடியாத தேவை யாக இருக்கின்றதென்பதை நான் வருத்தத்துடன் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காது அரசியல் செய்யும் அரசியல் வியாபாரிகளின் நடவடிக்கைகளே இந்த நாட்டின் பல நெருக்கடிகளுக்கும் காரணமாக இருக்கின்றன. மக்களின் துன்பங்களை அரசியல் மூலதனமாக்கி, வெளி நாடுகளிலும் பத்திரிகைகள், மற்றும் இணையத்தளங்களூடாகவும் “கண்ணீர்” வியாபாரம் செய்கின்ற அரசியல்வாதிகள், அதைவிடுத்து, பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்காகவும் அவர்களுடைய நல் வாழ்வுக்காகவும் சிந்திக்க வேண்டும். அதாவது, அவர்கள் யதார்த்த அரசியல் கலாசாரமொன்றை நோக்கிச் செல்ல முன்வரவேண்டும். கடந்த காலங்களில் இருந்த அரசாங்கங்கள் போரையும் வளர்த்து அவசரகாலச் சட்டத்தையும் நீடித்திருந்தன. ஆனால், மேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் அந்த நிலையை மாற்றி போரை முடிவுக்குக் கொண்டுவந்துள்ளார். இதன் மூலம் நாட்டிலிருந்த அச்ச நிலைமை மாற்றமடைந்திருக்கின்றது. அதற்கான பொருத்தமான சூழலை உரு வாக்க சம்பந்தப்பட்ட அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்.

அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கான சூழலை உருவாக்கும் பொறுப்பு நாட்டிலுள்ள சகலருக்கும் உண்டு. இதில் ஊடகங்களுக்கும் முக்கிய பொறுப்பும் கடமையுமுண்டு. ஊடகங்கள் நாட்டிலுள்ள சமூகங் களுக்கிடையே நம்பிக்கையையும், புரிந்துணர்வையும் கட்டியெழுப்ப வேண்டும். அரசாங்கத்துக்கும் பிறகட்சிகளுக்கும் இருக்கும் பொறுப் புகளைப் பாரபட்சமின்றிச் சுட்டிக்காட்டவேண்டும். மக்களுக்குப் பொறுப்புச் சொல்லவேண்டிய நிலைமை தனியே அரசாங்கத்துக்கு மட்டும் இருக்க முடியாது. அனைத்து தரப்பினருக்கும் இருக்க வேண்டும். குறிப்பாக, இதில் அரசியற்கட்சிகளுக்கும், ஊடகங்களுக்கும் முக்கிய பொறுப்பும் கடமையும் உண்டு. அப்படியிருந்தால்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் - அது இனப்பிரச்சினையாக இருந்தாலென்ன, அவசரகாலச் சட்டமாக இருந்தாலென்ன, அல்லது அபிவிருத்தி, மீள்கட்டுமானம் போன்ற எதுவாக இருந்தாலும் - சாதிக்க முடியும். அவற்றுக்கு தீர்வைக் காணமுடியும். இப்போது எல்லாவற்றையும் புதிதாகச் சிந்திக்கவேண்டிய கட்டத்தில் அனைவரும் இருக்கின்றோம். ஏனென்றால், நாட்டில் இப்போது போரில்லை நாட்டை அச்சுறுத்திக் கொண்டிருந்த பல விடயங்கள் இன்றில்லை. ஆனால், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகள் மட்டும் அப்படியே இருக்கின்றன. இந்த நாடு இப்போது அபிவிருத்தியைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது. அந்த அபிவிருத்திப்பணிகளில் தங்களுடைய பங்களிப்பைச் செய்வதற்கு ஆர்வத்தோடு பெருந்தொகை மக்கள் இருக்கின்றார்கள்.

இவர்கள் நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யமுடியும். அதற்குரிய வளங்கள் அந்தப் பிரதேசங்களில் உண்டு. ஆனால். அவர்களால் அந்தப் பங்களிப்பை வழங்க முடியாமல் இருக்கின்றது. அவர்கள் முதலில் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பவேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியாமல் தவித்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களால் தங்களுடைய தொழில்களைச் செய்வதற்கு முடியவில்லை. அவர்கள் கடந்த கால வன்முறைச் சூழலில் எல்லாவற்றையும் இழந்து விட்டனர். இப்போது அவர்களுக்கு இழப்பீடு தேவையாகவுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படுவதும் அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கான நட்ட ஈட்டைப் பெறுவதும் உலக நடைமுறையாகும். இதனை இந்த மன்றிலே இருக்கின்ற உறுப்பினர்கள் கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களுக்கு நேரில் சென்று அங்குள்ள நிலைமைகளை பார்வையிட்டு வருகின்றார்கள். ஆகவே, அவர்களுக்கு அங்குள்ள நிலைமைகள் பற்றி நன்றாகவே தெரியும். எதிர்வரும் பருவ மழைக்காலத்தில் இம்மாவட்டங்களில் இடம் பெயர்ந்து தற்காலிகக் கொட்டில்களில் மற்றும் தறப்பாள் கூடாரங்களில் வாழ்வோர் மிகப்பெரியதோர் அனர்த்தத்தை எதிர்நோக்க வாய்ப்பிருப்பதாக அங்கிருக்கும் சமூக அமைப்புக்கள் தொடர்ந்து கூறிவருகின்றனர். அம்மாவட்ட மக்களுக்கான இருப்பிட வசதிகள் இன்னும் சீராக்கப்படவில்லை. இதனை விரைவுபடுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். தறப்பாள் கூடாரங்களில் வாழுகின்ற மக்களை அமைக்கப்படவுள்ள நிரந்தர வீடுகளில் குடியேற்றுவதற்கு முன்பதாக எதிர்வரும் பருவமழைக்குமுன் அவர்களுக்கு விரைவாக தற்காலிக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளை பெற்றுக்கொடுப்பது மிகவும் அவசியமாகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளை பிரதேசத்தில் மீள்குடியேறிய 6985 குடும்பங்களுக்கு தகரம், சீமெந்து தளங்களினூடனான தற்காலிக வீடு இன்னும் 3500 நிர்மாணிக்கப்பட வேண்டியுள்ளன. இது போன்றே, பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 1416 தற்காலிக வீடுகளின் நிர்மாணப்பணிகள் பூர்த்தியாக்கப்படவுள்ளன என்று பிரதேச ஒருங்கினைப்புக் குழுக் கூட்டங்களினூடாக பெறப்பட்ட புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. கரைச்சி, பளை பிரதேசசெயலாளர் பிரிவுகளில் இந்தத் தற்காலிக வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் 70 சதவிகிதம் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. இவற்றை மிகவிரைவாக பூர்த்தி செய்யவேண்டும். இல்லையெனில் எதிர்வரும் பருவ மழைகாலத்தில் மிகப் பெரிதோர் அனர்த்தத்தை - அவசர நிலையை - சந்திக்க வேண்டியிருக்கும் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அடுத்து, மீள்குடியேற்றப் பகுதிகளில் நிலவுகின்ற மருத்துவ பிரச்சினைகளும் மருந்துப் பற்றாக்குறையும் எதிர்வரும் நாட்களில் பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் அபாயம் இருக்கின்றது. தொற்றுநோய் அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியதொரு நெருக்கடி நிலை அங்கு உருவாக வாய்ப்பிருக்கின்றது. இதேவேளை, எதிர்வரும் மாரி காலத்தைக் கருத்திற்கொண்டு மேலும் ஆறு மாதங்களுக்குரிய உலருணவு நிவாரணத்தை அம்மக்களுக்கு வழங்கவேண்டியது தவிர்க்க முடியாத ஓர் அவசிய தேவையாக இருக்கின்றது. உயிரிழப்புகள், உடலுறுப்புக்கள், சொத்திழப்புக்கள் மற்றும் பிரதான உழைப்பாளர்களின் இழப்புக்கள் எனப் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டிருக்கும் அம்மக்கள் பெரும் சிரமத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் போரின் போது கைவிட்ட பொருட்களை மீளவும் இவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களின் தாக்கத்தை குறைக்க முடியும். அடுத்தகட்ட நடவடிக்கையாக, பாதிப்பின் தன்மைகளுக்கு ஏற்ப இவர்களுக்கு இழப்பீடுகளை வழங்கலாம். இதுவே, தற்பொழுது அவசரமாகச் செய்யவேண்டிய நடவடிக்கையாகும். மக்களை இயல்பு நிலைக்குக் கொண்டுவருவதற்கும் அவர்களை அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை மிகமிக அவசியமாக இருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்ட மக்கள் சுயதொழில்களில் ஈடுபடுவதற்கான கடன் உதவிகள் அரசாங்கத்தினால் தற்பொழுது வழங்கப்படுகின்றன. விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன. கடற்றொழிலாளர்களுக்கு மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன. இதற்காக, நாம் அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டும். போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பல அமைச்சர்கள் நேரில் சென்று அங்கு அரசாங்கத்தினுடைய வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றார்கள். குறிப்பாக, ஜனாதிபதியின் சிறப்புச் செயலணியின் பொறுப்பையேற்று வடக்குப் பிரதேசத்தில் அதிக நேரத்தைச் செலவழித்துப் பணியாற்றும் கௌரவ அமைச்சர் பஸீல் ராஜபக்ஷ அவர்களையும் “இளைஞர்களுக்கான நாளை” என்ற அமைப்பின் தலைவர் கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்களையும் நான் பாராட்டுகின்றேன். ஆனால், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் வாழுகின்ற மக்கள் தொழில் வாய்ப்புக்கள் இல்லாமல் தங்களுடைய வாழ்க்கையை ஓட்டிச் செல்ல மிகவும் சிரமப்படுகின்றார்கள். இவ்வாறு, அவர்கள் சிரமப்படுவதன் விளைவாக உருவாகும் மன உளைச்சலானது அரசாங்கத்தின் மீது நம்பிக்கையீனத்தையே உருவாக்கும். போரினால் முழுமையாக பாதிக்கப்பட்டவர்களை அரவணைத்து, அவர்கள் புதியதொரு வாழ்க்கையை ஆரம்பிப்பதற்குத் தேவையாக சிறப்பு வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கமானது, குறுகிய காலத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும். இதேவேளை, கிளிநொச்சியிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரியை மீளவும் இயங்க வைப்பதன் மூலம் ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளுக்குப் பயிற்சிகளை வழங்கி, அவர்களினுடைய தொழில்நுட்ப அறிவை வளர்க்கலாம். அந்த மாவட்டங்களில் புதிய தொழில் மையங்களை ஆரம்பிப்பதன் மூலமாகப் பலருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கமுடியும். அவ்வாறானதொரு ஏற்பாட்டை எங்களுடைய மக்களுக்காக அரசாங்கம் கண்டிப்பாகச் செய்துதரும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது, ஆதரவளிப்பது என்பது ஒவ்வொருவரதும் மனிதாபிமான கடமையாகும். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்புக்கள், பிற சலுகைகள் மற்றும் உதவிகளில் முன்னுரிமை அளிக்க வேண்டும். இவ்வாறு செய்வது உலகெங்குமுள்ள ஒரு பொதுவான நடைமுறையாகும். ஆகையால், அந்த மக்களுக்காக அத்தகைய சிறப்பு ஏற்பாடு ஒன்றை அரசாங்கம் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். பாதிப்படைந்த தமிழ், சிங்களம், முஸ்லீம் சமூகங்களைச் சேர்ந்த அனைவரும் இதனால் நன்மை பெறுவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேநேரம், இன்று அரசாங்கத்தின் கொள்கை சார்ந்து சர்வதேச தொண்டர் அமைப்புக்களுக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமையினால் தொண்டர் அமைப்புக்களின் மூலமாகக் கிடைக்கும் உதவிகளிலும் அந்த மக்கள் பாதிப்புக்களைச் சந்தித்திருக்கின்றனர். அதேநேரம், இன்று பல ஆயிரக்கணக்கான விதவைகளும் மற்றும் பெற்றோரை இழந்தோரும் ஊனமுற்றோரும் உதவிகளுக்காக காத்திருக்கின்றார்கள். இவர்களுக்கு முதற்கட்ட உதவிகள் தேவை. அடுத்த கட்டமாக இவர்கள் சுயமாக வாழ்வில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள் அவசியம். எனவே, போருக்கு பின்னரான புனர்வாழ்வொன்றைப் பெறுவதற்கு இவர்களுக்கு அரசாங்கமே உதவ முன்வர வேண்டும். போருக்குப் பின்னர் பல நாடுகளும் இலங்கைக்கு இவ்வாறான உதவி நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றன. ஆகவே, இவற்றைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் வாழ்க்கையையும் அவர்கள் வாழும் பிரதேசத்தையும் மேம்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் நாட்டின் அபிவிருத்திப் பணிகள் முழுமையான அர்த்தத்தைப் பெறும். நாட்டில் இயல்பு நிலையும் அமைதியும் ஏற்படும். நாடு முழுமையாகத் தன்னிறைவடையும்.

இன்று வடமராட்சி கிழக்கில் மீள்குடியேற்றம் நடைபெற்று முடிந்திருக்கின்றது. இதற்காக அரசாங்கத்திற்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆனாலும் வடமராட்சி கிழக்கில் மீள்குடியேறிய மக்களுக்கான பல அடிப்படை வசதிகள் இன்னும் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றன. இன்று கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இப்பணிகளில் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார். கடந்த வருடத்தில் வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தின் சில பகுதிகளில் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டார்கள். கடந்த வாரம் யாழ். கச்சேரியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கௌரவ அமைச்சர் பஸீல் ராஜபக்ஷ அவர்கள் உத்தரவிட்டதன்படி அங்கு மேலும் சில பகுதிகளில் மக்கள் மீள்குடியேறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. இன்று அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் நீண்டகாலமாக - கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கு மேல் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியிருக்கின்றார்கள். எனவே அவர்கள் அனைவரையும் இந்த உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மீள்குடியேறுவதற்குரிய நடவடிக்கைகளை அரசு விரைந்து செய்யவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை விட, இன்று வலிகாமம் வடக்கு பகுதியில் - கீரிமலை, மாவிட்ட புரம் வீதியில் - சட்டவிரோதச் சுண்ணாம்புக்கல் அகழ்வு நடவடிக்கை பாரிய இயந்திரங்களைக் கொண்டு படுவேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஏற்கெனவே புவிச்சரிதவியல் திணைக்கள அதிகாரிகள் அப்பிரதேசத்திற்கு வந்து அதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டபோதிலும் தொடர்ந்தும் அந்த அகழ்வு நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனால் வலிகாமம் வடக்கு மக்கள் மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாக யாழ் குடாநாட்டு மக்களுமே பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய அபாயம் இருக்கின்றது. ஆகவே இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லை என்றால் யாழ் குடிநீர் முழுவதும் உவர்நீராக மாறும் அபாயம் ஏற்படும் என்பதை நான் இந்த வேளையில் தெரிவித்து, விடைபெறுகின்றேன்.

- *23 செப்ரெம்பர் 2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சிகளின் நிபந்தனைகள் மற்றும் அணுகுமுறைகளுக்கு அப்பால் மக்களின் நன்மைகள் குறித்தே அதிகம் சிந்தித்தவர் வி. நவரத்தினம்

கௌரவ சபாநாயகர் அவர்களே!

இந்த அவையிலே தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்ட அமரர் வி. நவரத்தினம் அவர்களின் அனுதாபப் பிரேரணையில் நானும் சில வார்த்தைகள் பேசலாமென்று நினைக்கிறேன். அமரர் வி. நவரத்தினம் அவர்கள் அரசியலில் புகழை நிலைநாட்டிக் கொண்டிருந்த காலத்தில்தான் நான் அரசியலில் ஈடுபாடுகொள்ள ஆரம்பித்தேன். ஆனால் அவருடைய அரசியல் தேர்வு மற்றும் பாதை என்பன இன்னொரு விதமாக இருந்தன. எனினும் நான் அமரர் வி. நவரத்தினம் அவர்களை அன்றும் மதித்தேன். இன்றும் மதிக்கின்றேன். அத்தகைய மதிப்பைப் பெறுவதற்கு அவர் பல்வேறு வழிகளில் காரணமாக இருந்திருக்கின்றார். அமரர் வி. நவரத்தினம் அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கத்துவம் வகித்தபோதிலும் கூட அவர் தனது கட்சியின் அதிதீவிர அரச எதிர்பார்ப்புக்கு அப்பால் தனது மக்கள் குறித்துக் கரிசனையோடு இருந்தார் என்பதை நான் இச்சந்தர்ப்பத்தில் தெரிவிப்பது சாலப்பொருத்தம். சூழற்பொருத்தம் எனக் கருதுகிறேன். எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தை எதிர்ப்பதே தமது அரசியல் பணியென்றும் அதுவே தமிழ்த் தேசியத்துக்கு வலுவூட்டும் என்றும் கூறிக்கொண்டு பாராளுமன்றப் பதவியை வகிப்பதிலும் அந்தப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவியின் மூலமாகக் கிடைக்கும் சலுகைகள் மற்றும் வசதிகளைப் பெற்றுக்கொள்வதிலும் மாத்திரம் அக்கறையுள்ளவராக அமரர் நவரத்தினம் அவர்கள் இருக்கவில்லை. மாறாக அவர் மனச்சாட்சியுள்ளவராகவும் தனக்கு வாக்களித்த மக்களுக்கு முடியுமான அளவு விசுவாசமானவராகவும் இருக்க முற்பட்டார்.

அன்றைய தொகுதிவாரித் தேர்தல் முறையிலே அவர் பிரதிநிதித்துவப்படுத்திய ஊர்காவற்றுறை தொகுதியினுடைய மக்களின் நலன்களையும் தேவைகளையும் முன்னிறுத்திச் செயற்பட்டார். அவர் சார்ந்திருந்த கட்சியின் நிபந்தனைகள் மற்றும் அணுகுமுறைகள் என்பவற்றுக்கு அப்பால் அவர் தன்னுடைய மக்களின் நன்மைகள் குறித்தே அதிகம் சிந்தித்தார் என்பதற்கு அவரை இன்று நினைவு கூர்ந்து மதிக்கும் ஊர்காவற்றுறை மக்கள் சாட்சியாக இருக்கின்றனர். அரசாங்கத்தை எதிர்த்துக்கொண்டு அதனுடைய சலுகைகளைப் பெற்றுக் கொண்டு பாராளுமன்றத்தில் வசதிவாய்ப்புகளோடு தாம் வாழ்வதைப் போல தன்னுடைய மக்களும் அவர்களுக்குரிய அரசங்கத்தின் வசதிகள், சலுகைகள் மற்றும் உரிமைகள் என்பவற்றைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள் என்றும் கருதியவர் அமரர் நவரத்தினம் அவர்கள். தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளைப் போலவே அவர்களுடைய வழ்க்கையில் முன்னேற்றமும் அவசியம் என்று அவர் கருதியிருந்தார். ஆகையால் அவர் எதற்கெடுத்தலும் அரசாங்கத்தை குற்றம் சாட்டிக் கொண்டிருக்கவில்லை. அதனால் பயனேதும் கிட்டப்போவ தில்லை என்பதை அவர் நன்கு புரிந்திருந்தார். அதேவேளை அன்றைய அரசாங்கத்தின் தவறுகளையும் மக்கள் விரோதப் போக்குகளையும் அவர் கண்டிருந்தார். தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் அதற்கு முன்னிருந்த தமிழரசு கட்சி போன்ற கட்சிகளின் அரசியல் பாரம் பரியத்தைக் கொன்டிருந்த அமரர் நவரத்தினம் அவர்கள் ஒப்பீட்டளவில் இனவாதத்தை அதிகம் தூக்காத ஓர் அரசியல்வாதியாகவே பொதுவாகப் பலராலும் கருதப்பட்டார். இனவாத அரசியலையே தமது அரசியல் முதலீடாகக் கொண்டிருந்த தமிழரசு கட்சி பாரம்பரியத்தில் குறைந்த பட்சம் அமரர் நவரத்தினம் அவர்கள் விதிவிலக்காக இருந்துள்ளார். அதற்கு கராணம் அவரிடம் காணப்பட்ட தனது மக்களின் நலன்கள் குறித்த அக்கறையே! ஆனால் இந்த அக்கறையை ஒருவர் கொண்டிருந்தால் அது அராசங்கத்திடம் கையேந்துவதற்கு ஒப்பாகுமென்று சிலர் கருது கிறார்கள். அல்லது அது அரசின் சலுகைகளைப் பெற்றதைப் போலாகிவிடும் என்றும் வெளியே சொல்லுகிறார்கள். அவர் இப்போது உயிருடன் இருந்திருந்தால் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வகையானதொரு நிலைப்பாட்டை எடுத்திருப்பார் என்பதை நான் இங்கு சொல்ல வேண்டியதில்லை. மக்களுக்காகச் சிந்திப்பவர்கள் எப்போதும் மக்களின் நன்மைகளை கருத்திற் கொண்டே செயற்படு வார்கள். அவர்களுக்கே மக்களிடம் என்றும் இடமிருக்கும்.

அமரர் வி. நவரத்தினம் அவர்கள் தான் வாழ்ந்த காலத்திற்கு அப்பாலும் சிந்திக்க முயன்றிருக்கின்றார் அவர் சார்ந்த அரசியலால் அவர் பற்றி விமர்சனங்கள் செய்யப்பட்டாலும் அவர் அதற்கு அப்பால் மக்களுக் காகத் தனித்துவமாகச் செயற்பட முயன்றிருக்கின்றார் என்பதையும் நாம் இங்கு நினைவுகூறுவது பெறுமதியானதாகும். இறுதியாக அமரர் நவரத்தினம் அவர்களின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதோடு இந்தச் செய்தியை அவரது குடும்பத்திற்கு அறிவிக்க வேண்டும் என்றும் கௌரவ சபாநாயகர் அவர்களைக் கேட்டுக்கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி வணக்கம்.

- *24 செப்ரெம்பர் 2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருக்கும் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே!

எமது பிரதேசமான வடக்கு மாகாணமானது யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இம்மாகாணத்திலே மீள்குடி யேறுவதற்கென வந்துள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத நிலையில் வடக்கு மாகாணசபை காணப் படுகின்றது. ஒவ்வொரு நிதியாண்டிலும் எமது மாகாணசபைக்கென ஒதுக்கப்படும் நிதியானது, முழுமையாகக் கிடைப்பதில்லை. இந் நிலைமையானது, எமது மாகாண சபைக்கு மட்டுமல்ல, ஏனைய மாகாண சபைகளுக்கும் பொருந்தும். எனினும், போரினால் அதிகளவு பாதிக்கப்பட்ட மக்கள் எமது மாகாணத்தில் மீள்குடியேறி வருகின்ற நிலையில், அவர்களினுடைய தேவைகள் ஒப்பீட்டளவில் ஏனைய மாகாணங்களில் வாழ்கின்ற மக்களிலும் பார்க்க அதிகளவில் வேறுபட்டதாக இருப்பதனால், வட மாகாண சபைக்கு விசேட நிதி ஒதுக்கீட்டொன்றினைச் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், நிதி ஒதுக்கீட்டின்போது ஒதுக்கப்படும் நிதியில் ஏனைய மாகாண சபை களுக்குப் போலவே வட மாகாண சபைக்கும் வருட இறுதியில் வழங் கப்படும் நிதி வழங்கப்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எமது மாகாண மக்கள் பல்வேறு துறைசார்ந்த நிறுவனங்களிட மிருந்து சேவைகளை எதிர்பார்த்து நிற்கின்றனர். குறிப்பாக கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், வடமாகாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் நிலைமை மிகவும் மோசமாகக் காணப்படுகின்றது. யுத்தத்துக்கு முன்பு கூட்டுறவுத்துறையிலே எமது மாகாணம் கொடி கட்டிப் பறந்தது. ஆனால், கடந்தகால யுத்தம் கூட்டுறவுத்துறையை முற்றுமுழுதாக அழித்துவிட்டது. இதனை மீள் நிலைக்கு கொண்டு வருவதற்கு இலகுகடன் அடிப்படையில் நிதி உதவி வழங்கப்பட வேண்டுமென மத்திய வங்கியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக் கின்றது. இவ்வாறு, யாழ். மாவட்டத்துக்கு 329 மில்லியன் ரூபாவும், வவுனியா மாவட்டத்துக்கு 292 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 52 மில்லியன் ரூபாவும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு 274 மில்லியன் ரூபாவும், மான்னார் மாவட்டத்துக்கு 52 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் கிட்டத்தட்ட 1004 மில்லியன் ரூபா நிதி தேவைப் படுகின்றது. மேலும், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட் டங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் வாகனங்கள் அனைத்தும் யுத்தத்தினால் அழிக்கப்பட்டுவிட்டன. எனவே அச்சங்கங்களுக்குத் தேவையான வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக 96 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது.

அவ்வாறே, நாங்கள் அங்குள்ள சுகாதாரத்துறையினை எடுத்து நோக்கு வோமாயின், மாகாண சுகாதாரத் திணைக்களமானது, கடந்த யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வாழ்கின்ற வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்குமான சம்பளக் கொடுப்பனவுகளை ஒருவருட காலமாகியும் அவர்களுக்குக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றது. அதாவது வைத்தியர்கள் மற்றும் தாதிகளுக்குமான சம்பள நிலுவை 110 மில்லியன் ரூபா தற்காலிக அடிப்படையில் கடமையாற்றும் பணியாளர்களுக்கான சம்பள நிலுவை பல மில்லியன் ரூபா வழங்கப்படவில்லை. மேலும், புதிதாக நியமனம் செய்யப்பட்ட தாதிகளுக்கான கொடுப்பனவு கிட்டத்தட்ட 5.6 மில்லியன் ரூபாவும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கான சம்பள நிலுவை கிட்டத்தட்ட 3.1 மில்லியன் ரூபாவும் ஆயுர் வேத மருத்துவ உதவியாளர்களுக்கான சம்பள நிலுவை கிட்டத்தட்ட 3.1 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் கிட்டத்தட்ட 12 மில்லியன் ரூபா வழங்கப்பட வேண்டியுள்ளது. மேலும், அம்மாகாண கல்வித் திணைக்களத்தைப் பொறுத்தவரை இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவை கிட்டத்தத்த 110 மில்லியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபாயும் பதவி உயர்வினால் ஏற்பட்ட சம்பள நிலுவை கிட்டத்தட்ட 21 மில்லியன் ரூபாவும், பொறியியலாளர்களுக்கான சம்பள நிலுவை கிட்டத்தட்ட 3.7 மில்லியன் ரூபாவும் இன்னும் வழங்கப்படாமல் உள்ளன. இவை எல்லாமாக மொத்தமாக, 289 மில்லியன் ரூபா வட மாகாண சபையில் சம்பள நிலுவையாக உள்ளது. ஏற்கனவே வருட நிதி ஒதுக்கீட்டில் 524 மில்லியன் ரூபா திறைசேரியினால் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்நிதியினை மீள வழங்குவதன் மூலம் நான் இங்கு குறிப்பிட்ட சுகாதார மற்றும் கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கான நிலுவைக் கொடுப்பனவை எம்மால் வழங்கமுடியும்.

இன்று மீளக்குடியேறிய பகுதிகளில் எமது மக்கள் விவசாயத்தைப் பெரிதும் நம்பிக்கையுடன் மேற்கொள்கின்றார்கள். ஆனால், அவர்களது நெல்லைக் கொள்வனவு செய்து வைத்திருக்கக்கூடிய நெற்களஞ்சியங்களெல்லாம் கடந்த யுத்தத்தின் போது அழிக்கப்பட்டு விட்டன. இந்த நெற்களஞ்சியங்களை மீளத்திருத்தியமைப்பதற்கு எமக்கு 81 மில்லியன் ரூபாய் தேவைப்படுகின்றது.

அடுத்து இங்கு நான் இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டாக வேண்டும். அதாவது வட மாகாண சபையின் ஆளணிப்பிரச்சினை! கிட்டத்தட்ட 34 உள்ளூராட்சி சபைகளைக் கொண்டது வட மாகாணம். அங்கு ஏராளமான அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்கள் நீண்டகாலமாகவே நிரப்பப்படாமல் இருக்கின்றன. யாழ் மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் 1,485 வெற்றிடங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 166 வெற்றிடங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 206 வெற்றிடங்களும் வவுனியா மாவட்டத்தில் 321 வெற்றிடங்களும் மன்னார் மாவட்டத்தில் 336 வெற்றிடங்களுமாக மொத்தம் 2,514 வெற்றிடங்களை உடனடியாகவே நிரப்பவேண்டிய கட்டாயத்தில் இந்த மாகாண சபை இருக்கின்றது. உள்ளூராட்சி சபைகள் மக்களுக்குச் சிறந்த சேவைகளைச் செய்ய வேண்டுமாயின் இந்த வெற்றிடங்களை நிரப்பியேயாக வேண்டும். குறிப்பாக, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தில் உள்ள ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படாது போனால் அவற்றினால் மக்களுக்குச் சிறந்த சேவையினைச் செய்ய முடியாது.

அது போலவே, யாழ் Municipal Council உட்பட அந்தப் பிரதேச உள்ளூராட்சி சபைகளுக்கான அடிப்படைத் தேவைகள் நிறைய பூர்த்தி செய்யப்படாதிருக்கின்றன. மக்களின் அடிப்படைத் தேவைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தி செய்வதற்காக 13 Water bowsersகளும் 13 Gully bowsersகளும் மற்றும் treailer உடன்கூடிய 13 tractorsகளும் தேவைப்படுகின்றன.

சுகாதாரத்துறையை பொறுத்தவரையில் அங்கு ஆளணி பற்றாக்குறை மிகப்பெரிய பிரச்சினையாக. வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரிக்க முன்னர் 2006 ஆம் ஆண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கு அனுமதிக்கப்பட்ட மொத்த ஆளணித் தொகை 11293 ஆகும். 2006 டிசம்பர் மாதம் வடக்கு, கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்ட போது வட மாகாணத்துக்குத் தேவையான ஆளணி எண்ணிக்கை 5817 ஆகக் காணப்பட்டது. ஆனால், அந்த முழு ஆளணியும் நிரப்பப் படவில்லை. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நீண்ட காலமாக நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாகவே அங்கு ஆட்சேர்ப்புகள் எவையும் இடம்பெறவில்லை. 2008 ஆம் ஆண்டு இந்த ஆட்சேர்ப்பு அனுமதிக்காக கொழும்பிலுள்ள முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தை அணுகிய போதிலும் அக்காலப்பகுதியில் அங்கு 4,187 பேர் கடமையாற்றிக் கொண்டிருந்தமையால் அனுமதிக்கப்பட்ட மொத்த ஆளணி 4,187 மட்டுமே என்று அனுமதி வழங்கப்பட்டது. தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மீள் குடியேற்றம் செயற்பட்டு மக்கள் மீண்டும் இயல்பு வாழ்வுக்குத் திரும்பிய நிலையில், அங்குள்ள வைத்தியசாலைகள் மீள இயங்க ஆரம்பித்திருக்கும் நிலையில், அங்கு நிரப்பப்படாது விடுபட்ட 1,530 ஆளணியினரையும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இதுபோலவே அங்கு ஆசிரியர்களின் சம்பள நிலுவை வழங்கப்படாமையும் மிகப் பெரிய பிரச்சனையாக இருக்கின்றது. இது பற்றிய விபரமான அட்டவணையொன்றை ஹன்சாட் பதிவுக்காக இங்கு சமர்ப்பிக்கின்றேன்.

இதைவிட எமது மாவட்டத்தில் நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் நியமனங்கள் வழங்கப்படாது புறக்கணிக்கப்பட்டமையும் நிர்வாகத் துறைக்குப் பெரியபிரச்சனையாக இருக்கின்றது.

அங்கு மாகாண சபைக்கென அங்கீகரிக்கப்பட்ட SLAS உத்தியோகத்தர்களுக்கான ஆளணி 68 ஆகும். இருந்தபோதிலும் எமது மாகாணத்தில் SLAS உத்தியோகத்தர்கள் தற்பொழுது 16 பேர் மட்டுமே சேவையில் இருக்கின்றார்கள். எனவே மேலும் 52 SLEAS அதிகாரிகளை அங்கு நியமிக்க வேண்டியிருக்கின்றது. அதுபோலவே அங்கு SLEAS உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறையும் நிறையவே இருக்கின்றது. 1992ஆம் ஆண்டு தமிழ் பேசும் நிர்வாக உத்தியோகத்தர்களை உள்வாங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கான ஒரு விசேட பரீட்சை நடாத்தப்பட்டு அவ்வுத்தியோகத்தர்கள் உள்வாங்கப்பட்டார்கள். அதேபோல் வடக்கில் மீண்டும் நிர்வாக சேவை உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான விசேட பரீட்சைகள் நடத்தப்பட்டு அந்த நிலைமை சீர் செய்யப்பட வேண்டும் என்பதையும் நான் இங்கு வலியுறுத்திக் கூறி விடைபெறுகின்றேன்.

- *5, ஒக்டோபர் 2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தப் பாதிப்புக்களைச் சுமந்த பிரதேசங்களின் அபிவிருத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும்

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே!

தங்களுடைய புதிய பதவி யேற்புக்குப்பின்னர் தாங்கள் அக்கிராசனத்தில் அமர்ந்திருக்கும் இச்சந் தர்ப்பத்தில் எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்ததற்காக உங்களுக்கு வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டு எனது உரையை ஆரம்பிக்கின்றேன்.

அடுத்த ஆண்டுக்கான முக்கியத்துவம் வாய்ந்த வரவு செலவுத்திட்டம் இச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேதகு ஜனாதிபதியவர்கள் இந்த வரவு செலவுத்திட்டத்தை இச்சபையில் சமர்ப்பித்து உரையாற்றும் போது நாட்டின் அபிருத்தியையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தையும் அடிப்படையாகக் கொண்டதாகவே இந்த வரவு செலவுத்திட்டம் அமைந்துள்ளதென தெரிவித்தார். அந்த வகையில் இந்த வரவு - செலவுத் திட்டமானது எம்முடைய எதிர்காலத்தை ஸ்திரமாக்கும் அடிப்படைகளை கொண்டதாக அமைய வேண்டுமென நான் விரும்புகின்றேன். மாகாண மட்டத்திலான அபிவிருத்தி மீளாய்வு கூட்டங்களில் ஆராயப்பட்ட விடயங்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் பிரதான விடயங்களாக உள்ளடக்கப்பட்டுள்ளமையானது அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படைகளை வெளிக்கொண்டு வருவதாகவுள்ளது. இது பாராட்டுக்குரிய விடயமாகும். நடைமுறைக்குச் சாத்தியமான வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களினூடாகவே அதிகாரப்பரவலாக்கல் என்பதை நிரூபித்துச் செல்லும் செயற்பாடாக இது அமைகின்றதென நான் நம்புகின்றேன்.

இந்த வரவு செலவுத் திட்டமானது தற்போது எமது நாடு எதிர்பார்க்கின்ற அத்தனை தேவைகளையும் தாராளமாக நிறைவேற்றிவிடும் என்று எதிர் பார்ப்பதற்கு இல்லை. அவ்வாறானதொரு வரவு செலவுத்திட்டமானது கற்பனைக்கு உகந்ததாக இருக்குமேயல்லாது நடைமுறையில் சாத்திய மானதாக அமையாது. ஆனால் மக்களின் தேவைகளை நிறைவேற்று வதிலும் அவர்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதிலும் ஒரு வரவு - செலவுத் திட்டம் முதன்மையளித்திருக்குமானால் அது வரவேற்கப்பட வேண்டியதாகும். அதேவேளை நாட்டின் பாதுகாப்பையும் அதனுடைய அபிவிருத்தியையும் முன்னேற்றத்தையும் அது சம நிலையில் பேணுவ தாக இருந்தால் அந்த வரவு செலவுத்திட்டத்தை நிச்சயமாக எவரும் வரவேற்க முடியும். நாடு இப்போதுதான் போரிலிருந்து மீண்டிருக்கிறது. ஆனால் அது இன்னமும் முழுமையாக இயல்பு நிலைக்கு வரவில்லை. 30 ஆண்டு காலப் போரின் பாதிப்புக்கள் என்பது சாதாரணமானதல்ல. ஆகவே அவற்றினை மாற்ற வேண்டிய பொறுப்பையும் கடமையையும் இந்த வரவு - செலவுத் திட்டமும் இந்த மன்றமும் கொண்டிருக்கின்றன என்பதனை நான் இங்கு அழுத்தத்துடன் வலியுறுத்த விரும்புகின்றேன்.

வடக்கு கிழக்கின் நிலைமைகள் என்பது இந்த நாட்டின் ஒரு பகுதி யினுடைய நிலைமைகளே ஆகும். அவை இந்த நாட்டின் யதார்த் தத்தை முழுமையாக பிரதிபலிப்பனவாக இருக்கும். அபிவிருத்தியிலும் வளர்ச்சியிலும் எல்லா இடங்களிலும் சமனிலைத் தன்மை பேணப்படும் போதே முழு நாட்டினதும் அபிவிருத்தியும் முன்னேற்றமும் சாத்தியமா கும். வடக்கு கிழக்கில் போரின் பாதிப்புக்களை நிவர்த்திக்கும் பணி மிக முக்கியமானதாகும். இதற்காக அரசாங்கம், வடக்கின் வசந்தம் எனும் திட்டத்தில், துரித அபிவிருத்தி பணிகளுக்கும் மீள்குடியேற்ற அமைச் சின் நடவடிக்கைகளுக்கும் ஒரு கால எல்லையை நிர்ணயம் செய்து போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கின் நிலைமைகளை மீளமைப் பதுடன் பாதிக்கப்பட்ட மக்களை பூரணமாக இயல்பு வாழ்க்கையில் ஈடுபடுத்தவும் வேண்டும். இதற்கு இந்த இரண்டு தரப்புக்களின் செயற் பாடுகளையும் ஒருங்கிணைத்து தேசிய அபிவிருத்தியின் சமநிலைக் கேற்ப அவற்றின் செயற்பாடுகளை வழிகாட்டுவதற்குப் பாராளுமன்றக் குழுவொன்றை அந்தப் பிரதேசங்களில் அமைக்க வேண்டுமென இச் சபையில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். இதன் மூலம் இந்த மக்களின் நடைமுறைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை உடனடியாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணக்கூடியதாக இருக்கும். அத்துடன் அரசாங்கத்தின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் விதமாக இந்த மக்கள் தங்களின் பாதிப்புகளில் இருந்து விரைவாகவே மீளக்கூடிய வாய்ப்பும் உருவாகும்.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் தேசிய பாதுகாப்புக்கான நிதி வழமையைப் போல அதிகமாகவே ஒதுக்கப்பட்டுள்ளது. யுத்த காலத்தில் ஏற்படும் அதிகரித்த செலவீனங்களுக்காக அதிக நிதி ஒதுக் கப்படுவது ஏற்புடையது. யுத்தம் முடிவடைந்த பின்னர் மீண்டும் தேசிய பாதுகாப்புக்கு எதற்காக இந்தப் பெருந்தொகை பணம் என யாரும் கேள்விகளை எழுப்பலாம். யுத்தம் முடிந்துள்ள சூழலில் மீண்டும் பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கப்படுவது இன்னொரு யுத்தத்தை தடுப்பதற்காகவே என்பதை இலங்கைச் சூழலை மிகச் சரியாக புரிந்துகொண்டவர்களால் உணர்ந்துகொள்ள முடியும். இது உண்மையில் எதிர்கால பாதுகாப்புக்கானது என்றே அர்த்தப்படும். ஆனால் நாட்டின் அபிவிருத்தியையும் சமூகங்களின் பாதுகாப்பையும் சமூக ஒருமைபாட்டையும் சரியான செல்நெறியில் கொண்டு சென்றால் பாதுகாப்புக்கான செலவினத்தை எதிர்காலத்தில் குறைத்துக்கொள்ள முடியும். இதை இந்த தேசத்தின் பிரஜைகள் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை இந்த இடத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதேவேளை அபிவிருத்தியையும் சமூகங்களின் பாது காப்பையும் சமூக ஒருமைபாட்டைமயும் நாம் கவனத்தில் எடுக்காது போனால் எதிர்காலத்தில் மேலும் அதிகரித்த அளவில் பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டை செய்யவேண்டிய நிலை உருவாகும் என்பதையும் இங்கே வருத்ததுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே இந்த அடிப்படை விடயத்தை செயற்படுத்த வேண்டிய பொறுப்பு தனியே அரசாங்கத்திற்கு மட்டும் உரியது அல்ல. அது எதிர்கட்சிகளுக்கும் உரியது. அதற்கப்பால் இந்த பொறுப்பு இந்த நாட்டிலுள்ள அரசியற் கட்சிகள் மற்றும் அரசியற் தலைவர்கள் அனைவருக்கும் உரியது. அதற்கும் அப்பால் இந்த நாட்டின் புத்திஜீவிகளுக்கும் மத அமைப்புகளுக்கும் ஊடகங்களுக்கும் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் உரியது. எனவே இந்த பொறுப்பானது ஒவ்வோரு குடிமகனுக்கும் உரியதாகும். இன முரன்பாடுகளையும் பார பட்சங்களையும் வளர்த்துக்கொண்டு மக்களுக்கான வரவு செலவுத் திட்டத்தை பற்றிச் சிந்திக்க முடியாது. மக்களுக்கான வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி சிந்திக்க வேண்டுமானால் இன முரணையும் சமூக முரண்களையும் களையவேண்டும். அதேநேரம் அவற்றினைக் களைய வேண்டிய பொறுப்பு சிங்களத் தரப்பிற்கும் தமிழ்த்தரப்பிற்கும் சம விகிதத்தில் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் கௌரவமான வாழ்வு சுத்தமான சுற்றாடல், பிள்ளைகளின் சிறந்த வாழ்க்கை என்பவற்றை இந்த அரசு வழங்குமென்ற நம்பிக்கையிலேயே மக்கள் எம்மைத் தெரிவுசெய்துள்ளன ரென மேதகு ஜனாதிபதி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

மேதகு ஜனாதிபதி அவர்களின் இந்த விருபத்தினையே தமிழ்பேசும் மக்களும் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு இவையெல்லாம் கிட்ட வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். இந்த அடிப்படையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடைய அடிப் படைப் பிரச்சினைகளையும் இந்த சபைக்கு கொண்டுவர வேண்டியது அந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எனது கடமையாகின்றது. பொருளாதார அபிவிருத்தியை நோக்கிய அணுகுமுறையில் பாரிய உட்கட்டமைப்பு நிர்மாணங்கள் நாடெங்கும் பரவலாக நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இந்தப் பணிகள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட மாகாணத்தில், குறிப்பாக கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. எனினும் கடந்த முப்பது வருடங்களாக எந்தவித உட்கட்டமைப்பு நிர்மாணப் பணிகளையும் பெற்றுக்கொள்ளாத இந்த மாவட்டங்களின் தேவை ஏனைய இடங்களுடன் ஒப்பிடும்போது மிக அதிகமாகவே உள்ளது. ஏ-9 வீதி, பரந்தன் மன்னார் வீதி, பரந்தன் - முல்லைத்தீவு வீதி, மாங்குளம் - முல்லைத்தீவு வீதி, என்பவற்றின் புனரமைப்புக்கென நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட போதும் அங்கு மக்கள் அதிக அளவில் பயன்படுத்தும் ஏனைய வீதிகளும் இன்றும் மாரி காலத்தில் சேறாகவும் கோடை காலத்தில் புழுதியாகவும் மக்க ளைத் துன்புறுத்தும் கிறவல் என்ற நிலையில்தான் இருக்கின்றன. என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்த வீதிகள் பெரும்பாலும் மகாணசபையின் கீழுள்ள வீதி அபிவிருத்தி திணைக் களத்தின் பொறுப்பிலும் உள்ளூராட்சிச் சபைகளின் பொறுப்பிலும் உள்ளமையால் இவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மாகாண சபைக்கூடாகவே நடைபெறுகிறது. ஆனால் மாகாண சபைக்கான நிதி ஒதுக்கீடுகளின் போதாமை இந்த பணிகளுக்கு மிகப்பெரிய தடையாக உள்ளது என்பதை இங்கே தங்களின் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகின்றேன். எனவே விடுவிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பகுதி களின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு இந்த வரவு - செலவுத் திட்டத்தில் இவற்றுக்கான விசேட நிதி ஒதுக்கீடொன்று செய்யப்பட வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். இதே போலவே இந்தப் பிரதேசங்களின் உட்கட்டமைப்பில் முக்கியமான இன்னோர் அம்சம் மின் மயமாக்கலாகும். இது "வடக்கின் வசந்தம்" திட்டத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் வினைத்திறனுடன் செயற்படுத்தப்படுகின்ற போதும் மக்களுக்கான வளங்கல்களில் காலதாமதம் காணப்படுகின்றது. இதனால் மக்களின் அபிவிருத்தியை நோக்கிய செயற்பாடுகளும் நிறைவான வாழ்க்கை சூழலும் தாமதமடைகின்றன.

வறுமையை ஒழிப்பது இந்த வரவு - செலவுத்திட்டத்தின் முக்கிய இலக்காக முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. இதனை அடைவதற்கான மார்க்கங்களாக விவசாயமும் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தியும் கடற்றொழிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. அபிவிருத்தி அடைந்துவரும் ஒரு நாட்டில் இவ்வாறான அபிவிருத்திக்கு நுண்நிதியக்கடன் வழங்கி வருகின்றமை உலக பொருளாதாரக் கோட்பாடாகியுள்ளது. இந்த அடிப்படையில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வடக்கின் வசந்தம் கடன்திட்டம் இந்த அரசினால் உருவாக்கப்பட்டது. எனினும் போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மக்கள் இதன் பயனை அடையமுடியாத நிலைமை குறித்து என்னுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் 100 இற்கு குறைவானவர்களே இத்திட்டத்தின் பயனை அடைந்துள்ளனர். எனவே இந்த வடக்கின் வசந்தம் திட்டத்தை போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்கு கிடைக்கக்கூடிய வகையில் மேலும் நிதி ஒதுக்கீட்டைச் செய்து தரவேண்டுமென நான் இங்கு கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

கௌரவ பிரதி சபாநாயகர் அவர்களே!

மீள் குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்கும், பொருளாதார மேம்பாட்டுக்கும் திரும்பும் வகையில் விவசாயத்திலும் கடற்றொழிலிலும் பல்வேறு வகையான உதவித்திட்டங்களை பெற்றுள் ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டு பாரிய பரப்பளவில் அதாவது 54,883 ஏக்கரில் நெற்செய்கையை மேற்கொள்ளக்கூடிய ஒரு சூழல் உருவாக்கப்பட்டுள்ளதை எமது அரசினுடைய சாதனையாக நான் கருதுகின்றேன். இதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பஸில் ராஜபக்ஷ அவர்கள் காட்டிவரும் அக்கறை மிகமிக முக்கியமான தாகும். எனினும் இந்தப்பயிர்ச் செய்கையின் விளைவுகளை உரிய முறையில் சந்தைப்படுத்தி அவர்களுடைய வாழ்க்கை மேம்பாட்டுக்கு உதவ வேண்டியதும் எமது கடமையாகும். இந்த அடிப்படையில் இந்த மாவட்டங்களிலுள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களை நிதி ரீதியாகப் பலப்படுத்தி அவர்களுக்கான நெற்களஞ்சியங்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிசி ஆலைகளையும் உருவாக்க உதவவேண்டிய தார்மீகப் பொறுப்பு எமக்கு இருக்கின்றது. இதற்காக ஒவ்வொரு சங்கமும் 20மில்லியன் ரூபாவினை மதிப்பீடு செய்துள்ளது. இந்த நிதியை குறைந்த வட்டியில் நீண்டகால அடிப் படையில் ஏற்பாடு செய்து வழங்க வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கின்றேன். இதேபோன்று பால் உற்பத்தி கால் நடை வளர்ப்பு ஆகியவற்றுக்கான அபிவிருத்திக்குரிய உதவிகளையும் மீன்பிடிக்கான உதவிகளையும் வாழ்வாதாரத்துக்கு இந்த மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். இவற்றையும் கூட்டுறவுக்கூடான உதவிகளாக மதிப்பீடுகளின் அடிப்படையில் வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் தேசத்திற்காகத் தம்மை அர்ப்பணித்த படைவீரர்களுக்கு சிறப்பான செயற்றிட்டங்கள் உள்வாங்கப்பட்டிருப் பதைப்போன்று போரினால் பாதிக்கப்பட்ட உடல் ஊனமுற்றவர் களுக்கும் அனாதரவாக்கப்பட்ட சிறுவர்களுக்கும் துணைவரை இழந்த பெண்களுக்கும் சிறப்பான செயற்றிட்டங்கள் உள்வாங்கப்பட வேண்டு மென இங்கு நான் வலியுறுத்தி கூற விரும்புகின்றேன். வறுமையை ஒழித்தல் என்ற இலக்கு நோக்கிய எமது தேசத்தின் பயணத்தில் பல்வேறு வகையான தடைகளை கடக்க வேண்டியுள்ளது. குறிப்பாக இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்றப்பட்டதன் பின்பும் தமது வாழ் வாதாரத்தை உருவாக்கிக் கொள்வதற்கான அடிப்படை வசதிகளை இன்னும் பெற்றுக்கொள்ளாத புறச்சூழ்நிலைகளையும் இந்த மன்றின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டியுள்ளது. தற்போது போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் சிறுவர்கள் இளைஞர்களின் ஒளிமயமான எதிர்காலம் குறித்த அக்கறையுடன் கல்வி அமைச்சர் கௌரவ பந்துலகுணவர்த்தன அவர்களும், கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்களும் செயற்பட்டு வருகின்றனர். அங்குள்ள பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று அவர்களின் குறைகளைத் தீர்ப்பதில் அவர்கள் காட்டும் அக்கறை நன்றிக்குரியதாகும். அங்குள்ள பாடசாலைகள் பல்வேறுவகையான அடிப்படைப் பௌதீக வளப்பற் றாக்குறைகளை நிவர்த்திசெய்யமுடியாது அவலப்படும் நிலைமையை அவர்கள் நன்றாக அறிவார்கள். இவற்றை நிவர்த்திப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடுகள் அவசியமாகின்றன. இவற்றை இந்த வரவு செலவுத் திட்டத்தில் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். இளைஞர்களின் மனித வளம் மேம்பாடடையக் கூடிய தான பல்வேறுவகையான தொழிற்றிறன் பயிற்சிகளையும் வழங்கக் கூடிய தொழிநுட்பக்கல்லூரிகள் இந்த மாவட்டங்களில் இல்லாதிருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பது மிகப்பெரிய குறைபாடாகும் இதனை கவனத்திலெடுத்து இந்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளிலிருந்து இந்தக்குறைபாட்டை நிவர்த் திப்பதன் மூலம் தேசத்தின் கட்டுமானத்தில் பங்குபற்றக்கூடிய மிகப் பெரிய மனித வளத்தை இந்த மாவட்டங்களிலிருந்து உருவாக்க முடியு மென்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

நாடு இன்று பாரபட்சமின்றி அபிவிருத்திப்பாதையில் பயணிப்பதற்கு பொருத்தமான வினைத்திறனுடைய நிர்வாக அலகு முக்கியமானதாகும். முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள அலுவலகங்களில் சிரேஸ்ர அதிகாரிகள் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் தகுதி நிலைப்பட்ட ஆளுமையாளர்கள் போதிய அளவு இல்லாத நிலை காணப்படுகின்றது. அங்குள்ள காரியாலயங்களில் இந்த பதவிகளுக்கான வெற்றிடங்கள் பூர்த்திசெய்யப்படாத நிலையில் இருப்பதனால் திட்ட மிடப்பட்டவாறு அபிவிருத்தி மற்றும் மீள் கட்டுமானம் மறுவாழ்வு போன்ற துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப் படுகின்றது. அத்துடன் அங்குள்ள திணைக்களங்களை நிர்வகிப்பதற்கு போதிய வசதிகள் இல்லாதநிலைமை காணப்படுகின்றது. இவையாவும் இந்த வரவுசெலவுத் திட்டத்தில் திட்டமிடப்படும் முக்கியமான பணி களை தாமதப்படுத்தும் காரணிகளாகவே அமைந்துள்ளன. ஆனால் நாம் இவற்றைக் காரணம்காட்டி அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மீள்குடியேற்ற வாழ்வியலையும் மேற்கொள்வதில் எந்தவிதமான தாம தங்களையும் பின்னடைவுகளையும் ஏற்படுத்த முடியாது.

கௌரவ பிரதி சபாநாயகர் அவர்களே!

இந்த சந்தர்ப்பத்தில் நான் இன்னுமொரு விடயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாட் டுக்காக பல தரப்பினரும் பல்வேறு உதவித்திட்டங்களைச் செய்துவரு கின்றனர். இவற்றில் இந்தியாவினால் மேற்கொள்ளப்படும் உதவித் திட்டங்கள் முக்கியமானவை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடமைப்புத் திட்டத்ததை மேற்கொள்வதற்கென நாம் இந்தியாவிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க பல்வேறு உதவித் திட்டங்களுடன் ஐம்ப தாயிரம் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு இந்தியா உதவி செய்ய முன்வந்திருப்பதை நன்றியோடு பதிவு செய்துகொள்ள விரும்பு கின்றேன். இப்பொழுது உருவாகியிருக்கும் யுத்தமற்ற சூழ்நிலை யானது எமது நாட்டையும் நாட்டு மக்களையும் புதியதொரு வாழ்க் கைக்குள்ளும் சூழலுக்குள்ளும் பிரவேசிக்க வைக்கவேண்டும். எக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணங்கொண்டும் எமது நாடு இன்னொரு இருண்ட யுகத்தினுள் சிக்க முடியாது. இதற்கு எமது நாட்டு மக்களிடையில் உள்ள முரண்பாடுகளைக் களையவேண்டும். இவ்வாறு முரண்பாடுகளைக் களைவதும் பகைமையை மறுப்பதும் சமாதானத்துக்கான அடி வைப்பாகும் என உலகம் வலியுறுத்தி வருகின்றது. இது ஓர் அடிப்படையான உண்மையாகும். பகைமையை வளர்ப்பது குறுகிய அரசியல் ஆதாயங்களுக்குப் பயன்படலாம். ஆனால் அது நிச்சயமாக நாட்டையும் சமூகங்களையும் பேரழிவுக்கே கொண்டு செல்லும். எமது இலங்கைத்தீவில் நடந்து முடிந்த பேரழிவுகள் இன்றிருக்கின்ற ஒவ்வொரு குடிமகனுக்கும் நல்ல பாடங்களாகும். ஆகவே அமைதிக்கான வழிமுறைகளைப்பற்றிச் சிந்திக்கும் போது முரண்பாடுகளைக் களைய வேண்டியதன் அவசியமும் அதற்கேற்றவாறான அரசியல் தீர்வும் எதிர்பார்க்கப்படுகின்றது. வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் இந்த நாட்டின் முரண்பாடுகளுக்கான தீர்வும் அமைதியும் இணைந் திருக்கின்றன. நிரந்தர அமைதியிலும் பார பட்சமற்ற நடைமுறை களிலும்தான் ஒருநாட்டின் அபிவிருத்தியும் எதிர் காலமும் தங்கி யிருக்கின்றன என்பதை தெளிவுபடுத்தி அமர்கின்றேன். நன்றி வணக்கம்.

- *24 நவம்பர் 2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிலுள்ள நெடுஞ்சாலைகளைப் புனரமைப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்

கௌரவ தவிசாளர் அவர்களே!

இன்றைய தினம் இப்பாராளுமன்றத்திலே நடைபெற்றுக் கொண்டிருக் கின்ற மேதகு ஜனாதிபதி மற்றும் பிரதமர் அலுவலகம் உட்பட்ட பல அரச திணைக்களங்கள் மற்றும் ஆணைக்குழுக்கள் என்பவற்றின் நிதியொதுக்கீட்டின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு எனக்கு கிடைத்த குறுகிய நேரத்துக்குள் சில விடயங்களை இச்சபையில் முன்வைக்கலாம் என்று நினைக்கின்றேன்.

மேதகு ஜனாதிபதி அவர்களுக்குரிய நிதி ஒதுக்கீட்டில் பொதுமக்களுக் கான பல நன்மைகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் பொதுவாக இதிலுள்ள நன்மையான அம்சங்களை மக்கள் அறிந்திருப்பது குறைவு. அதே வேளை இந்நிதி ஒதுக்கீட்டின் மூலம் மக்கள் நன்மையை பெற்றுக் கொள்ளும் வழிமுறைகளைப்பற்றியும் பெரும்பாலானோர் அறிந்திருப் பதில்லை ஜனாதிபதி நிதியம் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நலிவுற்ற மக்களுக்கும் காருண்ய அடிப்படையில் மருத்துவ உதவிகளை வழங்கு வது தொடர்பில் முக்கிய கவனத்தை செலுத்துகின்றது. ஆனால் இந்த நிதியை பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள் இலகுபடுத்தப்பட வேண்டும் என்று இந்தச்சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை, பிரதமர் அலுவலகம், உயர்நீதிமன்ற அலுவலகங்கள் உள்ளிட்ட நாட்டிலுள்ள உயர் பீடங்களுக்கான நிதி ஒதுக்கீடானது வினைத்திறன் மிக்க ஊழியர் படையொன்றை பாராமரித்து மக்களுக் குச் சிறப்பான சேவையை அளிப்பதற்கான அடிப்படையை கொண்ட தாகும். இந்த ஆணைக்குழுவின் செயற்பாட்டை வினைத்திறன் உடைய தாக வைத்திருத்தல் இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் முழுமைப்படுத் தப்பட வேண்டும். குறிப்பாக போர் நடைபெற்ற பிரதேசங்களில் மேற் கொள்ளப்படும் பணிகளுக்கான வினைத்திறனுடைய பணியாளர் படை யொன்றை இயங்க வைப்பதற்கு இந்த ஆணைக்குழுவின் நிதியம் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் பணிகளை மக்கள் இன்று அதிகமாக எதிர்பார்க்கின்றார்கள். கடந்த வாரம் யாழ். மாவட் டத்தில் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் இந்த ஆணைக் குழு செயற்படுத்திய நடமாடும் சேவையைப் பாராட்ட வேண்டியது அவசியமாகும். இவ்வாறான நடமாடும் சேவைகள் மக்களுடைய நடைமுறைப் பிரசினைகளையும் நீண்ட கால பிரச்சினைகளையும் தீர்த்துவைப்பனவாக அமைகின்றன. எனவே நீதிச்சேவைகள் ஆணைக் குழுவுக்கான நிதி ஒதுக்கீடானது, மக்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யக்கூடிய அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய அதே வேளையில் இந்தப்பணிகள் இன்னும் விரிவுபடுத்தப்பட்டு போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் உதவுவதாக அமையவேண்டும். அத்துடன் பாதிக்கப் பட்ட மற்றும் நலிவுற்ற மக்களுக்கான இலவச சட்ட ஆலோசனை களை வழங்கி அவர்களுக்கு உதவுவதிலும் இந்த ஆணைக்குழு தனது கூடுதலான கவனத்தை செலுத்தவேண்டும். மேலும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு, நிர்வாக மேன்முறையீட்டுச்சபை போன்றனவும் சட்டத் தையும் நீதியையும் நிர்வாக ஒழுங்கு முறையையும் பாதுகாப்பையும் அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்துவதற்கு முன்வரவேண்டும் என்பதை இங்கு நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

இவ்வாறே லஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு மிகப் பொறுப்பாகவும் சிறப்பாகவும் இயங்குவதன் மூலம் நாட்டின் நிருவாக இயந்திரத்தை சிறப்பான சேவை அமைப்பாக மாற்றமுடியும். பாரபட்சங்கள் தகுதியின் மைகள், தாமதங்கள் முறைகேடுகள் போன்றவற்றினால் மக்கள் பல சந்தர்ப்பங்களிலும் பாதிக்கப்படுகின்றார்கள். ஒரு அரசாட்சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்பு என்பது அந்த அரசாட்சியின் நிருவாக செயற்பாடுகளிலேயே பெரிதும் தங்கியிருக்கிறது. ஆகவே லஞ்ச ஒழிப்பையும் லஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணைகளையும் மேற்கொண்டு வரும் இந்த ஆணைக்குழுவுக்கான நிதி ஒதுக்கீடு முக்கியமானதொன்றாகும். இந்த நிதியானது, மக்களுக்கான செழிப்புடைய நிருவாக இயந்திரத்தைச் செயற்படுத்துவதற்கானதாகும். இந்த நோக்கில் இந்த ஆணைக்குழு கவனத்தோடு செயலாற்ற வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங் களில் மக்களுக்கான தேவைகள் ஏராளமாக உள்ளன. இந்த நிலைமை யைப் பயன்படுத்தி லஞ்சம் மற்றும் ஊழலில் ஈடுபடுவதற்கான சந்தர்ப் பங்களைச் சில அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் உருவாக்குவதை அவதானிக்க முடிகிறது. லஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளும் ஆணைக்குழுவானது இந்தப் பிரதேசங்களில் தனது கவனத்தை கூடுதலாக செலுத்த வேண்டியிருக்கும் என்பதையும் இங்கே சுட்டிக்காட்டுகின்றேன்.

அடுத்து தேர்தல் திணைக்களத்துக்கான நிதி ஒதுக்கீடுகளும் வரவு செலவுத்திட்டமொன்றில் முக்கியமானதாகும். ஏனென்றால் இந்த நாட்டில் ஜனநாயக அடிப்படைகளை பேணும் அமைப்புக்களில் முக்கியமானது தேர்தல் திணைக்களமாகும். இந்த தேர்தல் திணைக் களத்தில் வாக்காளர்கள் பற்றிய முறைப்படியான பதிவுகளை மேற் கொள்வதோடு, ஜனநாயக அடிப்படைகளைப்பற்றிய அறிவை பொது மக்களிடையே ஏற்படுத்துவதிலும் தேர்தல் நடைமுறைகளில் அனை வரையும் ஈடுபடுத்துவதிலும் அக்கறையோடு செயலாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். கடந்த தேர்தல்கள் நீதியான முறையில் நடை பெற்றமைக்கு தேர்தல் திணைக்களத்தையும் நாம் பாராட்டவேண்டும். ஆனால் வடக்கு கிழக்கு பகுதிகளில் மக்கள் அதிகளவில் தேர்தல் நடை முறைகளில், குறிப்பாக வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் விட்டது கவனத்திற்குரியதாகும். நீண்ட காலமாக வடக்கு கிழக்கில் தேர்தல் நடைமுறைகளுக்கு அப்பாலான அரசியல் நடைமுறை ஒன்றிருந்ததும் தேர்தல்களில் அங்குள்ள மக்கள் முழு அளவில் பங்கேற்க முடியாத நிலை ஒன்றிருந்ததும் இதற்கான காரணங் களாக இருக்கலாம். இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். மக்களை வாக்களிப்பில் ஈடுபடுத்துவதும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதும் முக்கியமான பணிகளாகும். நாட்டின் தேர்தல் திணைக்களத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமைப்பாடென்பதே சிறந்த முறையிலான தேர்தலுக்கும் சீரான ஆட்சி அமைப்புக்குமான அடிப்படைகளாகும்.

கௌரவ தவிசாளர் அவர்களே! இன்னொரு முக்கியமான விடயத்தை யும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கான நிதி ஒதுக்கீடு பற்றியதே அது. இன்று இலங்கை யின் மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்கள் அதிகமாக பேசப்படும் நிலைமை உருவாகியிருக்கின்றது. சமூகங்களுக்கிடையில் மனித உரிமை களைப் பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதற்கும் அதை நடைமுறைப்படுத்துவதற்கான நிலைமைகளை உருவாக்குவதற்கும் இந்த ஆணைக்குழு பங்களிப்புச் செய்யவேண்டும். மேலும், பருத்தித் துறை துறைமுகம் காங்கேசந்துறைத் துறைமுகம் ஆகியவை முழுமை யாக சீரமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்படவேண்டிய நிலையில் இருக் கின்றன. இந்தத் துறைமுகங்களை நிர்மாணிப்பதற்கு பங்களிப்பு செய் வதற்காக இந்தியா முன்வந்திருப்பது பாராட்டப்பட வேண்டியதாகும். ஆகவே, இந்தத் துறைமுகங்களின் அபிவிருத்திப் பணிகள் துரிதப்படுத் தப்பட வேண்டும். போரின் போது ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகளின் போது இந்தத் துறைமுகங்களின் மூலமே யாழ். குடாநாட்டிலிருந்த ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கான உணவு, போக்கு வரத்து, மருத்துவம், தொடர்பாடல் உள்ளிட்ட அடிப்படைத் தேவை கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டன. ஆகவே இப்போது உருவாகி யிருக்கும் அமைதிச் சூழலில் இந்தத் துறைமுகங்களின் அபிவிருத்தியில் கூடுதலான கவனம் செலுத்துவது அவசியமென வலியுறுத்துகிறேன்.

இதேவேளை வடக்கிலுள்ள நெடுஞ்சாலைகளின் நிலைமை இந்த நாட்டின் வேறொருதன்மையினைத் தெளிவுறக் காட்டுவதை அவதா னிக்கலாம். தென்னிலங்கையிலிருந்து வருவோர் தாம் வடக்கினுள் நுழைவதை அங்குள்ள நெடுஞ்சாலைகளே தமக்கு காட்டுகின்றன வென்று சொல்லு மளவுக்கே அங்கிருக்கும் வீதிகள் அமைந்திருக்கின்றன. குறிப்பாக மன்னார் - பரந்தன், முல்லைத்தீவு - மாங்குளம், முல்லைத்தீவு - பரந்தன் ஆகிய வீதிகளின் நிலைமை மிக மோசமாகவுள்ளது. இந்த வீதிகளின் புனரமைப்பு மிகமிக அவசியமாகும். இந்தத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டில் இந்த வீதிகள் கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும். அடுத்ததாக விமானச் சேவைகள் குறித்த ஒரு கவனத்தையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். யாழ்ப்பாணத்தில் இப்போது இந்தியத் தூதுவராலயத்தின் உப அலுவலகம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்த சூழலில் பலாலியிலிருந்து கொழும்புக்கான விமானச் சேவையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று பலாலியிலிருந்து தென்னிந்தியாவுக்கான விமானச் சேவையையும் ஆரம்பிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான அம்சம் வடக்கு, கிழக்கில் வாழுகின்றமக்கள் தங்கள் மதவழிபாட்டுரிமைகளை பெற்றுக்கொள்ளும் பிரச்சினையாகும். இந்தமக்களின் பல ஆலயங்கள் போரினால் அழிவடைந்துள்ளன. இவற்றைப் புனரமைப்பதற்கான நிதியை இந்தத் துறையுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகள் ஒதுக்கித்தர வேண்டும். அத்துடன் சில இடங்களிலுள்ள ஆலயங்களுக்குச் சென்று வழிபாட்டினைச் செய்வதற்கும் இங்குள்ள மக்கள் தமது பண்பாட்டுச் சடங்குகளை நிறைவேற்றுவதற்கும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைக் காரணம் காட்டும் போக்குக் காணப்படுகிறது. இந்தநிலைமைகள் மாற்றப்பட்டு விரைவில் நல்லதொரு இயல்புச் சூழல் உருவாக்கப்படவேண்டும். இவ்வாறே தேசிய வளங்கள், தேசிய அடையாளங்கள், மற்றும் இன மத பண்பாட்டம்சங்கள், பிரதேச கலாச்சார அடையாளங்கள் ஆகியவற்றைப் பேணுவதற்கான அக்கறைகளும் விசேட திட்டங்களும் கவனிக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன். அபிவிருத்தி நடவடிக்கைளை மேற்கொள்ளும் போது இந்த அம்சங்களில் கூடிய கவனம் செலுத்தப்படுவது அவசியமெனவும் கூறுகிறேன்.

இறுதியாகக் கலை, கலாச்சாரம் பற்றிய ஒரு விடயத்தையும் இங்கே குறிப்பிடுகிறேன். போர் நடைபெற்ற பிரதேசங்களில் கலைகலாசார அடையாளங்களும் நடைமுறைகளும் பெரிதும் நெருக்கடிகுள்ளாகியிருக்கின்றன. இவற்றை சீரமைப்பது அவசியம். பன்மைத்துவ சமூகங்களைக் கொண்டநாட்டில் அனைத்து சமூகங்களின் பண்பாட்டு அம்சங்களும் அடையாளங்களும் பேணப்படுவதும் அந்த நடைமுறைகளை மக்கள் பின்பற்றுவதற்குச் சுதந்திரம் அளிக்கப்படுவதும் மிக முக்கியமானதாகும். ஆகவே இந்தமன்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரும் இந்த விடயங்களில் முக்கிய கவனத்தைக் கொண்டிருக்கவேண்டுமென்று கேட்டு, எனது உரையை நிறைவுசெய்கிறேன்.

• *30 நவம்பர் 2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சபையை அரசியல் தலைமைத்துவமுடைய சபையாக உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை செய்வது அவசியம்

கௌரவ தவிசாளர் அவர்களே!

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், அரசாங்க முகாமைத்துவ மறு சீரமைப்பு மற்றும் உள்ளூராட்சி, மாகாண சபைகள் எனப் பல்வேறு முக்கிய அமைச்சுக்களுக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதம் நடைபெறும் இன்றைய நாளில் நாட்டி னதும் வடக்கு கிழக்கு மாகாணங்களினதும் நிலைமைகள் குறித்து எடுத்துரைக்க விரும்புகின்றேன். அபிவிருத்தி செயற்பாட்டின் போது தொடர்பாடலைப் பயன்படுத்தி அபிவிருத்திப் பணிகளை முன் னெடுக்கக்கூடிய அளவுக்கு நாட்டில் நிர்வாக சேவையை ஸ்திரப்படுத்த வேண்டியது அவசியமானது. அதேநேரம், இப்போதுள்ள நிர்வாக அமைப்பை மேலும் செம்மைப்படுத்தி விரிவாக்கம் செய்வதன் மூலம் எங்கள் தேசத்தை தன்நிறைவான நிலைக்கு கொண்டு செல்ல முடியும். அதற்கு பொருத்தமான தகுதிநிலையில் உள்ள அதிகாரிகளும் மற்றும் உத்தியோகத்தர்களும் அவசியமாகும் அதேநேரம், புதிய வளர்ச் சிக்கும் தேவைகளுக்கும் ஏற்றமாதிரி இவர்களுக்கான பயிற்சிகளையும் கல்வியையும் வழங்குவதன் மூலம் விரைவான சேவைக்கு நிர்வாக அமைப்பைத் தயார்படுத்த முடியும். வடக்கு கிழக்கில் கடந்த முப்பது ஆண்டுகளாக நடைபெற்ற போரினாலும் அங்கு காணப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுபட்ட அரசியல் சூழலினாலும் அந்தப் பிரதேசங்களில் அனைத்துக் கட்டமைப்புகளும் அடிமட்ட நிலையிலேயே இருக்கின்றன. இதனை மேம்படுத்துவதற்குப் பொருத்தமானவர்களையும் மற்றும் தேவையான அதிகாரிகளையும், உத்தியோகத்தர்களையும் அங்குள்ள நிர்வாகக்கட்டமைப்பில் இணைத்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் மக்களுக்கான சேவையையும் அபிவிருத்தியையும் செம்மையாக மேற்கொள்ள முடியும். இதைநான் இந்தச்சபையிலும் வெளியேயும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். குறிப்பாக, வடக்கு கிழக்கில் ஏராளமான பதவி வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படவில்லை. அங்கு பொறியியலாளர்கள், கணக்காளர்கள், நிர்வாக சேவைத்தராதரமுடைய அதிகாரிகள் ஏனைய நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், கிராம அலுவலர்கள் தொடக்கம் சிற்றூழியர்கள் மற்றும் சாரதிகள் வரை பல்வேறு வெற்றிடங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் நூறு கிராமசேவை அலுவலர்கள் தேவையாக உள்ளனர். அங்கே இலங்கை நிர்வாக சேவை தரமுடைய 8 அதிகாரிகளும் 16 பொறியியலாளர்களும் மற்றும் 296 முகாமைத்துவ உதவியாளர்களும் தேவைப்படுகின்றனர். கிளிநொச்சியில் இலங்கை நிர்வாக சேவைத்தரமுடைய 4 அதிகாரிகளும், 31 கிராமசேவை அலுவலர்களும், 9 தொழிநுட்ப உத்தியோகத்தர்களும், 116 முகாமைத்துவ உதவியாளர்களும் தேவைப்படுகின்றனர்.

அதுபோல், மன்னாரில் 32 கிராம சேவை அலுவலர் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. 42 முகாமைத்துவ உதவியாளர்களும், 6 தொழிநுட்ப உத்தியோகத்தர்களும் தேவைப்படுகின்றனர். இவ்வாறே முல்லைத்தீவு மாவட்டத்தில் 27 கிராம சேவை அலுவலர்களும், 75 முகாமைத்துவ உதவியாளர்களும் 6 கணக்காளர்களும், 6 இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களும் தேவைப்படுகின்றனர். அத்துடன் வவுனியா மாவட்டத்தில் 17 முகாமைத்துவ உதவியாளர்களும், 5 தொழிநுட்ப உத்தியோகத்தர்களும் தேவைப்படுகின்றனர். இதைவிட அனைத்து பணிநிலைகளிலும் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டிய அவசியம் உள்ளது. இந்த வெற்றிடங்களை நிரப்பி வேலைத்திட்டங்களுக்கான வசதிகளையும் வளங்களையும் வழங்கி, நிர்வாக கட்டமைப்பை ஸ்திரப்படுத்த வேண்டும். அப்பொழுது தான் இந்தப் பகுதிகளில் அபிவிருத்தியும் இயல்பு நிலையும் உருவாகும். ஆனால், துரதிஸ்ரவசமாக அண்மையில் நடத்தப்பட்ட நிர்வாக சேவைப் பரீட்சையில் தமிழர்கள் தேர்வுக்குள்ளாகவில்லை என்பது வருத்தத்திற்குரிய விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1992ம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் பேசும் இலங்கை நிர்வாக சேவைத் தரமுடைய அதிகாரிகளின் தேவையை ஈடு செய்வதற்காக அப்போதைய ஜனாதிபதியாக இருந்த கௌரவ ஆர். பிரேமதாஸ அவர்கள் விசேட திட்டமொன்றின் மூலம் 50 பேருக்கு இலங்கை நிர்வாக சேவையில் பயிற்சியளித்து அவர்களை உள்வாங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார். அதேபோன்றதொரு சிறப்பு ஏற்பாட்டின் மூலம் இன்று ஏற்பட்டுள்ள இலங்கை நிர்வாக சேவைத்தரமுடைய அதிகாரிகளின் பற்றாக்குறையை நிவர்த்திக்க வேண்டுமென்று இச்சபையிலே நான் கௌரவ அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். பொதுவாக எல்லா நிலைகளிலும் ஏற்பட்டிருக்கும் வெற்றிடங்களை நிரப்பி, போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒரு முழுமைப்படுத்தப்பட்ட நிர்வாகக்கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டுமென மாண்புமிகு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

போரினால் பாதிக்கப்பட்ட அந்தப் பகுதிகளில் மீள் கட்டுமானம், புனரமைப்பு, புதிய அபிவிருத்தி என்று பல வகைப்பட்ட அவசியப் பணிகள் செய்ய வேண்டியுள்ளது. ஆனால் இந்தப்பணிகளை செய்வதற்குப் பணியாளர்களின் பற்றாக்குறை நெருக்கீடாக இருக்கின்றது. மக்களின் நாளாந்த நடவடிக்கைகளோடும் அத்தியாவசிய தேவைகளுடனும் சம்மந்தப்பட்டிருக்கும் கிராம சேவை அலுவலர்கள், அந்தப் பகுதிகளில் இல்லாதிருப்பது அபிவிருத்தி தொடக்கம் அனைத்து நிலைகளிலும் பெரும் பின்னடைவையே ஏற்படுத்துகிறது. கிளிநொச்சி மாவட்டத்தில் 1400 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைக் கொண்டதாக சில கிராமசேவை அலுவலர் பிரிவுகள் இருக்கின்றன. இதேவேளை, இவ்வாறான இரண்டு பிரிவுகளை ஒரே கிராம சேவை அலுவலர் நிர்வகிக்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டிருக்கின்றது. அங்கே போருக்குப் பின்னரான நிலைமைகளில் ஏராளமான பதிவு நடவடிக்கைகள், புனரமைப்புப்பணிகள், உதவித்திட்டங்கள் போன்ற பல்வேறு வேலைத் திட்டங்கள் நடை பெறுவதால் கிராமசேவை அலுவலர்களின் வேலைப் பளு மிகமிக அதிகமாகவே உள்ளது. இதனால் அவர்கள் மக்களோடும், அதிகாரிகளோடும் முரண்படும் நிலைமைகளே காணப்படுகின்றன. அதேவேளை சேவையையும் உரியமுறையில் அவர்களால் வழங்க முடிவதில்லை. இந்தக் கிராமசேவை அலுவலர்கள் போர்க் காலத்திலும் அதன் பின்னரும் இடம்பெயர்ந்தோருக்கான நலன்புரி நிலையங்களிலும் இப்பொழுது மீள் குடியேற்ற நடவடிக்கைகளிலும் அரசாங்கத்தின் சார்பாகப் பெரும் பங்காற்றியிருக்கின்றார்கள். ஆகவே இவர்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியையும் இவர்களோடு இணைந்து நின்று பணியாற்றிய ஏனைய உத்தியோகத்தர்களின் பணிகளையும் இந்தச்சந்தர்ப்பத்திலே பாராட்டி இந்த மன்றிலே பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே! அடுத்ததாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு குறித்துச் சில கருத்துக்களை தெரிவிக்க விரும்பு கின்றேன். வடக்கு மாகாண சபையானது அரசியல் தலைமைத் துவமில்லாத நிலையில் நீண்டகாலமாகவே இருப்பதனால், அதற்கான நிதி ஒதுக்கீடுகள், தேவையான ஆளணி வளம் என்பன தொடர்ந்தும் பற்றாக்குறையாகவே இருந்து கொண்டிருக்கின்றன. ஒதுக்கப்படும் நிதி யின் பெரும் பகுதி ஊழியர் பராமரிப்பிலேயே செலவிடப்படுகின்றது. அதேவேளை, மக்கள் சேவைக்கும், அபிவிருத்திக்குமான நிதிகளுக்குத் தொடர்ந்தும் போதாத நிலைமையே காணப்படுகின்றது. ஆகவே, விரைவாக வடக்கு மாகாண சபையை அரசியல் தலைமைத்துவ முடைய சபையாக உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை செய்வது மிக அவசியமானது. இந்த மாகாண சபையை அவ்வாறு இயங்க வைப்பதன் மூலமாக வடபகுதியின் தேவைகளை விரைவாக நிறைவேற்றிக்கொள் ளவும், பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளவும் முடியும். மாகாண சபையின் நிர்வாக கட்டமைப்பிலுள்ள சுகாதாரம், காணி, விவசாயம், விளையாட்டு, கல்வி, கலாசாரம், உட்கட்டமைப்பு, கூட்டுறவு போன்ற பலவற்றையும் திறம்பட மேம்படுத்த வேண்டியுள்ளது. மேலும் மாகாண சபைகளுக்குரிய வீதிகள், சந்தைகள், நூலகங்கள், பிரதேச சபைகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்றவற்றை புனரமைப்பதற் கும் அபிவிருத்தி செய்வதற்கும் வேண்டிய ஏற்பாடுகளும் நடவடிக் கைகளும் இன்று மிக மிக அவசியமாகவுள்ளன.

கௌரவ தவிசாளர்கள் அவர்களே,

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் காணிப்பிரச்சினை ஒரு முக்கிய பெரும் பிரச்சினையாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஆனால், இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கக்கூடிய தகுதி நிலையில் உள்ள மாவட்டக்காணி அதிகாரி அங்கே இல்லை. அங்குள்ள பிரதேச செயலகங்களில் கூட காணி விடயங்களை கையாள்வதற்கான காணி உத்தியோகத்தர்களோ, நில அளவையாளர்களோ கிடையாது. யாழ்ப் பாணத்திலிருந்து வருகை தரும் நில அளவையாளர்களே கிளிநொச்சி மாவட்டத்தின் பணிகளையும் செய்ய வேண்டிய நிலையில் இருக் கின்றனர். ஆகவே, இவற்றை நிவர்த்திக்கும் பொருட்டு கிளிநொச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்துக்கென தனியான ஏற்பாடுகளை செய்து கொடுக்க வேண்டியது அவசியமானது. அதேபோன்றே அங்கு மாவட்டப் பதிவாளரும் இல்லை. அதனால் கிளிநொச்சி முல்லைத் தீவு மாவட் டங்களில் பதிவுகளை மேற்கொள்வது என்பது ஒரு பெரும் பிரச்சினை யாகவே இருக்கின்றது.

போரின்போது இழந்த ஆவணங்களை மீளப் பெறுவதற்காகவும் அப்போது மேற்கொள்ளப்படாத பதிவுகளைச் செயவதற்காகவும் ஏராளமான விண்ணப்பங்கள் பதிவாளர் அலுவலகங்களில் குவிந்து கிடக்கின்றன. தங்களுடைய பதிவுகளை செய்வதற்காக ஏராளமான மக்கள் தினமும் இந்த அலுவலகங்களுக்கு படையெடுத்தவாறு உள்ளனர். எனவே, இந்த திணைக்களங்களில் நிலவுகின்ற ஆளணிப் பற்றாக்குறை நீக்கப்பட வேண்டும். அத்துடன், அந்த அலுவலகங்களுக்கான போது மான உபகரணங்களும் வழங்கப்பட வேண்டும்.

மேலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள பெரும்பா லான தெருக்கள் புழுதிமயமாகவே இருக்கின்றன. இப்பகுதிகளில் உள்ள பிரதான வீதிகள் கூடநாட்டின் ஏனைய பிரதேச வீதிகளிலிருந்து எல்லா வகையிலும் பின்தள்ளப்பட்டவையாகவே உள்ளன. உதாரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் ஏறக்குறைய 250 கிலோமீற்றர் வீதிகள் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பராமரிப்பிலும் 1000 கிலோமீற்றருக்கும் அதிகமான வீதிகள் பிரதேச சபைகளின் பராமரிப்பிலும் உள்ளன. எனவே, பிரதேச சபைகளினால் இந்த வீதிகளை உரிய காலப்பகுதியில் அபிவிருத்திக்குள்ளாக்க முடியாமலிருக்கிறது. இவற்றைப் பராமரிப் பதற்கு தேவையான போதுமான நிதி வளமோ, ஆளணி வளமோ அவற்றிடம் இல்லாத நிலையில் இந்த வீதிகளில் பெரும்பாலானவற்றை வீதி அபிவிருத்தி திணைக்களத்திடம் கையளிப்பதே இன்றைய கால கட்டத்துக்குப் பொருத்தமானது என்பதை இங்கே குறிப்பிட விரும்பு கின்றேன்.

இதேவேளையில், இங்கே இன்னொரு விடயத்தினையும் நான் குறிப் பிட்டே ஆகவேண்டும். இவ்வாறான பற்றாக்குறைகளும் உத்தியோகத் தர்களின் போதாமையும் மீள்குடியேறிய மக்களின் புனர்வாழ்வு மற்றும் உட்கட்டுமான நடவடிக்கைகளைப் பல வகையிலும் நெருக்கடிக்குள் ளாகின்றன. அதேவேளை நாம் எதிர்பார்த்தபடி சூழலிலும் விரைவான மாற்றத்தை ஏற்படுத்த முடியாமல் இருக்கின்றது. மொத்தத்தில் அரசாங்கத்தின் உரிய திட்டங்கள் வெற்றியடைவதில் இவை தாமதங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையே ஏற்படுத்துகின்றன. ஆகவே, மேற்குறிப்பிட்ட விடயங்களில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சானது கூடுதலான கவனம் செலுத்தி இந்தப்பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். இதற்கு பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மேலதிக நிதி ஒதுக்கீடு தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் இந்த அரசாங்கம் இந்த நாட்டை புதிய திசை யில் கொண்டு செல்ல எதிர்பார்க்கின்றது. அந்த எதிர் பார்ப்புக்கிணங்க நாட்டை முன்கொண்டு செல்லும் பொறுப்பு சகலருக்கும் உரியதாகும் என்பதை இங்கு வலியுறுத்துகின்றேன். இதேவேளை நிர்வாகக் கட்டமைப்புகளிலும், சமூக நிலையிலும் தேசிய மொழிகள் ஊடான தொடர்பாடல் செம்மையாக நிகழும்போது அது இந்த நாட்டின் இன ஐக்கியத்தைச் சாதகமாக்கும். இதற்கான ஒரு தனி அமைச்சை அரசாங்கம் அமைத்திருப்பது வரவேற்க வேண்டியதாகும். இந்த அமைச்சுக்கு தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை நீண்டகாலமாகவே அறிந்திருந்த முற்போக்கு அணுகு முறையுடைய மாண்புமிகு வாசுதேவ நாணாயக்கார அவர்கள் நியமிக் கப்பட்டுள்ளமையானது மிகவும் பொருத்தமானதென நாங்கள் கருதுகின்றோம். இச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் வட மாகாணத்திலுள்ள நிர்வாகக் கட்டமைப்புக்களுக்குள் இருக்கும் ஆளணி வெற்றிடங்களைப் பற்றிய அட்டவணைகளை நான் இச்சபையில் சமர்ப்பித்து விடை பெறுகின்றேன். நன்றி வணக்கம்.

- *02 டிசம்பர் 2010*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் அசாதாரண சம்பவங்கள் மக்களிடம் எதிர்காலம் குறித்து அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே!

நாம் எதிர்பார்த்திருந்த நிலைமைகளுக்கு மாறாக இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிலமைகள் மாறியுள்ளதனால், அது சம்பந்தமான விபரங்களை எனது உரையின் மூலம் இச்சபையின் சிறப்புக் கவனயீர்ப்புக்கு உட்படுத்த விரும்புகின்றேன். கடந்த சில வாரங்களாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுள்ள கொலைச் சம்பவங்களும், ஆட் கடத்தல் சம்பவங்களும் குடாநாட்டிலுள்ள மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆரம்பத்தில் கொள்ளைச் சம்வங் களுடன் தொடர்புபட்டதாக இருந்த கொலைச் சம்பவங்கள், பின்னர் வேறு வடிவங்களிலும் இடம்பெறுவது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. சங்கானைப்பகுதியில் மதகுரு ஒருவரின் வீட்டில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களின் பொழுது நடத்தப்பட்ட கொலையை நாம் ஏற்கனவே கண்டித்திருக்கின்றோம். இச்சம்பவம் யாழ்ப்பாணக் குடாநாட்டையே உலுக்கியிருந்தது. இந்தக் கொள்ளை சம்பவங்களின் பின்னணியில் இருந்தவர்களை பொலீஸார் இனங்கண்டு கைது செய்திருந்தனர். இச்செயற்பாடு மக்களுக்கு தமது பாதுகாப்புத் தொடர்பில் நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்ததுடன், அங்குள்ள மக்களின் தேவையற்ற சந்தேகங்களையும் அச்ச நிலையையும் நீக்கியது எனலாம். மக்கள் உண்மை நிலையைக் கண்டறிந்துள்ளனர். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் குடும்பத் தலைவர்கள், கல்வி அதிகாரி ஒருவர், ஆட்டோ சாரதியொருவர், குடும்பப் பெண் ஒருவர் என சிலர் கொலை செய்யப் பட்டும் கடத்தப்பட்டுமுள்ளனர். இது மீண்டும் ஆயுத வன்முறைக் கலாசாரம் ஒன்று உருவாகியுள்ளதோ என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் உருவாக்கியுள்ளது. அங்குள்ள மக்கள் தாங்கள் மீண்டும் இன்னொரு இருண்ட காலத்துக்குள் தள்ளப்பட்டு விடுவோமோ என்று அஞ்சுகின்றனர். போர் முடிந்தபின், விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல் முற்றாக நீங்கியபின், இவ்வாறான சம்பவங்கள் ஏன் நிகழ வேண்டும் என்ற கேள்வி மக்கள் மனதில் தோன்றியுள்ளது. இவை கவலையளிக்கும் நிகழ்வுகளாகும். இதனை யாரும் ஏற்றுக்கொள்ளவோ அனுமதிக்கவோ முடியாது.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே!

முப்பது ஆண்டுகாலமாக நீடித்துவந்த போரை இந்த அரசாங்கம் முடிவுக்கு கொண்டுவந்துள்ளது. சாவும் அவலமும் என்றிருந்த நாட்கள் மாறி அமைதியும் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் நிறைந்த புதியதொரு காலத்திற்குள் இந்த நாடு நுழைந்தது. அகால மரணங்களும், படு கொலைகளும் கடத்தல், காணாமல் போதல் போன்ற சம்பவங்களும் இனிமேலும் இல்லை என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்பட்டது. கடந்த முப்பது ஆண்டு காலமாக இந்த நாட்டிலுள்ள பல்வேறு தரப்பினரும் தமது உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். பல கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிவடைந்துள்ளன. படையினர் பெரும் பங்களிப்புச் செய்திருக்கின்றார்கள். இவ்வளவுக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட அமைதிச் சூழலை மக்கள் முழுமனதோடு விரும்பி வரவேற்றனர். நம்பிக்கையான ஓர் எதிர்காலம் தமக்குக் கிடைத்திருக் கின்றது என அவர்கள் வாய்விட்டுச் சொன்னார்கள். இதற்காக மேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் ஏனையோருக்கும் மக்கள் தமது நன்றியைத் தெரிவித்திருந்தார்கள். குறிப்பாக வடக்கு, கிழக்கில் நீடித்துக் காணப் பட்ட நெருக்கடி நிலைமை நீங்கி இயல்பு வாழ்க்கை ஒன்று புத்துயிர் பெற்றது. யுத்தத்தினால் வீடுகளுக்குள்ளும் பதுங்கு குழிகளுக்குள்ளும் முடங்கிக் கிடந்த மக்கள் வீதிக்கு வந்து புதிய சூழலை அனுபவித்தார்கள். சாவுக்களை நீங்கிய முகத்தோடு அவர்கள் முதன்முதலாக வெளியுல கைக் கண்டனர். வன்முறை அரசியல் சுற்றுவட்டத்துக்குள்ளிருந்து வெளியே வந்த மக்கள், ஜனநாயக வழிமுறைகளை நோக்கிச் சிந்திக்க தலைப்பட் டுள்ளனர். தங்களுடைய வாழ்வில் ஒரு புதிய அத்தியாயம் உருவாகியுள்ளதாக எண்ணியிருக்கிறார்கள். அந்தப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய சகாப்தத்தில் தங்களுடைய சிதைந்த வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப விரும்புகிறார்கள். இதற்கமைவாக அரசாங்கம் இந்த மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவி, அவர்களுடைய வாழ்க்கையை கட்டியெழுப்ப முயல்கின்றது.

இயல்பு வாழ்க்கையைக் கட்டி எழுப்புவது, அமைதிச் சூழலை மேம் படுத்துவது, ஜனநாயக நடைமுறைகளை அமுல்படுத்துவது பொருளா தார அபிவிருத்தியை மேற்கொள்வது, மேலும் இவ்வாறான முன்னேற்ற கரமான நடவடிக்கைகளில் மக்களை ஈடுபடுத்துவது என்று அமைந்த நிகழ்ச்சி நிரலில் கடந்த ஓராண்டு காலமாக நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வந்துள்ளது. இந்த முன்னேற்றத்தைச் செய்துவரும் அரசாங்கத்துக்கும், மேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் வடபகுதி மக்கள் தங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றனர். இத்தகையதொரு புதிய சகாப்தத்தை கட்டியெழுப்பு வதிலும், நிர்மாணிப்பதிலும் அக்கறையோடு செயற்பட்டு வருகின்ற அமைச்சர்களையும், அரச உயர் அதிகாரிகளையும் இந்தச் சந்தர்ப்பத் திலே நான் பாராட்ட விரும்புகின்றேன். உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குவது தொடக்கம் மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் வரையில் பாதுகாப்புத் தரப்பினரின் ஒத்துழைப்பு பாராட்டத்தக்கதாகவே இருக்கின்றது. போரை முடிவுக்கு கொண்டுவந்துள்ளதுடன் மக்களின் பாதுகாப்பு நடைமுறைகள் வரையில் பாதுகாப்புத் தரப்பினர் பின்பற்றி வருகின்ற அமைதியான நடவடிக்கைகள் மெச்சத்தக்கன என்பதை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

ஆனால், இப்போது இதனையும் மீறி யாழ் குடாநாட்டினுள் நடை பெறும் கொலைச் சம்பவங்கள், இதுவரை உருவாகியிருந்த புதிய வளர்ச்சியைப் பின்னோக்கித் தள்ளியிருக்கின்றன. அத்துடன் இந்தச் சம்பவங்கள் மக்களின் மகிழ்ச்சியையும் அவர்களிடையே நிலவிய அமைதியையும் சிதைத்துள்ளன. மேலும், அவர்களுக்கு எதிர்காலம் பற்றிய அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியுள்ளன. அவல வாழ்க்கையி லிருந்து மீண்டும் இளைப்பாறுவதற்கு முன்னர், மீண்டும் அவலமும் அலைச்சலும் ஏற்பட்டுவிடுமோ என்று அவர்கள் கலங்கியுள்ளனர். கொலை அச்சுறுத்தல் என்பது, நாட்டைப் புதைகுழிக்குள் தள்ளுவதற் குச் சமமாகும். எதற்காக இந்தக் கொலைகள் நடைபெறுகின்றன. யார் இந்தக் கொலைகளின் பின்ணியில் இருக்கின்றார்கள்? என்ற கேள்விகள் தற்போது எழுந்துள்ளன. இதேவேளை, மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்த விரும்பும் சக்திகளுக்கு இந்த கொலைச் சம்பவங்கள் பெரும் தீனி போடுவதாக அமைந்துள்ளன. மேலும், இந்தக் கொலைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் மத்தியில் இருக்கும் அச்சத்தையும் குழப்பத்தையும் வைத்து சில சக்திகள் அரசியல் ஆதாயம் தேடுவதற்கு முற்படுகின்றன. கடந்த காலங்களில் மக்களின் அவலத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேடும் நடவடிக்கைகள் இடம்பெற்றதைச் சகலரும் அறிவர். அதேபோல் மக்களின் கண்ணீரையும் அவர்கள் சிந்திய குருதியையும் வைத்து அரசியல் நடத்திய வரலாற்றை இந்த நாடு அறியும். "பிணங்களை வைத்து அரசியல் நடத்திய காலம் அன்று இருந்தது" என்று ஒரு கவிஞன் கூறியதைப்போல, அத்தகைய ஒரு காலத்தை மீண்டும் சிலர் கொண்டுவருவதற்கு விரும்பலாம். அதற்காக பொய்யான கதைகளைப் பரப்பி, மக்களைக் கலவரப்படுத்தி அவர்களை தங்களின் பக்கம் இழுத்து நடுத்தெருவுக்குத் தள்ள முயற்சிக்கலாம். ஆனால், அது கடந்த காலம் என்பதுடன், அது போர்க்காலமாகவும் இருந்தது. ஆனால், இப்போது போர் முடிவடைந்து, ஆயுத வன்முறை ஒழிக்கப்பட்டு, அமைதிச் சூழல் உருவாக்கப்பட்டுள்ள ஒரு புதிய காலமாகும். இந்த நிலைமையைக் குலைப்பது என்பது அரசாங்கத்தின் வெற்றியைச் சிதைப்பதாகும். மேலும் இவை அரசாங்கம் ஏற்படுத்த முனைகின்ற அமைதி, சமாதானம், அபிவிருத்தி என்ற தொடர் திட்டத்தை சிதைக்கும் முயற்சிகளே! எனவே, இவ்வாறான சம்பவங்களுக்கு இடமளிக்காது, அவற்றை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் விசேட நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் இந்த இடத்தில் கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக, மேதகு ஜனாதிபதி அவர்கள் இது தொடர்பில் சிறப்புக் கவனத்தைச் செலுத்தி, நிலைமையைச் சீர்ப்படுத்த வேண்டும். இதையே இன்று யாழ்ப்பாண மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

போரை முடிவுக்கு கொண்டுவந்த அரசாங்கத் தரப்பினர் மிகத் திறமை யாகச் செயற்பட்டு இந்தக் கொலைகளையும் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். முழு நாட்டையும் அமைதியான சூழலில் பராமரிப் பதற்கு ஒத்துழைப்பு வழங்கி வரும் பாதுகாப்புப் படையினர், எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர்களுடைய மகத்தான கீர்த்தியை இழக்கக்கூடாது. ஆற்றலும், திறனும் வாய்ந்த பாதுகாப்புப் படையினரும், பொலிஸாரும் இந்தக் கொலைகளைக் கட்டுப்படுத்துவதோடு, அது தொடர்பிலான கொலையாளிகளை வெளியரங்குக்கு கொண்டுவருவர் என்று நான் நம்புகின்றேன். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல கொள்ளைச் சம் பவங்களையும், கடத்தல் நாடகங்களையும் கண்டுபிடித்து, அதனுடன் தொடர்புடையவர்களை கைதுசெய்து வெற்றிகரமான முறையில் அவற்றைப் பொலிஸார் அம்பலப்படுத்தினர். இவ்வாறே தற்பொழுது இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களை பாதுகாப்புத் தரப்பினரும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸாரும் முறியடிக்க வேண்டும். இல்லையெனில், யாழ்ப்பாணத்தில் தொடரும் கொலைகளையும், கொள்ளைகளையும் மற்றும் கடத்தல் சம்பவங்களையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு அங்குள்ள இயல்பு நிலையைக் குழப்புவதற்கான வாய்ப்பு அரசாங்கத்துக்கு எதிராகச் சிந்திப்போருக்கு கிடைத்துவிடும். அதேவேளை, வெளிநாடுகளிலுள்ள சில ஊடகங்களும், இணையத்தளங்களும் மேலும் குழப்பகரமான செய்திகளை வழங்கி, மக்களை மென்மேலும் குழப்பத்தில் ஆழ்த்து வதற்கும் வாய்ப்பாக அமைந்துவிடும். மேலும், இவை எதிர்காலத்தில் இன்னும் சில புதிய நெருக்கடிகளை அரசாங்கத்துக்கும் மக்களுக்கும், ஏற்படுத்தும் என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகின்றேன். நீண்டகாலமாகத் தாம் கண்ணீர் விட்ட நிலைமை முடிவுக்கு வந்து விட்டதென்று மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையானது, எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தக் காரணத்தினாலும் வீண்போகக்கூடாது. சாவும், அவலமும் தங்களின் வாழ்வாகிவிடுமோ என்று கருதிய காலம் தொலைந்துவிட்டது என்று நினைத்துக்கொண்டிருக்கின்ற மக்கள் மீண்டும் அபாயகரமான நிலைமை ஏற்பட்டுவிடுமோ என்று கருதுகின்ற நிலைமை உருவாகக் கூடாது. அவ்வாறு மக்கள் கருதக்கூடிய நிலைமை உருவாகுமானால், அது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலைப் பாதிப்பதாகவே அமையும். போர் முடிவடைந்த ஓராண்டுக்குள் மீண்டும் ஒரு போர்க்கால அச்சுறுத்தலா என்று மக்கள் கருதக்கூடிய நிலை தோன்றுமானால், அதன் அர்த்தம் என்னவாக இருக்கும் என்ற கேள்வியை நான் இந்த மன்றின் கவனத்துக்கு கொண்டுவருகின்றேன். ஏற்கனவே மக்களைக் குழப்பும் விதமாகத் திட்டமிட்டு செய்திகளை வெளியிட்டு வருகின்ற பல மக்கள் விரோத இணையத்தளங்களும், சில உள்ளூர் ஊடகங்களும் இப்போது உருவாகியுள்ள இந்தப் பதற்றமான நிலைமையைத் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொள்ளும் என்பதையும் இங்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இந்த இடத்தில் பொறுப்பான முறையில் இந்தப் பிரச்சினையை அணுகும் ஊடகங்களை நாம் பாராட்ட வேண்டும். இத்தகைய ஊடகங்கள் மேலும் மக்களைப் பாதுகாக்கும் வகையில் பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டுமென்று நான் இந்த மன்றிலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அதேவேளை, எந்தத் தீய சக்திகளுக்கும் இடமளிக்காமல் அரசாங்கம் இந்த நிலைமைகளைச் சீராக்க வேண்டுமென்பதையும் நான் இங்கு சுட்டிக்காட்டுகின்றேன்.

இதேவேளை, உருவாகியுள்ள அமைதிச் சூழலைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் பலருக்கும் உண்டு. அதை அனைத்துத் தரப்பினரும் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். போர் முடிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் நிலவிய அமைதியும் நம்பிக்கையும் சாவு இல்லாத நிலையும் பெரும் மகிழ்ச்சியையும் அனைவருடன் ஏற்படுத்தியிருந்தது. ஆனால், அதைக் குழப்பும் விதமாக மக்களை உணர்ச்சி வசப்படுத்தி, அவர்களை அரசியல் பலிக்கடாக்களாக்கும் முயற்சியில் சில அரசியல் தரப்புக்கள் முயன்று வருகின்றன. இந்தத் தவறைப் பதிவுசெய்யப்படாத சில இணையத்தளங்களும் செய்து வருகின்றன. இதுகுறித்து மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். மீண்டும் ஒரு நெருக்கடி நிலைக்கோ, இருண்ட காலத்துக்கோ யாரும் திரும்பக்கூடாதென்று பல அறிவுறுத் தல்களைப் பலரும் தெரிவித்து வருகின்றபோதும், இதைச் சிலர் பொருட்படுத்துவதில்லை. மக்களின் அவலமும், அவர்களுடைய கண்ணீரும் இரத்தமும் மிக லாபகரமான வியாபாரச் சரக்குகளாகி விட்டன. பாதிப்புக்களை நீக்க வேண்டும். நிலைமையைச் சீராக்க வேண்டும். உண்மையைக் கண்டறிய வேண்டுமென்று சிந்திப்பதற்கு பதிலாக, பிரச்சினைகளை வளர்ப்பதிலும் நிலைமையைக் குழப்புவதிலும் சில சக்திகள் முன்னிற்கின்றன. இதை யாரும் அனுமதிக்க முடியாது. உண்மையின் முன்னும் நீதியின் முன்னும் சட்டத்தின் முன்னும் சகல ரும் சமம் என்ற அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்தப் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டென்ற வகையில் பாதுகாப்புத் தரப்பினரும் பொலிஸாரும் இதுகுறித்து விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்வாரென நான் நம்புகின்றேன்.

மக்களுடைய நம்பிக்கையை காப்பாற்றுவதில்தான் உண்மையான பாதுகாப்பு அர்த்தம் பெறுகின்றது. வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் இந்த நாட்டில் ஏனைய மக்கள் வாழும் வாழ்க்கையைத் தாமும் வாழ விரும்புகிறார்கள். அமைதியும் சமாதானமும் மகிழ்ச்சியும் நிரம்பிய வாழ்க்கையை வாழ்வதற்கு அவர்களுக்கும் உரிமையுண்டு. இந்த உரிமையை அந்த மக்களுக்கு வழங்குவதில்தான் அரசாங்கத்தின் சிறப்பை மேலும் நாம் அதிகரிக்க முடியும். இப்போது தெற்கிலிருந்து லட்சக்கணக்கான சிங்கள மக்கள் வடக்குக்கு வருகின்றார்கள். கடந்த ஆண்டு ஏறக்குறைய 28 இலட்சம் பேர் யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்றதாக புள்ளி விபரக் கணக்குகள் தெரிவிக்கின்றன. இவ்வளவு பெரிய தொகையினர் எதற்காக வடக்கே யாழ்ப்பாணத்துக்கு வந்தார் கள்? இப்போதுள்ள அமைதிச் சூழல் உருவாகியிருக்கவில்லையென்றால் எப்படி இவர்கள் அங்கு வந்து சென்றிருக்க முடியும்? அதைப் போல வடக்கிலிருந்து தெற்குக்கு ஆயிரக்கணக்கானோர் தினமும் பயணம் செய்கின்றார்கள். இது மகிழ்ச்சியான ஒரு நிலைமை! இத்தகைய ஒரு நிலைமைக்காக எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டியிருந்தது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு உயிரிழப்புக்களை சந்திக்க வேண்டியிருந்தது? ஆனால், இவற்றையெல்லாம் குழப்பிவிடும் விதமாக சில அசம்பாவிதங்கள் நடப்பதும் அவற்றைத் தீர்ப்பதற்கு பதிலாக அவற்றை வைத்தே மக்களுக்கும் பாதகம் செய்ய விழைவதும் நிச்சயமாக தீங்கானதே! தேசிய பாதுகாப்பு என்பது சமூகங்களின் பாதுகாப்பாகவும் அவர்களுடைய கலாசாரம், வாழ்க்கை உத்தரவாதங்கள் அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டதாகவும் அமைய வேண்டுமென்பதை நான் கடந்த வரவு செலவுத் திட்டத்தின் பாதுகாப்புச் செலவீனம் தொடர்பான குழுநிலை விவாதத்திலே வலியுறுத்தியிருந்தேன். அதை இங்கே மீளவும் நினைவூட்ட விரும்புகின்றேன். ஆகவே, குற்றச் செயல்களில் ஈடுபடுவோரைக் கண்டுபிடித்து எவ்விதத்திலும் கருணை காட்டாது தண்டிக்க வேண்டும். மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி.

- *02 ஜனவரி 2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதந்திகளை பரப்பி மக்களை அச்சத்திற்குள் தள்ளி அரசியல் செய்யவே சிலர் முயற்சிக்கின்றனர்

**கௌ**ரவ *பிரதிச் சபாநாயகர் அவர்களே!*

இன்று இந்தச் சபையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற யாழ். மாவட்டத்தின் இன்றைய நிலைமைகள் பற்றிய ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில், நான் அம்மாவட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒருவன் என்ற அடிப்படையில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றேன். இந்த விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய மாண்புமிகு எம். ஏ. சுமந்திரன் அவர்கள் திறமைமிக்க ஒரு சட்டத்தரணியாவார். அவர் கதைகளைப் புனைவதில் மிகவும் கெட்டிக்காரரர் என்றுதான் நான் நம்புகின்றேன். மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கடந்த 4ஆம் திகதி யாழ். குடாநாட்டில் இடம்பெறும் அசம்பாவிதங்கள் தொடர்பாக இச்சபையில் ஒரு கூற்றை விடுத்திருந்தார். அங்கு நடைபெறும் சில விரும்பத்தகாத சம்பவங்கள் பற்றியும் அவற்றைக் கட்டுப் படுத்த வேண்டுமென்றும் அச்சம்பவங்களுடன் தொடர்புடைய சூத்திர தாரிகளை - சம்பந்தப்பட்டவர்களை - கண்டுபிடித்து, அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்றும் அவர் தனது கூற்றிலே வலியுறுத்தியிருந்தார். இன்று யாழ்ப்பாணத்திலே சில கடத்தல், கொலைச்சம்பவங்கள் நடந்தேறியிருக்கின்றன என்பதை நான் மறுக்க வில்லை. எனினும், இன்று யாழ்ப்பாணத்தில் ஏன் இவ்வாறு நடை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகின்றன? இவற்றுக்குப் பின்னால் இருப்பவர்கள் யார்? அவர் களைக் கண்டுபிடித்து, சட்டத்தின்முன் நிறுத்தி, தண்டிக்கப்பட வேண்டும் என்று நான் இச்சபையிலே தமிழ்த் தேசியக்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து கோரிக்கை விடுக்க விரும்புகின்றேன். எனினும், இன்று அம்மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தி, மீண்டுமொருமுறை அவர்களை இருண்ட ஒரு சூழலுக்குள் தள்ளிவிடவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைப் போன்ற அரசியல் வாதிகள் முற்படுகின்றார்கள். உண்மையில், யாழ்ப்பாண மக்கள் அமைதியை விரும்புகின்றவர்கள். தற்பொழுது, யாழ்ப்பாணம் இயல்பு நிலைக்கு திரும்பியிருக்கின்றது. அப்பிரதேசமானது யுத்த சூழ்நிலை யிலிருந்து மீண்டு, பல்வேறு துறைகளில் முன்னேற்றம் அடைந்திருக் கின்றது. இது பற்றி இவர்கள் சொல்ல மறுக்கின்றார்கள்.

தற்பொழுது உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான அறிவித்தல்கள் வெளி யாகிவிட்டன. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் "அங்கு மக்களுக்கு எந்தவிதமான வசதிகளும் இல்லை, அவர்கள் பயபீதியுடன் இருக்கின் றார்கள், நடமாடவே பயப்படுகின்றார்கள்" என்றுகூறி ஒரு போலித் தோற்றத்தைக் காட்டி, அம்மக்களுடைய வாக்குகளை பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள். அது மட்டுமல்ல, மாற்று அரசி யல் கருத்தாளர்கள்மீது சேறுபூசுவதில் இவர்கள் விண்ணர்கள். தேர் தல்கள் வந்துவிட்டால் போதும்! இவர்கள் அதனை இன்னும் அழகாக வடிவமைத்து, சித்தரித்துச் சொல்வார்கள். இங்கு பேசிய ஓர் உறுப்பினர், எமது கட்சியாகிய ஈ.பி.டி.பி. தொடர்பாகச் சில கருத்துக்களை முன் வைத்தார். அவருடைய கடந்தகாலச் செயற்பாடுகள் பற்றி யாழ். மக்கள் அறியாதவர்கள் அல்லர். அம்மக்களின் ஈட்டுப் பணத்தைக் கொள்ளையடித்து இன்று கோடீஸ்வரர் அந்தஸ்துக்கு வந்திருப்பவர்தான் அந்த உறுப்பினர்! அவர் அம்மக்களினுடைய அவலங்கள் தொடர்பாக வும் அவர்களை ஏமாற்றுபவர்கள் தொடர்பாகவும் இங்கு பேசுவது உண்மையிலே விந்தைக்குரிய விடயமாகும்.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி அவர்கள் அண்மையில் விடுத்த ஓர் அறிக்கை தொடர்பானதென்று இங்கே முன்வைக்கப்பட்டது. அதாவது, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியது தொடர்பில் கைது செய்யப்பட்டு, அண்மையில் நடந்த கொள்ளைகள் தொடர்பாக விசாரிக்கப்படுவதாக அவர் சொன்னதாக ஒரு பத்திரிகையில் செய்தி வெளிவந்தது. இது தொடர்பாக அந்த கட்டளைத் தளபதியுடன் நாங்கள் தொடர்பு கொண்டபோது அவர், தான் அப்படியொரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி கொடுக்கவில்லையென்று கூறி, அதை மறுத்திருக்கின்றார். ஆனாலும், ஈ.பி.டி.பி. கட்சியிலிருந்து கிட்டத்தட்ட 5 வருடங்களுக்கு முன்பு வெளியேறிய ஓர் உறுப்பினர் அந்தப் பகுதியில் "சுவீப் டிக்கட்" விற்றுக்கொண்டிருந்தபோது சந்தேகத்தின்பேரில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார். இதனை நாங்கள் ஏற்றுக்கொள்ளுகின்றோம். எமது கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மக்கள் மத்தியில் உரையாற்றும்போதும் பத்திரிகையாளர் மகாநாட்டின் போதும் அடிக்கடி ஒரு கருத்தை தெளிவாகச் சொல்லுவார். அதாவது, "எமது கட்சியின் உறுப்பினர்கள் - அவர்கள் முன்னாள் உறுப்பின ராக இருந்தாலென்ன அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட் படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்ட உறுப்பினராக இருந்தாலென்ன, அல்லது தற்சமயம் கட்சியின் உறுப்பினராக இருந்தாலென்ன, யாராக இருந்தாலும் - மக்கள் விரோத அல்லது சட்டவிரோத நடவடிக் கையில் ஈடுபட்டால் அவர்களை கைது செய்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு தான் எந்த விதத்திலும் தடையாக குறுக்கே நிற்கப் போவதில்லை"யென்று சொல்லியிருக்கின்றார். இதுதான் உண்மையி லேயே நடக்கின்றது. ஆனால், ஈ.பி.டி.பி. யைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர் ஒருவர் ஏதாவதொரு குற்றச்செயலில் ஈடுபட்டால் அது ஈ.பி.டி.பி. தலைமையினால் வழிநடத்தப்பட்டு செய்யப்படுவதுபோல் சிலர் சித்தரிக்க முற்படுகின்றனர்.

அண்மையில் சங்கானைப் பிரதேசத்தில் கொள்ளைச் சம்பவமொன்றின் போது மதகுரு - ஐயர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது புதல்வர்கள் இருவர் படுகாயப்பட்டார்கள். அதில் சம்பந்தப்பட்டவர் களான இராணுவத்தில் இருந்த இருவரும், தடுப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் இருவரும் கைது செய்யப்பட்டிருப்பதை அடுத்த நாள் யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி அவர்கள் வெளிப்படுத்தினார். இங்கு இரு பகுதியினர் தொடர்பு படுகின்றனர். ஒன்று இராணுவத்தினர், மற்றது புலிகள் இயக்கத்தினர். அதற்காக இராணுவத்தினர் கொள்ளையில் ஈடுபடுகின்றனரென்றோ, அல்லது கொள்ளைச் செயல்களுக்காக இராணுவத்தினர் ஈடுபடுத்தப் படுகின்றனரென்றோ இராணுவத்தினர்மீது யாரும் குற்றம் சுமத்த முடியாது. அதுபோன்று புலிகள் இயக்கத்தினர் அவர்களது உறுப் பினர்களை கொள்ளை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதாக நான் சொல்லவில்லை. கௌரவ பிரதி அமைச்சர் முரளிதரன் அவர்கள் இது பற்றித் தெளிவாகக் குறிப்பிட்டார். அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நெருங்கிய ஆதரவாளர் ஒருவர், தன் சொந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளையே கற்பழித்ததாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்டார். அதற்காகத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் கற்பழிக்கின் றனரென்று நாங்கள் சொல்ல வரவில்லை. எனவே, ஈ.பி.டி.பி. மீது அவதூறான பிரசாரங்களை ஏற்படுத்துவது மிகவும் அநியாயமான, ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயமாகும். நூற்றுக்கணக்கான எமது உறுப்பினர்கள் புலிகள் இயக்கத்தினால் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தில் எவ்வளவோ மாற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இச்சபையிலே எனக்கு முன்னர் உரையாற்றிய கௌரவ பாராளு மன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள், யாழ்ப்பாணத்தில் கொள்ளை நடைபெறுகின்றது என்று கூறி யாழ்பாணத்தில் மண் கொள்ளை யடிக்கப்பட்டு பெருந்தொகையான பணத்துக்கு விற்பனை செய்யப் படுவதாகக் குறிப்பிட்டிருந்தார். இந்த மண் அகழ்வு மற்றும் விநியோ கம் பற்றிய விடயத்தை இச்சபையிலே தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாடு எனக்கு இருக்கின்றது. ஏனெனில் அவர் ஈ.பி.டி.பி. யினர் தான் மண் அகழ்வில் ஈடுபடுவதாக நேரடியாக குற்றஞ்சுமத்தினார். யாழ்ப்பாணத்தில் குடத்தனைப்பகுதியில் மண்ணை அகழ்ந்தெடுத்து மக்களுக்கு விநியோகம் செய்யும் பணிகளில் Maheswary Foundation ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. Maheswary Foundation என்பது ஒரு பொது நிறுவனம். மண் விற்பனை மூலம் Maheswary Foundationக்கு கிடைக்கும் நிதியீட்டத்திலிருந்து அந்த நிறுவனம் மக்களின் வாழ் வாதாரத்துக்கும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கும் செலவு செய் கின்றது. ஏற்கனவே அந்த நிறுவனம் அதற்கான நிரூபணங்களை பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தியிருக்கின்றது. யாழ்ப்பாணத்திலே உள்ள குடத்தனைப் பிரதேசத்திலிருந்து மண்ணை அகழ்வதால் மக் களுக்கோ அல்லது Environmentக்கோ ஆபத்து ஏற்பட மாட்டாதென புவிச்சரிதவியல் திணைக்களத்தினால் ஆய்வு செய்து உறுதிப்படுத் தப்பட்ட பின்னர்தான் அங்கு மண் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட் டது. அப்பகுதி மக்களினால் நடத்தப்படுகின்ற ஒரு சங்கம்தான் அந்தப் பகுதிகளிலிருந்து மண்ணை அகழ்ந்தெடுத்து இன்னொரு பிரதேசத்துக்குக் கொண்டுசென்று சேர்க்கிறது. அவர்களின் ஒரு கியூப் மண்ணை அங்கிருந்து எடுப்பதற்கான செலவாக 900 ரூபாவை அற விடுகிறார்கள். புவிச்சரிதவியல் திணைக்களத்துக்கு மண்ணை அகழ் வதற்கு 168 ரூபாவை வரியாக அந்த மண்ணை வாங்குபவர் செலுத்த வேண்டும். Tractor உரிமையாளர்கள் இந்த மண்ணை மக்களுடைய தேவைக்குரிய பிரதேசத்துக்கு எடுத்துச் சென்று ஒப்படைப்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பிரதேசத்திற்கும் குறித்த தொகைப் பணத்தை நிர்ணயம் செய்திருக்கின்றார்கள். அதன் பிரகாரம் வடமராட்சிப் பிரதேசத்துக்கு எடுத்துச் செல்வதற்கு 6,500 ரூபாவும் வலிகாமம் பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கான செலவாக 9,500 ரூபாவும் தீவகப் பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கான செலவாக 13,500 ரூபாவும் அறவிடப்படுகின்றது. ஆகவே, மக்கள் மொத்தமாக இச்செலவுகளையும் சேர்த்த பணத் தொகையைச் செலுத்தியே மண்ணைப் பெறவேண்டியவர்களாக இருக் கின்றார்கள். இதிலே Maheswary Foundationஇன் நிர்வாகச் செலவீனத் துக்காக 270 ரூபாவும் மண்ணை அகழ்ந்தெடுத்து விநியோகம் செய்யும் முகவர் நிலையச் செலவாக 200 ரூபாவும் சேர்த்து மொத்தமாக 470 ரூபா நிதிதான் அங்கு மேலதிகமாக வழங்கப்படுகின்றது.

யுத்தத்திற்கு பின்னரான இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தி லுள்ள மக்கள் சொந்த வீடுகளை - இருப்பிடங்களை - கட்டுவதிலும் புனர மைப்பதிலும் மும்முரமாக இருப்பதனால் அதற்குரிய மண்ணைப் பெறுவதென்பது அங்கே பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. அதாவது அம் மக்கள் மண்ணைப் பெறுவதற்காக நீண்டகாலம் காத்திருக்க வேண்டியிருக்கின்றது. ஏனெனில் அங்கு, யாரும் தாம் விரும்பியபடி மண்ணை அகழ்ந்து செல்லமுடியாத வகையில் அரசாங்க புவிச்சரிதவியல் திணைக்களம் கட்டுப்பாடுகளை விதித்திருக்கின்றது. அப்பிரதேசத்திலுள்ள மண்ணை அகழ்ந்து கொண்டுசென்ற நிகழ்வுகள் அன்று, விடுதலைப்புலிகள் காலத்தில் இருந்தது. ஆனால், அவற்றைப் பற்றியெல்லாம் இவர்கள் பேசமாட்டார்கள். யாழ்ப்பாண மாவட்டத் தில் ஒரு லொறி மண்ணின் விலையானது ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் குறைவாகத்தான் இருக்கின்றது. ஆனால், கொழும்பில் அல்லது அனுராதபுரத்தில் ஒரு லொறி மண் ணின் விலை 18,500 ரூபாயாக இருக்கின்றது. எனவே, இவர்கள் பதற்றத்தை தணிப்பவர்களாக இருக்கவேண்டுமேயொழிய அதனை உருவாக்குபவர்களாக இருக்கக்கூடாது என்பதனைத்தான் நான் சொல்ல விரும்புகின்றேன்.

இன்று யாழ்ப்பாணத்தில் உலக வழமைக்கு மாறாக ஒரு சம்பவம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதாவது, அங்கு வதந்திகள்தான் அதிகம். அந்த வதந்திகளைப் பரப்புகின்றவர்கள் அங்கு மிகவும் செல் வாக்குடையவர்களாக இருக்கின்றார்கள். இதனால்தான் அங்கு வதந் திகள் பரப்புவதைக் கட்டுப்படுத்துவது என்பது மிகவும் கடினமான விடயமாக இருக்கின்றது. அங்கு சில ஊடகங்களை நடத்துபவர்கள்தான் வதந்திகளைப் பரப்பி மக்களை ஓர் அச்ச சூழ்நிலைக்குள் வைத்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அதன்மூலம் அரசியல் ஆதாயம் பெறுகின்றார்கள். இதனைத் தான் இவர்கள் கடந்த காலங்களிலும் செய்து கொண்டிருந்தார்கள், இன்றும் கடைப்பிடிக்க விரும்புகின்றார்கள். இங்கு கௌரவ உறுப்பினர் ஒருவர் பேசுகையில் "மக்கள் அங்கு பாதையில் நடமாட முடியாது" என்று கூறினார். ஆனால், இவையெல்லாம் பொய்யான கதைகள்.

அண்மையில் மேதகு ஜனாதிபதி அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந் திருந்தார். அன்று அங்கு கௌரவ அமைச்சர் மாண்புமிகு டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஏற்பாட்டில் மிகப்பெரியளவில் பொங்கல் விழா நடைபெற்றது. அந்த நிகழ்ச்சிக்கு ஏராளமான மக்கள் - ஆயி ரக்கணக்கான மக்கள் - திரண்டுவந்து ஆதரவு தெரிவித்ததுடன், அதில் தங்களது இயல்பு வாழ்க்கைகுறித்த சந்தோஷத்தை வெளிப் படுத்தியிருந்தார்கள். ஆகவே, இன்று அம்மக்கள் மத்தியில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. விடுதலைப்புலிகளுடைய காலத்தில் இருந்த இருண்ட ஆட்சி இன்று அங்கு இல்லை. ஆனால், இன்று அங்கு சில விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்பதை நான் மறுக்கவில்லை. அதனை நாங்கள் கட்டுப்படுத்த வேண்டும். கடந்த காலங்களில் நடைபெற்றதுபோன்று பயங்கரமான சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்கள் தப்பிவிடக்கூடிய சூழல் இன்றில்லை. சம்பந்தப் பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப் படுவார்கள். கடந்த காலங்களில் விடுதலைப்புலிகளின் நிர்வாகம் இருந்தபோது அங்கு எவ்வளவோ கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றன என்பது இவர்களுக்கு தெரியும். அதனை அவர்களே ஒத்துக்கொள் வார்கள். அங்கு புலிகள் "பொங்கு தமிழ்" நிகழ்வுகளை நடத்தியும் மக்கள் படை என்றும் மண்டயன் குழு என்றும் செயற்பட்டார்கள். ஆனால், தற்பொழுது அதுபோன்ற ஒரு நிலைமை அங்கு இல்லை.

மண்டையன் குழு என்று சொன்னவுடனே அவர் (சுரேஸ் பிரேமச்சந்தி ரன்) எழும்புகின்றார். அவருக்கு சுட்டுவிட்டது. அவ்வாறே, உங்களுட னிருந்த பத்மினி சிதம்பரநாதன் உருவாக்கிய மக்கள் படையினர்தான் இன்று யாழ்ப்பாணத்திலே படுமோசமான சமூக விரோதச் செயல் களில் ஈடுபடுகின்றார்கள் என்பதை நீங்கள் பொதுப்படையாக ஏற்றுக் கொள்ளமாட்டீர்கள்! ஆனால், அது உங்களுக்குத் தெரியும். ஆனால், இன்று அங்கு உருவாகியுள்ள சூழலை விரைவாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கை எமது அரசுக்கு இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சில சம்பவங்களை உங்களுடன் சேர்ந்து நாங்களும் கண்டிக்கின்றோம். அங்கு சில கடத்தல்கள் இடம் பெற்றிருக்கின்றன. சிலர் சுடப்பட்டிருக்கின்றார்கள். ஆனால், அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறாத விடயத்தை நடைபெற்றதாகச் சித்தரித்தும் இயல்பாக சமூகத்துக்குள் நடைபெறும் தற்கொலை போன்ற சம்பவங்களைத் திட்டமிட்டு இனத்திற்கு எதிராக கட்டவிழ்த்தும் மக்களைத் தயவு செய்து குழப்பாதீர்கள். இன்று மக்கள் அமைதியாகவும் சந்தோசமாகவும் இருக்க விரும்புகின்றார்கள். எனவே, மீண்டும் மக்களை இருண்ட உலகத்திற்குள் கொண்டுசெல்ல முற்படாதீர்கள் என்று யாழ்ப்பாண மக்களின் சார்பாக நான் உங்களிடம் வலியுறுத்திக்கேட்டு, விடைபெறுகின்றேன்.

நன்றி. வணக்கம்.

- *20 ஜனவரி 2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நாட்டிலே எக்காரணங்கொண்டும் எவரும் வன்முறையினால் பாதிக்கப்படக்கூடாது

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே!

அவசரகால சட்ட நீடிப்பு தொடர்பான விவாதத்திலே இன்று இந்த அரங்கிலே சில விடயங்களைக் கவனப்படுத்த விரும்புகின்றேன். நாங்கள் நீண்ட காலமாக அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்து வருகின்றோம். எங்களுடைய இந்த நிலைப்பாட்டையிட்டு வெளியே கடுமையான விமர்சனங்கள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, தமிழ் ஊட கங்கள் எமது இந்த நிலைப்பாட்டை விமர்சித்து வருகின்றன. நாங்கள் அவசரகாலச் சட்டத்தை ஒருபோதும் விரும்பி அங்கீகரிக்கவும் இல்லை. வரவேற்கவும் இல்லை. ஆனால், தவிர்கமுடியாத நிலையில் அதனை நீடிப்பதற்கு ஆதரவளித்து வருகின் றோம். அவசரகாலச் சட்டத்தை நீடிக்கவேண்டிய ஓர் அவசிய நிலை இந்த நாட்டிலே தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. யுத்தமும் யுத்தத்தை நடத்தியவர்களின் அரசியலும் முதற்காரணமாக இருக்கின்றது. இப்போது யுத்தம் முடிந்திருந்தாலும் வன்முறையை தூண்டும் விதமாக சில தரப்பினரின் அரசியல் அணுகுமுறைகளும் செயற்பாடுகளும் இரண்டாவது காரண மாக இருக்கின்றன. வன் முறையோ, வன்முறைச் சூழலோ, வன்முறைக் கான காரணிகளோ இருக் கும் வரை அரசாங்கம் அதை முறியடிப் பதற்கான வழிமுறைகளைப் பற்றியும் சிந்திக்கும். எவர் ஆட்சியில் இருந்தாலும் இதுதான் நிலைமை. அப்படிச் சிந்திக்கும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரகாலச் சட்டத்தை - அவசரகால நிலையை நீடிப்பதென்பது தவிர்க்க முடியாதிருக்கும். வன்முறை என்பது தனியே ஆயுதம் தூக்கு வதனால் மட்டும் உருவாகிவிடுவதில்லை. வன்முறையைத் தூண்டும் சிந்தனைகள், வன்முறையை உள்ளடக்கமாகக் கொண்ட வார்த்தைகள், வன்முறைக் கருத்தியல் எல்லாமே அமைதிக்கு எதிரான செயற் பாடுகள்தான்.

ஒரு வகையில் இது ஒரு பயங்கரவாத நடவடிக்கையே. இவ்வாறான தோர் அரசியலை முன்னெடுத்துக்கொண்டு, அதாவது பகைமையை வளர்க்கும் விதமாக அரசியலை முன்னெடுத்துக்கொண்டு அமைதியைப் பற்றியும் ஜனநாயகத்தைப் பற்றியும் நாம் சிந்திக்க முடியாது. இதை நாம் விரும்புகின்றோமென்றால், முதலில் ஜனநாயகத்தை மதித்து அதனைப்பேண வேண்டும். ஆனால், இருக்கின்ற ஜனநாயக உரிமைகளை வைத்துக்கொண்டு அதற்கெதிரான நடவடிக்கைகளையே பலரும் செய்கின்றனர். இது ஜனநாயக துஷ்பிரயோகமாகும். இந்த ஜனநாயக துஷ்பிரயோகமானது சமூகங்களை அபாய நிலைக்குள் தள்ளி, நாட்டையும் நெருக்கடிக்குள்ளாக்கி விடுகின்றது. அதுமட்டுமல்ல ஜனநாயக துஷ்பிரயோகத்தைச் செய்வோரையும் அது பலியெடுத்து விடுகின்றது. இதற்கு எங்கள் நாட்டில் ஏராளமான உதாரணங்கள் உண்டு. அபாண்டமாகப் பழிபோடுவோர், கருத்தைக் கருத்தால் எதிர் கொள்ளாமல் வன்முறையின்மூலமாக அதை அடக்க முனைவோர், அரசியலை மக்களுடைய விமோசனத்துக்காகப் பயன்படுத்தாமல் தமது சுயமுன்னேற்றத்துக்காக பயன்படுத்த விளைவோர், மக்களுக்கான அரசியலை முன்னெடுப்போரை மக்களிடமிருந்து பிரிப்பதற்காகப் பொய்யுரைப்போர் போன்ற இவர்களெல்லோரும் நிச்சயமாகத் தங்க ளுக்கே அழிவை உண்டாக்குகிறார்கள். எப்படித்தான் பொய்களை மெய்யாக்க முனைந்தாலும் வரலாற்றில் அது வெற்றிபெறாது.

கடந்த நூற்றாண்டு காலமாக தமிழ்க் கருத்துலகம் உருவாக்கிய அதீதீவிர நிலைப்பாடுகள் இன்று தோல்விகண்டுவிட்டன. அத்துடன், அந்தக் கருத்துலகம் பெரும் அழிவுகளையும் ஏற்படுத்திவிட்டது. இன்று தமிழ் மக்கள் பாரிய அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று இவர்களே சொல்லி வருகின்றார்கள். இந்த நிலையில் இவர்கள் எங்கள்மீது விமர்சனங்களை முன்வைக்கிறார்கள். இதுதான் வேடிக்கை யானது. ஆனால், நாம் எத்தகைய விமர்சனங்களையும் எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கின்றோம். அதேவேளை அபாண்டமான குற்றச்சாட் டுக்களை ஒருபோதும் நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம். ஆனால், எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைப்பாட்டையும் எங்களின் செயற்பாடுகளையும் மக்கள் நன்றாக அறிவர். அதனால்தான் எல்லா வகையான பொய்ப் பிரச்சாரங்களின் மத்தியிலும் எங்களின் ஆதரவுத்தளம் வலுவடைந்து வருகின்றது.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே!

இன்று இந்த அவையிலே அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. அது தொடர்பான விவாதம் நடந்து கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் மேலும் சில விடயங்களை இங்கு கவனப்படுத்த விரும்புகின்றேன். நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவஞானம் சிறிதரன் பயணித்த வாகனம்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தை ஈ.பி.டி.பி. கட்சியினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்த நாட்டிலே எக்காரணங்கொண்டும் எவரும் வன்முறையினால் பாதிக்கப்படக்கூடாது. அப்படி ஏதாவது நடந்தால் அது ஜனநாயகத்துக்குப் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்திவிடும். நாம் ஜனநாயகத்தையே பெரிதும் மதிக்கின்றோம். அதனால் அரசியல் படுகொலைகளையும் அச்சுறுத்தல் சம்பவங்களையும் நாங்கள் எதிர்கின்றோம். ஆகவே, இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுவதை நாம் கண்டிக்கின்றோம் என்பதை மீண்டும் இச்சபையில் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். ஆனால், எமது நாட்டில் துரதிஷ்டவசமாக இதுபோன்ற சம்பவங்கள் நடைபெற்று விடுகின்றன. அதனால்தான் அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஒரு முழுமையான அமைதிச் சூழலை உருவாக்குவதற்கு அனைத்துத் தரப்பினரதும் பூரணமான பங்களிப்பு அவசியம் என்பதே பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். அவ்வாறில்லாத நிலைமை ஏற்படுமிடத்து, அமைதிச் சூழல் பாதிப்படைகிறது. அத்துடன் இயல்புச் சூழலும் கெடுக்கப்படுகின்றது. இந்த நாட்டிலே பெரும் அழிவுகளை ஏற்படுத்திய போர் முடிந்த பின்னர் இன்று அமைதியான சூழல் ஒன்று உருவாகியுள்ளது. இந்த அமைதிச் சூழலை பராமரித்து ஒரு முழுமையான இயல்பு நிலைமையை வளர்தெடுக்கும் பணி எல்லோருக்கும் உரியதாகும். ஆனால், சில தரப்பினர் அமைதிக்கு எதிராகவே சிந்திக்கிறார்கள். அவர்கள் பூமிக்கு அப்பால் சிந்திக்கின்றார்கள். நடைமுறைக்குச் சாத்தியமில்லாத கோட்பாடுகளை தங்கள் அரசியல் கொள்கைகளாக வைத்துக்கொண்டு காலத்தைக் கடத்துகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

மற்றும் இந்த மன்றிலே இருக்கின்ற கௌரவ உறுப்பினர்களே, நான் இங்கே ஒரு உண்மையை குறிப்பிட்டு சொல்லவேண்டும். 2008ஆம் ஆண்டிலும் 2009 ஆம் ஆண்டின் முற்பகுதி வரையிலும் இந்த நாட்டிலே பெரும் போர் நடந்து கொண்டிருந்தது. பேரழிவுகளை ஏற்படுத்திய அந்தப் போர் நடைபெற்ற வேளையில் பெரும் அவலங்கள் ஏற்பட்டன. அந்த நேரத்திலே நாட்டிலே என்ன நடக்கப்போகிறது. இந்தப் போரின் முடிவு எப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தப்போகின்றது? என்ற கேள்விகள் பலருடைய மனங்களிலும் எழுந்தன. பின்னர் 2009 யூலையிலிருந்து நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருந்த மக்களின் நிலைமை பலருடைய கவனத்தையும் ஈர்த்து மிகுந்த கவலைக்குள்ளாக்கியது. உண்மையில் பெருந்தொகையான மக்கள் ஒரு நெருக்கடிச்சூழலை எதிர்கொண்டவாறே இருந்தனர். ஆனாலும், அரசாங்கம் இந்த மக்களை மிக விரைவில் மீளக்குடியமர்த்தியது.

அப்பொழுது இந்த மக்கள் இவ்வளவு விரைவில் மீளக்குடியமர்த்தப் பட்டு ஓர் இயல்பு வாழ்க்கைச் சூழலுக்குச் செல்வார்கள் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. ஆனால், அது நடந்திருக்கின்றது. அதனை இந்த அரசாங்கமே செயற்படுத்தியிருக்கின்றது. போரினால் பாதிக்கப்பட் டுள்ள மக்கள் வாழ்கின்ற இடங்களுக்கு நாம் தொடர்ச்சியாக சென்று அவர்களைப் பார்வையிட்டு வருகின்றோம். நாம் அவர்களுடைய முன்னேற்றத்திற்காகவும் ஆறுதலுக்காகவும் தொடர்ச்சியாகப் பாடு பட்டு வருகின்றோம். தொடக்கத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் சில பிரச்சினைகள் இருந்தன. போர் நடந்த ஒரு பிரதேசத்தில் குறிப்பாக நீண்டகாலமாகவே அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லாதிருந்த பகுதியில் மீள்குடியேற்றத்தைச் செய்வதென்பது மிகவும் கடினம் என் பது அதனை நடைமுறைப்படுத்தியவர்களுக்கே தெரியும். தயவுசெய்து நீங்கள் எல்லோரும் 2008, 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்த நிலைமையை இப்பொழுது ஒரு தடவை ஞாபகப்படுத்திப் பாருங்கள்! இன்று ஒரு குறிப்பிட்ட அளவு மக்களைத் தவிர ஏனைய மக்கள் அனைவரும் மீளக்குடியமர்தப்பட்டுள்ளனர். எதிர்பாராத இடங்களில் எல்லாம் மக்கள் மீளக்குடியேற்றப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக வலி - வடக்கு உட்பட யாழ் குடாநாட்டின் பல பகுதிகளில் மக்கள் மீளக்குடியேற்றப்பட்டு வருகிறார்கள். அதாவது, தங்கள் சொந்த ஊர்களுக்கு திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். இதனை நாம் ஏற்கனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தடவை பல இடங்களிலும் வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றோம் என்பதை இங்கே நினைவூட்ட விரும்புகின்றேன்.

மீள்குடியேற்றத்தைப் படிப்படியாக சாத்தியப்படுத்த முடியும். இயல்பு வாழ்க்கையொன்றை நிச்சயமாக கட்டியெழுப்ப முடியும். அந்த வகையில் ஒரு நிச்சயமான எதிர்காலத்தை உத்தரவாதப்படுத்தும் வகையில் அரசியல் தீர்வையொன்றையும் எட்ட முடியும் என்று நாம் சொல்லி வருகின்றோம். நாம் நம்பிக்கை வைத்த காரியங்கள் நடந்தே வருகின்றன. நாம் வலியுறுத்திய விடயங்களை மெதுவாகவும் படிப்படியாகவும் நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

உண்மையாகவும் நேர்மையாகவும் நாம் சிந்தித்துச் செயற்பட்டால் இந்த இலக்கை எட்டமுடியும் என்றவொரு நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. நாம் நேர்மையாக இருந்தால் மற்றவர்களுடைய உதவிகள் தாராளமாக எமக்கு கிட்டும். இன்று தமிழ் மக்களுக்கு அரசாங்கத்தின் பல்வேறு உதவிகளும் ஆதரவும் கிட்டியிருக்கின்றது. மக்களுடைய மீள்குடியேற்றம் என்பது இப்போது இயல்பான நிலையை எட்டியிருக்கின்றது. தற்பொழுது அதில் காணப்படும் குறைபாடுகளும் பிரச்சினைகளும் இவ்வாண்டின் நிறைவில் தீர்ந்துவிடும். மக்கள் தங்களது சொந்தக் கிராமங்களுக்கு செல்வது என்பது, அவர்கள் தங்களின் மகிழ்ச்சியான காலத்துக்குச் செல்கிறார்கள் என்றே அர்த்தமாகும். நீண்டகாலமாக போருக்குள்ளும் அமைதியின்மைக்குள்ளும் சிக்கியிருந்த மக்கள் இப்போதுதான் மகிழ்ச்சியான காலத்துக்குள்ளும் மகிழ்ச்சியான சூழலுக்குள்ளும் செல்கின்றார்கள். இது எவ்வளவு முக்கியமான நிகழ்ச்சியாகும்! போரினால் தீப்பிடித்து எரிந்த எமது நாட்டில் தற்பொழுது அமைதி உருவாகியிருப்பதும் மகிழ்ச்சியான சூழ்நிலையை நோக்கி மக்கள் செல்வதும் முக்கியமானதேயாகும். இந்த மகிழ்ச்சியை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு மற்றவர்களைவிடவும் அரசாங்கத்துக்கேயுண்டு. மீள்குடியேறிய மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதும் மீள்குடியேறவுள்ள மக்களை மீளக்குடியமர்த்துவதும் இன்றுள்ள முக்கியமான பணிகளாகும்.

நாட்டில்கடந்த மாதம் பெய்த பெருமழையானது பெரும்பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த மழையினால் பல இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாகின்றார்கள். பலகோடிரூபாய் நட்டம் ஏற்பட்டிருக்கின்றது. மக்களின் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையானது அரசாங்கத்துக்கு மேலதிக சுமைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும், அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற எந்தவொரு அபி விருத்தி நடவடிக்கையும் இடைநிறுத்தப்படவில்லை. இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள தேவைகளை மையமாகவைத்து வெளியுலகம் சில நிபந்தனைகளை விதிக்க முயற்சிக்கின்றது. நாம் உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வந்தபோதிலும்கூட, வெளியுலகத்தின் நெருக்கடிகளும் சவால்களும் நீங்கிவிடவில்லை. எமது நாடு தன் நிறைவடையும் வரையில் நாட்டில் அமைதிச் சூழலும் அரசியல் உறுதிநிலையும் ஏற்படுவதற்கு பல நெருக்கடிகளும் சவால்களும் இருந்தே தீரும். ஆகவே, இப்போது உருவாகியிருக்கும் இந்த அமைதியான சூழ்நிலையில் நாங்கள் அபிவிருத்தியை நோக்கிய ஒரு வளர்ச்சியைப் பேணவேண்டும் என்று நான் வாழ்த்துகின்றேன். மேலும், எமது நாட்டில் ஏற்கனவே இருந்த சனநாயகச் சூழலை விடவும் சிறந்ததொரு சூழல் தற்பொழுது ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலையை நாம் மேலும் வளர்த்தெடுக்க வேண்டும். இதனை வளர்த்தெடுத்தால்தான் சமூகங்களுக்கிடையிலான பாதுகாப்பும் நல்லிணக்கமும் உரிமைகளும் பேணப்படுவதோடு, முழுமையான அபிவிருத்தியும் ஏற்படும். ஆகவேதான், நாம் அமைதியையும் ஜன நாயகத்தையும் மிகவும் ஆழமாக வலியுறுத்துகின்றோம். மக்களின் மன உணர்வுகளுக்கு அப்பால் நாம் அரசியல் கோட்பாடுகளையும் அரசியல் நிலைப்பாடுகளையும் முன்வைத்துப் பேசமுடியாது. இன்று யாழ்ப்பாணத்திலே எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இடையில் நடந்த சில அசம்பாவிதங்கள் இன்று கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அங்கே அமைதியை நிலைநிறுத்த வேண்டுமென்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை, கவனத்தை நான் இங்கு பாராட்டுகின்றேன். அவ்வாறிருந்தும்கூட அங்கு இடம்பெற்ற சில விடயங்களை ஊதிப் பெருப்பித்து அதில் அரசியல் ஆதாயம் தேட முற்படும் சக்திகளை வன்முறையையும் வளர்த்து அந்தப் பரப்பில் ஆதாயம் தேட முற்படும் ஒரு சில பத்திரிகைகளையும் நாம் தொடர்ந்தும் கண்டிக்கின்றோம். இத்தகைய செயற்பாடுகள் உண்மையிலேயே மக்களுக்கு விரோதமானவை மட்டுமல்ல, அந்த துறைசார்ந்த அறிவியற் கோட்பாடுகளுக்கும் எதிரானவையேயாகும். எதையும் தீர விசாரித்து உண்மைகளைக் கண்டறிய வேண்டியது ஊடகத்துறை சார்ந்தவர்களின் முக்கிய பொறுப்பாகும். ஆனால், இதையெல்லாம் அவர்கள் செய்வதேயில்லை. இதுதொடர்பில் மக்கள் மிகத்தெளிவாக இருக்கவேண்டும். தங்களின் எதிர்காலத்தைப் பாழடிப்பதற்கு இவர்களுக்கு இடமளிக்கக்கூடாது. கடந்த 60 ஆண்டு காலமாக மிக உச்சமான அரசியற் பங்களிப்புக்களை மக்கள் செய்திருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், பொருத்தமில்லாத தலைமைகளின் தவறான அரசியல் வழி நடத்தல்கள் மக்களின் அரசியல் பங்களிப்புக்களையெல்லாம் கெடுத்து விட்டன. அதுமட்டுமல்ல, இவ்வளவு பங்களிப்புக்களையும் துயரங்க ளையும் சுமந்த மக்களையே அநாதரவாகவிட்டுள்ளன. ஆகவே, இனியும் மாயமான்களை நம்பிக்கொண்டிருக்காமல், பட்டறிவிலிருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டு செயற்படுவோம். நமது கடந்த காலத் தின் பாடங்களும் பட்டறிவும் எங்களின் எதிர்காலத்துக்கான ஒளியைத் தருமென்பதை வலியுறுத்துகின்றேன். வரலாற்றிலிருந்து பாடங்களைப் படித்துக்கொண்டால் பல பிரச்சினைகள் தானாகவே தீர்ந்துவிடும். நமது கடந்த காலம் ஒரு மகத்தான வரலாறாகும். அது ஏராளமான நெருக்கடிகளையும் துயரங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. எனவேதான், நாங்கள் எங்களுடைய அரசியல் பயணத்தின்போது பெற்றுக்கொண்ட அறிவின் வழியாகச் செயற்படுகின்றோம். இதனை இந்த அரங்கில் பதிவுசெய்வதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின் றேன். எங்களுடைய மக்களை ஒரு சுபீட்சமான எதிர்காலத்துக்கு அழைத்துச்செல்லும்அரசியல்பணியிலும்அரசியல்பங்களிப்பிலும்நான் தொடர்ந்தும் ஈடுபடுவதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றேன்.

நன்றி.

- *09 மார்ச் 2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகாலச் சட்டத்தை விரைவில் நீக்குவதற்கான கால வரையறையை வகுத்துச் செயற்படுவது அவசியம்

கௌரவ சபாநாயகர் அவர்களே!

மீண்டும் அவசரகாலச் சட்ட நீடிப்புத் தொடர்பான விவாதத்திலே கலந்துகொண்டு உரையாற்றும் இந்தச் சந்தர்ப்பமானது முடிவே இல்லாமல் தொடர்கின்ற ஒரு வழக்கு விசாரணையில் விவாதிப்பதைப் போன்ற ஒரு மனநிலையைத் தருகின்றது. நாம் ஒருபோதுமே அவசர காலச் சட்டத்தை விரும்பியதில்லை. ஆனால், இதுவரை நாட்டில் நிலவியிருந்த சூழல், அவரசகாலச் சட்ட நீடிப்பை எந்தவொரு வகையில் அனுமதித்திருக்கின்றது? அவசரகாலச் சட்ட நீடிப்புத் தொடர்பான எமது தெளிவான நிலைப்பாட்டை நாம் பல தடவைகள் இந்த மன்றிலே தெளிவுபடுத்தியிருக்கின்றோம். முழுமையான அமைதியும் நிறைவான ஜனநாயக மலர்ச்சியும் ஏற்படும்போது, அதாவது இந்த இரண்டு முக்கிய விடயங்களும் வளர்ச்சியடையும் போது அவசரகாலச் சட்ட நீடிப்பு அவசியமற்றதாகி, இல்லாமலே போய்விடும் என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளோம். எனவே, முழுமையான அமைதிக்கும் நிறைவான ஜனநாயகத்துக்குமாக நாம் அனைவரும் கட்சி பேதங்களுக்கு அப்பால் சிந்திக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கேட்டிருக்கின்றோம். அமைதிக்கு எதிராக சிந்தித்துக்கொண்டு அவசரகாலச் சட்டத்தை நீக்குவதைப்பற்றிப் பேசுவதில் பயனில்லை. இதனை நான் இந்த மன்றிலே மீண்டும் அழுத்தமாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவ சபாநாயகர் அவர்களே,

அவசரகாலச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக, எமது கட்சியாகிய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தன்னுடைய நிலைப்பாட்டைக் கடந்த வாரம் அரசாங்கத் தரப்புப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுக்களின் போதும் தெளிவாக விளக்கியிருக்கின்றது. யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட காரணத்தினால் அவசரகாலச் சட்டத்தை விரைவில் நீக்குவதற்கான காலவரையறை ஒன்றை வகுத்துச் செயற்படுவது அவசியம் என்பதே எமது கோரிக்கையாகும். இதுவே நடைமுறைச்சாத்தியமானது. நாம் அரசில் முக்கியமான அங்கத்தை வகித்துக்கொண்டிருக்கின்றபோதிலும் தமிழ் பேசும் மக்களின் நியாயமான உரிமைகள் தொடர்பாக எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி வருகின்றோம். அத்துடன் அந்த நிலைப்பாட்டில் நாம் உறுதிப்பாட்டுடனும் இருக்கின்றோம். அவசர காலச் சட்டத்தை நீக்குவதுடன், நீண்டகாலமாக அரசியல் காரணங் களுக்காகச் சிறைகளிலும் மற்றும் புனர்வாழ்வு முகாம்களிலும் இருக் கும் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும் என்றும் கேட்டிருக் கின்றோம். இதேவேளை புனர்வாழ்வு முகாம்களில் உள்ள விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் அனைவரும் இந்த ஆண்டு இறுதிக்குள் விடுவிக்கப்படுவர் என்று புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலை கள் மறுசீரமைப்பு அமைச்சு அறிவித்திருப்பதாகச் செய்திகள் வெளி யாகியுள்ளன. இதை நாம் வரவேற்கின்றோம். முடிந்தால் அவர்களின் விடுதலையை இன்னும் விரைவுபடுத்துவது நல்லது என்று நாங்கள் கருதுகின்றோம்.

இதேவேளை, இதுவரையில் 6,528 பேர் விடுவிக்கப்பட்டிருக்கின்றார் கள். இன்னும் 4,092 பேர் மட்டுமே விடுதலை செய்யப்படவுள்ளனர் என்பதையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். இவர்களில் மேலும் 500 பேர் அடுத்து வருகின்ற வெசாக் பண்டிகை காலத்தில் விடுவிக்கப் படவுள்ளதாகவும் நாங்கள் அறிகின்றோம். இதைவிட, தடுத்து வைக் கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளின் விபரங்களை அவர்களுடைய பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். அத் துடன் அவ்வாறானவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளும் முன் னெடுக்கப்பட வேண்டும். அரசாங்கம் இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தாலும் அதை விரைவுபடுத்த வேண்டுமென இவ்வுயரிய சபையிலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். இவ்வாறான விடுதலைகளும் வடக்கு, கிழக்கில் உருவாகி வருகின்ற இயல்பு நிலையும் தமிழ் மக்களின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றன. இந்த நம்பிக்கையை மேலும் வளர்த்தெடுப்பதற்கு அங்கே நிலவுகின்ற குறைபாடுகளை நீக்குவதற்கும் மற்றும் பிரச்சினைகளை தீர்ப்ப தற்கும் விசேட திட்டமொன்றை உருவாக்கிச் செயற்பட வேண்டும். நீண்டகாலமாகப் போர் நடைபெற்ற பிரதேசம் என்பதாலும் இதன் காரணமாகச் சிவில் நிர்வாக நடைமுறைகள் பலவீனமாகி இருந்த பகுதிகள் என்பதாலும் இந்தச் சிறப்பு நடவடிக்கை அங்கே அவசியமாக உள்ளது. முக்கியமாக சிவில் நடைமுறைகள் தொடர்பாக மக்களுக்கு ஏற்பட வேண்டிய அறிவும் ஒழுங்கும் வளர்த்தெடுக்கப்பட வேண்டியுள்ளது. அத்துடன் காணி விவகாரம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுதல், வளங்களைப் பேணுதல், சட்ட நடை முறைகளைப் பின்பற்றுதல் தொடர்பான நடைமுறைகளை உருவாக்க வேண்டியிருக்கின்றது.

இதைவிட, அங்கே போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களை நிவர்த்திக்க வேண்டிய அவசியமும் உள்ளது. ஆயிரக்கணக்கானவர்கள் போரின் காரணமாக உடல் உறுப்புக்களை இழந்திருக்கின்றனர். இவர்களில் சிறு குழந்தைகள் முதல் பெண்கள், மாணவர்கள், உழைப்பாளிகள், முதியோர்கள் என பல வகையினரும் அடங்குகின்றனர். ஆகவே, இவர்களைப் பராமரிப்பதற்கும் இவர்களுக்கான நிரந்தர உதவிக்கு மான ஒரு திட்டம் உருவாக்கப்பட வேண்டும். போர் நடைபெற்ற நாடுகள் அனைத்திலும் இவ்வாறான பிரச்சினைகளை அந்தந்த நாடு கள் எதிர்கொண்டுள்ளன. ஆகவே, நாமும் இதைப்புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

மேலும், வடக்கு, கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல அவசர உதவிப்பணிகளுக்கு புலம்பெயர்ந்திருக்கும் மக்களிடமிருந்து பங்களிப்புக்களைப் பெற வேண்டியுள்ளது. அதற்குரிய சூழலொன்று உருவாக்கப்பட வேண்டியது மிக அவசியமாகும். இங்குள்ள மக்கள் தங்கள் ஊர்களையும் உறவுகளையும் மேம்படுத்த விரும்புகிறார்கள். இதற்குப் புலம்பெயர்ந்த மக்கள் முதலீடுகளைச் செய்ய வாய்ப்பளிக்க வேண்டும். மேலும், காலாசார உறவுப் பரிவர்த்தனையை இலகுவாக மேற்கொள்வதற்கும் வாய்ப்புகளை உருவாக்கிக்கொடுக்க வேண்டும். போரின் காரணமாக சொத்துகளை இழந்துள்ள மக்களே வடக்கு கிழக்கில் அதிகமாக உள்ளனர். இவர்களில் பலருக்கு உழைப்போ, வேறு வருமானங்களோ இல்லை. ஆகையால் இந்தப் பிரதேசங்களில் தொழில்வாய்ப்புகளை உருவாக்கவேண்டியுள்ளது. பல்லாயிரக்கணக் கான படித்த இளைஞர்களும் யுவதிகளும் வேலைவாய்ப்புக்காகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்துக்கொண்டிருக்கின்றார்கள். போரை வெற்றி கொண்ட அரசாங்கம் போருக்குப் பின்னரான அமைதிக்காலத்தில் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென்ற நம்பிக்கையோடு இருக்கின்றார்கள். மக்களின் நம்பிக்கையை பாதுகாப்பது அவசியமானது. இன்று நாம் செய்யவேண்டிய மிக முக்கியமான கடமையாகவும் இதனையே நான் கருதுகின்றேன். போர்க்காலத்திற்கும் போருக்கு பின்னரான காலத்திற்கு மிடையில் வேறுபாடுகள் தெரியவேண்டும். இந்த வித்தியாசத்தை உணர வைப்பதில் முக்கியமான பங்களிப்பு செய்யவேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது. அதற்கான திட்டமிடலும் செயற்பாடும் அவசியமானதென்பது இங்கே கவனப்படுத்த வேண்டிய செய்தியாகும்.

கடந்த காலத்தில் நாம் அரசிடம் வலியுறுத்தி வந்த விடயங்கள் பலவும் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை நான் இந்த மன்றிலே தெரிவிக்க விரும்புகின்றேன். அதற்காக நாம் மேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் படைத் துறையைச் சார்ந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். முக்கியமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தம் செய்யவேண்டுமெனவும் புனர்வாழ்வு முகாம்களிலிருக்கும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களை விடுவிக்க வேண்டுமெனவும் நாம் அரசாங்கத்திடம் வலியுறுத்தியிருந்தோம். எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அரசாங்கம் அதைச் செயற்படுத்தி வருகின்றது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது தமிழ் மக்களிடத்தில் நல்லதொரு புரிந்துணர்வை ஏற்படுத்தியுள்ளது.

கௌரவ சபாநாயகர் அவர்களே,

அபிவிருத்தி நோக்கியும் அமைதியை நோக்கியும் முன்னேறிச்செல்லும் எமது நாட்டை நாம் மேலும் வளர்த்தெடுக்க வேண்டும். அவ்வாறு செய்யவேண்டுமானால் எமது வளர்ச்சிக்கும் அமைதிக்கும் தடையாக இருக்கின்ற காரணிகளை நாம் இனங்கண்டு அவற்றை நீக்கவேண்டும். இதில் முக்கியமானது இன முரண்பாடாகும். இன்று உலகில் பல்லின பன்மத, பல்சமூக இணக்க நிலைமைகள் வலுப்பெற்று வருகின்றன. விட்டுக்கொடுப்பதும் சேர்ந்திருப்பதும் மற்றவர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதும், எல்லோரையும் சமமாக மதித்தலும் உயரிய ஜனநாயக நடைமுறைகளாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. ஒடுக்குமுறைகளும், அடக்குமுறைகளும் வலுவிழந்து வருகின்றன. உலகத்தின் நிகழ்ச்சிப்போக்கு மாறிவிட்டது. அதிதீவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைப்பாட்டையுடைய எத்தகைய அரசியல் வழி முறையும் வெற்றி யடைய முடியாதென்பதை அண்மைக்காலச் சம்பவங்கள் பலவும் எமக்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றன. ஆகவே, நாம் நடைமுறைச் சாத்தியமானவற்றைப்பற்றி சிந்திப்போம். நீதியைப் பின்பற்றி அமைதியை உருவாக்குவதற்கு முயற்சிப்போம். அவசரகாலச் சட்டத்தை மட்டுமல்ல. இந்த நாட்டிலே மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு நெருக்கடியைத் தருகின்ற அனைத்து விவகாரங்களையும் நீக்குவோம். இதற்கு அனைவருடைய பங்களிப்பையும் எதிர்பார்க்கின்றது இந்த நாடு.

கௌரவ சபாநாயகர அவர்களே,

வவுனியா நகரசபை விவகாரம் தொடர்பாக நான் இந்தச் சபையின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். வவுனியா நகரசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் திரு சுரேந்திரன், நகரசபைச் செயலாளர் திரு. வசந்தகுமாரை அவமதித் தமைக்கு எதிராக நகர சபைப் பணியாளர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் இந்தப் பணிப்புறக்கணிப் பானது காலவரையறையின்றி நடைபெறுகின்றது. இந்தப் பணிப்புறக் கணிப்பினை முடிவுக்குக்கொண்டுவருவது பற்றியோ அல்லது இந்தப் பிரச்சினைக்கு காரணமாக இருக்கும் திரு. சுரேந்திரன் மீது நடவடிக்கை எடுப்பது பற்றியோ தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பீடம் அக்கறை காட்டவில்லையென வவுனியா நகரசபைப் பணியாளர்கள் மக்களுக்குத் தெரிவிக்கின்றனர். கடந்த 28.04.2011 அன்று வவுனியா வேப்பங்குளப்பகுதியில் UNDP இன் அனுசரணையுடன் இடம்பெற்ற பிளாஸ்டிக் கழிவுப்பொருள் மீள்சுழற்சிச் செயற்பாட்டின் ஆரம்ப நிகழ்வின்போது, பலர் முன்னிலையில் நகரசபைச் செயலாளரை திரு. சுரேந்திரன் அவமதித்திருக்கின்றார். அங்கு அவர் செயலாளரைத் தகாத வார்த்தைகளால் ஏசியும் மிரட்டியுள்ளார். திரு. சுரேந்திரன் இதற்கு முன்னரும் பல தடவைகள் செயலாளரை மிரட்டியிருக்கின் றார். அவமதித்திருக்கின்றார். அதுமட்டுமல்ல அவர் ஏனைய பணி யாளர்களுடனும் இவ்வாறே நடந்து வருகின்றார். இவருடைய அடாவடித்தனங்கள் தொடர்பாக பல பணியாளர்களும் செயலாளரும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன், குறிப்பாக கௌரவ மாவை சேனாதிராஜாவிடம் தெரிவித்திருக்கின்ற னர். ஆனால், இவ்விடயம் தொடர்பாக இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதேவேளை கடந்த ஒன்றரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளுக்கு மேலாக வவுனியா நகர சபையின் நிருவாகம் மிகவும் சீரழிந்த நிலையிலுள்ளது. மேலும் கடந்த இரண்டு மாதங்களாக இந்தச் சபைக்கான தலைவரும் நியமிக்கப்படவில்லை. இந்த நிலையில் நகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் உட்பட மக்களுக்கான அவசியப்பணிகள் அனைத்தும் நெருக்கடி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. இப்போது நகரசபைப் பணியாளர்களின் பணிப்புறக்கணிப்பினால் வவுனியா நகரம் சுகாதாரச் சீர்கேடுகளினாலும் பிற சேவைகளின் நெருக் கடிகளாலும் பாதிக்கப்பட்டுள்ளது. நகரசபையைக் கைப்பற்றுவதில் இருந்த நாட்டம், அதை ஒழுங்காக இயங்க வைப்பதில் இல்லாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். செயற்றிறனும் மக்கள் நலனில் அக்கறையும் இன்மையே இந்நிலைமைக்குக் காரணம் என்பதை நான் இச்சபையின் கவனத்துக்கு கொண்டுவந்து, சந்தர்ப்பமளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன்.

நன்றி வணக்கம்.

- *05 மே 2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபெரும் உயிர்த் தியாகங்களின் மூலமே இந்த அமைதி கிடைத்திருக்கின்றது

கௌரவ பிரதிச்சபாநாயகர் அவர்களே!

இலங்கைத்தீவின் அரசியலானது புதியதொரு பாதையில் பயணிக்க வேண்டிய காலப்பகுதியில் இந்தச் சபையிலே அவசரகாலச்சட்ட நீடிப்புத் தொடர்பாக என்னுடைய உரையை நிகழ்த்துகின்றேன். நாட்டை அச்சுறுத்திய காரணிகளுக்காக ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டத்தை நீக்குவது பற்றி இன்று நாங்கள் எல்லோரும் சிந்திக்கவேண்டிய ஒரு காலகட்டம் உருவாகியுள்ளது. போர்முடிவுக்கு கொண்டுவரப்பட்டதே இப்படி நாம் சிந்திக்கக்கூடிய ஒரு நிலையைத் தந்துள்ளது. இது மகிழ்ச்சிகரமான ஒரு விடயமாகும். இப்பொழுது போர் முடிவடைந்ததால் அமைதிச் சூழலொன்று உருவாக்கப்பட்டுள்ளது. முன்னரைவிடவும் சுதந்திரமாகச் சிந்திக்கக்கூடிய, சுதந்திரமாகச் செயற்படக்கூடிய ஒரு நிலை இன்று உருவாகியுள்ளது. தமிழரசுக் கட்சியினர்கூட யாருக்கும் பயமின்றி இப்பொழுது சுதந்திரமாகக் கருத்துத் தெருவித்து வருகின்றனர். ஆனால், 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் அவர்களால் அப்படிச் சிந்திக்கவும் செயற்படவும் முடியவில்லை. ஆகவே, இந்த அமைதிச் சூழலை, இந்த ஜனநாயகச் சூழலை மேலும் வளர்த்தெடுத்து அதை நிரந்தரமாக்குவதே இன்று எங்கள் முன்னேயுள்ள முக்கிய பணியாகும். இதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரையில் நடைபெற்ற போரில் எண்ணற்ற உயிர்கள் பலியாகியிருக்கின்றன. இந்த உயிர்களைப் பலிகொடுத்தே நாம் இன்று அமைதியைப் பெற்றிருக்கின்றோம். மாபெரும் உயிர்த் தியாகங்களின் மூலமே இந்த அமைதி எமக்குக் கிடைத்திருக்கின்றது. அதாவது மிகவும் துயரம் நிறைந்த ஒரு காலத்தை நாங்கள் அனைவரும் கடந்து வந்திருக்கின்றோம். இதை எவரும் மறந்து விடக்கூடாது. அதேவேளை எந்தக் காரணம் கொண்டும் இனிமேல் மீண்டுமோர் இருண்ட காலத்துக்குள் நாம் பயணிக்க முடியாது. அப்படியானதொரு காலத்தை உருவாக்கும் வகையில் எவரும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டால், அதை இந்த நாடு அனுமதித்தால், மக்கள் அத்தகைய அரசியல் போக்கை ஆதரித்தால், அதற்குரிய தண்டனையையும் நாங்கள் அனைவருமே அனுபவிக்க வேண்டியிருக்கும். எங்களைப் பொறுத்தவரை இந்த நாட்டின் அரசியலானது இனி முற்றிலும் புதிய பாதையில் பயணிக்க வேண்டும் என்றே விரும்புகின்றோம். அந்தப் பாதையானது மக்களுக்கு விமோசனத்தை தரக்கூடியதாக இருக்க வேண்டும். நாட்டின் அமைதியை நிரந்தரமாக்க வேண்டும். நிரந்தரமான ஐக்கியத்தையும் சமாதானத்தையும் தரவேண்டும். இதுவே எங்களுடைய விருப்பமாகும். இந்த விருப்பத்தையே மக்களும் கொண்டிருக்கின்றார்கள். மக்களுடைய விருப்பங்களையே நாங்கள் அரசியல் தெரிவாகக் கொண்டிருக்கின்றோம். இத்தகைய அடிப்படையைக்கொண்ட அரசியலையே இந்த நாட்டின் ஏனைய அரசியலாளர்களும் முன்னெடுக்க வேண்டும் என்று நான் கேட்கின்றேன். தயவுசெய்து மக்களுக்கு அப்பாலான அரசியலை யாரும் முன்னெடுக்காதீர்கள்!

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

வெவ்வேறு அரசியல் கொள்கையுடையவர்களை இந்த மன்று கொண்டிருந்தாலும் இந்த மன்றானது மக்களுக்காக, மக்களுடைய நலன்களுக்காக, மக்களுடைய எதிர்காலத்துக்காகவே இயங்கிவருகின்றது. அத்துடன் அது நாட்டின் பாதுகாப்புக்கும் சுபீட்சத்துக்குமாகவே இயங்குகின்றது என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆகவே, நாம் இந்த மன்றின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு, கசப்பான கடந்த காலத்தை உணர்ந்து கொண்டு எதிர்காலத்துக்காகச் சிந்திப்போம் எனக் கேட்டுக் கொள்கின்றேன். அப்பொழுதுதான் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதைப் பற்றிய சரியான தீர்மானத்துக்கு நாம் வரமுடியும். அதுமட்டுமல்ல அரசியல் தீர்வை எட்டுவதும் நிரந்தர அமைதியை அடைவதும் அப்பொழுதுதான் சாத்தியமாகும். எனவே இது குறித்து நாம் அனைவரும் தீர்க்கமாகச் சிந்திக்கவேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேட்டுக்கொண்டு இன்னும் சில விடயங்களை இந்த மன்றின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் மேதகு ஜனாதிபதி அவர்கள் வடக்கிலே கிளிநொச்சிப் பகுதிக்கு வந்திருந்தபோது வடக்கின் பொறியியற் பீடமும் விவசாயப் பீடமும் கிளிநொச்சியிலே அமையும் என்று அறிவித்திருந் தார். இந்தச் செய்தி வன்னிப் பிரதேச மக்களிடத்திலே அளவற்ற மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. நீண்ட காலமாக வடபகுதி மக்கள் மனதில் இருந்த பொறியியற் பீடம் பற்றிய ஏக்கங்களுக்கு இன்று வடிவம் பிறந்திருக்கின்றது. எமது அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பொறியியற் பீடத்தையும் விவசாயப் பீடத்தையும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்தத் தீர்மானத்தை ஜனாதிபதி அவர்கள் அறிவித்துள்ளார். இதை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம். நாட்டின் அபிவிருத்தியும் முன்னேற்றமும் வளப் பகிர்வும் சமநிலைப்படுத்தும் என்ற செய்தியை உறுதிப்படுத்துகின்றது இந்தத் தீர்மானம். இன்று வடபகுதியிலே பல முன்னேற்றகரமான விடயங்கள் செயற்படுகின்றன. வடக்கிலே எண்பது வீதமான பகுதிகளில் மீள்குடியேற்றம் நடைபெற்றுள்ளது. பலரும் நம்பவே மறுத்த வலிகாமம் வடக்குப் பகுதியில் இன்று மக்கள் மீள்குடியேறி இருப்பது முக்கியமானது. ஆனால், எஞ்சிய இருபது சதவீதமான பகுதிகளைச் சேர்ந்த மக்கள், எப்பொழுது தங்கள் ஊர்களுக்குச் செல்லப்போகின் றோம் என்ற ஏக்கத்தோடு இருக்கின்றார்கள். குறிப்பாக, முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவு மக்களின் மீள்குடியேற்றத்தை நான் இங்கு வலியுறுத்துகின்றேன். ஆகவே, அவர் களுடைய எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டிய பாரிய பொறுப்பில் நாம் இருக்கின்றோம். இதனைக் காலதாமதமின்றி மிக விரைவில் செயற்படுத்தவேண்டும். எதிர்காலத்தில் உயர்பாதுகாப்பு வலயங்கள் என விசேடமாக எந்தப் பகுதியும் இருக்கமாட்டாது என்று அரசாங்கம் கொள்கை அளவில் அறிவித்திருப்பதை நாம் அனைவரும் வரவேற்க வேண்டும். நாம் ஏனைய பிரதேசங்களிலும் மீள்குடியேற்ற நடவடிக் கைகளைப் பூரணப்படுத்தும்பொழுது, அப்பிரதேசங்களிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களும் இல்லாமல் போய்விடுவதோடு, மீள்குடி யேற்றம் பற்றி பிரச்சினையும் தீர்ந்துவிடும்.

அடுத்ததாக அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்லாறுப் பகுதியில் மீனவர்கள் தமது தொழிலை மீண்டும் ஆரம்பித்துள்ளனர். இதற்கான சூழலை உருவாக்குவதற்கு எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் உள்ளிட்ட அனைவருக்கும் அந்த மக்களின் சார்பாக இந்த மன்றில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவ்வாறே நாம் இரணைமடுக் குளத்தில் நன்னீர் மீன்பிடிப்பதற்கான சூழலையும் உருவாக்க முயற்சிக்கின்றோம். அந்த மீனவர்கள் தமது தொழிலை விரைவில் ஆரம்பிக்க வேண்டும். இப்பொழுது வடக்கின் பல பகுதிகளிலும் பல வகையான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குளங்கள் புனரமைக்கப்படுகின்றன. வீதிகள் செப்பனிடப்பட்டுகின்றன. பெரும்பாலான மக்கள் மீண்டும் தங்களுடைய சுயதொழில்களை ஆரம்பித்துள்ளனர். இப்பொழுது ஆரம்பமாகியுள்ள சிறுபோகத்தில், கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 12,600 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. அத்துடன் மீன்பிடித்தொழிலும் 90சதவீதம் நடை பெறுகின்றது. மின்சார விநியோகம் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. பாலங்கள் புதிதாக நிருமாணிக்கப்படுகின்றன. திணைக்களக் கட்டிடங்கள் மீளுருவாக்கம் செய்யப்படுகின்றன. பாடசாலைகளும் மருத்துவமனைகளும் திறம்பட நிர்மாணிக்கப்படுகின்றன. அங்கு சீரழிந்த உட்கட்டமைப்புக்களைச் சீர்ப்படுத்தும் நடவடிக்கைகள் துரிதகதியில் நடைபெறுகின்றன. இவ்வாறு உட்கட்டமைப்புகள் சீர்ப்படுத்தும் போது மக்களுக்கான நிருவாக இயந்திரம் தடையின்றி இயங்கத் தொடங்கிவிடும். அதன் பின்னர், இந்த இயந்திரத்தை இயக்குவதற்கான பொறிமுறை மற்றும் அதற்கான ஆளணி பற்றியுமே நாம் சிந்திக்க வேண்டும். உட்கட்டமைப்புக்களை மீளுருவாக்கம் செய்வதன்மூலம் மக்களின் இயங்குதளம் நிர்மாணிக்கப்பட்டுவிடும். அதன் பின்னர் மக்களுக்கான உதவிகளை வழங்குவதும் அவர்களை நிருவகிப்பதுமே எஞ்சிய பணிகளாக இருக்கும். அரசாங்கம் இந்த நோக்கிலேயே பயணிக்கின்றது. இச்சந்தர்ப்பத்திலே புனர்வாழ்வு நிலையங்களில் இருக்கும் முன்னாள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களின் விடுதலையைத் துரிதப்படுத்த முயற்சிக்கின்றோம். ஏற்கனவே, விடுதலையாகியுள்ள முன்னாள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுடைய தொழில் முயற்சிகளுக்கு அரசாங்கம் உதவ முன்வந்துள்ளது. இந்த நேரத்தில் இவர்களுக்கான உதவிகளை ஏனைய தமிழர் அமைப்புக்களும் புலம்பெயர் மக்களும் வழங்க முன்வர வேண்டும். மாறாக சாக்குப் போக்குக்களைச் சொல்லி எவரும் உதவா மல் இருக்கக் கூடாது. ஆனால், சில தமிழ் ஊடகங்களும் சில புலம்பெயர் தமிழர் அமைப்புகளும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளைச் செய்வதற்கு தடையாக இருக்கின்றன. இவை எப்போதும் மக்களுக்கு பொய்யான செய்திகளையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கி வருகின்றன என்பதை நாம் கவனிக்கவேண்டும். இந்த நாட்டில் மக்கள் அமைதியாக வாழ்வதையோ, அமைதி நீடிப்பதையோ, மக்களுடைய வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படுவதையோ இந்தத் தரப்பினர் விரும்பவில்லை. இந்த ஊடகங்கள் தமிழ் மக்களின் வாழ்க்கைக்கும் அவர்களுடைய அரசியல் எதிர்காலத்துக்கும் எப்பொழுதும் தடையாகவே இருக்கின்றன என்பதை நான் மிகவும் வன்மையாக இங்கே கூறிவைக்க விரும்புகின்றேன். மிகத் தவறான வழிகளில் மக்களை வழிநடத்தும் இந்த ஊடகங்கள் தொடர்பாக மக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும். ஏனென்றால், இன்னுமோர் இருண்ட யுகத்துக்குள் மக்களை தள்ளிவிடவே இவர்கள் விரும்புகின்றார்கள். பிரச்சினைகளை மேலும் அதிகரிப்பதே இவர்களுடைய ஊடக அரசியல் வியாபாரத்தின் அடித்தளமாகும். எனவே, இவர்களின் பொறிக்குள் சிக்கி, உங்களுடைய சொந்த உறவுகளுக்கு உதவுகின்ற மிகப்பெரிய பொறுப்பிலிருந்து நீங்கள் தப்பிவிடாதீர்கள். அத்தகைய தவறுகளுக்கு இடமளிக்காதீர்கள் என்று நான் புலம்பெயர் மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

தற்பொழுது, முன்னாள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுக்கு அரசாங்கமே அதிகளவான உதவிகளைச் செய்துவருகின்றது. அவர்கள் தொடர்பில் அரசாங்கம் அதிக கவனம் எடுக்கின்றது என்ற கருத்தை புலம் பெயர் தமிழர்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த உண்மையினை எதிர்காலத்தில் முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களே சொல்லுவார்கள். இயல்பு வாழ்வில் அனைவரையும் இணைப்பதன்மூலமே நிலையான சமாதானத்தையும் நீடித்த அமைதி யையும் எட்டமுடியும். இதற்கு அடுத்த கட்டமாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இதனை நோக்கிய செயற்பாட்டிலேயே நாம் எமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். முதலில் நல்லவற்றுக்கும், முன்னேற்றத்துக்கு வழியேற்படுத்தும் நடவடிக்கைகளுக்கும் ஆதரவளித்துப் பழகவேண்டும். அடுத்த கட்ட மாகவே பிரச்சினைகளைப் பற்றியும் தடையாக இருப்பவற்றைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். நாங்கள் மக்களின் துயரங்களைத் தீர்ப்பதற்கான செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றோம். எமது செயற்பாட்டை மக்கள் தெளிவாகவே புரிந்து வருகின்றார்கள். அத்தோடு நடைமுறைக்குச் சாத்தியமான ஒரு தீர்வை நோக்கி மக்களை யும் அரசாங்கத்தையும் தயார்ப்படுத்தி வருகின்றோம். இதுதான் இன்றைய அரசியற் செயற்பாடாக இருக்கமுடியுமென நான் ஆழமாக நம்புகின்றேன். இந்த நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் அபி விருத்தியையும் ஏற்படுத்துவதில் நாங்கள் முன்னிலைப் பங்காளிகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்க வேண்டுமென்பதே எங்களுடைய விருப்பமாகும். இதை இந்த மன்றிலே வெளிப்படுத்துவதில் பெருமிதமடைகின்றேன்.

இந்த மன்றிலே உள்ளவர்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டும். இயல்பு நிலையின் வளர்ச்சி என்பது தடையற்ற தொழில் முயற்சிகளுக்கு இடமளிப்பதாக இருக்கவேண்டும். அத்துடன் சுதந்திரமான செயற்பாடுகளுக்கும் சொந்த இடத்தில் வாழ்வதற்கும் இடமளிப்பதாக அமைய வேண்டும். ஏறக்குறைய இத்தகைய நிலைமை நோக்கிய வளர்ச்சி இலங்கை முழுவதிலும் ஏற்பட்டு வருகின்றது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் இன்னும் போதாக்குறை நிலைகள் காணப்படுகின்றதென்பதையும் இந்த மன்றிலே கவனப்படுத்துவது எனது கடமையாகும். மீள்குடியேற்றத்தின் பின்னரும் மக்களின் வாழ்க்கையில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டியுள்ளது. வீடமைப்புத் திட்டம் முழுமைப்படுத்தப்பட வேண்டியிருக்கின்றது. இவை இரண்டும் போர் நடைபெற்ற பிரதேசங்களில் இன்று மிக முக்கிய பணிகளாக உள்ளன. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும் அந்த மக்களுக்கும் உதவ விசேட செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது உலகப் பொதுவழமையாகும். அப்படியான ஒரு விசேட திட்டத்தின் மூலமே பாதிக்கப்பட்ட மக்களை மீள்நிலைப்படுத்திச் சமநிலைக்கு கொண்டுவர முடியும். இதேவேளை போர் நடந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு தொகுதி மக்கள் எல்லா வழிகளிலும் பாதிக்கப்பட்டு நிர்க்கதி நிலையில் வாழ்கின்றனர். இவர்களுக்கும் விசேட திட்டமொன்று உருவாக்கப்பட்டு அவர்களுடைய வாழ்க்கையையும் மேம்படுத்துவது அவசியமாகும்.

பற்றாக்குறைகள் இருந்தாலும் மக்கள் மிக வேகமாக தமது வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி வருகிறார்கள். இதற்கு மீள்குடியேறிய மக்களின் பகுதிகளில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் ஆதாரமானவை. இதைச் சமநிலையான பார்வையோடு அணுக வேண்டும். ஆனால், இந்த மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் பலர் மறைக்க முற்படுகின்றனர். மீள்குடியேற்றம் நடைபெறத் தொடங்கிய காலத்திலிருந்தே அந்த மக்களுடன் ஒருவனாக வாழ்கின்றவன் என்பதால் அந்த மக்களின் சிரமங்களை நான் நன்றாக அறிவேன். அவர்களுடைய உழைப்பையும் நம்பிக்கையையும் நான் மதிக்கின்றேன். அதனை அனைவரும் பாராட்ட வேண்டும். அத்துடன் அந்த மக்கள் அரசாங்கத்தின்மீது நம்பிக்கை வைத்தே தங்களுடைய வாழ்க்கையை மேற்கொண்டு வருகிறார்கள். தங்கள் வீடுகளில் இருந்தவாறே அவர்கள் அபிவிருத்தி செயற்பாடுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுக்கின்றார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் போதிய உதவிகளை செய்ய வேண்டும். அதன் மூலம் அந்த மக்களுக்கு மேலும் உற்சாகத்தை வழங்க முடியும். அபிவிருத்திக்காகவும் அமைதிக்காகவும் அரசியற் தீர்வுக்காகவும் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு உழைக்கும் போது நாட்டை அச்சுறுத்தும் காரணிகளும் நிச்சயமாக இல்லாமற் போய்விடும். அப்போது அவசரகாலச் சட்டத்துக்கு - இந்தச் சட்டத்தை நீடிப்பதற்கு - இடமேயிருக்காது. அதை விடுத்து, வெறும் வாய்ப்பேச்சினால் எந்தப் பயனும் கிட்டப்போவதில்லை. மக்களை தவறாக வழிநடத்துவதால் மீண்டும் இந்த நாட்டிலே அமைதி யின்மையைத்தான் உருவாக்க முடியும். தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களாவதற்காகவே சிலர் அரசியல் செய்கின்றார்கள். அவ்வா றன்றி, மக்களுடைய நலன்களுக்காகவும் அவர்களுடைய உறுதியான எதிர்காலத்துக்காகவுமே எவரும் தமது அரசியற் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென்பதை இங்கே வலியுறுத்திக் கூறிக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கின்றேன்.

நன்றி.

- *08 ஜூன் 2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு வேண்டும்

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே!

கௌரவ சம்பந்தன் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த ஒத்தி வைப்பு பிரேரணைமீது எனக்கும் சில வார்த்தைகள் கூறுவதற்கு சந்தர்ப்பமளித்ததற்காக உங்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன். இந்த நாட்டிலே யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருக்கின்றது. மிகப் பெரிய அவலத்திலிருந்த வடக்கு, மாகாண மக்கள் இன்று அமைதியையும் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். 30 வருட யுத்தத்தில் அவர்கள் இழந்துபோன சகலத்தையும் மீளக் கட்டியமைக்க முயற்சி மேற்கொண்டு வருகின்ற இவ்வேளையிலேயே, உண்மையில் அங்கு என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதை நானும் அந்த மக்களுடன் வாழ்பவன் என்ற ரீதியில் இந்தச் சபையிலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

யுத்தத்திற்கு பின்பு வன்னி மாவட்டத்திலே மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்கள். யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த சுமார் மூன்றரை இலட்சம் மக்கள் செட்டிக்குளம் நலன்புரி நிலையங்களிலே தங்கவைக்கப்பட்டபோது அந்த மக்களை அவர்களது வாழ்விடங்களில் குறிப்பிட்ட ஆண்டுக்குள் மீளக்குடியமர அரசு அனுமதிக்கப் போவதில்லையென்று உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் பாரியளவில் பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது. ஆனால், அந்த பொய்ப்பிரச்சாரங்களை முறியடித்து விரைவாக அந்த மக்கள் அவர்களது சொந்த இருப்பிடங்களுக்குச் சென்று மீளக்குடியமர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிக்கப்பட்டார்கள். மீளக்குடியேறிய மக்கள், கடந்த யுத்த காலங்களில் வாழ்ந்த சூழலிலிருந்து மாறுபட்ட ஒரு சூழலில் இயல்பு நிலைமை உருவாக்கப்பட்டுள்ள சூழலில், இன்று மிகவும் சந்தோசமாக வாழ்ந்து வருகின்றார்கள். யுத்த காலங்களில் வன்னி மாவட்ட மக்கள் எவ்வாறான நெருக்கடியான சூழலில் வாழ்ந்தார்கள். எப்படியான சட்ட முறைமைக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்பதை நான் இங்கு கூறவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் அக்காலகட்டங்களில் நடைமுறையிலிருந்த இரும்புச் சட்டங்கள் வன்னி மக்களுடைய கழுத்தை நெரித்துக்கொண்டு இருந்தன. ஆனால், இன்று அவர்கள் உண்மையான ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

மீளக்குடியேறிய மக்களுடைய பிரச்சினைகளைப் பொறுத்தமட்டில், அவை முழுமையாக தீர்த்து வைக்கப்பட்டிருப்பதாக நான் இங்கு சொல்ல வரவில்லை. குறைபாடுகள் இருக்கின்றன. அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் இன்று அரசு பாரிய திட்டங்கள் உட்பட பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. குறிப்பாக அவர்களுக்கான இருப்பிடம், வாழ்வாதாரம், உட்கட்டமைப்பு போன்றவற்றின் அபிவிருத்திக்குப் பாரிய அளவிலான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. எனினும் அவர்களுடைய இருப்பிட வசதியில் காணப்படும் பிரச்சினைகள் முழுமையாக தீர்த்து வைக்கப்படவில்லை என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அதனைத் தீர்ப்பதற்கான முன்னெடுப்புக்கள் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக இந்திய அரசாங்கம் 50,000 வீடுகளை அமைத்துத் தருவதாக இலங்கை அரசாங்கத்துக்கு உறுதியளித்துள்ளது. அதனை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட காலதாமதம், சில தாக்கங்களை ஏற்படுத்தி இருக்கின்றது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். இன்று இந்திய அரசானது அந்த வீடுகளை அமைப்பதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிகின்றது. அவர்கள் உறுதியளித்த 50,000 வீடுகளை அமைக்கும் திட்டமானது நடைமுறைப்படுத்தப்படும்போது எமது மக்களுடைய இருப்பிடப் பிரச்சினைகள் கணிசமான அளவு தீர்ந்துவிடும். எனினும் இன்று அவர்களுடைய கல்வி, சுகாதாரம், குடிநீர்ப்பிரச்சினை போன்ற பல விடயங்களில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. சிறிய மருத்துவமனைகள் உட்பட பெரிய தள வைத்தியசாலைகள் எல்லாம் பாரிய நிதியொதுக்கீட்டின்மூலம் மீள்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. அம் மக்கள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய காலத்தில் மாணவர்கள் தங்களது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்கு கட்டிட வசதிகள் இருக்கவில்லை. அவர்கள் மரநிழல்களிலும் தற்காலிக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டகைகளிலும்தான் படிக்க வேண்டிய நிலைமை இருந்தது. ஆனால், இன்று அந்த நிலைமை மாறி, கல்வி கற்பதற்காக நிரந்தரக் கட்டிடத்தொகுதிகள் அமைக்கப்பட்டு, அங்கு பாடசாலைகள் இயங்கக் கூடிய ஒரு சூழல் உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல, உட்கட்டமைப்பு வசதிகளான பொதுக்கட்டிடங்கள், அரச திணைக்களக் கட்டிடங்கள், வீதிகள், பாலங்கள் போன்றவற்றை அமைப்பதற்குப் பாரிய திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கின்றன, செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதன்பயனை அம்மக்கள் விரைவாக அனுபவிக்கக் கூடியதாக இருக்கும். ஆகவே, மீள்குடியேறிய பிரதேசங்களிலே அபிவிருத்திப் பணிகள் ஒன்றும் நடக்கவில்லை. அங்கு மக்கள் அவல வாழ்க்கை வாழ்கின்றார்கள் என்று பிரசாரங்களை மேற்கொள்வது உண்மையிலேயே ஏற்புடையதல்ல. இவ்வாறு கூறுவதானது, திட்டமிட்டு அம்மக்களை ஓர் அவல வாழ்க்கைக்குள் வைத்திருந்து, அதன் மூலம் ஆதாயம் தேடமுற்படும் சிலரது குறுகிய அரசியல் நோக்கங்களே தவிர வேறெதுவுமில்லை. கௌரவ அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அவர்கள் “வடக்கின் வசந்தம்” திட்டத்தினூடாக வடக்கிலே பல்வேறு பாரிய அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்திக் கொண்டிருக்கின்றார். அவர் அடிக்கடி எமது மாகாணத்துக்கு வந்து அபிவிருத்தி வேலைகளை மேற்பார்வை செய்வதுடன் மட்டும் நின்றுவிடாது, அவற்றை விரைவுபடுத்திச் செயற்படுத்துவதற்கு தனது பங்களிப்பைச் செய்திருக்கின்றார். அந்த வகையில் அவரது நடவடிக்கைகளை நான் இந்த அவையிலே பாராட்ட விரும்புகின்றேன்.

யுத்த காலத்தில் எமது மக்கள் மிகுந்த துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்த நிலைமை மாறி, இன்று யுத்தம் முடிவுக்கு கொண்டு வந்த பின்னர் எமது பிரதேசங்களில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதை மறைப்பதற்கும் அப்பிரதேசங்களில் அரசு எந்தவித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தித் தரவில்லை என்ற மாயையை உருவாக்கு வதற்கும் சில அரசியல்வாதிகளும் சில ஊடகங்களும் முன்னின்று செயற்படுகின்றன. நாங்கள் அப்பிரதேசத்திலுள்ள மக்களின் மத்தியிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அங்குள்ள மக்களுக்கு எவ்வித உதவியும் கிடைக்கவில்லை என்ற கருத்தை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

எமது மக்களுக்கு நியாயமான ஒரு அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும் என்னும் ஒருமித்த கருத்துடனேயே நாங்கள் இருக்கின்றோம். அதிலே எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. 30 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்துள்ள இந்த அரசு, எமது மக்களுக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வை வழங்கவேண்டும் என்பதே எமது அவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த பின்னர் உருவாக்கப்பட்டுள்ள ஜனநாயக சூழலை இந்த அரசு மட்டுமன்றி எதிரணியில் இருப்பவர்கள்கூட நன்கு அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். யுத்தத்துக்கு காரணமானவர்கள் யுத்தத்தினால் மக்களுக்கு அவலத்தை ஏற்படுத்தியவர்கள் அனைவருக்கும் இன்று உருவாக்கப்பட்டுள்ள அமைதிச் சூழலும் ஜனநாயகமும் மிகுந்த துணை நிற்கின்றது. அதனால்தான் இன்று அவர்கள் மீண்டும் மக்களை அவலத்துக்குத் தள்ளுமுகமாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய ஒவ்வொரு உரையும் பேச்சுக்களும் மக்கள் மத்தியில், குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த வேதனை அளிக்கக்கூடியதாக அமைந்திருக்கின்றது. அவர்கள் அம்மக்களை மீண்டும் ஓர் இருண்ட உலகத்துக்குள் தள்ளும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். உண்மையிலேயே இந்த நாட்டில் ஒரு அமைதிச் சூழலும் அதன்மூலம் ஒரு நியாயமான அரசியல் தீர்வும் ஏற்பட வேண்டுமாயின் அவர்கள் அதனை நோக்கி முன்னேற வேண்டும். மாறாக அவர்கள் மக்கள் அடைந்த அவலங்களை மட்டும் வெளிப்படுத்திக் கொண்டு அரசியல் நடத்துகின்ற நிலைமையில் இருந்துகொண்டிருப்பார்களானால் ஒரு நியாயமான அரசியல் தீர்வு காண்பதற்கான ஒரு சூழலை இந்த அரசினால் கொண்டுவர முடியாது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியாக இருந்தாலென்ன, ஜே.வி.பி. ஆக இருந்தாலென்ன, இந்த எதிரணியினர் தமிழ் மக்கள் மீது பாசமுள்ளவர்கள், அன்புள்ளவர்கள்போல் அடிக்கடி பேசுவார்கள். ஆனால், இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு முன்னெடுக்கப்படும்போது அவர்கள் எப்போதும் எதிர்நிலையிலிருந்து அந்தத் தீர்வைக் குழப்புவதற்குரிய முயற்சியைத்தான் செய்கின்றார்கள். ஆகவே, அவர்கள் அந்த வழிமுறையைக் கைவிட வேண்டும். அரசாக இருந்தால் என்ன, எதிரணிகளான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. போன்ற கட்சிகளாக இருந்தாலென்ன, இலங்கைத் தீவிலே எல்லா இனங்களும் சமாதானமாகவும் சுமூகமாகவும் வாழக்கூடிய ஒரு சூழலை உருவாக்குவதற்கான ஒரு நியாயமான தீர்வை எட்டுவதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் ஒருமித்த கருத்துடன் முன்வர வேண்டும். அதுதான் இந்தச் சபையினூடாக நான் அவர்களிடம் கேட்டுக்கொள்ளும் வேண்டுதல் என்று கூறி எனக்கு மேலதிக நேரத்தை வழங்கியமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன். வணக்கம்.

- *07 ஜூலை 2011*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகாலச் சட்ட நீடிப்பானது அடுத்த தலைமுறைக்கும் பரிமாறப்படக்கூடாது

**கௌ**ரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே!

இந்த நாட்டில் நீண்டகாலமாக நீடிக்கப்பட்டுக்கொண்டு வருகின்ற இந்த அவசரகாலச் சட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவது பற்றிப் பேசப்பட்டுக்கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நான் இங்கு உரை யாற்ற விளைகின்றேன். ஒரு பக்கத்தில் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதைப் பற்றி பேசப்படுகிறது. மறுபக்கத்தில் அவர்களே அவசர காலச் சட்டத்தை நீடிப்பதற்கான காரணங்களை உருவாக்கிக் கொண்டி ருக்கின்றார்கள். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் அவசர காலச் சட்டத்தை அடிப்படையில் எதிர்க்கின்றோம் என்பதை இந்த அவையிலே தொடர்ந்து வலியுறுத்திக் கூறிவருகின்றோம். அவசர காலச் சட்டத்தை நடைமுறை ரீதியாக நீக்குவதற்காகவே நாங்கள் பாடுபடுகின்றோம். நாட்டிலே நிரந்தர அமைதியும் முழுமையான இயல்புச்சூழலும் உருவாகும்போதும் இந்த மாதிரியான நெருக்கடிகள் தானாகவே தீர்ந்துவிடும். ஆனால், நாட்டிலே அமைதிநிலை உருவாவ தைச் சிலர் விரும்புவதில்லை. அவர்கள் எப்போதும் இன முரணை வளர்த்துப் பிரச்சினைகளை உருவாக்கி அதிலேயே பிழைப்பு நடத்த விரும்புகின்றனர். இப்படி அமைதிக்கு எதிராக செயற்பட்டுக்கொண்டு ஜனநாயகத்தைப்பற்றியும் தீர்வைப் பற்றியும் எப்படி சிந்திக்க முடியும்? இவர்கள் அமைதியைப் பற்றி பேசுவார்கள் ஆனால், மறுபக்கத்தில் அமைதியை சீரழிக்கும் விதமாக நடந்து கொள்வார்கள். ஜனநாயகத்தை பற்றிப் பேசுவார்கள். ஆனால், அந்த ஜனநாயகத்துக்கே விரோதமாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுவார்கள். ஊடக சுதந்திரத்தைப் பற்றிப் பேசுவார்கள். அப்படிப் பேசிக் கொண்டே ஊடகங்களை தவறாக வழிநடத்துவார்கள். இதுதான் இந்த நாட்டின் அவல நிலைமையாகும். இதுதான் இந்த நாட்டை மென்மேலும் நெருக் கடிக்குள்ளாக்கிக் கொண்டிருக்கின்றது. மக்களை ஏமாற்றி, நாட்டை சீரழிக்கும் மிக மோசமான அரசியலை முன்னெடுப்போர் இன்னும் திருந்தவேயில்லை. இவர்களை மக்கள் இன்னும் அடையாளங்காணாமல் இருப்பது வேதனைக்குரியது. ஆனால், மக்களை ஏமாற்றும் காரியங்கள் தொடர்ந்தும் இந்த நாட்டிலே நடைபெற்றுக்கொண்டிருப்பதை முற்போக்காகச் சிந்திப்போர் புரிந்து கொள்வர்.

பெரும்பாலான பத்திரிகைகள் மக்களை முட்டாள்களாக வைத்திருக்கவே விரும்புகின்றன. அரசியல்வாதிகளுக்கு நிகராகச் சில பத்திரிகையாளர்கள் நடந்து கொள்கின்றனர். ஊடகங்கள் மக்களுக்கு உண்மைகளை சொல்லவேண்டும். மக்களை ஏமாற்றக்கூடாது. மக்களை அழிவுப் பாதையில் தள்ளக்கூடாது. மக்களுக்கு துரோகமிழைக்கக்கூடாது. போருக்கு பின்னர் உருவாகவேண்டிய நிரந்தர தீர்வுக்காகவும் அமைதிக்காகவும் நியாயமான வழிவகைகளைப் பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களை அவை வெளிப்படுத்த வேண்டும். அத்தகைய பணிகளே இந்த நாட்டுக்கு இன்று அவசியமானதாக இருக்கின்றன. சில ஊடகங்கள் பல சவால்களின் மத்தியில் இந்தப் பணியை செய்துவருகின்றன. நாம் அவற்றைப் பாராட்டவேண்டும். அரசியல் என்பது ஆக்கத்தையும் தரும். தவறான தெரிவுகளை தெரிவுசெய்தல் அது அழிவையும் தரும் என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டும். ஊடகத்துறை என்பது மகத்தான பணிக்குரிய ஒரு மாண்புடைத்துறையாகும். ஆனால், அதைப்புரிந்து கொள்ளாத பலர் தங்கள் விருப்பங்களையே முதன்மைப் படுத்தி பத்திரிகைகளில் விடையங்களைப் பிரசுரிக்கின்றனர். அப்படிச் செய்வது ஊடகத் துறைக்குச் செய்யும் அநீதியாகும். உண்மை, நடுநிலை, சத்தியம், யதார்த்தம் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டே ஊடகங்கள் இயங்கவேண்டும். அவசரகாலச் சட்டத்தினால் ஊடக சுதந்திரமும் பாதிக்கப்பட்டுள்ளது. அதேவேளை இந்த அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான காரணங்களைப் பேணுவதில் ஊடகங்களும் பங்காற்றியிருக்கின்றன.

அண்மையில் யாழ்ப்பாணத்திலே குகநாதன் என்ற மூத்த பத்திரிகையாளர் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டுள்ளார். இந்தச்சம்பவத்தை நாம் கண்டிக்கின்றோம். இந்த தாக்குதலைச் செய்தவர்களை கண்டு பிடித்து சட்டத்தின்முன் நிறுத்தவேண்டும். இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியே குகநாதன் என்ற ஊடகவியலாளரையோ, ஒரு தனி மனித ரையோ மட்டும் தாக்கவில்லை. அவர்கள் இந்த நாட்டின் அமைதிக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றனர். இயல்பு வாழ்க்கையை எதிர்பார்க்கும் மக்களுடைய நம்பிக்கையின் மீது தாக்குதலை நடத்தியிருக்கின்றார் கள்: ஊடக சுதந்திரத்தின் மீது தாக்குதல் நடத்தியிருக்கின்றனர் இந்த நாட்டின் ஜனநாயகத்துக்குச் சவாலாக இருக்கின்றனர். அதாவது, இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும் அரசாங்கம் மேற்கொண்டு வருகின்ற நன்மையான காரியங்களுக்கெல்லாம் எதிராகச் செயற்படு கின்றார்கள். ஆகவேதான் அவர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டுமென்று கூறுகின்றேன். யாழ்ப்பாணத்தில் "உதயன்" பத்திரிகை தொடர்ச்சியாக இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகு வதையிட்டு நான் என்னுடைய கவலைகளை இங்கே பதிவு செய்கின் றேன். திரு. குகநாதன் அவர்கள் என்னுடன் மிகவும் நெருக்கமாக பழகியிருக்கின்றார். அவர் தான் பணியாற்றும் பத்திரிகை நிறுவனத் தின் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால், என்னுடன் நல்ல உறவைக் கொண்டிருந்தவர். அவர் பல சந்தர்ப்பங்களில் பல்வேறு விடயங் களைப்பற்றி எம்முடன் மனம்திறந்து பேசியிருக்கின்றார். அப்படியான ஒருவர் மீது நடத்தப்பட்ட மிக மோசமான தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். பெரும் சிரமங்களுக்கு மத்தியில் உருவாகிவருகின்ற இயல்பு வாழ்வையும் அமைதிச் சூழலையும் கெடுப்போரை நாம் அனுமதிக்கவே முடியாது. நாங்கள் அமைதிக்காக உழைக்கின்றோம்: ஜனநாயக சூழலொன்றை வலுப்படுத்துவதற்காக பாடுபடுகின்றோம்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் எம்மையும் எமது ஆதரவாளர் களையும் சீண்டும் விதமாக பலர் நடந்துகொண்டனர். குறிப்பாக, எமக்கு எதிராகப் போட்டியிட்ட தரப்பினர் மக்களை குழப்பும் விதமான பரப்புரைகளிலும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். மக்களை அச்சுறுத்தும் வகையிலான பல நடவடிக்கைகளைக்கூடச் செய்திருந் தனர். ஆனால், நாங்கள் இவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு ஜன நாயகத்தைப் பேணும் வழிகளில் உறுதியாக நின்றோம். தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் கூட, இவர்களுடைய மோசமான நட வடிக்கைகள் தொடர்ந்தன. பொய்ப் பிரசாரங்களும் கட்டுக்கதைகள் வதந்தி பரப்புதல்களுமாக அமைந்திருந்த அந்த நாட்களின் நடவடிக் கைகள் நிச்சயம் நல்லதோர் அரசியலுக்கான வழிமுறையை உருவாக்கப் போவதில்லை. அதிலும் இளைய தலைமுறையினரை பலியிடும் ஒரு தேர்தலாகவே இந்தத் தேர்தலை அந்தச் சக்திகள் பயன்படுத்தின என்பதை நான் இந்த மன்றிலே மிக வேதனையுடன் பதிவு செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த தவறான தேர்வுக்காக நாளைய சமூகம் வருந்த வேண்டிய நிலை உருவாகக்கூடிய அபாயமே தெரிகின்றது என்பதையும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

இந்த அவசரகாலச் சட்ட நீடிப்பானது அடுத்த தலைமுறைகளுக்கும் பரிமாற படக்கூடாதென்பதே எமது விருப்பமாகும். இதனை நான் இங்கே அழுத்தமாகக் குறிப்பிடுகின்றேன். அவசரகாலச் சட்டமானது, ஜனநாயக நடவடிக்கைகளை கட்டுப்படுத்தக்கூடியது என்பதால் நிச்சயம் நாம் இதனை நீக்கியே ஆக வேண்டும். எனவே, அதற்கான சூழலை நாம் உருவாக்க வேண்டும் என்பதே கவனிக்கவேண்டியது. அமைதியைப் பற்றிக் கதைப்பது முக்கியமானது அல்ல, அமைதிக்காக உழைக்கவேண்டும். தீர்வைப் பற்றிப்பேசிக் கொண்டிருப்பது முக்கிய மானதல்ல, தீர்வொன்றைப் பெறுவதற்காக நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் பாடுபடவேண்டும். அதேபோல், அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கான சூழலையும் நாம் அனைவரும் இணைந்து உருவாக்க வேண்டும்.

இப்பொழுது, யாழ். தேர்தல் மாவட்டத்துக்கான பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கான அறிவிப்பு வந்துள்ளது. இந்த விடயத்தை நாம் அரசுக்கு உரியமுறையில் விளங்கவைக்கு முயற்சிக்கின்றோம். வடக் கிலே இன்னும் முழுமையான வளர்ச்சிப்போக்கு - அபிவிருத்தி - எட்டப் படவில்லை. நாட்டின் ஏனைய பகுதிகளைப்போல இந்தப் பகுதிகளின் நிலைமைகளும் வளர்ச்சி அடையும் போது இந்த விடயத்தைப் பற்றி தீர்மானிக்கலாம் என்று நம் அரசாங்கத்துக்கு எடுத்துரைத்துள்ளோம். இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் குறிப்பிட்ட காலத்துக்கு விட்டுக் கொடுப்புக்களை செய்யவேண்டும். ஒரு முழுமையான இயல்புநிலை உருவாகும்வரை இவ்வாறான பிரச்சினைகளில் நாம் அனைவரும் ஒன்றுபட்டே செயற்பட வேண்டுமென்று கௌரவ அமைச்சர் டக்ளஸ் வோனந்தா அவர்கள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உட்பட அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுத்துள்ளார். இந்த நாட்டுக்கு தற்போது தேவைப்படுவதெல்லாம் ஒருங்கிணைந்த செயற்பாடுகளே! ஒருங்கி ணைந்த செயற்பாடுகளின் மூலமே மக்களுக்கு நன்மைகளைச் செய்ய முடியும். அவற்றின் மூலமே மீண்டும் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். எனினும், முரண்பாடுகளும் பிரிவுகளும் பிரச்சினைகளும் இருக்குமானால், அது மீண்டும் அழிவுக்கும் நெருக்கடிக்குமே வழியேற் படுத்தும். ஆகவேதான் நாங்கள் ஒற்றுமையைப் பற்றிப் பேசுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைக்குச் சாத்தியமான மாற்றங்களைப் பற்றிக் கதைக்கின்றோம். இன்று நாங்கள் மாற்று அரசியல் தேர்வுக்குச் செல்லவேண்டும். இந்த நாட்டு மக்கள் மத்தியில் அமைதியைப் பற்றி சிந்திக்கும் மனப்பாங்கை உருவாக்க வேண்டும். இதுவே இன்று அவசியமென நம்புகின்றேன். உலகப் போக்குகளை விளங்கிக்கொண்டு, இலங்கைத் தீவுக்குப் பொருத்தமான ஒரு யதார்த்த அரசியல் தீர்வுக்காக நாம் அனைவரும் கருத்தொற்றுமையுடன் செயற்படுவது அத்தியவசியமாகும். இதனையே கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் அழுத்தமாக சொல்லியிருக்கிறார். தேர்தல்காலக்கூட்டுக்களை அமைப்பதில் மட்டும் கரிசனை கொள்ளாமல், அரசியல் தீர்வைக்காண்பதற்கான கூட்டுக் களை அமைப்பது பற்றியும் சிந்திக்கவேண்டும் என்றும் அவர் கூறியிருப் பது கவனிக்கத்தக்கது. மக்களுக்காக கட்சிகளின் இணைவுகள் இருக்க வேண்டும். கட்சிகள் எடுக்கின்ற அரசியல் தீர்மானங்கள் எல்லாம் மக்களுக்கு நன்மை தருவதாக அமையவேண்டும். ஆனால், சில கட்சிகள் எடுக்கின்ற தீர்மானங்கள் அக்கட்சியினருக்கு நன்மைகளைச் கொடுத் துள்ளனவே தவிர, மக்களுக்கு எந்தவிதமான நன்மைகளையும் கொடுத்த தாக இல்லை. ஆகையால்தான் மக்கள் நம்பிக்கையோடு வாக்களித்த பிறகும் கூட, பாதிக்கப்பட்ட நிலையிலேயே வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு நின்றே தங்கள் ஆதரவைத் தமிழ்க் கட்சிகளுக்கு வழங்கியிருக்கின்றார்கள். ஆனால், மக்களின் பெரும் ஆதரவைப் பெற்றுக்கொண்ட இந்தக் கட்சிகள் மக்களுக்குத் தேவையானவற்றை பெற்றுக்கொடுத்தனவா? அல்லது அவர்களது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதில் எவ்வளவு தூரம் அர்ப்பணிப்போடும் விவேகத்தோடும் சகிப்புத் தன்மையுடனும் நடந்து கொண்டன என்பதையே நாம் இன்று சிந்திக்க வேண்டும். தொடர்ந்தும் பழைய வாய்ப்பாடுகளோடு யாரும் பாடிக்கொண்டிருக்க முடியாது. உலகம் மிக வேகமாக வளர்ச்சியடைந்து செல்கின்றது. உலகத்தின் போக்குகளும் நிலைமைகளும் மாற்றத்துக்கு உள்ளாகி வருகின்றன. இதைப் புரிந்துகொண்டதால் பின்தங்கிய நிலையில் இருந்த சமூகங்கள் எல்லாம் மிகவும் விரைவான முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் எட்டியுள்ளன. ஆனால், இலங்கையின் நிலைமைகள் இன்னும் நெருக்கடிக்குள்ளேயே இருக்கின்றன. இது எதனைக் காட்டு கின்றது? இதனை இலங்கை மக்கள் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

மக்களுடைய மன உணர்வுகளைப் புரிந்துகொண்டு அவர்களுடைய எதிர்காலத்தை கருத்திற்கொண்டு, பொறுப்போடு அரசியல் செயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டை முன்னெடுக்க வேண்டிய மிக முக்கியமான காலகட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். ஆனால், இதற்கு சில அரசியல் சக்திகள் இணங்கி வருவதில்லை. இவர்களுக்கு மக்களுடைய தேவைகளும் மன விருப்பங்களும் என்னவென்று தெரிவதில்லை. இவர்களைப் பொறுத்தவரையில் சிந்திக்கும் திறனற்ற ஒரு மக்கள் திரளை அரசியல் இலாபங்களுக்காக உருவாக்குவதே அவர்களுடைய நோக்கமாக இருக்கின்றது. இதுதான் கடந்த காலங்களில் நடந்தது. மக்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டால் அவர்களுக்கு உண்மைநிலை என்னவென்று தெரிந்துவிடும். யதார்த்தங்கள் புரிந்துவிடும் என்று இவர்கள் பயப்படுகின்றார்கள். ஆகவே, மக்களை ஒரு வகையான பொய் மயக்கத்தில், போதையில் வைத்திருக்க இவர்கள் முயற்சிக்கின்றார்கள். மக்களுக்கு எல்லாமே தெரிந்துவிட்டால் தங்களுடைய இரட்டை வேடங்களையும் பொய்களையும், ஏமாற்றுக்களையும் மக்கள் கண்டுகொண்டால், தங்களுடைய அரசியல் இருப்பே ஆட்டம் கண்டுவிடும் என்று இவர்கள் அச்சமடைகின்றார்கள். எனவேதான் மக்களை இருட்டில் வைத்திருக்க இவர்கள் விரும்புகிறார்கள். இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது அறிவின் யுகம். அறிவே இன்று எல்லாத் தளங்களிலும் ஆட்சி செலுத்துகின்றது. மக்கள் சுதந்திரமாகச் சிந்திக்க வேண்டும். அரசியல் தரப்புக்கள் தொடக்கம் ஊடகங்கள் வரையில் இந்த அறிவை விளங்கிச் செயற்படும் ஒரு மக்கள் திரளை உருவாக்குவதற்காக உழைக்க வேண்டும். உண்மைகளை மக்கள் அறிந்துகொள்வதற்கான வழியை ஏற்படுத்த வேண்டும். ஆனால், அப்படி இலங்கையில் நடக்கின்றதா?

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே,

கடந்த காலத்தில் மிக மோசமான ஒரு போரை இந்த நாடு சந்தித்திருக்கின்றது. இந்த நாடே தாங்கிக்கொள்ள முடியாதளவு அழிவுகளும், அவலங்களும் இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கின்றது. நடந்த போரினால், இலங்கைத்தீவின் அனைத்து சமூகங்களும் பாதிப்புக்களை சந்தித்திருக்கின்றன. அதிலும் வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் மிகக் கொடுமையான அழிவுகளையும் இழப்புக்களையும் சந்தித்திருக்கின்றனர். அந்தப் போரின் காயங்களில் இருந்தும் அவலங்களிலிருந்தும் இன்னும் மீளமுடியாத நிலையில் இந்த மக்கள் வாழ்கின்றனர். அவர்களை அந்த அவல வாழ்விலிருந்து மீட்டு, மீண்டும் இயல்பு வாழ்க்கைக்கு கொண்டுவரவேண்டிய அவசி யப் பணி அனைவருக்கும் உரியதாக இருக்கின்றது. ஆனால், இன்று சிலர் அந்தப் பணிகளை செய்வதை விடுத்து, அரசாங்கத்தை குற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்டும் வகையிலும் மக்களுடைய கவனத்தை திசைதிருப்பும் வகையி லும் செயற்படுகின்றார்கள். எல்லாவற்றையும் எதிர்ப்பதன் மூலமாக காலத்தைக் கடத்துவோர், மீண்டும் இலங்கைத் தீவில் அழிவுகளையே ஏற்படுத்த முனைகின்றார்கள்.

இன்று அரசாங்கம் அரசியல் தீர்வுக்கான ஆயத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. அதேவேளை பாதிக்கப்பட்ட பிரதேசங்களை முதன்மைப்படுத்தி அபிவிருத்திப் பணிகளை செய்து வருகின்றது. மக்களுக்கு அங்கே நிறையப்பிரச்சினைகள் இருக்கின்றன. அதாவது இந்த நாட்டிலே உள்ள ஏனைய மக்களை விடவும் வடக்கு, கிழக்குப் பகுதி மக்களின் பிரச்சினைகள் அதிகமானவையாகவே இருக்கின்றன. அதிலும் போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரச்சினைகள் இன்னும் வித்தியாசமானவையாகும். ஆகவே, அங்குள்ள மக்களின் நலன்களையும் முன்னேற்றத்துக்குமான மறுவாழ்வுப் பணிகளையும் அரசுடன் இணைந்து நாங்கள் செய்து வருகின்றோம்.

ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட செயற்றிட்டம் அங்கே நடைமுறைப்படுத்தப் படுகின்றது. இதை மறுத்துக்கொண்டும் மறைக்கும் விதமாகவும் "பாதிக்கப்பட்ட பகுதிகளில் எதுவுமே நடக்கவில்லை" என்று கூறுவது எவ்வளவு மோசமான செயலாகும்! அங்கே சில நாடாளுமன்ற உறுப் பினர்கள் மக்களுடைய தேவைகளை நிறைவேற்றும் முக்கிய பணியை, மக்களுடைய அவல நிலைகளை கொச்சைப்படுத்தி பேசியிருக்கின்றனர். மக்களுக்கும் இவர்களுக்கும் இடையில் எவ்வளவு தூரம் இடைவெளி இருக்கின்றதென்பதை இவர்களுடைய இந்த மனநிலை தெளிவாகக் காட்டுகின்றது. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக் கைகளில் குறைபாடுகள் இருக்கலாம். குறைபாடுகளை தெரிவிக்கக் கூடிய ஒரு சூழல் அங்கே உருவாக்கப்பட்டுள்ளது. அந்தக் குறைபாடுகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்படுகின்றன. மக்கள் துணிச்சலுடன் தங்களின் பிரச்சினைகளைப் பேசுகின்றார்கள். மக்கள் தெரிவிக்கும் அபிப்பிராயங்களின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் உடனடி யாகவே எடுக்கப்படுகின்றன. இது பல மாற்றங்களை அடையாளப் படுத்துகின்றது. இந்த மாற்றங்கள் எல்லாம் வெகுவிரைவில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தும். குறிப்பாக வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகக் கட்டமைப்பு பலமாகி வருகின்றது. இதையே நாம் எதிர்பார்க் கின்றோம். இதையே நாங்கள் விரும்புகின்றோம். மக்களின் முன்னேற் றமும் மகிழ்ச்சியும் அவர்களுடைய சிறப்பான எதிர்காலமுமே இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டை வளர்ச்சியடைய வைக்கும். இந்த நிலையில் மனச்சாட்சியும் மனிதநேயமும் உள்ள எவரும் இந்தத் துயரப்படுத்தும் மக்களுக்கு எதிராகச் சிந்திக்கமாட்டார்கள் எனவே நான் நம்புகின்றேன். நான் யாரையும் குற்றஞ்சாட்ட முற்படவில்லை. நிலைமைகளைச் சீராக்க வேண்டும். மக்களுக்கு நன்மைகள் கிட்டவேண்டுமென்ற எண்ணத்தி லேயே அந்த அபிப்பிராயத்தை தெரிவித்தேன். உண்மையில் நாட்டில் ஏற்பட்டுவரும் அமைதிச் சூழலை பல சக்திகள் விரும்பவில்லை. இதை அண்மைக்கால நிலவரங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. மீண்டும் இனவாதத்தைக் கூர்மையாக்கும் அபாயச் சூழலொன்றினை ஏற்படுத்த இந்தச் சக்திகள் முயற்சிக்கின்றன. இதற்குச் சில ஊடகங்க ளும் துணைநிற்பது மிகவும் கவலைக்குரியதாகும். நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது இந்த அபாயப்போக்கின் வளர்ச் சியை எம்மால் தெளிவாகப் பார்க்க முடிந்தது. இந்தப் போக்கு வளர்ச்சி யடைவதற்கு யாரும் இடமளிக்கக்கூடாது. குறிப்பாக மக்கள் இந்த விடயத்தில் அவதானமாக இருக்கவேண்டும். ஏனெனில் எப்போதும் மக்களே அதிகமாக பாதிப்பைச் சந்திப்போராக இருப்பதால், அவர்கள் மிகவும் விழிப்பாக செயற்பட வேண்டுமென்று இவ் அவையின் மூலம் கேட்டுக்கொள்கின்றேன். நாட்டில் அமைதியையும் சுபீட்சத்தையும் ஏற் படுத்தவேண்டிய அவசியத்தை விரும்புகின்ற தரப்பைச் சேர்ந்தவன் என்ற வகையில், அவசரகாலச் சட்டமானது விரைவில் நீக்கப்படுவதற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

எனது உரையை நிறைவு செய்வதற்கு முன்பு ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அவர்கள் தனது உரையில், இறுதிக்கட்ட வன்னி யுத்தத்தின் போது 90,000 பேர்தான் அங்கிருந்தனரென்று கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததாக ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார்.

அது பொய்யான தகவல்! அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் அப்படியான ஒரு கருத்தை முன்வைக்கவில்லை. இறுதிக்கட்ட யுத்தத்தின்போது, வன்னியிலே மூன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இருக்கின் றார்கள் என்றுதான் நாங்கள் அரசுக்கும் பத்திரிகைகளூடாகவும் வெளிப் படையாகத் தெரிவித்திருந்தோம். உண்மையில் வன்னி மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட உயிரிழப்புக்களுக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் காரணமாக இருந்ததென்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். இறுதிக் கட்ட யுத்தம் கிளிநொச்சி வரை நீடித்த வேளையில், தமிழீழ விடுதலைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளை நோக்கி மீண்டும் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அரசும் சர்வ தேச சமூகத்தினரும் அழைத்தபோது, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் யாரும் எந்தக் கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. அன்று நாட்டை விட்டே ஓடிய இவர்களுக்கு இன்று மக்களின் அவலம் பற்றிப் பேசுவதற்கும் எந்த அருகதையும் இல்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். மக்களின் உயிரிழப்புக்களை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அநியாய மாக கொல்லப்பட்ட மக்களுக்காக நாங்கள் வேதனைப்படுகின்றோம். ஆனால், அந்த உயிரிழப்புக்களுக்குக் காரணம் தமிழ்த் தேசியக்கூட்ட மைப்பினராகிய நீங்களும்தான் என்பதைத் தெரிவித்து, விடை பெறு கின்றேன்.

நன்றி.

- *09 ஓகஸ்ட் 2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைகள் பொறுப்புடன் செய்திகளைப் பிரசுரிக்க வேண்டும்

கௌரவ பிரதிச்சபாநாயகர் அவர்களே!

இந்த நாட்டில் கடந்த மூன்று தசாப்த காலமாக அமுலில் இருந்து வந்த அவசர காலச்சட்டத்தை நீக்கிய மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு நன்றி கூறும் இவ் ஒத்தி வைப்பு பிரேரணை மீதான விவாதத்திலே கலந்து கொண்டு பேசுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் வழங்கியமைக்காக முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இச்சட்டமானது, எல்லா இன மக்களையும் அவதிக்குள்ளாக்கும் ஒரு சட்டமாக இருந்து வந்தது. இதன் காரணமாக இச்சட்டத்தை நீக்கவேண்டும் என்று பல்வேறு தரப்பினராலும் தமிழ் - சிங்கள, முஸ்லீம் மக்கள் உட்பட உள்நாட்டு மனித உரிமை அமைப்புக்கள், சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் என்பனவற்றினால் - நீண்ட காலமாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வந்தது. இன்று எமது நாட்டில் மேதகு ஜனாதிபதி அவர்களினால் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, அமைதியும் சமாதானமும், ஜனநாயகமும் ஏற்பட்டிருக்கின்ற நிலையில், தொடர்ந்தும் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டுமா? என்ற சிலரது கேள்விக்குப் பதிலளிக்கும் வகையில், மேதகு ஜனாதிபதி அவர்களினால் இச்சட்ட நீடிப்பு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அதற்காக நான் எமது தமிழ் மக்கள் சார்பாக மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு இந்த அவையிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மாதமும் இந்தச் சபையிலே அவசரகாலச் சட்டத்தை நீடிப் பதற்காக இடம்பெறுகின்ற விவாதத்தைப் பயன்படுத்தி தமிழ்தேசியக் கூட்டமைப்பினர் அரசுக்கு எதிராகவும் இனங்களுக்கிடையே முரண்பாடு களை தோற்றுவிக்கும் முகமாகவும் இனங்களுக்கிடையே உருவாகிவரும் ஐக்கியத்தை சீர்குலைக்கும் விதமாகவும் கருத்துக்களை தெரிவித்து வந்தார்கள். வீராவேசப் பேச்சுக்களை பேசி வந்தார்கள், சவால்களை விடுத்தார்கள். ஆனால் இன்று அவர்களுக்கு அதிர்ச்சி என்னவென் றால், மாதாந்தம் இந்த அவையில் அவசரகாலச் சட்ட விவாதத்தைப் பயன்படுத்தி அரசுக்கு எச்சரிக்கை விடுக்கும் விதமான பேச்சுக்களை பேசக்கூடிய சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது என்பதுதான். இவர் கள் இச் சபையில் விடுக்கின்ற சவால்களையும் எச்சரிக்கைகளையும் அவர் களாகவே தங்களுடைய பத்திரிகைகளில் பிரசுரித்து, தமிழ் மக்களை ஏமாற்றி வந்தார்கள். இவ்வாறான அவர்களுடைய எதிர்பார்ப்புக்கு இந்த அவசர காலச்சட்ட நீக்கமானது மிகப் பெரிய அடியாக இருக்கின்றது.

இன்று இச்சபையில் கௌரவ உறுப்பினர் சரவணபவன் அவர்கள் கடந்த காலங்களில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் நடைபெற்ற நிகழ்வுகளைப் பத்திரிகைச் செய்திகள் போன்று இங்கு வாசிக்க முற்பட்டார். இந்த அவசர காலச்சட்டமானது, அனைத்து இன மக்களையும் பாதித்தி ருக்கின்றது என்பதை நான் மறுக்கவில்லை. அதிலும் குறிப்பாக தமிழ் மக்களை மிகவும் அவதிக்குள்ளாகியது என்பதை நான் இங்கு ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். ஆனால், இன்று நிலைமைகள் மாறியிருக்கின்றன. யுத்தத்துக்கு பின்னர், இந்த நாட்டில் தமிழ் மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். பல்வேறு கஸ்டங்களுக்கு மத்தியில் அவர்கள் பெற்றுக்கொண்ட இயல்பு வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்காக அரசியல்வாதிகளான நாங்கள் ஒவ்வொருவரும் பொறுப்புடன் கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டும். இன்று இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள இத்தகைய சூழ்நிலையைக் குழப்பும் விதமாக, மீண்டும் இந்த நாட்டில் அவசரகாலச் சட்டத்தையும் அதைப்போன்ற பயங்கரமான சட்டங்களையும் கொண்டு வரும் விதத்தில் எமது கருத்துக்களைத் தெரிவிப்பதோ அல்லது செயற்படுவதோ நியாய மானதல்ல. குறிப்பாக அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் காலங்களில் இவர்கள் மக்களுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியதாக எமது தழிழ் இளைஞர்களின் எதிர்காலத்தை கேள்வியாக்கும் விதத்தில், எமது மக்களின் எதிர்காலத்தை ஓர் இருண்ட உலகுக்குள் கொண்டுவரும் விதத்தில் வெறும் இனவாதக் கருத்துக்களைக் கொண்ட பேச்சுக்களினூ டாக அவர்களிடமிருந்து வாக்குக்களை அபகரிக்க முயன்றது உலகுக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியும். இன்று இனங்களுக்கிடையே உருவாகியுள்ள நல்லிணக்கமும், புரிந்துணர்வும் வளர்த்துச் செல்லப்படுகின்ற இந்த நல்ல சூழலுடன் இணைந்து அதனை வளர்க்க முன்வர வேண்டும் என நான் தமிழ் மக்களின் சார்பாக இந்தச் சபையிலே இவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். ஏனெனில், யுத்தத்தின் பின்னர் மிகவும் துன்பத்திலிருந்த எமது மக்கள் இன்று மீள்குடியேறி ஓர் இயல்பு வாழ்க்கையை நோக்கி நம்பிக்கையுடன் சந்தோசமாக முன்னேறிக்கொண்டிருக்கின்றார்கள். கடந்த காலங்களைப் போன்று உணர்ச்சிப் பேச்சுக்களாலும் வீர முழக் கங்களாலும் அவர்களைத் தவறான அரசியல் வழிக்கு இழுத்துச் சென்று மீண்டும் நடுக்காட்டுக்குள் விட வேண்டாம் என இச்சபையிலே கேட்டுக்கொள்கின்றேன்.

அது மட்டுமல்ல, கௌரவ உறுப்பினர் அவர்களே, உங்களைப்போன்ற அரசியல்வாதிகள் மட்டுமல்ல, நீங்கள் நடத்துகின்ற பத்திரிகை நிறு வனங்களும் மக்களிடையே தேவையற்ற இனவாதக் கருத்துக்களை விதைக்கும் விதத்தில் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளி யிட்டு தினமும் மக்களை குழப்பிக்கொண்டிருக்கின்றீர்கள். நடக்காத விடயங்களை நடந்ததாகத் தெரிவிக்கின்றீர்கள். எனவே, மக்களை இது போன்ற தவறான வழியிலேயே வழிநடத்த முற்படாதீர்கள்.

அடுத்து, இன்று யாழ்ப்பாணத்திலே உருவாகியுள்ள மர்மமனிதன் அல்லது “கிறீஸ்” மனிதன் தொடர்பிலே நான் எனது கருத்துக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். உண்மையிலேயே மலையகப் பகுதியிலேயே ஆரம்பித்த அந்த பதற்ற நிலைமை பின்னர் கிழக்கு மாகாணத்துக்குப் பரவி, இன்று யாழ்ப்பாணத்திலும் மக்களுக்கு அசௌ கரியங்களை ஏற்படுத்தும் விதத்திலான சம்பவங்கள் நடந்ததென்பதை நான் மறுக்கவில்லை. அச்சம்பவங்கள் நடந்தது உண்மைதான். சிலர் அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் முகமாகவும் அரசு உருவாக்கிய இயல்புச் சூழலைக் குழப்பும் விதமாகவும் அவ்வாறு நடந்து கொண்டது உண்மை. அந்த நிலைக்கு காரணமானவர்கள் நிச்சயமாகக் கண்டறி யப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் உங்களைப்போல எங் களுக்கும் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. ஆனால், அந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி நீங்கள் நடத்திய அரசியல் நாடகம்தான் மிகவும் கவலைக்குரியது. நீங்கள் நடைபெறாத விடயங்களை நடந்த தாகக் காட்டி ஊதிப்பெருப்பித்து உங்களுடைய பத்திரிகையில் பிர சுரித்து மக்களிடையே பயப்பிராந்தியை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். நீங் கள், நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மக்களுக்கு அசௌகரியத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தித் துன்புறுத்துபவர்களை கண்டுபிடித்து ...........ன்முன் நிறுத்துவதற்கு முன்வந்திருந்தால் இந்தச் சூழலை விரைவில் கட்டுப் படுத்தியிருக்கலாம். ஆனால், நீங்கள் அதனைச் செய்யவில்லை.

யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று வார காலமாக வெளிவந்த, நீங்கள் உரிமையாளராகவுள்ள ஒரு பத்திரிகையையும் தினக்குரல் பத்திரிகையை யும் எடுத்துப் பாருங்கள்! உங்களுடைய பத்திரிகை யாழ்ப்பாணத்தில் மர்ம மனிதன் அல்லது "கிறீஸ்" மனிதன் எனும் விடயத்தை நேரில் கண்டது போல் சித்தரித்தது. கற்பனைக்கதைகளைப் பரப்பி மக்களி டையே ஓர் அசாதாரண சூழலை உருவாக்குவதற்குக் காரணமாயிருக் கின்றது என்பதைப் பொதுவாக மனச்சாட்சியுள்ள எந்த மனிதனும் ஏற்றுக்கொண்டுதானாக வேண்டும். அங்கு அசாதாரண ஒரு சூழ்நிலை ஏற்பட்டதுதான். நான் இதை இல்லையென்று சொல்லவில்லை. அதன் பின்னணியில் சிலர் இருக்கின்றார்கள். அவர்கள் யார் என்று கண்ட றிந்து அவர்களைத் தண்டிக்க வேண்டும். நேற்று இது தொடர்பாக மேதகு ஜனாதிபதி அவர்களின் உத்தரவின்பேரில் கௌரவ அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, சுசில் பிரேமஜெயந்த, பொதுமக்களின் பிரதி நிதிகள், அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை செயலாளர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர், பிஷப் - மேற்றாணியார், ஆதின முதல்வர் மற்றும் பௌத்த மதகுருமார் ஆகிய எல்லோரும் சேர்ந்து இந்த விடயத்தை தீவிரமாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே மக்களிடையே ஏற்பட்டுள்ள இந்த அசாதாரண சூழல், பயப்பீதி விரைவாக நீங்கி மக்கள் சமூகமான ஒரு இயல்பு வாழ்க்கைக்கு வருவார்கள் என்று நான் நம்புகின்றேன். ஆகவே இப்படியான அணுகுமுறைகளுக்கு ஊடாகத்தான் நாங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முற்பட வேண்டும். இதைவிடுத்து அரசுக்கு எச்சரிக்கை விடுவதுபோல சர்வதேச சமூகத்தைக் கொண்டுவந்து 'Grease Man' ஐக் கட்டுப்படுத்துவோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்கள் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்ததும் அது "தினக்குரல்" பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக வெளிவந்ததும் வேடிக்கையான விடயம் அல்லவா? ஆனால், இந்த 'Grease Man' பிரச்சினை இந்த நாட்டின் சட்டதிட்டங்களுடன் தொடர்புபட்ட விடயம். இதில் ஏன் சர்வதேசத்தைச் சம்பந்தப்படுத்தப்பட வேண்டும்? எடுத்ததற்கெல்லாம் சர்வதேசத்தை கொண்டுவருவோம் என்று எச் சரிக்கை விடுப்பதென்பது, மக்களிடையே உருவாகும் நல்லிணக்கத் தையும் புரிந்துணர்வையும் இல்லாதொழிக்கும் செயல் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, வெளிநாடுகளில் இருந்து உங்களுக்கு பணம் அனுப்புகின்றவர் களை திருப்திப்படுத்துவதற்காக வெளிநாடுகளில் இருந்து நீங்கள் பெறும் பணத்துக்காக "வேட்டியை மடித்துக் கட்டுவோம்! புதுமாத்தளனில் இருந்து எழுவோம்!" மக்களே கிளர்ந்தெழுங்கள் என்று எல்லாம் நீங்கள் போலிக் கோசங்களை எழுப்பாதீர்கள்! பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்ற நீங்கள் மக்களின் நல்வாழ்வுக்காக உருவாகியுள்ள நல்ல சூழலை வளர்த்தெடுப்பதற்காகச் செயற்படுங்கள்! வெளிநாடுகளிலிருந்து உங்களுக்கு மாதாமாதம் கப்பம் அனுப்புகின்றவர்களை அல்லது உங்களை உஷாரப்படுத்துவதற்காகப் பணம் அனுப்புகின்றவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகப் அப்பாவி தமிழ் மக்களை இருண்ட வாழ்க் கைக்குள் கொண்டு செல்ல முற்படாதீர்கள்.

அதேநேரம் இன்று உங்களுடைய மூன்று கௌரவ உறுப்பினர்கள் காசு சேகரிப்பதற்காக லண்டனுக்கு உண்டியல் கொண்டு போயிருக்கின் றார்கள். "இன்று தமிழ் மக்கள் Grease Man விடயத்தை வைத்து அரசுக்கு எதிராக கிளர்ந்தெழத் தயாராகிவிட்டார்கள். அவர் களுக்கு தலைமைத்துவம் கொடுக்காமல் நீங்கள் அறிக்கை விட்டுக் கொண்டி ருக்கின்றீர்கள்" என்று அங்கிருக்கின்ற புலி அமைப்பாளர்கள் உங்கள் மீது குற்றம் சாட்டுவது பற்றிப் பத்திரிகைகளில் செய்தி வெளி வந்திருக்கின்றது. Grease Man பிரச்சினை என்பது இந்த நாட்டின் சட்டத்துடன் சம்பந்தப்பட்ட விடயம். இதனைத் தீர்த்து வைப்பதற்கு வெளிநாட்டு பிரைஜைகள் சம்பந்தப்படுவதற்கு என்ன தேவை இருக் கின்றது? இந்தப் பிரச்சினையை நாங்களே தீர்த்துக்கொள்வோம். இது ஒரு பாரதூரமான விஷயமில்லை. இது உருவாக்கப்பட்ட விஷ யம். எனவே நாங்கள் Grease Man விடயத்தை இனங்கண்டு அந்தப் பிரச்சினையை இலகுவாக முடித்துக்கொள்ள வேண்டும். நன்றாக அந்த அறிக்கையைப் பாருங்கள்! "Grease Man விடயத்தை வைத்து தமிழ் மக்களை அரசுக்கு எதிராக கிளர்ந்தெளப் பண்ணியிருக்கின்றோம், அதற்கு ஏன் தலைமைத்துவம் கொடுக்கவில்லை?" என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களிடம் புலம்பெயர்ந்த புலிப்பினாமிகள் கேட்கின்றார்கள். சரி, மர்ம மனிதன் அல்லது Grease மனிதன் Springs பொருத்திக்கொண்டு வருகின்றான். அப்பிடி, இப்படி எல்லாம் நீங்கள் தானே அவர்களைப் பார்த்தது போல எழுதினீர்கள். அவர்களின் Shoe இல் Springs இருக்கின்றது என்று பொதுமக்கள் மத்தியில் இருந்து அப்பாவித்தனமான சில கருத்துக்கள் எழலாம். ஆனால், ஒரு பொறுப்புள்ள பத்திரிகை கண்டமாதிரி எழுதக்கூடாதுதானே! அதைத் தேடிப்பார்க்க வேண்டும். அந்தப் பத்திரிகைக்கு நீங்கள்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்துவம் கொடுக்கின்றீர்கள்! எனவே, முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் புதைக்க முடியாது.

பத்திரிகையாசிரியர் திரு. குகநாதன் நல்ல மனிதர், மிகவும் பண்பானவர், அவர் என்ன காரணத்துக்காக உங்களுடன் இருக்கின்றார் என்பதுதான் எனக்கு கவலை! உங்களுடன் இருந்தால் அந்த ஆளுக்கு கெட்ட பெயர்! ஆனால், இந்தச் சபையில் சென்ற அவசரகால நீடிப்பு விவாதத்தில் நல்ல மனிதர் ஒருவர் தாக்கப்பட்டிருக்கின்றார் என்று அதனைக் கண்டித்து நான் உரையாற்றியிருந்தேன். மறுநாள் நான் மிகவும் சந்தோசப்பட்டேன், ஏனென்றால், அந்தத் தாக்குதலின் சம்பந்தப்பட்ட சிலர் கைது செய்யப்பட்டிருந்தார்கள். அந்தத் தாக்குதலின் பின்னணியில் இருந்தவர்கூட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஒரு மாகாணசபை உறுப்பினர்.

(இடையீடு) யார் அவர்?

அந்த விடயத்தில் சட்டப்பிரச்சினை இருப்பதால் நான் அதைப் பற்றிப் பேச விரும்பவில்லை.

அந்த உறுப்பினருக்கு அதில் சம்பந்தமிருப்பதாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருக்கின்றது. குகநாதன் மீதான தாக்குதல் தொடர்பாகப் பொலிஸார் சிலரைக் கைது செய்திருக்கின்றார்கள். விசாரணை நடந்து கொண்டிருக்கின்றது. நீங்கள் உங்கள் பத்திரிகைகளில் எப்படி அந்த செய்தியை பிரசுரத்தீர்கள் தெரியுமா? “பிடிபட்டாராம்” என்று நக்கலடிக்கும் விதமாகத்தான் அந்தப் பத்திரிகைச் செய்தி இருந்தது. குகநாதன் தாக்கப்பட்டதைக் கண்டிக்கும் பொறுப்பு பத்திரிகைகளுக்கு இருக்கின்றது. பத்திரிகையாளன் ஒருவன் தாக்கப்பட்டால் அதைக் கண்டிக்கும் பொறுப்பு எல்லோருக்கும் உண்டு. கண்டியுங்கள்! அது தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றத்தையும் நீங்கள் சொல்லியேயாகவேண்டும். அதையும் எழுதுங்கள்! அதைக் கிண்டல் செய்ய வேண்டாம்.

களவு நடந்தால் அடுத்த நாள் பத்திரிகைகளில் அது சம்பந்தமான செய்தி வரும். சமூகத்தில் பல பிரச்சினைகள் நடக்கின்றன. ஓர் இளம் பெண்ணும் இளம் ஆணும் காதலித்து, பெற்றோரின் சம்மதம் இல்லாமல் ஓடிவிட்டால், அத்தகைய செய்தியை நீங்கள் எப்படி பிரசுரிக்கிறீர்கள்? பெண்ணைக் காணவில்லை! என்றுதான். 3ஆம் நாள்தான் அவர்கள் பருவமடையாதவர்கள் என்ற செய்தி வெளிவரும். இளமைத் துடிப்பில் ஓடிய அவர்கள் திரும்பி வருவார்கள். அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி[illegible]ங்கள் ஒருபோதும் பிரசுரிப்பதில்லை. உங்கள் பத்திரிகைச் செய்தியைப் பொறுத்தவரையில், அந்த ஆணையோ, பெண்ணையோ காணவில்லை என்பதுதான் இறுதியானது. பிறகு கட்டுரைகள் தான் வரும். அதாவது "அதற்குப் பக்கத்தில் ஈ.பி.டி.பி. முகாம் இருந்தது. அதற்குப் பக்கத்தில் இராணுவ முகாம் இருந்தது. அந்தப் பகுதியால் புலனாய்வுப் பிரிவினர் போனார்கள்" என்றெல்லாம் அதற்கு விவரணம் எழுதுவீர்கள். ஆகவே, பத்திரிகைகள் பொறுப்புடன் செய்திகளைப் பிரசுரிக்க வேண்டும். நீங்கள் மக்களின் உணர்வுகளைப் புரிந்து நடந்து கொள்ள வேண்டும். மக்கள் அமைதியையும் சமாதானத்தையும் ஜனநாய கத்தையும் இயல்பு வாழ்க்கையையும் அனுபவிக்க துடித்துக்கொண்டி ருக்கின்றார்கள். அவர்களின் அந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டிருக் கின்றார்கள். அவர்களின் அந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டு, ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த நல்ல சூழலை இன்னும் மேம்படுத்தும் விதமாக நடந்துகொள்ள வேண்டும். தெற்கில் எப்படியான சுதந்திரத்தை மக்கள் அனுபவிக்கின்றார்களோ அதே சுதந்திரத்தை எமது பிரதேச மக்களும் அனுபவிப்பதற்குரிய நல்லதொரு சூழலை உருவாக்குவதற்குத் தயவுசெய்து நீங்கள் ஒத்துழைக்கவேண்டும்.

அண்மையில் உங்கள் கட்சியைச் சேர்ந்த கௌரவ உறுப்பினர் ஒருவர் "இப்படியே போய்க்கொண்டிருந்தால் நாங்கள் வேட்டியை மடித்துக் கட்டுவோம்" என்று சொல்லியிருக்கின்றார். இது என்ன கதை? நீங்கள் வேட்டியை மடித்துக் கட்டியதால் மக்கள் பட்ட அவலம் தெரியும் தானே! நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு மக்களுக்காகச் சாதித்தது என்ன? அழிவைத் தவிர வேறொன்றுமில்லை! அநியாயமாக அவர்களது வாழ்க்கையைத் தொலைத்தது மட்டும்தான். இந்த அவசரகாலச் சட்ட நீக்கத்திற்கூடாக எவ்வளவு நல்ல விடயங்கள் நடந்திருக்கின்றன. அதைப் பாராட்டி ஒருநாளும் எழுதமாட்டீர்கள்! திரும்பவும் அவசரகாலச் சட்டத்தை அமுலாக்குக் கொண்டுவரும் வகையிலான வழிமுறைகளைப் பற்றித் தான் நீங்கள் யோசிக்கின்றீர்கள். அப்படி யோசிக்காதீர்கள், அது பிழை, எங்களுக்கு எதிர்காலத்தில் பாரிய பொறுப்புக்கள் இருக்கின்றன. ஏராளமான தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டியிருக்கின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டுமென்று இன்று எல்லோ ரும் பேச ஆரம்பித்திருக்கின்றார்கள். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை யும் இந்த நாட்டிலே தொடர்ந்தும் வைத்திருக்கக்கூடாதென்பதை நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம். அதையும் நீக்கவேண்டும். மேதகு ஜனாதிபதி அவர்கள் பயங்கரவாதச் தடைச்சட்டத்தையும் விரைவில் நீக்கிவிடுவாரென்று நாங்கள் நம்புகின்றோம். மேலும் மக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்புறுத்தும் சட்டங்கள் எதுவாக இருந்தாலும் அவற்றையும் நீக்கி நல்லதொரு சூழலை இந்த நாட்டிலே உருவாக்குவாரென்று நாங்கள் நம்புகின்றோம். அந்த நோக்கில் நாங்களும் வேலை செய்யவேண்டும். மீண்டும் இந்த இரும்புச் சட்டங்களைக் கொண்டுவரும் விதமாக நீங்கள் நடந்து கொள்ளக்கூடாது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு அரச தரப்பிலும்கூட ஆதரவுக்குரல்கள் வந்திருக்கின்றன. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உட்பட எல்லா எதிர்க்கட்சிகளும் குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டன. நல்ல விடயம்! நாங்கள் வெற்றி பெறுவோம். இந்த நாட்டிலே பயங்கரவாதத் தடைச் சட்டமும் நீங்கும்.

ஆனால், நீங்கள் அவ்வாறு இல்லை. மாறாக அவசரகாலச் சட்டம் நீங்கிவிடக்கூடாது என்ற எண்ணத்தில்தான் செயற்படுகின்றீர்கள். தயவு செய்து அவ்வாறு செயற்பட வேண்டாம். நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பயங்கரவாதச் சட்டத்தை விரைவாக முடிவுக்குக் கொண்டு வருவோம். எங்களுடைய பொறுப்பு அதற்கான கோரிக்கையை விடுப்பது மட்டுமல்ல! மாறாக அதற்கான சூழலையும் உருவாக்க வேண்டும். இந்த நாட்டில் மீண்டுமொருமுறை பயங்கரவாதமோ அல்லது எந்தவொரு அசாதாரண சூழலோ உருவாகாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசினது மட்டுமல்ல, இந்த நாட்டின் பொறுப்புள்ள எல்லா பிரஜைகளினதும் கடமையாகும். எனவே, அனைத்து இன மக்களும் அச் சூழலை உருவாக்குவதில் பாடுபட வேண்டும். அதில் ஊடகங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அதற்கான சூழலை உருவாக்கும்போது, பயங்கரவாதத் சட்டம் இந்த நாட்டுக்குத் தேவையில்லை என்ற நிலைப்பாடு உருவாகும். ஆகவே, நான் உங்களிடம் விநயமாகக் கேட்டுக்கொள்வது என்னவெனில், தற்பொழுது உருவாகியுள்ள நல்ல சூழலை மென்மேலும் வளர்ப்பதற்காக நீங்கள் எங்களுடன் ஒன்றாகக் கைகோர்த்துச் செயற்படுவதற்கு முன்வர வேண்டும் என்றுதான்.

நீங்கள் வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர்ந்த விடுதலைப் புலி ஆதரவாளர்களுடைய அழுத்தங்களுக்கு உள்ளாக வேண்டாம். அவர்களுக்கு இங்கு உருவாகியுள்ள நல்ல சூழல் விருப்பமில்லை. ஒவ்வொரு "பிளைட்" இலும் பாருங்கள். வெளிநாடுகளிலிருந்து எவ்வளவு பேர் வருகிறார்களென்று. அது உங்களுக்குத் தெரியும்! நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்! யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு High Street இலும் வெளிநாடுகளிலிருந்து வந்த புலம்பெயர் தமிழர்கள் திரிகின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு வீதியிலும் புதிது புதிதாக investment செய்திருக்கின்றார்கள். கட்டிடங்கள், கடைகள், shopping complex என்பன கட்டப்பட்டிருக்கின்றன. இதனை நீங்கள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஏற்றுக்கொள்வீர்கள்! இவற்றையெல்லாம் புலம்பெயர் தமிழர்கள்தாம் செய்கின்றார்கள். ஆனால், இங்கு நல்ல சூழல் இல்லை என்று கூறி, நீங்கள் ஏன் அங்கு குழப்பத்தை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றீர்கள்? இங்கு நல்ல சூழல் நிலவுவதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள்தானே? நீங்கள் உங்களுடைய மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள்!

முன்பு உங்களுக்குக்கூட எவ்வளவு கஷ்டங்கள் இருந்தன? அந்த நேரத்தில், நீங்கள் உங்களுடைய பத்திரிகையை foolscap தாளில் கூட அச்சிட்டு வெளியிட்டீர்கள், நான் பார்த்திருக்கின்றேன். இன்று அவ்வாறான தொரு நிலை இருக்கின்றதா? இன்று நீங்கள் நவீன machine எல்லாம் அங்கு கொண்டு போயிருக்கின்றீர்கள். எப்படிக் கொண்டு சென்றீர்கள்? இன்று அங்கு நல்லதொரு சூழல் நிலவுவதால்தானே உங்களுடைய business பெருகுகின்றது. உங்களுக்கு மட்டும்தானா நல்ல சூழல் உருவாகவேண்டும். வன்னியிலுள்ள சாதாரண மக்களுக்கு உருவாகக் கூடாதா? ஆகவே, நல்லதொரு இயல்பு சூழலை உருவாக்க எல்லோரும் மனவுறுதியுடன் உழைக்க வேண்டும் என்று நான் இந்தச் சபையிலே உருக்கமாகக் கேட்டுக்கொள்ளுகின்ற அதேவேளை, தமிழ் மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பாக இருந்த அவசரகாலச் சட்ட நீடிப்பை முடிவுக்குக் கொண்டுவந்த மேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் அவரது அரசாங்கத்துக்கும் எமது மக்களின் சார்பாகவும் ஈ.பி.டி.பி. சார்பாகவும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

வணக்கம்.

● *07 செப்ரெம்பர் 2011*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட மக்களுக்கான விசேட நிதி ஒதுக்கீடும் சிறப்புத்திட்டங்களும் அவசியம்

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே!

யுத்தத்தின் பின்னர் முன் வைக்கப்படுகின்ற மூன்றாவது வரவு செலவுத் திட்டம் இதுவாகும். யுத்தம் முடிந்த பிறகு ஓர் இயல்பு வாழ்வை நோக்கி மக்கள் பயணிக்கும் சந்தர்ப்பத்தில், அமைதியும் ஆறுதலும் உருவாகிக்கொண்டிருக்கின்ற ஒரு சூழலில், இந்த வரவு செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த வரவு செலவுத் திட்டம் தொடர்பான உரையிலே நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். முப்பது ஆண்டுகளாக நீடித்த உள்நாட்டுக் கிளர்ச்சியினாலும், யுத்தத்தினாலும் மக்கள் தங்களுடைய வாயையும், வயிற்றையும் கட்டி வாழ வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டிருந்தனர். எனவே, அந்த சந்தர்ப்பத்தில் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டங்கள் அரசாங்கத்தின் மீதான நெருக்கடியையும், நாட்டின் மீதான அச்சுறுத்தலையும் முறியடிக்கும் விதத்திலேயே அமைந்திருந்தன. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தையும், மக்களின் நலத்திட்டங்களையும்விட பாதுகாப்புக்கான கரிசனையே அவற்றில் அதிகமாக இருந்தது. எனவே, வரவு செலவுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் பாதுகாப்புச் செலவீனத்திற்கான நிதி ஒதுக்கீடு அதிகரித்துக் கொண்டே வந்தது. இப்பொழுது யுத்தம் முடிந்து விட்டது. ஆகவே, மக்களிடம் முற்றிலும் வேறான எதிர்பார்ப்புக்கள் தோன்றியுள்ளன. இவ்வளவு காலமும் தமது தேவைகளை மட்டுப்படுத்தி வாழ்ந்த மக்கள் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகியிருக்கும் புதிய சூழலில் தங்கள் எதிர்பார்ப்புக்களையும், முன்னேற்றத்துக்கான திட்டங்களையும் நிறைவேற்றுவதற்காக காத்திருக்கின்றார்கள். இதில் இன, மத, பிரதேச வேறுபாடுகள் இன்றி அனைவரும் ஒருமுகப்படுத்தப்பட்டே இருக்கின்றனர்.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே!

யுத்தம் முடிவடைந்து இரண்டரை வருடங்கள் கடந்துவிட்டன. அநியாயச் சாவுகளும், அகதி, பெருக்கத்திற்கும், அலைச்சலுக்கும் பெரும்பாலும் விடிவு காணப்பட்டுள்ளது. ஆனால், "மழைவிட்டாலும் சாரல் விடவில்லை" என்பது போல யுத்தம் ஒழிந்தாலும் அதன் காரணமாக உருவாகியுள்ள சில பாதிப்புகள் இன்னமும் முற்றாக நீங்கவில்லை. ஒரு பக்கத்தில் பாதிப்புகளில் இருந்து மீளுவதற்கும் இயல்பு வாழ்வை நோக்கி நகர்வதற்கும் காத்திருக்கும் மக்கள் மறுபக்கத்தில் சில அரசியல் தரப்புகளும் ஊடகங்களும் யுத்த சூழலை மேலும் தக்கவைத்துக்கொள்ள எத்தனிக்கும் முயற்சிகள். இந்த நிலையில் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இயல்பாகவே நெருக்கடி கள் ஏற்படுகின்றன. இந்த நெருக்கடிகள் நாட்டை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும். யுத்தம் நடைபெற்ற எல்லா தேசங்களும் எதிர்கொண்ட அல்லது எதிர்கொள்ளப்படுகின்ற ஒரு பிரச்சினை இது. அரசியல் இலாபங்களுக்காக மக்களையும், நாட்டையும் பலியிடும் தரப்பினர் இன்னும் அதே உற்சாகத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் செயற்பாடுகள் வரவு செலவுத் திட்டத்தைப் பாதிக்கின்றன அல்லது அதனை திசை மாற்றுகின்றன. யுத்தம் முடிந்த பின்னர் அரசியல் தீர்வை நோக்கியும் அமைதியை நோக்கியும் சிந்திக்க வேண்டிய பலர் அதற்கு எதிராகச் சிந்திக்கின்றார்கள், செயற்படுகின்றார்கள். சில உள்ளூர் ஊடகங்கள் கூட நாட்டில் கொந்தளிப்பை ஏற்படுத்தும் விதமாகவும் பிரிவினையைத் தூண்டும் விதமாகவும் பாதிப்புக்களை அதிகரிக்கும் விதமாகவுமே செயற்படுகின்றன. மாறி மாறி ஒவ்வொரு தரப்பினை குற்றம் சுமத்துவதனாலும் விமர்சிப்பதனாலும் பிரச்சினைகள் தீர்ந்து விடப்போவதில்லை. கடந்த கால அனுபங்களைக் கொண்டு பெறுமதி யான பாடங்களாகக் கொண்டு எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்பதே நிகழ்காலத்தின் கடப்பாடாகும். இதில் இந்த நாட்டில் உள்ள அனை வருக்கும் முழுப்பொறுப்பு உண்டு. அவ்வாறே இந்தப் பொறுப்பை அனைத்து தரப்பினரும் உணர்ந்து செயற்படும்போது மக்களின் எதிர் பார்ப்புக்களையும் விருப்பங்களையும் நிறைவேற்றுகின்ற ஒரு வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்க முடியும். இந்த உண்மையை நான் கடந்த ஆண்டு நடைபெற்ற வரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவுத்திட்ட விவாதத்தின்போது தெளிவாக வலியுறுத்தியிருந்தேன்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல நாட்டில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டாலும்கூட யுத்த அபாய கருத்துக்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சில சக்திகளால் திட்டமிட்டு உருவாக்கப்படுகின்றன. இது பகிரங்கமான ஒரு விடயமாகும். இந்நிலை நீடிக்கும்வரை வரவு செலவுத் திட்டத்தின் நிதி ஒதுக்கீடு என்பது பாதுகாப்புச் செலவீனங் களை அதிகரிப்பதற்கே வழி வகுக்கும். இது எமது விருப்பத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கலாம். அல்லது நாட்டினுடைய பொருளா தாரத்தின் பெரும் பகுதியை இவ்வாறு ஒதுக்கீடு செய்வது அதிக சுமை யாக கருதப்படலாம். ஆனால், இந்த நிலையை மாற்றும் வரையிலும் இவற்றிற்கு முகம் கொடுக்கும் நிலையே தொடரும். இவ்வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவீனங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி குறித்து எனது ஆதரவையோ விமர்சனங்களையோ நான் முன்வைக்க வில்லை. வரவு செலவுத் திட்டங்களின் ஒதுக்கீடுகளுக்கான காரணங் களையே நான் இங்கு தெரிவித்துள்ளேன். நாட்டில் அபிவிருத்தி என்ப தும் மக்களின் முன்னேற்றம் என்பதும் நாட்டின் அரசியல் ஸ்திரத் தன்மையிலும் அமைதியிலுமே தங்கியுள்ளது. எனவேதான் அமைதிச் சூழலை நிலைப்படுத்த வேண்டும் என்று நாம் அழுத்தமாக வலியுறுத்து கின்றோம். அத்தகைய சூழலை உருவாக்காமல் அல்லது அதற்காக விசுவாசமாக சிந்திக்காமல் ஏனைய விடயங்களைப் பற்றி பேசுவதோ விமர்சிப்பதோ பொருத்தமானதாக அமையாது.

கௌரவ பிரதிச் சபாநாயகர் அவர்களே!

நாட்டிலுள்ள சகல மக்களும் ஏராளமான கனவுகளுடனும் எதிர் பார்ப்புக்களுடனும் இருக்கின்றனர். இந்த அரசாங்கம் பாரிய மாற்றத் தைக் கொண்டுவரும் என்ற நம்பிக் கையுடன் காத்திருக்கின்றனர். இந்தச் சூழலில்தான் நாம் இந்த வரவு செலவுத் திட்டத்தையும் எதிர்வருகின்ற ஆண்டையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களை சீரமைத்து அந்த மக்களையும் யுத்தப் பிரதேசங்களையும் மீள்நிலைப்படுத்த வேண்டிய அவசியப்பணி இன்றுள்ளது. நாட்டி லுள்ள சகல மக்களையும் சகல பிரதேசங்களையும் சமநிலைப்பட்ட ஒரு பொதுத்தளத்துக்கு முதலில் கொண்டுவரவேண்டும். மேதகு ஜனாதிபதி அவர்களின் “மகிந்த சிந்தனையின்” அடிப்படையும் இதையே வலியுறுத்துகின்றது. அத்தகைய ஒருநிலை எட்டப்பட்டால் அரசாங்கத்தால் முன்வைக்கப்படுகின்ற திட்டங்களும் சட்டங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிமுறைகளும் அனைவருக்கும் பொதுவாக ஏற்புடையதாகும். இல்லையெனில் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களை அத்திட்டங்கள் சென்றடைவதில் பிரச்சினைகள் உருவாகும். அதேபோல், அந்தத் திட்டங்களை எதிர்கொள்வதில் மக் களுக்குப் பிரச் சினைகள் ஏற்படும்.

இந்த வகையில், யுத்தத்துக்குப் பின்னர் மீண்டும் அந்தப்பிரதேசங்களில் மக்கள் மீள்கடியேற்றப்படுவது முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும். ஆனால், இந்த மக்கள் மீண்டும் தங்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்பு வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதே இங்குள்ள பிரதான தேவை யாக இருக்கின்றது. இவ்வரவு செலவுத்திட்டத்தில் இந்த மக்கள் மீது கூடுதலாகக்கவனம் செலுத்தப்படவேண்டுமென நான் வலியுறுத்து கின்றேன். குறிப்பாக, புனர்வாழ்வுக்கும் மீளமைப்புக்கும் கூடுதலான கவனத்தைச் செலுத்த வேண்டும். இந்த மக்கள் மீள்வாழ்வுக்குத் திரும்புவதில் காலநீட்சி ஏற்படுமானால், அது அந்த மக்களின் வாழ் நிலையில் பாதிப்பை ஏற்படுத்தும்: அவர்களது சமூக வாழ்வில் நெருக்கடி களை உருவாக்கும். அத்துடன் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி யில் அவர்கள் பங்களிப்பதில் தாமதங்களை ஏற்படுத்தும். அரசாங்கத் தின் உயரிய இலட்சியமாகிய அனைத்துப் பிரதேசங்களையும் அபி விருத்தி செய்தல் மற்றும் அனைத்து மக்களையும் அபிவிருத்தியில் பங்குபற்றவைத்தல் என்ற நோக்கங்களுக்கு இது நேர்மாறானதாக அமை யலாம். ஆகவேதான் பாதிக்கப்பட்ட மக்களுக்கான விசேட ஒதுக்கீடும் சிறப்புத் திட்டங்களும் அவசியம் என கூறுகிறேன். போரினால் பாதிக்கப் பட்ட வடக்கு கிழக்கு மக்களின் தேவைகளையும் நீக்கப்பட வேண்டிய பிரச்சினைகளையும் மூலதனமாக்கியே சில அரசியல் தரப்புக்களும் ஊடகங்களும் தங்களை வளர்த்துக்கொள்கின்றன. இந்த தரப்புக்களின் செயற்பாடுகள் முழுநாட்டையுமே நெருக்கடிக்குள்ளாக்கும். இந்தத் தரப்புக்கள் கண்டுபிடிக்கும் குறைபாடுகளை இல்லாமல் செய்வதன் மூலம் அவர்களை பலவீனப்படுத்துவதோடு, முழு நாட்டுக்குமான பாது காப்பையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்திக்கொள்ளலாம். இல்லையெ னில் இதனால் நாடு முழுவதுக்குமான தீர்மானங்களும் திட்டங்களும், திட்டமிடல்களும் பாதிப்படையும். இந்த வரவு செலவுத்திட்டத்தின் பாதுகாப்புச் செலவுக்கான அதிகரித்த ஒதுக்கீடு உட்பட ஏனைய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதற்கு அடிப்படைக்காரணம், அடிப் படைப் பிரச்சினைகளின் நீட்சியே. ஆகவே பாதிக்கப்பட்ட மக்களை மீள்நிலைக்கு கொண்டுவருவதும் அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதும் முக்கியமானதாகும். எமது அரசாங்கம் இந்த விடயங்களில் கூடுதலான கவனத்தினை செலுத்துமென்று நான் நம்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேதகு ஜனாதிபதி அவர்கள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதிலும் பொருளாதார அபிவிருத்தியில் முன்னேற்றம் காண்பதிலும் தன்னுடைய அக்கறையை வெளிப்படுத்தவார் என்று நாங்கள் நம்பிக்கை வைத் துள்ளோம். நான் முன்னரே குறிப்பிட்டதைப்போல நாடு முழுவதிலு முள்ள மக்களின் ஒரே எதிர்பார்ப்பும் குறிக்கோளும் அமைதியும் அபி விருத்தியுமே! அதைநோக்கி சிந்திப்பதே எமது பணியாகும் என்று நான் இந்த அவையிலே குறிப்பிட விரும்புகின்றேன்.

கௌரவ பிரதி சபாநாயகர் அவர்களே!

வடபகுதியில் பொருளாதார மேம்பாட்டுக்கான சிறப்புத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அங்கே செயலிழந்த நிலையி லிருக்கும் தொழிற்சாலைகளை மீண்டும் இயங்கு நிலைக்கு கொண்டுவர வேண்டியுள்ளது. இதன்மூலம் வேலையற்ற நிலையிலிருக்கும் ஆயிரக் கணக்கானோருக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியும். அதேவேளை அங்கிருக்கும் மூலவளங்களைப் பயன் படுத்திக் கொள்ளவும் முடியும். நாட்டின் அபிவிருத்திக்கு அந்த பிரதேச மக்களின் பங்களிப்பு மிகமிக அவசியமானது. போரின் காரணமாக பொருளாதாரமும் வாழ்வும் சிதைவடைந்த சமூகமாக அங்கு மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். "வடக்கின் வசந்தம்", "கிழக்கின் உதயம்" என்ற சிறப்புத்திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகின்றமை ஒரு முக்கியமான விடயம் என்றபோதிலும், இதையும் விட மேலதிகமான தேவைகளை அந்த மக்கள் கொண்டுள்ளனர். குறிப்பாக உட்கட்டுமாணங்களை மீளமைக்க வேண்டிய அவசியப்பணி அங்கேயுண்டு. உட்கட்டுமாணங்களின் வளரச்சியானது அந்த மக்களின் சுய பொருளாதாரத்தில் ஒரு பிரதான பாத்திரத்தைவகிக்கும் என்பதை தாங்கள் அறிவீர்கள். அங்கு பல பிரதேசங்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே தொடர்ந்தும் இருந்து வருகின்றன. இந்த நிலைமை தொடரும்போது இந்த மக்களையும் அவர்களுடைய நிலைமைகளையும் சாட்சியாக வைத்து சர்வதேச நெருக்கடிகளை உருவாக்குவது எதிர்த்தரப்புக்கு சாத்தியமாகின்றது. எனவேதான் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சிறப்புத் திட்டங்களைக் கூடிய கவனமெடுத்து செயற்படுத்த வேண்டுமென்று நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல் கின்றோம்.

விவசாயம் கடற்றொழில் போன்ற துறைகளில் தொழில் வாய்ப்புகளுக் கான கூடுதல் வசதிகளை இந்த மக்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். கிடைத்துள்ள இயல்புச் சூழலில் தங்களை முழுமையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுத்தி உழைப்பதற்கு இந்த மக்கள் தயாராகவே உள்ளனர். ஆனால் உதவிகளும் ஆதரவுகளுமே இவர்களுக்கு தேவைப்படுகின்றன. இதற் கான திட்டத்தையும் நிதி ஒதுக்கீட்டையும் இந்த மக்கள் எதிர்பார்த் துள்ளனர். குறைந்தபட்சம் வட்டியில்லாத கடன் என்ற அளவிலாவது இவர்களுக்கான உதவிகளை செய்ய முன்வரவேண்டும். மேலும் கல்வி மருத்துவம் மின்சாரம் கைத்தொழில் போக்குவரத்து போன்ற அவசிய துறைகளில் விரைவுபடுத்தப்பட்ட வேலைத்திட்டமும் கூடுதல் நிதி ஒதுக்கீடும் தேவைப்படுகிறது. சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டமானது பாதிக்கப்பட்ட மக்ககளுக்கு ஆறுதல் அளிக்கும் திட்டங் களை உள்ளடக்கி இருக்குமானால் அது வரவேற்றக்கதக்கதாகும். எனவே இந்த வரவு செலவுத் திட்டத்தில் கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான அடிப்படைகளை நாம் பொருட்படுத்தி அந்த இலக்கு நோக்கி செயற்பட வேண்டுமென்று இந்த அவையில் நான் வலியுறுத்து கிறேன்.

இறுதியாக எமது மக்களுக்கு யுத்தமற்ற இலங்கையில் அமைதியான நாட்டில் நிம்மதியை அனுபவிக்க கூடிய ஒரு சூழல் உருவாக்கப்பட வேண்டும். பொருளாதார அபிவிருத்தியிலும் அரசியல் சுதந்திரத்திலும் ஜனநாயக அடிப்படைகளிலும் மேம்பட்ட ஒரு வாழ்வை எமது மக் களுக்கு ஏற்படுத்த வேண்டும். அந்த இலட்சியத்தை நோக்கி நாம் செயற்படுவோம் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள் கிறேன்.

நன்றி வணக்கம்.

- *29 நவம்பர் 2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபைகளுக்குரிய வீதிகளை புனரமைப்பதற்கு அரசாங்கம் சரியான திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும்

கௌரவ தவிசாளர் அவர்களே!

துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு, எனது கருத்துக்களை முன் வைக்கலாம் என்று நினைக்கிறேன்.

அரசாங்கம் பொருளாதார மேம்பாட்டுக்காகத் தற்பொழுது நெடுஞ்சாலை இணைப்புக்களை மிக விரைவான திட்டங்களின் மூலம் மேற்கொண்டு வருகிறது. அத்துடன், இந்த நெடுஞ்சாலைகளை மிகத் தரமானதாகவும் புனரமைத்து வருகின்றது. அன்மையில்கூட, தெற்கு அதிவேக நெடுஞ் சாலையை மேதகு ஜனாதிபதி அவர்கள் திறந்துவைத்தார். அவ்வாறே, வடக்கில் உள்ள மிகமுக்கியமான பல நெடுஞ்சாலைகள் புனரமைக்கப் பட்டு வருகின்றன. குறிப்பாக, ஏ-9 நெடுஞ்சாலையின் புனரமைப்பு வேலைகள் வரவேற்கத்தக்கதாக உள்ளன. தற்பொழுது, மழைகால மாக இருந்தும்கூட, அங்கு வீதிப் புனரமைப்புப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. இது அப்பிரதேச மக்களுக்கு அதிக நம்பிக் கையைக் கொடுத்துள்ளது. மிக நீண்டகாலமாக குண்டும் குழியுமாக இருந்த வீதிகளில் பயணித்துவந்த மக்கள் தற்போது புதிய, நல்ல வீதிகளில் விரைவாகப் பயணங்களைச் செய்யக்கூடியநிலை ஏற்பட் டுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வருவதற்கு மாதக்கணக்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீடித்த பயணத்ததை இந்த அரசாங்கம் சில மணித்தியாலங்களுக்குச் சுருக்கியுள்ளது என்பதுதான் உண்மையான நிலைமை.

இந்த நேரத்தில், வட மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலான எனது கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய நிதி ஒதுக்கீட்டின் மூலம் 2,257.27 மில்லின் ரூபாவும் ஆசிய அபிவிருத்தி வங்கியினுடைய கடன் திட்டத்தின் மூலம் 3,549.44 மில்லியன் ரூபாவும் மற்றும் ஜே. ஐ. சி. ஏ. வினுடைய 2,460 மில்லின் ரூபாவுமாக மொத்தம் 7,950.89 மில்லியன் ரூபா செலவில் தற்பொழுது, 61 செயற்திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன. இவை எல்லாம் யுத்தம் முடிவடைந்த பின்னர் மெற்கொள்ளப்பட்டவையாகும். இச் செயற்திட்டத்தின் மூலம் 3 பெரிய பாலங்கள் நிர்மாணிக்கப் பட்டிருக்கின்றன: இவற்றுக்கு மொத்தமாக 3,583.42 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டிருக்கின்றது. அவ்வாறே, தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்திட்டங் களின் மூலம் மொத்தம் 758 கிலோமீற்றர் நீளமுடைய நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆர். டி. ஏ. இற்குச் சொந்தமான வீதிகள் கிட்டத்தட்ட 65,973 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்ற அதேவேளை, புதிதாகவும் பலவீதிகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு, வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய நிதி ஒதுக்கீட்டின் மூலம் 1,477.19 மில்லின் ரூபாவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன்திட்டத்தின் மூலம் 7,247.31 மில்லியன் ரூபாவில் சீன அரசின் நிதி உதவியின் மூலம் 57,248.75 மில்லியன் ரூபா செலவிடப் பட்டிருக்கின்றது. இவையெல்லாம் நீண்டகாலத் திட்டங்கள். இவற் றின் பயனை மக்கள் அனுபவிப்பதற்கு சிலகாலம் செல்லும். 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாத இறுதிக்குள் இத்திட்டங்கள் எல்லாம் ஓரளவு நிறைவு செய்யப்பட்டுவிடும். அதனூடாக, வட மாகாணமானது வீதி அபிவிருத்தியில் மிகப்பெரிய முன்னேற்றத்தை அடையும் என்ற நம்பிக்கை அம்மக்களுக்கு ஊட்டப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக, 153 கிலோமீற்றர் நீளமான ஏ-9 வீதி கிட்டத்தட்ட 19,000 மில்லியன் ரூபா செலவில் மிகவும் பாரிய வேலைத் திட்டமாக நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது. அதுபோலவே, கிட்டதட்ட 33.5 கிலோமீற்றர் நீளமான யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, 18.5 கிலோமீற்றர் நீளமான யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதி, 17.3 கிலோமீற்றர் நீளமான யாழ்ப்பாணம் -பலாலி வீதி, 13.65 கிலோமீற்றர் நீளமான புத்தூர் - மீசாலை வீதி ஆகிய மொத்தம் 83 கிலோமீற்றர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீளமான வீதிகளின் அபிவிருத்திப் பணிகள் கிட்டத்தட்ட 10,185 மில்லின் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுபோலவே, கிட்டத்தட்ட 42.4 கிலோமீற்றர் நீளமான முல்லைத்தீவு - கொக்கிளாய் - புல்மோட்டை வீதி கிட்டத்தட்ட 6,000 மில்லியன் ரூபா செலவிலும் 52.6 கிலோமீற்றர் நீளமான நாவற்குழி - கேரதீவு வீதி கிட்டத்தட்ட 6,532.50 மில்லியன் ரூபா செலவிலும், 113 கிலோமீற்றர் நீளமான புத்தளம் - மறிச்சுக்கட்டி - மன்னார் வீதி 9,887.50 மில்லியன் ரூபா செலவிலும் அபிவிருத்தி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பாரிய நிதியொதுக்கீடுகள் மூலம் மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டங்களில் வெற்றியை இன்னும் சிலகாலங்களில் மக்கள் முழுமையாக அனுபவிக்கக்கூடிய ஒரு சூழல் ஏற்படுத்தப்படும். இது யுத்தத்திற்குப் பின்னரான ஒரு சூழலில் மிகவும் பாரிய அபிவிருத்தியை நோக்கி வட மாகாணம் முன்னேறிக் கொண்டிருப்பதை நிரூபித்துக் காட்டுகின்றது.

இதுபோலவே முக்கியமான இன்னுமொரு விடயத்தை நான் இங்கு குறிப்பிட வேண்டும். 983 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட 280 மீற்றர் நீளமான சங்குபிட்டிப் பாலம் அண்மையில் மேதகு ஜனாதிபதி அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. அதன் காரணமாக வடபகுதி மக்களின் நீண்டகாலக் கனவு நிறைவேற்றப்பட்டது மட்டுமல்ல, தற்போது அதற்கு அருகிலுள்ள இறங்குதுறை 1,387 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அத்தோடு, கிட்டத்தட்ட 98 கிலோமீற்றர் நீளமுள்ள ஏ-39 வீதியும் நிர்மாணிக்கப் பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த வீதியின் நிர்மாண வேலைகள் நிறைவுபெறும்போது கொழும்பு - யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மக்கள் ஆகக் குறைந்தது 5 மணித்தியாலங்களில் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

மேலும் யாழ்ப்பாணத்தில் இன்னும் செய்யப்பட வேண்டிய நிர்மாண வேலைகள் தொடர்பாகவும் நான் இங்கு குறிப்பிட்டாகவேண்டும். கிட்டத்தட்ட 7.72 கிலோமீற்றர் நீளமான சண்டிலிப்பாய் - சேந்தன் குளம் வீதி புனரமைக்கப்பட வேண்டும். அந்தப் பகுதியில் மக்கள் மீள் குடியேறியிருப்பதால் அந்தவேலைகள் விரைவாகச் செய்யப்படுதல் வேண்டும். அதுபோல, 27.40 கிலோமீற்றர் நீளமான வல்லை - தெல்லிப்பளை - அராலி வீதி, 21.72 கிலோமீற்றர் நீளமான யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் வீதி என்பனவும் புனரமைக்கப்பட வேண்டி யிருக்கின்றன. இவை விரைவாக புனரமைக்கப்பட்டு கார்பட் வீதிகளாக்கப்பட்டு, மக்களின் இலகு போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதையும் நான் இந்த அவையிலே வலியுறத்த விரும்பு கின்றேன். அதுபோல யாழ்ப்பாணம் - பண்ணை - ஊர்காவற்துறை வீதி மிகவும் முக்கியமானது, கிட்டத்தட்ட 20 கிலோமீற்றர் நீளம் கொண்ட அவ்வீதியும் புனரமைக்கப்பட வேண்டியிருக்கின்றது. அதற்கான திட்டம் நடைமுறையில் இருந்தாலும் மிகவும் தாமதமான நிலையிலேயே செயற் பாடுகள் அமைந்துள்ளன. அது ஒப்பந்தகாரர்களால் ஏற்படுத்தப்படும் தாமதம் என்று நான் நம்புகின்றேன். ஆகவே அந்த வீதியயைத் துரிதமாக அமைத்துக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை வீதி அபிவிருத்தித் திணைக் களம் மேற்கொள்ளவேண்டும் என்பதை இச்சந்தர்ப்பத்திலே வலியுறுத்த விரும்புகின்றேன்.

இன்னுமொரு முக்கியமான வீதி தொடர்பாகவும் நான் இந்த அவை யின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். அது பருத்தித்துறையிலிருந்து கடற்கரை ஓரமாக செல்லும் பருத்தித்துறை - மருதங்கேணி வீதியாகும். பருத்தித்துறையிலிருந்து முல்லைத்தீவு வரையிலான கடற்கரையோர வீதியை விரைவாக புனரமைப்பதனூடாக பருத்தித்துறைப் பிரதேசத் தில் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற மக்கள் கல்வி, பொருளாதாரம், கடற்றொழில் போன்ற துறைகளில் முன்னேற முடியும். நீண்டகாலம் இடம்பெற்று வந்த கொடிய யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளான இப்பிர தேசத்தில் இந்தவீதியானது இன்று மக்கள் மீள்குடியேறுவதன் காரண மாக திறந்துவிடப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட முப்பது கிலோமீற்றர் நீள மான இந்த வீதியியையும் அரசின் கரையோர வீதி நிர்மாணத்திட்டத் தில் உள்வாங்கித் திருத்தியமைக்கவேண்டும் என்று நான் இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

அடுத்ததாக வடமாகாணத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி சபைகள் வசம், அதிலும் குறிப்பாக வன்னி மாவட்ட உள்ளூராட்சி சபைகள் வசம் மிகப் பெரிய வீதிகள் உள்ளன. இருந்த போதிலும் அந்த வீதிகளில் 50 கிலோமீற்றர் நீளத்திற்கும் குறைவான வீதிகளே தார் வீதிகளாகும். கிட்டத்தட்ட 1331 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் கிளிநொச்சியில் உள்ள மூன்று உள்ளூராட்சி சபைகள் வசம் உள்ளன. இவற்றில் 1238 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் கிறவல் வீதிகளாகும், அவ்வாறே முல்லைத் தீவு மாவட்டத்தில் 888 கிலோமீற்றர் நீளமான உள்ளூராட்சி சபைகளுக்குச் சொந்தமாக உள்ளன. அதில் 812 மீற்றர் நீளமான வீதிகள் தார் இடப்படாத கிரவல் வீதிகளாகும்.

இந்தப் புழுதி வீதிகளால் அங்குள்ள மக்கள் நீண்டகாலமாக மிகுந்த அசௌகரியத்தை எதிர்நோக்கி நின்றார்கள். புழுதி வீதிகளிலே பயணிக் கின்றார்கள்: தூசிக்குள்ளே தங்களது வாழ்க்கையை ஓட்டுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தபோதிலும் இவற்றைத் தார் வீதிகளாக மாற்றுவதென்பது அந்த உள்ளூராட்சிசபைகளால் முடியாத விடயம். அதாவது அந்த உள்ளூ ராட்சி சபைகள், அந்த வீதிகளை தார் வீதிகளாக மாற்றுவதென்பது நூற்றாண்டுகாலம் சென்றாலும் நடைமுறையில் சாத்தியமில்லை. ஏனென்றால் யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள அந்தச்சபைகள் இன்று எந்த வரி இறுப்பு நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்படாததனால், மிகவும் பெரிய நிதியீட்டங்களைக் கொண்டு இந்த வீதிகளைத் தார் வீதிகளாக மாற்றியமைப்பது என்பது சந்தேகம்.

ஆகவே, அரசாங்கம் இந்த உள்ளூராட்சி சபைகளுக்குச் சொந்தமான வீதிகளை வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவியுடன் மற்றும் ஏதாவது ஒரு விசேட திட்டத்தின் கீழும் "கார்பட்" வீதிகளாகவோ அல்லது தார் வீதிகளாகவோ மாற்றியமைக்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இச்சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.

துறைமுகங்கள் அபிவிருத்தியை பொறுத்தவரையில், காங்கேசந்துறைத் துறைமுகம் இந்திய அரசின் புனரமைப்புத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டி ருக்கின்றது. அதுபோலவே, பருத்தித்துறைத் துறைமுகத்தையும் புனர மைக்க வேண்டும். அதேநேரம் தீவுகளுக்கிடையிலான போக்குவரத்து மீதும் கவனம் செலுத்தவேண்டும். அண்மையில் வீதி அபிவிருத்தித் திணைக்களம் நெடுந்தீவுப் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடு வதற்காகக் கிட்டத்தட்ட 30 மில்லியன் ரூபாய் செலவில் பயணிகள் படகு ஒன்றை கொள்வனவுசெய்து, இன்று அதனை மக்கள் பாவனைக்கு விட்டுள்ளது. இருந்தபோதிலும், இந்த வசதியை இரட்டிப்பாக்க வேண் டும் என்றுநான் வலியுறத்திக் கூறுகின்றேன். ஏனென்றால், தீவுகளுக் கிடையில் போக்குவரத்து செய்வதில் மக்கள் நீண்டகாலம் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கினார்கள்.

இறுதியாக நான் முன்னரே கூறியபடி, எமது பிரதேச மக்களின் அபிவிருத் தியில் மிகப்பெரும் பாத்திரம் வகிப்பது வீதிகள் புனரமைப்பாகும் என்பதனால், மேதகு ஜனாதிபதி அவர்களின் அரசாங்கம் பாரிய நிதி ஒதுக்கீடுகளினூடாக வீதி அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள் வதை வரவேற்கின்ற அதேவேளை, அந்தச் செயற்பாடுகள் மேலும் துரிதப்படுத்தப் படவேண்டும் என்றும் கேட்டு, எனக்குப் பேசச் சந்தர்ப் பம் அளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

• *02 டிசம்பர் 2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைகள் நீக்கப்பட வேண்டும்

கௌரவ தவிசாளர் அவர்களே!

இந்த வரவு செலவுத்திட்டத்தின் கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சுக்களின் நிதியொதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு சில முக்கியமான விடயங்களை மையப்படுத்தி என்னுடைய உரையை ஆற்ற விரும்புகின்றேன். நாட்டின் கல்வித்துறை மேம்பாட்டில் அரசாங்கம் கொண்டிருக்கும் கரிசனை பாராட்டப்பட வேண்டியது. அதனால்தான் நாட்டின் தலைவரான மேதகு ஜனாதிபதி அவர்கள் இம்முறை கல்விக்கு அதிகளவு நிதியை ஒதுக்கீடு செய்திருக்கின்றார். அதற்காக நான் அவருக்கு நன்றி செலுத்துகின்றேன். கல்வியறிவு பெற்றவர்களின் விகிதாசாரத்தில் எமது நாடும் முன்னணியில் இருக்கின்றது. இந்த நிலையை தொடர்ந்தும் பேண வேண்டுமென்ற நோக்கம் அரசுக்கு இருக்கின்றது. இது மகிழ்ச்சிக்குரியது.

போரிலே நாடு சிக்கியிருந்தபோதும் கல்வியின் மீதான அக்கறையை எமது நாடு இழக்கவில்லை. போர்ச் சூழலினால் வடக்கு, கிழக்கு மக்கள் மிக நெருக்கடியான, வளங்கள் குறைந்த வாழ்க்கையை வாழ்ந்த போதும் தமது கல்விச் செயற்பாடுகளை அவர்கள் மிகச் சிறப்பான முறையிலே மேற்கொண்டிருக்கின்றார்கள். அந்தக் காலகட்டத்தில் அப்பிரதேச மாணவர்களின் பெறுபேறுகள் இதற்குச் சான்றாக இருக்கின்றது. இது எமது மக்கள் கல்விமீது கொண்டிருக்கும் மதிப்பையும் கல்வியின் பெறுமதியைப் புரிந்திருப்பதையும் காட்டுகிறது. கல்வியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றுக்கும் அடித்தளமாகும். சிறந்த கல்வியே நாட்டில் நல்ல சிந்தனை களை உருவாக்கும். நல்ல மனிதர்களை உருவாக்கும், ஆற்றலுள்ளவர்களை உருவாக்கும். கல்வி மக்களின் ஆளுமையையும், திறமையையும் வளர்க்கும். சிறந்த கல்வியும் கற்பித்தலும் ஒரு நாட்டில் இருக்குமானால், அந்த நாட்டின் அறிவுத்திறனும் ஆக்கத்திறனும் மேலோங்கும். அதுமட்டுமல்ல, சமூகப்பொறுப்புணர்வையும் சக மனிதர்களுக்கிடையிலான உறவையும் அது ஏற்படுத்தும். அரசியல் பொருளாதாரம், அறிவியல், கலை என எந்தத் துறையின் வளர்ச்சிக்கும் கல்வியே அடித் தளமாகும். எமது நாட்டின் கல்வியில் மேலும் சீரமைப்புக்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றார்கள். சுய பொருளாதாரச் சிந்தனை தொடக்கம் இடைவெளியை அதிகமாகக் கொண்டிருக்கும் சமூகங்களுக்கிடையிலே புரிந்துணர்வையும் நேசிப்பையும் ஐக்கியத்தையும் உருவாக்கக்கூடிய கல்வி முறைமை ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென அவர்கள் கூறுகின்றார்கள். ஆகவே, இது குறித்து நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

கௌரவ தவிசாளர் அவர்களே!

இப்போது எமது நாட்டில் போர் முடிந்து ஒரு புதிய சூழல் தோன்றியுள்ளது. இந்தச் சந்தர்பத்தில், போர்ச் சூழலில் வசதிகளையும் வளங்களையும். பெறமுடியாதிருந்த பிரதேசத்திலுள்ளவர்கள் தங்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு விருப்பத்தோடு காத்திருக்கின்றனர். இது அவர்களுக்கு இன்று மிக முக்கியமான அவசியமான தேவையாக உள்ளது. குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் மீள்கட்டமைப்பையும் புனரமைப்பையும், மேற்கொள்ளும் திட்டத்தில் கல்விக்கான மீள்கட்டமைப்பும் புனரமைப்பும் சீராக்கல் நடவடிக்கைகளும் மிக மிக அவசியமானவை என்பதையே இங்கு நான் வலியுறுத்த விரும்புகின்றேன். இந்த நாட்டிலே மிகவும் பற்றாக்குறையான வளங்களோடு காணப்படும் மாவட்டங்களாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களே பெரிதும் இனங்காணப்பட்டுள்ளன. அங்குள்ள பாடசாலைகளில் இன்னும் போதிய அளவில் வகுப்பறைக் கட்டிடங்கள் இல்லாத நிலை காணப்படுகிறது. நாம் இந்த ஆண்டு மேற்கொண்ட முயற்சியின் காரணமாக, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு பஸில் ராஜபக்ஷ அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் 20க்கு மேற்பட்ட பாடசாலைகளில் வகுப்பறைக் கட்டிடங்கள் நிர்மானிக்கப்பட்டுள்ளன. அதற்காக நான் இச்சந்தர்ப் பத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு துறைசார்ந்த அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின்றேன். இவையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குள்ள சில பாடசாலைகளுக்குக் கிடைத்த முதற்கட்ட அவசர உதவிகளாகும். இதேவேளையில், எமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கிளிநொச்சிக்கு நேரில் விஜயம் செய்து அங்குள்ள நிலைமை களை அவதானித்துள்ளார். இதன்போது அவர் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் உட்பட சில பாடசாலைகளுக்கு குறுகிய காலத் துக்குள் புனரமைப்புச் செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார். அதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனாலும், அங்கே இன்னும் ஏராளமான தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளன. முக்கியமாக கிளிநொச்சி மாவட்டத்திலே ஒரு தேசியப் பாடசாலை இல்லாதிருப்பது அனைவரும் அறிந்ததே. ஆகவே, கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்துக்கு தேவையான வளங்களை வழங்குவதனூடாக மிக விரைவிலே அதற்கு தேசிய பாடசாலை என்ற அங்கீகாரத்தை வழங்கவேண்டும் என நான் இச்சந்தர்ப்பத்திலே மாண்பு மிகு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்களிடம் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

இங்குள்ள முக்கியமான பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், கணணி தொழில்நுட்பம் போன்ற பாடங்களை கற்பிப்பதற் குரிய ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை மிகப்பெரிய குறைபாடாக இருக்கின்றது. இக்குறைபாடு நீக்கப்பட வேண்டும். வெளிமாவட்டங் களிலிருந்து வரும் ஆசிரியர்கள் நீண்ட தொலைவிலிருந்து வந்து பணியாற்ற வேண்டியிருப்பதால் அவர்களுக்குரிய போக்குவரத்து வசதி களையும் நாங்கள் செய்துகொடுக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த விடயத்தையும் நாங்கள் கருத்திலெடுத்து செயற்பட வேண்டுமென்பதை நான் இச்சந்தர்ப்பத்திலே வலியுறுத்த விரும்புகின்றேன். அதுமட்டு மல்ல, நீண்ட தூரங்களிலிருந்து சேவையாற்ற வரும் ஆசிரியர்களுக்கு விடுதிகள் அமைத்துக் கொடுக்கப்படவேண்டும். நீண்ட காலமாக யுத் தத்தின் காரணமாக பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான தங்குமிட வசதிகள் சேதமாக்கப்பட்டிருப்பதனால் அடுத்த வருடம் இப்பாடசாலை களுக்கான விடுதிகளை அமைத்துக் கொடுப்பதற்காக விசேட நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென நான் இங்கு பிரேரிக்கின்றேன். இதேபோன்று இப்பாடசாலைகளுக்கு விஞ்ஞான ஆய்வு கூடங்கள், நூலகங்கள் என்பனவற்றை அமைப்பதற்குத் தேவையான வளங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். புதிய கற்கைநெறி களுக்காகவும் கணணிமுறைக் கற்கைநெறிகளுக்காகவும் பாடசாலை களுக்கு மின்சாரவசதி அவசரமாகத் தேவைப்படுகின்றது. ஆகவே, அவற்றுக்கு மின்சாரம் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்துகொடுக் கப்பட வேண்டும். அவ்வாறு மின்சாரம் வழங்கலில் காலதாமதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுமாயின், அப்பாடசாலைகளுக்கு காலதாமதமின்றி "ஜெனரேற்றர்"கள் அல்லது சோலர் மூலம் மின்சாரத்தைப் பெறக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அநேகமான பாடசாலைகளில் கட்டிடவளப் பற்றாக்குறை கணிசமான அளவில் தீர்க்கப்பட்ட போதும் இன்னும் பல பாடசாலைகளில் வகுப்பறைகள் பற்றாக்குறையாக காணப்படுகின்றன. சில பாடசாலைகளில் வகுப் பறைக்கட்டிடங்கள், இல்லாதிருப்பதனால் 2012ஆம் ஆண்டு காலப் பகுதியில் அவற்றை அமைத்துக்கொடுப்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். அத்துடன் அப்பாடசாலைகளுக்குத் தேவையான தளபாட வசதிகள், கணனி வசதிகள் போன்றனவற்றையும் ஆசிரிய நிலையங்களைப் புனரமைப்பதற்கான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்து வதுடன், மேலும் ஒரு முக்கியமான விடயத்தையும் இந்த அவையின் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

நீண்ட காலங்களில் வன்னிப் பிரதேசங்களில் தொண்டர் ஆசிரியர்க ளாகக் கடமைபுரிந்தவர்களை நிரந்தர ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கு வதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகள் மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாண்புமிகு அமைச்சர் பந்துல குணவர்த்தன மற்றும் வடமாகாண ஆளுநர் திரு. ஜி. ஏ. சந்திரசிறி ஆகியோரின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற போதிலும் அதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைப்பதற்குக் காலதாமதமாகின்றது என்பதை நான் இந்த அவையின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகின்றேன். எனவே, அந்தத் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர ஆசிரியர் நியமனங்களுக்கு உள்வாங்கக்கூடிய துரித ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தையும் நான் இங்கு வலியுறுத்துகின்றேன். ஏனெனில், நீண்ட காலமாக அவர்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்துக் காத்திருக் கின்றார்கள். அங்கு விஞ்ஞானம், ஆங்கிலம், கணிதம் மற்றும் கணிணி போன்ற சில பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு, நீண்டகாலமாக வேலையற்றிருக்கின்ற பட்டதாரிகளைக் கருத்தில் எடுக்குமாறும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

உயர்கல்வி தொடர்பான சில விடயங்களையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். கிளிநொச்சியில் யாழ். பல்கலைக்கழகத்தின் இரண்டு பீடங்களை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பாக கௌரவ உறுப்பினர் சிறிதரன் அவர்கள் இன்று இந்த அவையிலே பிரஸ் தாபித்தார். ஆனால், இந்த விடயம் சம்பந்தமாக ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அதாவது மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவானந்தா அவர்கள் மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு விடுத்த வேண்டுகோளின் பிரகாரம், கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தை அமைப்பதற்கும் ஏற்கனவே, அங்கு இயங்கிய விவசாய பீடத்தை மீள இயங்க வைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சியிலே, அறிவியல்நகர் என்ற இடத்திலுள்ள பாரிய நிலம் ஒதுக்கப்பட்டு, அந்தப்பொறியியல் பீடத்தை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அதன் ஆரம்ப கட்டட வேலைகளுக்காக உயர்கல்வி அமைச்சர் மாண்புமிகு எஸ். பி. திசநாயக்க அவர்கள் ஏற்கனவே நிதியொதுக்கீடு செய்திருக்கிறார் என்று நான் நினைக்கின் றேன். அந்த வகையில் யாழ். பல்கலைக்கழகப் பொறியியல் பீடம் 2012இல் பூரணத்துவம் பெறுவதுடன், 2013ஆம் கல்வியாண்டில் அங்கு மாணவர்கள் உள்வாங்கப்படுவார்கள் என்று நான் நம்புகின்றேன். இந்தப் பொறியியல் பீடத்தை அமைப்பதற்கும் விவசாயப் பீடத்தை மீள ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுத்த மேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் உயர்கல்வி அமைச்சர் மாண்புமிகு எஸ். பி. திசநாயக்க மற்றும் மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கும் நான் இச்சந்தர்ப்பத்தில் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

கௌரவ சிறிதரன் உரையிலுள்ள மேலும் சில விடயங்கள் தொடர்பாக வும் கருத்துச் சொல்ல வேண்டிய கட்டாயம் எனக்கு இருக்கின்றது. அவர் கிளிநொச்சியிலுள்ள அம்பாள்குளத்தில் விவேகானந்தா மகா வித்தியாலயம் அமைக்கப்பட்டது தொடர்பாகக் குறிப்பிட்டிருந்தார். அங்கு யுத்த காலத்தில் பிள்ளைகள் பராமரிப்பு நிலையமாகவும் முன் பள்ளியாகவும் இயங்கி, பின்னர் சிதைந்துபோயிருந்த கட்டிடத் தொகுதியில் அப்பிரதேச மக்களின் கோரிக்கைக்கிணங்க, தற்போது கல்வி அமைச்சின் அங்கீகாரத்துடன் ஒரு புதிய பாடசாலை அமையப் பெற்றிருக்கின்றது. அந்த பிரதேச மக்களின் நீண்டகால அபிலாசைகளின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட அப்பாடசாலையில் பல்வேறு வளங்களையும் ஏற்படுத்திக் கொடுத்ததன் மூலம் அந்த மக்களின் நீண்டகாலக் கோரிக்கை வெற்றிகரமாக நிறைவேறியிருக்கின்றது. ஆகவே, இதில் குறை கண்டுபிடிப்பதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அதேபோல அவர் இங்கு குறிப்பிட்ட இன்னொரு விடயம் ஆசிரியர் பற்றாக்குறை இருக்கின்றது என்பதை நானும் ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால், துரதிஷ்டவசமாக அந்தப் பிரதேசத்தில் நியமிக்கப்படும் ஆசிரியர்கள் ஏதோ ஒரு காரணத்தைக் கூறி, தங்கள் சொந்தப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்செல்வதன் காரணமாகவே அங்கு தொடர்ச்சியாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும் நான் குறிப்பிட விரும்புகின்றேன். அண்மையிலு[illegible]ட வட மாகாணத்துக்கு கிட்டத்தட்ட 450 நுண்கலைப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களூடாக வன்னி மாவட்டங்களிலுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட்டும் கூட, 81 பேர் அந்தக் கடமைகளைப் பொறுப்பெடுக்காமல் இருப்பது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டிருக் கின்றது. சில பாடங்களுக்கான ஆசிரியர்கள் பற்றாக்குறை இருப்ப தென்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இருந்தும், அந்தப் பிரதேசங் களுக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்கள் அந்த இடங்களுக்குச் செல்லாமல் தவிர்ப்பதுதான் நீண்டகாலமாக அந்தப் பிரதேசங்களின் கல்வி வளர்ச் சிக்கு மிகவும் பாதகத்தை ஏற்படுத்துகின்றது. இது தொடர்பாக ஆராய்வதற்கென அண்மையிலே கல்வி அபிவிருத்திக் குழுக்கள் நியமிக் கப்பட்டிருக்கின்றன. எதிர்காலத்தில் இந்தப் பிரதேசங்களிலுள்ள பாட சாலைகளின் அபிவிருத்தி மற்றும் அங்கு இடம்பெற வேண்டிய நட வடிக்கைகள் தொடர்பான பரிந்துரைகள் அந்தக் குழுக்களிடமிருந்து பெறப்படும். அந்தப் பரிந்துரையின் பிரகாரம்தான் எதிர்காலத்தில் வட மாகாணக் கல்வித் திணைக்களம் நெறிப்படுத்தும் என்பதையும் நான் இச்சந்தர்ப்பத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

மேலும் கௌரவ உறுப்பினர் அவர்கள் தனது சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பாகத் தனது கவலையை இங்கு வெளிப்படுத்தியிருந்தார். அந்தக் கவலையில் நானும் பங்குகொள்கின்றேன். ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமை மீறப்பட முடியாதது. ஆகவே, அந்தச் சம்ப வங்கள் தொடர்பான விடயங்கள் கருத்தில் எடுக்கப்பட வேண்டும். அதே நேரத்தில், கல்வி நிறுவனங்களில் அரசியல் இருக்க கூடாதென்ற கருத்தின் அடிப்படையில் சில நடவடிக்கைகள் அரசியல் வாதிகளால் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனென்றால், கடந்த காலங்களில் கல்வி நிறுவனங்கள் அரசியல் மற்றும் ஆயுதப் போராட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டதால் எமது கல்வியில் தாக்கங்கள் ஏற்படுத்தப்பட்டி ருக்கின்றன. குறிப்பாக கல்வி நிறுவனங்களிலிருந்து நூற்றுக்கணக்கான மாணவர்களது கல்வியை இடைநிறுத்தி ஆயுதப் பயிற்சிக்காக இழுத் துச் செல்லப்பட்ட நிலைமை இருந்தது என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். இதற்கான எச்சரிக்கை நடவடிக்கைகள் சில கல்வித் திணைக் களங்களால் அல்லது கௌரவ ஆளுநர் அவர்களால் எடுக்கப்பட்டிருக் கலாம். ஆகவே, கல்வி நிறுவனங்களை அரசியல் நடவடிக்கைகளுக் காக உபயோகிப்பதைப் பற்றியும் மாணவர்களிடத்திலேயே அரசிய லைத் தூண்டி அல்லது ஆபத்தை விளைவிக்கக்கூடிய விடயங்களைத் துபமிடுவதால் ஏற்படப்போகும் அபாய நிலைமையைப் பற்றியும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனத்தில் எடுத்தால், ஆளுநர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களினதோ கல்வித் திணைக்கள அதிகாரிகளினதோ தலையீடு இருக்காது என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக்கூற விரும்பு கின்றேன்.

கல்வி நிறுவனங்களின் இராணுவப் பிரசன்னம் தொடர்பாகவும் இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது. அந்தக் கருத்தை நானும் ஏற்றுக்கொள்கின் றேன். எந்த ஆயுததாரிகளும் - அது இராணுவமாகவோ அல்லது மாணவர்களிடையே ஆபத்தான வகையில் கருத்துக்களைப் பரப்பி அவர்களைக் கிளர்ச்சிக்கு தூண்டுபவர்களாக இருந்தாலும் - கல்வி நிறுவனங்களுக் குள் பிரவேசிக்கக்கூடாது. ஆனால், கடந்த காலங் களில் உயர்கல்வி நிறுவனங்களில் இருந்த மாணவர்களை ஆயுதப் பயிற்சிக்காக கூட்டிச் சென்றவர்களைக் கண்டிக்காதவர்கள், இன்றைய நடவடிக்கைகளை மட்டும் கண்டிப்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. கண்டிக்கும் அருகதை அவர்களுக்கு இருப்பதாக நான் கருதவில்லை. ஆகவே, இந்த நாட்டிலே கல்வி நிறுவனங்கள் சுயாதீன மாகவும் எந்த விதமான அழுத்தங்களுக்கும் உட்படாமலும் செயற்பட வேண்டும் என்ற கொள்கை யைத்தான் அரசாங்கம் கடைப்பிடிக்கும் என்று நம்புகின்றேன். அந்த வகையிலே இந்தக் கருத்தை நான் இங்கு முன்வைக்க விரும்பினேன்.

உயர்கல்வியைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறிய ஏராளமான பட்டதாரிகள் வேலையற்றவர்களாக இருக் கின்றார்கள். குறிப்பாக, வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலையற்றவர்களாக இருக் கிறார்கள். ஆகவே, உயர்கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் பட்டதாரிகளை உருவாக்குவதுடன் மட்டும் நின்றுவிடாமல், எதிர் காலத்தில் அவர்களுக்கான வேலை வாய்ப்பு ஏற்பாடுகள் தொடர்பான கரிசனையையும் கொண்டிருக்க வேண்டுமென்பதையும் நான் இங்கு வலியுறுத்திக்கூற விரும்புகின்றேன்.

ஏனென்றால், நீண்ட காலமாக வேலையற்ற பட்டதாரிகள் தேக்கம் நிலவுமானால் நாட்டில் ஓர் ஆரோக்கியமான சூழலை அது உருவாக் காது. ஆகவே, அதைக் கருத்தில் எடுத்துச் செயற்பட வேண்டுமென்று மாண்புமிகு உயர்கல்வி அமைச்சர் அவர்களிடம் கேட்டு சந்தர்ப்பத்துக்கு நன்றிகூறி, விடைபெறுகின்றேன். நன்றி.

- *05 டிசம்பர் 2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்த் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையிலான நீர் விநியோகத் திட்டங்களை மேற்கொள்ளவேண்டும்

கௌரவ தவிசாளர் அவர்களே!

எனக்குக்கிடைத்த இந்தக் குறுகிய நேரத்தில் சில விடயங்களை மாண்புமிகு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன். ஆசிய அபிவிருத்தி வங்கியினுடைய ADB 6 திட்டத்தின்கீழ், பாரிய நிதி ஒதுக்கீட்டு மூலம் - 21 பில்லியன் ரூபாய் செலவில் - யாழ் மாவட்டத்துக்கு நீர் விநியோகம் செய்வது தொடர்பிலான அரசாங்கத்தின் திட்டத்தை நான் பாராட்டுகின்றேன். இதனூடாக யாழ் மாவட்டத்திலுள்ள 3 இலட்சம் மக்களுக்கு சுத்தமான குடிநீரைப் பெறுவதற்கான வாய்ப்பு எட்டப்பட்டிருக்கின்றது. இத்திட்டதின் முழுமையான செயற்பாடு தொடர்பாக நான் இச்சபையின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். குறிப்பாக, இத்திட்டத்துக்கு இரணைமடுக்குளத்திலிருந்து நீர் விநியோகம் செய்யப்படவிருப்பதால் குறிப்பாக கிளிநொச்சி மாவட்ட மக்களுடைய குடிநீர்த்தேவையை பூர்த்தி செய்வ தற்கான நடவடிக்கைகளை கருத்தில் கொள்ளவேண்டும். அவர்களின் உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும். குறிப்பாக பூநகரி மற்றும் கண்டா வளைப் பிரதேசங்களில் குடிநீர்ப் பிரச்சினை மிகப்பெரிய அளவில் காணப்படுகின்றது. கடந்த கால வரட்சியின் போது நாங்கள் அதனை நேரடியாக அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எனவே, "பூநகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டாவளை, பச்சிலைப்பள்ளி போன்ற பிரதேசங்களிலுள்ள மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ததற்கு பிற்பாடுதான், அந்த நீர் யாழ். மாவட்டத்தை சென்றடைய வேண்டும். மேலும், அங்குள்ள விவசாய நிலங்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாதவாறு அக்குளத்து நீர் கொண்டுசெல்லப்பட வேண்டும்." என்ற அம் மக்களின் வேண்டுகோளை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவிக்க விரும்புகின்றேன். அதேவேளை, கிளிநொச்சி நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதி களுக்கு நீர் விநியோகம் செய்வதற்கு இரத்தினபுரம் என்ற இடத்தில் நீர்த்தாங்கியொன்று அமைக்கப்படவுள்ளது. JICA கருத்திட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் இச்செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை நான் இந்தச் சபையின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகின்றேன். அவ்வாறே, பரந்தன் பகுதிக்கான நீர் விநியோகத் திட்டமும் JICA திட்டத்தினூடாக நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றது. எனினும் திட்ட அதிகாரிகளின் கருத்துப்படி, இதனை ஆரம்பிப்பதற்கு இன்னும் 3ஆண்டுகள் செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இவற்றை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதிக காலதாமதம் ஏற்படின், அம்மக்களுடைய நீர்த் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையிலான நீர் விநியோகத் திட்டங்களை தேசிய நீர் வடிகாலமைப்பு சபையினூடாக மேற்கொள்ள வேண்டுமென நான் இங்கு வலியுறுத்துகின்றேன்.

அதுபோலவே, நீர்ப்பாசனம் தொடர்பான சில விடயங்களையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அக்கராயன்குளம் மிகப்பெரிய நிதியொதுக்கீட்டுக்கூடாக புனரமைக்கப்பட்டது. கடந்த வாரம் பெய்த கடும் மழையினால் அக்குளத்தின் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டன. அந்த தண்ணீர் பாய்ந்துகொண்டிருக்கும்போது அதன் வாய்க்கால்களிலும் அணைக்கட்டுக்களிலும் வெடிப்புக்கள் ஏற்பட்டதை விவசாயிகள் அவதானித்திருக்கின்றார்கள். நான் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரி களிடம் அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்டபோது, "அவை கட்டப்பட்ட முறையில் ஏற்பட்ட தவறுதான் அதற்குக் காரணம்" என்று தெரிவிக்கப்பட்டது. ஆகவே, பல கோடிக்கணக்கான ரூபாய் நிதியைக்கொண்டு இவ்வாறான திட்டங்கள் செயற்படுத்தும்போது, இவற்றைக் கண்காணிப்பவர்கள், பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், ஒப்பந்தக்காரர்கள் போன்றோர் செய்யும் மோசடி களினால் அவற்றின் உண்மையான பயனை மக்கள் பெற முடியாத ஒரு சூழ்நிலை உருவாகின்றது. ஆகவே, எதிர்காலத்தில் இவ்வாறான திட்டங்கள் முறையான கண்காணிப்புக்குட்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். எந்தவொரு திட்டத்திற்கும் Monitoring என்பது மிக மிக முக்கியமானது. ஆகவே, 21 பில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டில் மிகப்பெரிய கடன் அடிப்படையிலான ADB 6 என்ற இந்தத் திட்டத்தைச் சரியான கண்காணிப்பூடாகச் செயற் படுத்தி அதன் உண்மையான பயனை மக்கள் அனுபவிக்கக்கூடிய ஒரு சூழலை வகுக்க வேண்டும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்துக்கு கொண்டுவந்தது, சந்தர்ப்பம் வழங்கியமைக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். வணக்கம்.

- *06 டிசம்பர் 2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவுகளை எதிர்கொண்ட விவசாயிகள் உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள்

கௌரவ தவிசாளர் அவர்களே!

கமத்தொழில் அமைச்சு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு, சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு மற்றும் கால்நடை வளர்ப்பு கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சு ஆகியவற்றுக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் நான் ஒரு விவசாய மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்துபவன் என்ற ரீதியில் அந்த மாவட்ட மக்களின் அபிலாஷைகளை இந்தச் சபையின் ஊடாக வெளிப்படுத்தலாம் என எண்ணுகின்றேன். அந்த வகையில் குறிப்பாக, கமத்தொழில் பற்றிய ஒரு சில விடயங்களை முன்வைக்க விரும்புகின்றேன்.

கிளிநொச்சி மாவட்ட பிரதேசங்கள் யுத்த சூழ்நிலைகளால் முற்றுமுழுதாக அழிந்து போனவையாகும். அந்த மாவட்டத்திலே மீள்குடியேற்றத்திற்குப் பிறகு மக்களின் வாழ்வாதாரமானது விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு உதவித் திட்டங்களின் ஊடாக அரசாங்கம் பல்வேறு உதவிகளை வழங்கியிருந்தது. அதன் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் கிட்டத்தட்ட 90 வீதமான நிலப்பரப்பில் கடந்த பெரும் போகத்தில் நெற்செய்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இம்முறையும் கணிசமானளவு நிலப் பரப்பில் நெற்செய்கை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதாவது மீள் குடியேற்றத்தின் பின்னர் அந்த விவசாயிகள் இரண்டு தடவைகள் பெரும்போகப் பயிர்ச் செய்கையையும், சிறுபோகப் பயிர்ச் செய்கையையும் முடித்துவிட்டு மூன்றாவது தடவையாக இம்முறை பெரும்போகப் பயிர்ச் செய்கைக்காகத் தயாராகிக் கொண்டிருக்கின்ற வேளையிலேயே இந்த விவசாயிகளின் எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகள் குறித்து நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தங்களது எல்லா உடமைகளையும் இழந்த நிலையில்தான் இந்த மக்கள் மீள்குடியேறினார்கள். அந்தவகையில் அவர்களின் வாழ்வா தாரத்தை மேம்படுத்துவதற்கு இன்னும் சில காலத்திற்கு அவர்களுக்கு அரசாங்கத்தின் உதவிகள் தேவைப்படுகின்றன. முப்பது வருடகால யுத்தமானது அங்கு கமத்தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற் குரிய அடித்தளங்களையெல்லாம் அழித்துவிட்டது. எனவே, உரிய வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம்தான் அவர் களை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரலாம். அந்த அடிப்படை யில் அரசின் உதவிகளை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார் கள். கடந்த காலங்களில் விவசாயிகளுக்கு விதைநெல் மற்றும் மானிய முறையில் உரம் போன்றன வழங்கப்பட்டன. அந்த உதவிகள் அவர்களுக்குத் தொடர்ச்சியாக இன்னும் சில காலங்களுக்கு வழங்கப் படவேண்டும் என நான் வலியுறுத்துகின்றேன். துரதிருஷ்டவசமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட அதிக மழை போன்ற இயற்கை அழிவுகளால் பெரும்பாலான விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றார் கள். அதனால் தாம் பெற்ற வங்கிக் கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலையில் அக் கடன்களை இரத்துச் செய்யுமாறு அவர்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள். ஆகவே, அவர்களுக்கு நஷ்டஈடு வழங் கும் வகையிலான ஏதாவது ஏற்பாடுகளைச் செய்வதற்கு கமத்தொழில் அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும் என நான் இங்கு வலியுறுத்து கின்றேன்.

கமத்தொழில் திணைக்களத்தின் சேவைகளை விவசாயிகள் பூரணமா கப் பெற்றுக்கொள்ள வேண்டிய வகையில் அங்குள்ள வெற்றிடங் களை நிரப்ப வேண்டிய அவசியம் குறித்துநான் இந்த சபையின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத் திலே பெரும்பாலான உத்தியோகத்தர்கள், DOs 6 பேருக்கான வெற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதேபோல் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான 7 வெற்றிடங்களும், தொழில்நுட்ப உத்தி யோகத்தருக்கான 2 வெற்றிடங்களும் நிரப்பப் படாமல் இருக்கின்றன. அத்தோடு அரசின் விவசாய நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு உதவு பவர்களான விவசாய ஆராய்ச்சி உதவியாளர்களின் வெற்றிடங்களும் நிரப்பப்படவில்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் அத்தகைய 65 வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அவ்வாறே யாழ். மாவட்டத்திலும் கூட பெரும்பாலான வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அங்கு முகாமைத்துவ உதவியாளர்களுக்கான 2 வெற்றி டங்களும், விவசாய ஆராய்ச்சி உதவியாளர்களுக்கான 437 வெற்றி டங்களும் காணப்படுகின்றன. இந்த இரண்டு மாவட்டங்களிலும் சேர்த்து விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்காக 500க்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் இருக்கின்றன. இவை நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருப்பது குறித்து அரசு உரிய கவனம் செலுத்தவேண்டும்.

தற்போது அங்குள்ள சிறிய குளங்கள் புனரமைப்பு செய்யப்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்படுகிறது. யுத்தத்திற்குப் பிறகு கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல சிறிய மற்றும் பெரியகுளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டாலும் கூட இன்னும் ஏராளமான குளங்கள் புனரமைப்புச் செய்யப்படாமல் இருக்கின்றன. கிளிநொச்சி மாவட்டத் தில் உள்ள கிட்டத்தட்ட 125 குளங்களை விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தக் கூடியவகையில் புனரமைத்துத் தரவேண்டும் என்ற அப்பிரதேச விவசாயிகளுடைய வேண்டுகோளை நான் இச்சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். அவ்வாறே அங்கு 2,000 ஏக்கருக்கும் மேற்பட்ட மேட்டுப் பயிர்ச்செய்கை நிலங்கள் பயன் படுத்தப்படாமல் இருக்கின்றன. எனவே, அப்பிரதேசத்தில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை அமுல்படுத்துவதன் ஊடாக மிகவும் வருமானம் கிடைக்கும் வகையில் அந்த மண்ணை விவசாயிகள் பயன் படுத்தக்கூடியதாக இருக்கும். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டபோதிலும், அதனை செயற் படுத்துவதில் காலதாமதம் காணப்படுகிறது. ஆகவே, விவசாயத் திணைக்களமும், நீர்ப்பாசனத் திணைக்களமும் இணைந்து அங்கு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை அமுல்படுத்துவதற் குரிய நடவடிக்கைகளை விரைவில் எடுக்க வேண்டும் என நான் இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து நெற்பயிர்ச் செய்கையாளர்கள் தங்களது விளைபொருட்களை அறுவடை செய்யும் காலங்களில் அவர்களுக்குப் போதிய சந்தை வாய்ப்புக் கிடைக்காமல் இருப்பது பாரியதொரு பிரச்சினையாகும். இதனை நீக்கும் வகையில் அங்கு நெல் சந்தைப்படுத்தும் சபையினால் நெல் கொள்வனவு செய்யப்பட்டாலும் கூட அவ் விவசாயிகளினுடைய உற்பத்திகளை முழுமையாக கொள்வனவு செய்து களஞ்சியப் படுத்தக்கூடிய அளவுக்கு களஞ்சியசாலை வசதிகள் இல்லை. இந்த நிலையில் அவர்கள் கண்துடைப்புக்காகக் குறைந்தளவான நெல்லைத் தான் கொள்வனவு செய்கின்றார்கள். ஆகவே, அங்குள்ள விவசாயிகளின் ஏழ்மை நிலையைப் பயன்படுத்தி தனியார் வியாபாரிகள் தாங்கள் தீர்மானிக்கும் விலைக்கே குறைந்த விலைக்கே அவ்விவசாயிகளுடைய நெல்லைக் கொள்வனவு செய்யும் நிலை இன்றும் தொடர்கிறது. தங்களது உற்பத்திகளுக்கு நியாயமான விலை கிடைக்காது என்ற எண்ணம் அவர்களின் மனதில் உருவாகும்போது அவர்களினால் பூரண திருப்தியுடன் நெற்செய்கையில் ஈடுபடமுடியாத நிலை ஏற்படும். எனவே இவ்வாறான ஒரு சூழ்நிலைக்கு வழிவகுக்காமல் அந்த விவசாயிகள் அந்த விவசாயிகள் பயன்படும் வகையில் அவர்களுடைய உற்பத்தியை முழுமையாகவும், நியாயமான முறையிலும் கொள்வனவு செய்து அவர்களுக்குச் சிறந்த சந்தைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று நான் இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

குறிப்பாக, வன்னிப் பிரதேசமாவட்டங்கள் மிகவும் வளமான மண்ணைக் கொண்டவை. யுத்தத்துக்கு முன்னரான காலப்பகுதியில் இலங்கையின் விவசாய நடவடிக்கைகளில் - அது நெற்பயிர்ச் செய்கையாக இருந்தால் என்ன. ஏனைய பயிர்ச் செய்கைகளாக இருந்தால் என்ன முன்னிலை வகித்த வடமாகாணம், நீண்ட காலயுத்தத்தின் காரணமாக இன்று மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது. எனவே, அங்கு விசேட திட்டங்களின் மூலம் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவித்தால் இந்த நாட்டினுடைய தேசிய உற்பத்தியில் வட மாகாண மக்களும் கணிசமானளவு பங்களிப்பை செய்யக்கூடிய நிலை ஏற்படுவதுடன், நாட்டினுடைய தேசிய வருமானத்திலும் கணிசமான அளவு முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் என நம்புகிறேன். எனவே, அதற்குரிய நடவடிக்கைகளை விவசாயத் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ள வேண்டும் என நான் இங்கு வலியுறுத்துகின்றேன்.

அடுத்து, நான் இங்கு தெங்கு அபிவிருத்தி தொடர்பான சில விடயங்களைக் கூறலாமென நினைக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் ஜகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புஷ்பகுமார அவர்கள் வடமாகாணத்திலே தெங்குபயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதற்காக அவருக்கு நான் இந்தச் சபையில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறான பல்வேறு ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் அங்கு தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டும் என நான் அவரை வேண்டிக்கொள்கிறேன். வட மாகாணத்தைப் பொறுத்தவரை கடந்த 2002 ஆம் ஆண்டு பெறப்பட்ட புள்ளிவிபரங்களின் அடிப்படையில் அங்கு 85,000 ஏக்கர் நிலத்தில் தெங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், கடந்தகால யுத்தத்தின் பொழுது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலே 47,500 ஏக்கர் வரையிலான நிலங்களில் இருந்து பயிர்கள் அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அப்பிரதேசங்களில் 40,000 ஏக்கர் நிலப்பரப்பு தென்னைப் பயிர்ச் செய்கைக்கு ஏற்றவையாக இனங்காணப்பட்டிருக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 1978 - 79 காலப்பகுதியில் எற்பட்ட சூறாவளி அழிவுகளைச் சீர்செய்யும் வகையில் அப்பிரதேசங்களில் தென்னை மீள் நடுகைக்காக விசேட திட்டம் ஒன்றை அரசு நடைமுறைப் படுத்தியதைப் போன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் யுத்த காலத்தில் அழிவுகளுக்குள்ளான கிட்டத்தட்ட 47,500 ஏக்கர் தென்னைப் பயிர்ச்செய்கை நிலங்களிலும் தென்னை நடுகைக்கேதுவான பிரதேசம் என இனங்காணப்பட்டுள்ள 40,000 ஏக்கர் நிலப்பரப்பில் விசேட திட்டம் ஒன்றினூடாகத் தென்னைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உகந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கால்நடைகள் தொடர்பாக இங்கு சில விடயங்களைக் குறிப்பிட வேண்டும். வன்னிப் பிரதேசத்தில் உள்ள கால்நடைகள் யாவும் திறந்த வெளி மேய்ச்சல் நிலங்களிலேயே வளர்க்கப்படுகின்றன. அங்கு மேய்ச்சல் நிலங்களுக்கு உகந்த பிரதேசங்கள் ஒதுக்கப்பட வேண்டியுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல கடந்த காலங்களில் கிளிநொச்சி மாவட்டத்தில் பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக நவீன வசதிகளுடன் பால் கொள்வனவு நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. பின்னர் ஏற்பட்ட யுத்த சூழ்நிலைகளின் காரணமாக அது முற்றாக அழிவுற்ற நிலையில் காணப்படுகிறது. ஆதனை மீள்நிர்மாணம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட நிலையிலும், இன்று வரையிலும் அதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள்கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்படாத நிலையிலேயே காணப்படுகிறது. அதேப பால் கொள்வனவு நிலையம் உடனடியாக மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப் படுமானால் அது அப்பிரதேசங்களில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட் டுள்ள மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதனைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். மேலும், வடமாகாணத்தில் உள்ள கால் நடைகள் இறைச்சிக்காக கடத்தப்படும் சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. தினமும் நூற்றுக்கணக்கான கால்நடைகள் இவ்வாறு கடத்தப்படுகின்றன. ஆகவே, இந்த அமைச்சு பொலிஸாரு டனும் ஏனைய துறைசார் பாதுகாப்புத் தரப்பினருடனும் இணைந்து இவ்வாறு கால்நடைகள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கடந்த காலங்களில் பூநகரியில் 1,500 ஏக்கர் நிலப் பரப்பில் முந்திரிகைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவை நாட்டில் நிலவிய யுத்தம் காரணமாக பராமரிக்கப்படாமல் விடப்பட்டுள்ளன. எனவே, முந்திரிகைக் கூட்டுத்தாபனம் அதனை முழுமையாகப் பொறுப்பெடுத்து உரிய முறையில் மீள் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும் என்பதனையும் இங்கு வலியு றுத்தி எனக்கு பேச சந்தர்ப்பமளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

● *07 டிசம்பர் 2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கிலே மீன்பிடித் துறையை மேலும் வலுப்படுத்த வேண்டும்

கௌரவ தவிசாளர் அவர்களே!

கடற்றொழில் நீர்வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தமைக்காக மகிழ்ச்சியடைகின்றேன். யுத்தத்திற்கு பின்னர் வடக்கு, கிழக்கிலே கடற்றொழில் அபிவிருத்தி மிகவும் வேகமாக வளர்ச்சியைக் கண்டுள்ளது. இலங்கையின் மொத்த கடற்றொழில் வளர்ச்சியிலே குறிப்பாக வடமாகாணம் மிகவும் வேகமாக அதிக உச்ச வளர்ச்சியை எட்டியிருப்பதை இந்த புள்ளிவிபரங்களிலிருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது. வடக்கு, கிழக்கிலே மீன்பிடித் துறையை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்பதற்காக கடந்த வருடத்துக்கான வரவு செலவுத்திட்டத்தைப் போலவே, இந்த வரவு செலவுத் திட்டத்திலும் இந்த அமைச்சுக்காக மிக அதிகளவிலான தொகைப் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை நான் வரவேற்கின்றேன். இதன் மூலம் நீண்டகால யுத்தத்தினால் அழிவு நிலைக்குச் சென்றுள்ள வடக்கு, கிழக்கு கடற்றொழில் மேலும் வளர்ச்சியடையும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது. கௌரவ அமைச்சர் அவர்களுடைய தீவிர உழைப்பின் பயனாகத்தான் கடற்றொழில் வளர்ச்சியடைந்து அதிக பயனைத்தந்துள்ளதென நாம் நம்புகின்றோம். எனவே எமது கடற்றொழில் சமூகத்தினர் சார்பாக கௌரவ அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி யைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அவையினூடாக எமது கடற்றொழிலாளர்களின் மேலும் பல்வேறு தேவைகள் தொடர்பில் கௌரவ அமைச்சர் அவர்களுடைய கவனத்துக்கு கொண்டுவர விரும்புகின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் அந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

கடந்த யுத்த காலத்தில் கடற்றொழில் சமூகத்தினர் மிகப்பெரிய பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்தார்கள். குறிப்பாக யுத்த காரணங்களினால் கடலில் மீன் பிடிப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்த நிலையில் அவர்கள் மிகவும் துன்பியல் வாழ்க்கையே வாழ்ந்துகொண்டிருந்தார்கள். ஆனால், யுத்தம் முடிவுக்குகொண்டுவரப்பட்ட பின்னர் அவர்களுடைய வாழ்க்கையில் ஒளி ஏற்பட்டது. அவர்கள் மீண்டும் சுதந்திரமாகக் கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதற்கான சூழல் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது. இருந்தாலும் அவ்வப்போது அவர்களுக்குச் சில தாக்கங்களும் ஏற்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. குறிப்பாக, "பாஸ்" நடைமுறை மற்றும் மீன்பிடிக்கான நேரக்கட்டுப்பாடு போன்ற விடயங்கள் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்கு மேலும் தடைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. கடற்றொழிலாளர்களுக்குள்ள இந்தத் தடைகள் அகற்றப்பட வேண்டும். அவர்களுக்குள்ள தேவையற்ற சிரமங்கள் நீக்கப்பட வேண்டும். இந்த விடயங்கள் ஏற்கனவே இந்த அவையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. கௌரவ அமைச்சர் அவர்களால் இந்தத் தடைகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை நிச்சயமாக மேற்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை நான் இங்கே வெளிப்படுத்துகின்றேன்.

மீள்குடியேற்றப் பகுதிகளில், குறிப்பாக வன்னிப்பகுதியான முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலும் வடமராட்சி கிழக்கு, மாதகல் போன்ற பகுதிகளிலும் மீள்குடியேற்றப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான வாழ்வாதார உதவிகள் தொடர்பாகவும் நான் இந்த அவையின் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். உண்மையிலேயே கடற்றொழிலாளர்களின் வாழ்வாதார உதவிப்பெறுமதி என்பது மிகவும் அதிகமானதுதான். அதனாலோ என்னவோ அரசாங்க உதவித் திட்டமாக இருந்தாலென்ன, நன்கொடை நிறுவனங்களின் உதவித் திட்டமாக இருந்தாலென்ன அந்த உதவித் திட்டங்கள் சகல கடற்றொழிலாளர்களுக்கும் சென்றடைவதில் பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக, ஆறு இலட்சம் வரையிலான நிதியுதவி கிடைத்தால்தான் அவர்கள் தமது வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்பக் கூடியதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். இருந்தபோதிலும் இவ்வளவு பெறுமதியான வாழ்வாதார உதவியைக் கொடுப்பதென்பது நடைமுறைப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதையும் நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். இதற்காகத்தான் அமைச்சு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான இலகு கடன் அடிப்படையில், அதாவது கிட்டத்தட்ட 5 சதவீத வட்டியுடனான வங்கிக் கடன்களை ஏற்பாடு செய்திருந்தது. ஆனால், அந்த விடயம் நடைமுறைப்படுத்தும் போது அவர்களுக்கு உடனடியாக அந்தப் பயன் கிடைக்கக் கூடியவாறான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. குறிப்பாக ஏராளமான கடற்றொழிலாளர்கள் தங்களது கடற்றொழில் சங்கங்களூடாகவும் பணிப்பாளர்களின் சிபார்சுகளினூடாகவும் அந்த வங்கிக் கடன்களுக்கு விண்ணப்பித்திருக்கின்றார்கள். ஆனால், அந்தக் கடனை வழங்குவதில் வங்கிகள் தேவையற்ற காலதாமதங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதையும் நான் கௌரவ அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இன்னமும் கடற்றொழிலுக்கு அனுமதிக்கப்படாத பிரதேசங்கள் இருக்கின்றன. அதாவது சுண்டிக்குளம் மற்றும் கட்டைக்காட்டுக்கு அப்பாலுள்ள கடற்பகுதிகளில் மீன்பிடிப்பதற்கான அனுமதி இன்னமும் வழங்கப்படவில்லை. இதனையும் நீங்கள் கருத்திலெடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல கடந்த காலங்களில் வடமராட்சி கிழக்கில் கடலோரப்பகுதிகளில் வாடிகளை அமைத்துத்தான் கடற்றொழிலாளர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார்கள். ஆனால், இப்போது அந்த அனுமதி கடற்படையினரால் மறுக்கப்படுகின்றது. கடற்கரையோரங்களில் வாடிகளை அமைத்துக் கடற்றொழிலில் ஈடுபட்டால்தான் அவர்கள் தமது தொழிலில் ஒரு முன்னேற்றத்தைக் காணமுடியும். நீண்டதூரம் கடலில் பயணம் செய்துவிட்டு கரைகளுக்குத் திரும்பி வேலைகளைத் தொடர்வதற்கு வசதியாகத்தான் அவர்கள் வாடி அமைத்தார்கள். இன்று தடைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த நிலைமையைப் போக்குவதற்கு கௌரவ அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்னும் ஓரிரண்டு விடயங்களை நான் இந்த அவையின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன். கிளாலி கடற்கரைப் பிரதேசத்தில் கிட்டத்தட்ட 20 ஏக்கர் நிலப்பரப்பு கடற்படை முகாம் அமைப்பதற்காகக் கடற்படையினரால் கோரப்பட்டிருக்கின்றது. ஆனால், அண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாதத்துக்கு முன்புதான் கிளாலிப் பிரதேசத்தில் மீள் குடியேற்றம் நடைபெற்றிருக்கின்றது. அந்த நிலைமையில் அந்தப் பிரதேசத்தில் 20 ஏக்கர் நிலம் இழக்கப்படுவது என்பது அங்குள்ள கடற்றொழிலாளர் களின் வாழ்வாதாரத்தை மிகவும் பாதிக்கக்கூடிய விடயம். அதுமட்டு மல்ல, அந்த 20 ஏக்கர் காணியின் பெரும் பகுதி நிலப்பரப்பு அங்குள்ள தேவாலயத்துக்குச் சொந்தமானது. இருந்தும் அதனைச் சுவீகரிப்பதற் குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிய முடிகின்றது. அதுமட்டுமல்ல, கிளாலியில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை அமைப்ப தற்கும் கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு அங்கீகாரம் வழங்கியிருக்கின்றது. எனவே, கௌரவ அமைச்சர் அவர்கள் இவ்விடயத்தில் தலையிட்டு அதனைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென நான் இங்கு வலியுறுத்துகின்றேன். அவ்வாறே, மாதகல் பிரதேசத்திலும் J-152 கிராமசேவையாளர் பிரிவில் கிட்டத்தட்ட 2.1 சதுர கிலோமீற்றர் பகுதியில் கடற்படைத் தளமொன்று அமைப் பதற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திடம் காணி கோரப்பட்டிருக் கின்றது. அண்மையில், இப்பகுதியில் 258 குடும்பங்களை மீள்குடியேற்று வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால், தற்பொழுது அவர்களுடைய மீள்குடியேற்றம் கேள்விக்குறியாகியுள்ளது. கடந்த காலங்களில் அப்பிரதேசத்தில் 325 கடற்றொழிலாளர் குடும்பங்கள் வாழ்ந்திருக்கின்றனர். அப்பிரதேசத்தில் மகாவித்தியாலயம் உப - தபால் அலுவலகம், கூட்டுறவுச் சங்கங்கள், வணக்கஸ்தலங்கள் சன சமூக நிலையங்கள் என்பன இருந்திருக்கின்றன. தற்பொழுது கடற்படை முகாம் அமைப்பதற்காக அப்பகுதியினை உயர்பாதுகாப்பு வலயமாக அறிவித்திருக்கின்றார்கள். இப்பிரதேசம் கடற்றொழிலில் அதிக வளர்ச்சி கண்ட ஒரு பிரதேசம். எனவே இவ்விடயம் தொடர்பாக கௌரவ அமைச்சர் அவர்கள் பாதுகாப்பு தரப்பினருடன் கதைத்து அங்கு கடற்படை முகாம் அமைப்பதனைத் தடுப்பதற்கு முன்வர வேண்டு மென்று நான் இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன். அதேபோல், மயி லிட்டிப் பிரதேசத்தையும் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப் படுத்தப்படவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இப்பிரதேசம் கடற்றொழிலில் வளர்ச்சியடைந்த ஒரு பிரதேசமாகும். இவ்விடயமா னது, அப்பிரதேச மக்கள் மத்தியில் பரபரப்பையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது. எனவே, கௌரவ அமைச்சர் அவர்கள் இப்பிரதே சங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து, இவ்விடயம் தொடர்பாக அங் குள்ள கடற்றொழில் சங்கங்களுடனும் சமாசங்களுடனும் பேச்சுக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தி, அவர்களது உணர்வுகளைப் புரிந்துகொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன்.

அடுத்து ஆழ்கடலில் நீண்ட நாட்கள் தங்கியிருந்து மீன்பிடிக்கும் மீன் பிடிக் கலங்களை வடபகுதி மீனவர்களுக்கும் பெற்றுக்கொடுப்பதற்கு நீங்கள் உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றீர்கள். எனினும், இக் கலங்களைப் பயன்படுத்தி மீன்பிடிக்கலங்களைப் பயன்படுத்தி மீன்பிடித் துறைமுகத்தை அமைப்பது மிக மிக அவசியமாகும். ஏற்கனவே, வடமாகாண கடற்றொழில் சமாசத்துக்கும் வழங்கப்பட்ட கலங்கள் நீர்கொழும்பு மீன்பிடித் துறைமுகத்திலே நிறுத்தி வைக்கப்பட்டிருக் கின்றன. அதனை வடபகுதிக்கு கொண்டுசென்று மீன்பிடிப்பதற்கு உரிய துறைமுக வசதிகள் இல்லாமையினால், காலதாமதம் ஏற்படுகின்றது. எனவே, கௌரவ அமைச்சர் அவர்களே, நீங்கள் இவ்விடயம் தொடர்பி லும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறே, உடைந்த நிலை யிலுள்ள படகுகளை திருத்தி அமைப்பதற்கும் நிலையமொன்றை வட மாகாணத்தில் அமைப்பது மிக மிக அவசியமாகும். கடந்த காலங்க ளில் சீநோர் நிறுவனத்தினால் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எனினும், தற்பொழுது சீநோர் நிறுவனம் தங்களுடைய அமைச்சின்கீழ் இல்லாதபடியினால், இதற்கு ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்ய வேண்டு மென நான் உங்களை வலியுறுத்துகின்றேன்.

இச்சபையில் வடமாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்களால் வலியுறுத் தப்பட்ட இன்னொரு விடயத்தையும் நான் இங்கு குறிப்பிட வேண்டும். அதாவது, எமது வடபிராந்திய கடற்பிரதேசத்தினுள் இந்திய மீனவர்க ளின் வருகையினால் அப்பிரதேசத்திலுள்ள மீனவர்களுடைய தொழில் பாதிக்கப்படுகின்றது. எனவே, இது விரைவாகத் தீர்க்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இல்லாவிடில், தினமும் ஏராளமான கடற்றொழிலா ளர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும். இது தொடர்பில் இலங்கை அரசாங்கம் இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதனூடாக ஒரு சுமுகமான தீர்வு எட்டப்பட வேண்டும். என்பதை நான் இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன்.

ஏற்கனவே கௌரவ உறுப்பினர் வினோ அவர்கள், முல்லைத்தீவு மாவட்டத்திலே கரைவலை இழுப்பதற்கான அனுமதி - உரிமம் - வழங்கப்படாமை தொடர்பாகக் குறிப்பிட்டார். 30வருட நீண்டகால யுத்தம் காரணமாகக் கடந்த காலங்களில் அந்த உரிமத்தைப் பெறுவதற் கான ஒரு சூழல் அந்த கடற்றொழிலாளர்களுக்கு இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால், இன்று நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் சட்டதிட்டங்கள் ஊடாக அவர்கள் அந்த உரிமத்தைப் பெறுவதில் சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் அவர்களுக்கு கடற்றொழிலில் ஈடுபடுவது பிரச்சினைக்குரிய ஒன்றாக இருக்கின்றது. இதேவேளையில், வெளிமாவட்டங்களிலிருந்து வந்து அங்கு கரைவலைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் உள்ளூர்த் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்கியிருக்கிறார்கள். ஆகவே, இது விடயத்தில் அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதுடன், அவர் அதனைச் செய்வாரென்ற நம்பிக்கையும் நான் இங்கு வெளிப்படுத்துகின்றேன்.

அது மட்டுமல்ல, முல்லைத்தீவு மாவட்டத்தின் மாத்தளன் தொடக்கம் வட்டுவாகல் வரையிலான கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்கான அனுமதி பாதுகாப்புத்தரப்பினரால் இதுவரை வழங்கப்படவில்லை. இது குறித்தும் அமைச்சரவர்கள் கவனத்திலெடுக்க வேண்டும். கௌரவ அமைச்சரவர்களே, கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு பாதுகாப்பு அமைச்சுடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளின் போது காணப்படும் இணக்கப்பாடுகள் நடைமுறையில் செயற்படுத்தப்படுவதில்லை. எத்தனையோ பேச்சுவார்த்தைகளில் அமைச்சருடன் நானும் கலந்துகொண்டிருக்கின்றேன். "பாஸ்" நடைமுறை தேவையில்லை. Sylinder பாவனை மூலம் மீன்பிடிப்பதற்கு யாருக்கும் MOD Permission கொடுப்பதில்லை, என்றெல்லாம் அங்கு உறுதிமொழிகள் தரப்படுகின்றன. ஆனால், நடைமுறையில் அதுதான் அங்கு நடக்கின்றது. அங்கிருக்கும் படைத்தரப்பினரே அந்தந்த பகுதிகளுக்கேற்ப சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்துவதால் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. கடற்றொழிலின் வளர்ச்சியையும் அது பாதிக்கின்றது. குறிப்பாக வடமராட்சி, கிழக்கிலே அட்டை பிடிக்கும் மற்றும் சங்கு குளிக்கும் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு நிபந்தனையின் அடிப்படையில்தான் அனுமதி கொடுக்கப்பட்டதாக கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்திருந்தது. உள்ளூர் கடற்றொழிலாளர்களது உபகரணங்களையும், மனித வலுவையும் மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்ற நிபந்தனையுடன் அந்த துறையில் அவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள். ஓரிரு நாட்களுக்கு அந்த நிபந்தனை அமுலில் இருந்தது. பின்னர் தென்னிலங்கையைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் Cylinder பாவனை மூலம் அந்தத் தொழிலில் ஈடுபட்டார்கள். கௌரவ உறுப்பினர் சுமந்திரன் அவர்களும் இதுபற்றிக் கூறியிருந்தார். அவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வது உண்மை! ஏனென்றால் நானும் நேரடியாக அதைப் பார்த்திருக்கிறேன். இது மீன்பிடி Season அல்ல, அதனால் கடந்த இரண்டு மாதங்களாக அங்கு அவர்கள் எவரும் வரவில்லை. இதை வைத்துக் கொண்டு அவர்கள் திரும்பவும் வரமாட்டார்கள் என்ற நம்பிக்கை அந்தத் தொழிலாளர்கள் மத்தியில் இல்லை. கௌரவ அமைச்சர் அவர்களே, நீங்கள் இது விடயத்தில் இறுக்கமான ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். அங்குள்ள கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு உங்களிடம் இருக்கின்றது. ஆகவே, அந்த மக்களின் சார்பாக அதை நீங்கள் சரிவரச் செய்யவேண்டு மென்று இந்த அவையினூடாக உங்களிடம் நான் உருக்கமாகக் கேட்கின்றேன். மேலும் நன்னீர் மீன்பிடி தொடர்பாகவும் ஒரு சில விடயங்களை நான் சொல்ல விரும்புகின்றேன். தங்களின் அயராத உழைப்பின் காரணமாக இரணைமடுக்குளத்தில் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. அதற்காகவும் அந்த மக்களின் சார்பாக நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், கட்டுப்பாட்டுடனான அனுமதிதான் வழங்கப்பட்டிருக்கின்றது. என்றாலும், கடந்த காலங்களில் இரணைமடுக்குளத்தில் நன்னீர் மீன்பிடித் தொழில் ஈடுபட்ட எல்லோருக்கும் அந்த அனுமதி கிடைக்கவில்லை. 105 பேருக்கு மட்டும்தான் இதுவரை அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அந்த அனுமதிக்காகக் காத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு அங்கு நன்னீர் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்குரிய ஏற்பாடுகளை நீங்கள் செய்து தரவேண்டும். அது மட்டுமல்ல, கிளிநொச்சி மாவட்டத்தின் ஏனைய நீர் நிலைகளிலும் நன்னீர் மீன்பிடியை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். முக்கிய சில குளங்களில் அப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றன. அக்கராயன்குளத்தில் மீன் குஞ்சுகள் விடப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, ஏனைய எல்லாக் குளங்களிலும் நன்னீர் மீன்பிடியை ஊக்குவித்து அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்திற்கு வழியேற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஏற்கனவே, கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சினால் உறுதியளிக்கப்பட்டதன் பிரகாரம் குருநகர், கிளாலி வலைப்பாடு, மயிலிட்டி, பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு, சுண்டிக்குளம் ஆகிய இடங்களில் மீன்பிடித் துறைமுகங்களை அமைக்கும் செயற்பாடுகள் விரைவுபடுத்தப்பட வேண்டும். இதற்கு ஊடாகத்தான் கடற்றொழிலாளர்கள் உச்சப் பயனை அடையமுடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான வெளிக்கள உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் ஏனைய அலுவலகப் பணியாளர்கள் உள்ளிட்ட ஆளணியினரை உள்வாங்குவதற்கு அமைச்சரவர்கள் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இது சம்பந்தமாக ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையை இன்னும் விரைவுபடுத்துவதற்காக நான் இந்த விடயத்தை இங்கே மேலும் வலியுறுத்துகின்றேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மீன்பிடித் துறையில் டிப்ளோமா பாடநெறியை முடித்த வேலையற்ற நிலையில் இருக்கும் பட்டதாரிகளைக் கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சின் வெளிக்கள உத்தியோகத்தர்களாக உள்வாங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்திருப்பது தொடர்பாகவும் அமைச்சரவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன். குறிப்பாக அமைச்சின் செயலாளர் அவர்கள் இந்த விடயத்தில் அதிக அக்கறை காட்டியிருக்கின்றார். இருந்தபோதிலும் அந்த ஆட்சேர்ப்பு நடைமுறைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும். இதை விரைவாக செயற்படுத்துவதன் ஊடாக இந்த தொழில் வாய்ப்புக்களுக்காகக் காத்திருக்கும் 60 இளைஞர், யுவதிகளின் வாழ்க்கையில் ஒளியேற்ற முடியும். ஆகவே, கௌரவ அமைச்சரவர்களே! இந்த விடயத்தில் நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கின்ற நடவடிக்கையை இன்னும் விரைவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அதேநேரம் இதில் தீவிரமான அக்கறையுடன் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற உங்களுக்கும் உங்களது அமைச்சின் செயலாளருக்கும் இச்சந்தர்ப்பத்திலே நான் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

வடமாகாணத்துக்கு என்று தனியான மீன்பிடிப் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பது தொடர்பாக நாங்கள் ஏற்கனவே உங்களுடன் பேசியிருக்கின்றோம். நீங்களும் அதில் அக்கறை செலுத்தியிருக்கின்றீர்கள். வட மாகாண மீனவர்கள் மீன்பிடித்துறையின் வளர்ச்சிப் போக்குக்கு ஏற்ற மாதிரி தங்களது தொழிலை இன்றைய நவீன தொழில் நுட்பங்களுக்கு ஊடாக விருத்தி செய்வதற்கு இந்த நடவடிக்கைகள் ஏதுவாக இருக்கும் என்பதையும் நான் இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

கௌரவ அமைச்சர் அவர்களே!

உங்கள் அமைச்சுக்கூடாக வட மாகாணத்தின் மீன்பிடித்துறை வளர்ச்சி கண்டிருப்பதையிட்டு நாங்கள் உங்களைப் பாராட்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காக உங்களுக்கு நாங்கள் நன்றி தெரிவிக்கவும் கடமைப்பட்டிருக் கின்றோம்.

வடக்கு, கிழக்கு மாகாண கடற்றொழிலாளர்களது தேவைகள் குறித்து நீங்கள் அதிக கரிசனையுடன் செயற்பட்டு வருகிறீர்கள். எதிர்காலத்தில் அவர்களது வாழ்வாதாரத்திலும் இலங்கையில் கடற்றொழில் துறை யிலும் மேலும் வளர்ச்சியை நீங்கள் ஏற்படுத்தித் தருவீர்கள் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தி, சந்தர்ப்பத்திற்கு நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி. வணக்கம்.

- *12 டிசம்பர் 2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக் கிழக்கிலே மூடப்பட்ட நிலையில் இருக்கும் தொழில் மையங்களை மீள ஆரம்பிக்க வேண்டும்

கௌரவ தவிசாளர் அவர்களே!

நிதி, திட்டமிடல் அமைச்சின் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு சில முக்கிய விடயங் களைத் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சிய டைகின்றேன். சிறந்த முறையிலான நிதிப் பகிர்வினாலும் திட்டமிட லினாலும்தான் நாட்டின் அபிவிருத்தியும் எதிர்காலமும் தீர்மானிக்கப் படுகின்றது. இன்று எமது நாடு அத்தகைய ஒரு நிலையைத்தான் எதிர் பார்த்துள்ளது. பாரபட்சமற்ற முறையில் நிதிப் பகிர்வும் திட்டமிடலும் இருக்குமானால், அதனால் அபிவிருத்தியிலும் சமாந்தரத் தன்மையை உருவாக்க முடியும். பாரபட்சம் குறித்த மனக் குறைகளை மக்களி டையே நீக்குவதற்கும் அது உதவும். இது அரசியல் ரீதியான முரண் பாடுகளையும், குறைபாடுகளையும் களைவதற்கு வழியேற்படுத்தும். அதனாலேயே உரிய முறையிலான நிதிப்பகிர்வைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

தெற்கிலே நீண்டகாலமாக நிதிப் பகிர்வில் சமாந்தரத் தன்மையற்ற நிலை காணப்பட்டது. குறிப்பாக தென் மாகாணங்களில் இந்த நிலை இருந்தது. இதனால் அங்கேயுள்ள மக்களிடையே பெரும் மனக்குறைகள் இருந்தன. இது பின்னாட்களில் கொந்தளிப்பான நிலைமைகள் நாட்டிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாவதற்கான ஏது நிலைகளை ஏற்படுத்தியது. ஆனால், இன்று அந்த நிலை மாற்றப்பட்டு வருகின்றது. இன்று தென் மாகாணங்கள் அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் வளர்ச்சி கண்டுள்ளன. ஏனைய பிரதேசங்களைப் போல ஒரு சமநிலையை நோக்கிய அபிவிருத்தியிலும் வளர்ச்சியிலும் அந்தப் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இதை நாம் வரவேற்கிறோம். இது நல்லதொரு தொடக்கமே! மேதகு ஜனாதிபதி அவர்களின் சிந்தனையின்படி, கிராமங்கள் தொடக்கம் ஒவ்வொரு பிரதேசமும் அபிவிருத்தியில் சமநிலையை எட்டும் என்று நாம் நம்புகின்றோம். அத்தகைய திட்டத்தின் அவசியத்தைப் பற்றியே நான் இங்கே பேசுகின்றேன். ஏனென்றால் நாங்கள் பிரதிநிதித்துவம் செய்கின்ற மக்கள் இன்று அத்தகைய விசேட அபிவிருத்தியையே எதிர் பார்க்கின்றார்கள். தங்களுடைய இருண்ட கடந்த காலத்திலிருந்து புதிய தொரு ஒளிமயமான காலத்துக்குள் வருவதற்கு அவர்கள் முயற்சிக் கின்றார்கள்.

கௌரவ தவிசாளர் அவர்களே!

தென்பகுதியில் இன்று முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களைப் போல் வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் விசேட கவனிப்புடன் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன. நீண்டகாலப் போரினால் வடக்கு கிழக்குப் பகுதி களின் உட்கட்டுமானங்கள் சிதைந்துபோயுள்ளன. அதே வேளை, அங்கே நிலவிய அரசியல் முரண்பாடுகளின் விளைவாகவும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதிலும் பாரிய சிக்கல்கள் இருந்தன. இந்தக் காரணங்களினால் அந்தப் பிரதேசங்கள் இன்று பாரிய அபிவிருத்தித் தேவைகளையும் பாரிய புனரமைப்புப் பணிகளுக்குமான அவசியத்தை யும் கொண்டுள்ளன. இதன் மூலமே அங்குள்ள மக்களுக்கான அடிப் படைத் தேவைகளையும் அவர்களுக்கான உட்கட்டுமானங்களையும் மேற்கொள்ள முடியும். அரசாங்கம் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கென விசேட நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் "வடக்கின் வசந்தம்", "கிழக்கின் உதயம்" என்ற சிறப்புத்திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. போர் முடிந்த பின்னர் அந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப் பட்டுவரும் இத்தகைய விசேட திட்டங்களின் மூலம் பல முன்னேற்ற கரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்காக நாங்கள் அரசாங்கத்தைப் பாராட்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் முடிவுக்கு வந்து மூன்று ஆண்டுகள் நிறைவடைவதற்கு முன்னர், ஒரு குறிப்பிட்ட அளவிலான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது உண்மையே! ஆனால், இந்த வளர்ச்சியையும் உண்மையையும் சில சக்திகள் திட்ட மிட்டு மறைத்து வருகின்றன. அங்கு பல தேவைகள் இருக்கின்றன என்பது உண்மையே! நான் அங்குள்ள மக்களுடன் இருப்பவன் என்ற வகையில், அதற்காக அங்கு எதுவுமே நடக்கவில்லை என்று யாரும் சொல்ல முடியாது. அப்படிச் சொல்லித் தவறான அபிப்பிராயத்தை எங்கும் உருவாக்கவும் முடியாது. நாங்கள் அந்த மக்களின் தேவைகளை அறிந்து அவற்றை கட்டம் கட்டமாக நிறைவேற்றி வருகின்றோம். அது தொடர்பில் நாம் மேதகு ஜனாதிபதி அவர்களுடன் பேசுகின்றோம். சம் பந்தப்பட்ட அமைச்சர்களுடன் பேசி, அவர்களிடமிருந்து உரிய திட்டங் களைப் பெற்று நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இதையெல்லாம் தெரியாதவர்களே வேறு விதமாகக் கதைக்கிறார்கள். அவர்களுக்கு அங்கே என்ன நடக்கிறது என்று தெரியாது. அந்த மக்களுடன் தொடர் பில்லாத நிலையில் இவர்களால் அங்கு என்ன நடக்கிறது என்று எப்படித் தெரியும்? இதைத்தான் அண்மையிலே இவர்களுக்கு வாக் களித்தவர்கள் ஓர் அறிக்கையாக விடுத்து, இவர்களை கேள்விக்கணை களால் துளைத்தெடுத்திருக்கின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று சொல்லப்படுகின்ற இலங்கை தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பற்றியே நான் இங்கு சொல்கிறேன்.

கௌரவ உறுப்பினர்களே, நாட்டின் அபிவிருத்தியில் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீள் நிலைப்படுத்துவதில் உங்களுக்கும் பங்குண்டு. ஆனால், அதற்கு நீங்கள் உங்களுடைய இரட்டை நிலைப் பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும். "எங்களுக்கு அபிவிருத்தி முக்கி யமில்லை. அரசியல் உரிமைகள்தான் முக்கியம்" என்பீர்கள்! பிறகு அபிவிருத்தியில் குறைபாடுகள் உண்டு என்று அறிக்கை விடுப்பீர்கள்! அபிவிருத்தியில் உங்களை சேர்த்துக்கொள்ளவில்லை என்று கேட்பீர் கள்! இப்படி சந்தர்ப்பத்திற்கு தக்கமாதிரி பாதிக்கப்பட்ட மக்களுக் கான அரசியலைக் கையாளக்கூடாது. அது மனட்சாட்சிக்கே விரோத மானது. இந்த குழப்பங்களில் இருந்தெல்லாம் நீங்கள் உங்களை விடுவித்துக் கொண்டு, ஒரு தெளிவான நிலைப்பாட்டுக்கு வரவேண்டும் என்றே உங்களின் ஆதரவாளர்கள் உங்களைக் கேட்டுக் கொள்கிறார்கள். இதைத்தான் நாங்களும் சொல்கிறோம். ஒரு தெளிவான நிலைப்பாட் டுக்கு உறுதியாக வாருங்கள்! பேச்சுவார்த்தையில் நம்பிக்கையில்லை என்று சொல்லிக்கொண்டே பேசுவதைப் போலவே அபிவிருத்தியிலும் நம்பிக்கை இல்லை என்று சொல்லிக்கொண்டே அபிவிருத்தி செய்யப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட வேண்டும் என்று கேட்கிறீர்கள். அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்துக்கொண்டே அரசாங்கத்திடம் உதவிகளைக் கேட்கின்றீர்கள். அரசாங்கத்தின் சலுகைகளைக் கோருகின்றீர்கள். இதையெல்லாம் விட்டுவிட்டு உங்களுக்கு ஆதரவளித்த போரினால் பாதிக்கப்பட்ட நிலை யில் இருக்கும் மக்களின் நிலைமை எப்படியிருக்கிறது என்று தயவு செய்து அறிந்து கொள்ளுங்கள். அப்போதுதான் உங்களால் யதார்த்தமாக சிந்திக்க முடியும்.

நீங்கள் இந்தப் பாராளுமன்றத்திலே அங்கம் வகிக்கின்றீர்கள். இந்த பாராளுமன்றமானது இந்த நாட்டின் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது. நீங்கள் இங்கேதான் உங்களுக்குரிய தேவைகளை அரசாங்கத்தின் மூலம் நிறைவேற்றிக் கொள்கின்றீர்கள். ஆனால், மக்களுக்கு எதுவும் கிடைக்கக்கூடாது என்ற நோக்கில் நடந்து கொள்கின்றீர்கள். இங்கேதான் உங்களுடைய அடிப்படை முரண்பாட்டை நான் காண்கிறேன். "அபிவிருத்தியைக் காட்டி மக்களை ஏமாற்ற முடியாது" என்று ஒரு சந்தர்ப்பத்தில் சொல்கின்றீர்கள். பிறகு இன்னொரு சந்தர்ப்பத்திலே "அபிவிருத்தி இல்லாமல் மக்கள் கஷ்டப் படுகின்றார்கள்" என்று சொல்கின்றீர்கள். உண்மையில் நீங்கள் என்ன தான் கதைக்கின்றீர்கள். நீங்கள் என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றீர்கள் என்று அறியவே உங்களை ஆதரித்த ஊடகங்களும் மக்களும் கேள்வி கேட்கிறார்கள். ஆகவேதான் நாம் அபிவிருத்தியும் அரசியல் தீர்வும் சமநேரத்தில் காணப்பட வேண்டும் என்று சொல்கின்றோம். இரண்டும் ஒன்றை ஒன்று பிரிக்க முடியாத அத்தியாவசியத் தேவைகளாகும். இதைப் புரிந்துகொண்டு நடைமுறைக்குச் சாத்தியமானவற்றையே நாங்கள் சொல்கின்றோம். மக்களுக்குத் தேவையானவற்றையே கேட்கின்றோம். தேர்தல் காலத்தில் மக்களை உணர்ச்சிவசப்படுத்துவதற்காக ஒன்றைச் சொல்லி, பிறகு மக்களின் அழுத்தங்கள் வரும்போது இன்னொன்றைச் சொல்லி மக்களை ஏமாற்ற நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் நேர்மையான வழியில் நின்று அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டியவற்றை எடுத்துச் சொல்கிறோம். நல்லவற்றுக்கு ஆதரவளிக் கின்றோம். ஏனையவற்றறை சுட்டிக்காட்டி குறைபாடுகளைக் களைகின் றோம். மக்களுக்கு எது பொருத்தமில்லையோ அதை நாங்கள் வெளிப் படையாக எதிர்க்கிறோம். இரகசிய உறவெல்லாம் எமக்குக் கிடையாது. நாங்கள் வெளிப்படையாகவே அரசாங்கத்துடன் இணைந்திருக்கின் றோம். வெளிப்படையாகவே எல்லாவற்றையும் செய்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அரசாங்கம் எதுவும் செய்யவில்லை. வடக்கு, கிழக்கில் செலவிடப் படுவதெல்லாம் வெளிநாடுகளின் உதவிப் பணம்தான்" என்றெல்லாம் பேசுகிறீர்கள். ஆனால், அத்தகைய வெளிநாட்டு உதவிகளைத் தடுக்கும் வகையில் அரசாங்கத்திற்கு நெருக்கடிகளைக் கொடுப்பதற்காகத் பாடு படுவதும் நீங்களே! மக்களுக்கு பாதிப்பு வந்தாலும் பரவாயில்லை. எதிர்த்தரப்புக்கு பாதிப்பு வரவேண்டும் என்ற நிலைப்பாடு என்பது இதுதான். நான் இங்கே ஒரு தரப்பினரை இலக்கு வைத்து இந்தக் குற்றச்சாட்டுக்களை சுமத்தவில்லை. பாதிக்கப்பட்ட மக்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையும் அரசியல் உரிமைகளும் பேணப்பட வேண்டும். இழந்து போன அந்த மக்களுடைய வாழ்க்கை மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற நோக்கத்திலேயே இவற்றை நான் இங்கே பேசுகின்றேன். புலம்பெயர்ந்திருக்கின்ற தமிழர்களிடம் இருந்து ஒரு பொது நிதியைத் திரட்டி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைச் செய்வதற்குக்கூட உங்களால் முடியாமல் இருக்கின்றது. ஆனால், அரசாங்கம் குறிப்பிடத்தக்க உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறது. அதில் ஏற்படுகின்ற போதாக்குறைகளை நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம். ஏனையவற்றையும் செய்யும்படி நாங்கள் அரசை வற்புறுத்துகின்றோம். இவை உங்கள் கண்களுக்கும் கவனத்திற்கும் தெரியவில்லை என்பதுதான் வேடிக்கையானது.

கௌரவ தவிசாளர் அவர்களே!

அரசாங்கத்தினால் வடக்கிலே முன்னெடுத்து வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களும், அந்தப் பகுதிக்கு ஒதுக்கப்பட்ட நிதியும் போதுமான தாக இல்லை.

வடக்கு, கிழக்குப் பகுதிகள் நீண்டகாலப் போரினாலும் சுனாமி, வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டவை. இந்தப் பாதிப்புக்களால் அங்குள்ள மக்கள் எல்லாவற்றையும் இழந்த நிலையில் இருக்கின்றார்கள். அந்தப் பிரதேசங்களும் எல்லாவற்றையும் இழந்த நிலையிலேயே இருக்கின்றன. எனவே அங்கே நிலவுகின்ற பற்றாக்குறைகளை நாம் உடனடியாக நீக்க வேண்டும். இன்னும் அங்கே முதலுதவி நிலையில் பல தேவைகள் உள்ளன. அவை அடிப்படையான தேவைகள். அவற்றை நாங்கள் செய்ய வேண்டும். இவற்றுக்கு விசேட நிதி ஒதுக்கீடும், சிறப்பான திட்டங்களும் மேற்கொண்டால் மட்டுமே ஏனைய பிரதேசங்களைப் போல ஒரு சமநிலையான அபிவிருத்தியை எட்ட முடியும். சமநிலையற்ற நிலைமை அங்கே காணப்படுமானால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது அந்த மக்களை வெகு தொலைவிலேயே வைத்திருப்பதாக முடியும். ஒரு பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் நீதியாகவும், சரியாகவும் இவற்றைச் செய்து அந்த மக்களுக்கும் உலகுக்கும் எமது கண்ணியத்தை நாம் நிலைநாட்டிக்காட்ட வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே!

அந்த மக்கள் விரும்பாத ஒரு போரினால் இன்று அவர்கள் ஏராளம் சிரமங்களை எதிர்கொண்டவாறு இருக்கின்றார்கள். ஒரு சிறிய உதவிக் காக பெரிய எதிர்பார்ப்புக்களோடு காத்திருக்கின்றார்கள். அவர்கள் அரசாங்கத்தை நெருங்கி வருவதற் கான வாய்ப்புக்களையும், பாதைகளை யும் நாமே உருவாக்க வேண்டும். அதேவேளை அங்கே பல திட்டங்கள் மிக அவசியமாக மேற்கொள்ளப் பட வேண்டியுள்ளன. அவற்றை நாம் செய்ய வேண்டும். அதற்கான விசேட நிதி ஒதுக்கீட்டையும் திட்டங்களையும் மேற்கொள்ள வேண்டும் என நான் இந்த அவையிலே கேட்டுக்கொள்கிறேன். அங்கே வீதிகளையும், பாடசாலைகளையும், மருத்துவமனைகளையும், விவசாயச் செய்கையை மேற்கொள்வதற்காக குளங்களையும் புனர்நிர்மாணம் செய்ய வேண்டியுள்ளது. அதேபோல் வடக்குக் கிழக்கிலே மூடப்பட்ட நிலையில் இருக்கும் தொழில்மையங் களை மீள ஆரம்பிக்க வேண்டும். ஆனையிறவு உப்பளம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை போன்ற உற்பத்தி நிறுவனங்களையும் நாங்கள் விரைவாக மீள இயக்க வேண்டும். இதன் மூலம் அங்குள்ள மூல வளங்களைப் பயன்படுத்தி நாட்டின் அபிவிருத்திக்கான வருமானத்தைப் பெறக்கூடியதாகவுள்ள துடன், வேலைவாய்ப்புகளையும் வழங்கக் கூடியதாக இருக்கும்.

ஆகவே, இவற்றையும் இவற்றைப் போல மேலும் அங்குள்ள சூழலுக்குப் பொருத்தமான வேறு தொழில் மையங்களையும் உருவாக்க வேண்டி யுள்ளது. முக்கியமாக விவசாயம், கடற்றொழில் போன்ற தொழிற்துறை களுக்கான விசேட ஊக்குவிப்புத் திட்டங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும். அத்துடன் போரினால் பாதிக்கப்பட்டு மாற்றமடைந்துள்ள பிரதேசங்களின் சுற்றுச்சூழலும் மேம்படுத்த வேண்டியுள்ளது. வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கான ஒரு முழுமைப்படுத்தப்பட்ட சிறப்புத் திட்டத்தைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். அதுவே எட்டப்படவுள்ள அரசியல் தீர்வுக்கான அடித்தளமாக இருக்கும் என நான் கருதுகிறேன். நம்பிக்கையின் அடித்தளத்திலேயே பல நல்ல காரியங்கள் நடக்கின்றன. மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு இந்த விடயங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாக அமையும். எனவே விசேட நிதி ஒதுக்கீட்டையும் விசேட திட்டமிடலையும் கோரி நிற்கின்ற வட பகுதி மக்களின் நியாயமான நிலைப்பாட்டை இந்த அவையிலே வலியுறுத்தி சந்தர்ப்பம் தந்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி.

- *21 டிசம்பர் 2011*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றத்திற்கான அரசியலின் சாட்சியங்களாக சில காட்சிகள்...



யுத்தத்தில் அழிவடைந்த நீர்த்தாங்கி, கிளிநொச்சி - 2009



புதிதாக அமைக்கப்பட்ட நீர்த்தாங்கி - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை - 2010




கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை - 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி பொதுச் சந்தை - 2011



கிளிநொச்சி பொதுச் சந்தை - 2012


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்மடுகுளம் - 2010



கல்மடுகுளம் - 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரமந்தனாறு பாடசாலை - 2012



பிரமந்தனாறு பாடசாலை - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூநகரி குடமுருட்டி பாலத்தடி - 2011



பூநகரி குடமுருட்டி பாலத்தடி - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாயபீடம் - 2011



யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாயபீடம் - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச சமூகத்தின் மொழியானது முரண்பாடுகளை களைவதைப் பற்றியதாகவே இருக்கின்றது. முரண்பாடுகளை களைவதற்கான உலகம் இன்று பாடசாலைகளில் கூட அதைக் கற்பிக்கின்றது. எங்களுடைய பாடசாலைகளிலும் முரண்பாடுகளை களைவதற்கான கல்வியை பிள்ளைகள் படிக்கின்றார்கள். ஆனால் எமது நாட்டில் - ஏன் இந்த பாராளுமன்றத்தில் கூட முரண்பாட்டை வளர்க்கும் விதமாகவே பேச்சுக்களும் சிந்தனைகளும் அமைந்து கொண்டிருக்கின்றன. இது உண்மையிலேயே வருந்தத்தக்க, கவலை அளிக்கக்கூடிய விடயமாகும். முரண்பாட்டு அரசியல், துருவநிலைப்பட்ட போக்குகள் எல்லாம் மீண்டும் அழிவுகளையும் நெருக்கடிகளையுமே தரும். நாடு இப்பொழுதுதான் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றது. மக்கள் இப்பொழுதுதான் கொலைகளைப்பற்றிய கவலைகள் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அழிவுகளுக்கும் அபாயங்களுக்கும் காரணமான நிலைமைகளைத் துாண்டி உருவாக்கி விட்டு முரண்பாடுகளைத் தணித்துவிடாமல் ஊக்கப்படுத்திக்கொண்டு தீர்வைப்பற்றிப் பேசுவது மக்களை ஏமாற்றும் விடயமாகும்.

*2010, ஜூன், 08 - ஹன்சாட் 189-1*

அவசரகாலச் சட்ட நீடிப்பானது அடுத்த தலைமுறைகளுக்கும் பரிமாறப்படக்கூடாதென்பதே எமது விருப்பமாகும். இதனை நான் இங்கே அழுத்தமாகக் குறிப்பிடுகின்றேன். அவசரகாலச் சட்டமானது, ஜனநாயக நடவடிக்கைகளை கட்டுப்படுத்தக்கூடியது என்பதால் நிச்சயம் நாம் இதனை நீக்கியே ஆகவேண்டும். எனவே, அதற்கான சூழலை நாம் உருவாக்க வேண்டும் என்பதே கவனிக்கவேண்டியது. அமைதியைப் பற்றிக் கதைப்பது முக்கியமானது அல்ல, அமைதிக்காக உழைக்கவேண்டும். தீர்வைப் பற்றிப்பேசிக் கொண்டிருப்பது முக்கியமானதல்ல, தீர்வொன்றைப் பெறுவதற்காக நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் பாடுபட வேண்டும். அதேபோல், அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கான சூழலையும் நாம் அனைவரும் இணைந்து உருவாக்கவேண்டும்.

*2011, ஓகஸ்ட், 09 - ஹன்சாட் 193-4*



முருகேசு சந்திரகுமார் [பா.உ.]

# உரிமைக்கும் உயர்வுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org